

# தமிழ்நாடு நாள்

## ஜூலை 18

சிறப்பு மலர்
2022




**சிறப்பு மலர்**
**2022**

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

11.07.2022

## தமிழ்நாடு நாள் – தமிழரசு சிறப்பு மலருக்கு வாழ்த்து

பல்லாயிரம் ஆண்டுப் பழமை கொண்ட நமது தாய்த்தமிழ்நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். 1967–ஆம் ஆண்டு சூலை மாதம் 18–ஆம் நாள் இதற்கான தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொடுத்தார். அத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளை, 'தமிழ்நாடு நாள்' என்று பெயர்சூட்டி கடந்த ஆண்டு நான் அறிவித்தேன்.

'தமிழ்நாடு' என்ற பெயரை வழங்கினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். 'தமிழ்நாடு நாள்' என பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தியது எனது தலைமையிலான தி.மு.க. அரசு. பார்போற்றும் நம் தமிழ்நாட்டுக்கு இத்தகைய சிறப்பினைச் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது எனது வாழ்நாளில் கிடைத்ததற்கரிய வாய்ப்பு!

'தமிழ்நாடு' என்பது சங்க காலந்தொட்டு இருக்கும் பெயர்தான். ஆனால், தமிழர் வாழும் பகுதிகள் அனைத்தும் ஒன்று சேர்த்து ஆளப்படவும் இல்லை, அதனால் ஒன்றுபட்ட தமிழ் நிலப்பரப்புக்கு மொத்தமாகத் 'தமிழ்நாடு' என்று அதிகாரப்பூர்வமாக அழைக்கும் சூழல் வாய்க்கவுமில்லை. நிர்வாகரீதியாக அருகில் இருந்த பகுதிகளையும் இணைத்து 'சென்னை மாகாணம்' உருவாக்கியது ஆங்கிலேய அரசு. அதனுள் அடையாளமற்றுக் கிடந்தது நம்முடைய தமிழ்நாடு அரசு.

தமிழர் வாழும் நிலப்பகுதியை மொத்தமாக ஒரே மொழிவழி மாகாணம் ஆக்கவும் – அப்படி ஆக்கப்படும் மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டவும் இங்கு நடந்த மகத்தான மக்கள் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது. வடக்கு எல்லை, தெற்கு எல்லை போராட்டங்களில் பங்கெடுத்தது.

'தமிழ்நாடு' என்று பெயர்சூட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தி விருதுநகரில் வீரத்தியாகி சங்கரலிங்கனார் உண்ணாநிலை அறப்போராட்டத்தைத் தொடங்கியபோது, அவரைச் சந்தித்தார் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். 'உங்கள் கட்சி ஆட்சிக்கு வரும் போதாவது தமிழ்நாடு என்று பெயர் சூட்டுங்கள்' என்று சங்கரலிங்கனார் கோரிக்கை வைத்தார்.

இதனை நினைவூட்டி 1957–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேசிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், "தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்காக சங்கரலிங்கனாரின் பிணம் வீழ்ந்தது. உங்களுக்கு ஒரு எழுத்துக்கு ஒரு பிணம் வீதம் வேண்டுமென்று சொன்னால் தயாராக இருக்கிறோம். ஐந்து பிணங்கள் தருவதற்கு தயாராக இருக்கிறோம். எழுத்துக்கு எத்தனை பிணங்கள் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறோம். தமிழ்நாடு என்று இந்த நாட்டுக்கு பெயரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்று உணர்வு பொங்கக் கோரினார்.

மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணா அவர்களும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் தலைவர் கலைஞர், ஏ.கோவிந்தசாமி, நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், புலவர் கோவிந்தன், கே.ஏ.மதியழகன், இராம.அரங்கண்ணல் ஆகியோரும் ‘தமிழ்நாடு’ பெயர் மாற்றத்துக்காகப் பத்தாண்டு காலம் (1957–67) எழுப்பிய தொடர் முழக்கமானது – கழக ஆட்சி அமைந்த பிறகு பெயர் சூட்டுவதற்கும் அடித்தளம் அமைத்தது.

தமிழர் வாழும் பகுதிகளை ஒன்றாக இணைத்தது மட்டுமல்ல, அப்படி இணைக்கப்பட்ட நிலத்துக்குத் ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டிய வரலாற்றுச் சிறப்புமிகு நாள்தான் சூலை18. அதனால்தான் அதனைத் ‘தமிழ்நாடு நாள்’ என்று அரசு அறிவிப்பு செய்துள்ளது.

‘தமிழ்நாடு நாள்’ குறித்து ‘தமிழரசு’ இதழின் சார்பில் சிறப்பு மலர் தயாரித்து வெளியிடப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு பெயர் சூட்டிய வரலாறு என்பது, தமிழர்கள் அனைவரும் அறிய வேண்டிய வரலாறு ஆகும். இந்த வரலாற்றுத் தகவல்கள், விவாதங்கள், செய்திகள் கொண்ட களஞ்சியமாக இம்மலர் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உருவாக்க குரல் கொடுத்த தலைவர்கள் அனைவரது முழக்கங்களும் இடம் பெற்றுள்ளன.

தமிழ் என்பது பேசும் மொழியாக மட்டுமில்லாமல் அது ஒரு பண்பாட்டு அடையாளமாக இருப்பதைச் சுட்டிக்காட்டும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கட்டுரையாளர்கள் அனைவர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

18.7.1967 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா சொன்ன வாழ்த்தொலியையே நான் இங்கு மீள்பதிவு செய்கிறேன்...

தமிழ்நாடு வாழ்க !

தமிழ்நாடு வாழ்க !

தமிழ்நாடு வாழ்க !

வாழ்த்துகளுடன்

(மு.க.ஸ்டாலின்)

மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள் 12-07-2022

# அணிந்துரை

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு ஒவ்வொரு செயலையும் ஆராய்ந்து, அன்னைத் தமிழின் பெருமையை உலகறியச் செய்யவும், இளம் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் வகையிலும் அரும்பணியாற்றி வருகின்றது.

தமிழர்களின் வாழ்வாக அவர்தம் உணர்வுக்கு ஒளியாகத் திகழ்வது தமிழ் மொழி. அத்தகைய மொழியின் பெயரால் 'தமிழ்நாடு' என்று நமது மாநிலத்துக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு. மிகப்பெரிய தொடர் போராட்டங்கள், தியாகங்களால் சிறப்பு வாய்ந்த தமிழின மக்கள் வாழும் பகுதியை மெட்ராஸ் மாகாணம் என்ற பெயரிலிருந்து 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மெட்ராஸ் மாகாணம் என்று இருந்ததை மாற்றி 1967ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 'தமிழ்நாடு' என்று பெயரிடப்பட்ட ஜூலை 18ஆம் நாளினை 'தமிழ்நாடு நாள்' என்று கொண்டாட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அரசாணை வெளியிடப்பட்டது.

'தமிழ்நாடு' எனத் தனி அடையாளத்தைப் பெற போராடி வெற்றி பெற்ற தியாகத் தலைவர்களை உலகிற்கு எடுத்துக் காட்டும் வண்ணம், செய்தி மக்கள் தொடர்புத் துறை 'தமிழ்நாடு நாள்–சிறப்பு மலர்' ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள வரலாற்று நிகழ்வுகளை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி ! வணக்கம் !

அன்புடன்,

12/7/22

(மு.பெ.சாமிநாதன்)

வெ. இறையன்பு
தலைமைச் செயலாளர்

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா
தலைமைச் செயலகம்
சென்னை–600 009

## வாழ்த்துரை

மொழி என்பது தகவல் பரிமாற்ற சாதனம் மட்டுமல்ல. நாம் உதட்டால் பரிமாறும் உணர்வுகளைவிட உடல்மொழியால் பரிமாறும் சங்கதிகளே அதிகம். மொழி மக்களின் பண்பாட்டையும், ஆழ்ந்த தொன்மையையும் வெளிப்படுத்துகிற உன்னத ஊடகமாக விளங்குகிறது.

இலக்கியத்தின் மூலமாக ஒரு மொழியின் அருமையை அறியும்போது அம்மொழியைத் தொன்றுதொட்டுப் பேசும் மக்கள் எப்படியெல்லாம் மேன்மையுடன் வாழ்ந்தார்கள், தூய்மையுடன் துலங்கினார்கள், சான்றாண்மையுடன் திகழ்ந்தார்கள் என்பதையறிகிறோம், உணர்கிறோம். நம்மையும் அறியாமல் அம்மக்கள் போற்றிய அறமும், தாங்கிப் பிடித்த விழுமியங்களும் சவ்வூடு பரவுவதைப்போல நம் ஆழ்மனத்தில் பரவுகிறது. அவர்களுடைய நெறிகள் நமக்குள் நிலத்தடி நீர் போல மெதுவாக இறங்கி குரல்களின் வழியாகச் சொல்லாகவும், விரல்களின் வழியாகச் செயலாகவும் வெளிப்படும்போது செழித்து வளர்வது ஒட்டுமொத்த சமூகம்தான்.

தமிழ்மொழி இயல்பான இனிமையாலும், இலக்கியச் செறிவாலும், இலக்கிய வளமையாலும் செம்மொழியாகத் திகழ்கிறது. தனித்து இயங்கும் ஆற்றலாலும், அன்றாடம் சொற்களைப் பெருக்கும் தன்மையாலும், காலந்தோறும் வளர்ச்சியடையும் இயல்பாலும் தொடர்ந்து உயிர்ப்புடன் இயங்கி வருகிறது.

தம் மொழியை உயிர்நாடியாகக் கொண்டு தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகெங்கும் தமிழ் கூறும் நல்லுலகம் தமிழ் என்கிற ஒற்றை உணர்வால் நீர்த்துளிகளைப் போல இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

'தமிழ்நாடு' எனும் பெயர் பண்டைய இலக்கியங்களிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்திருக்கிறது என்ற குறிப்புகளையும்,

'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டப்பட்ட வரலாற்றுத் தகவல்களையும்,

உயிர்த்தியாகம் மேற்கொண்ட தியாகி சங்கரலிங்கனாரின் மன உறுதியையும்,

சட்டப்பேரவையில் முன்மொழியும்போது தீர்மானம் குறித்து நிகழ்ந்த விரிவான விவாதங்களையும்,

'தமிழ்நாடு' நாள் குறித்துப் பல அறிஞர்கள் வழங்கிய அரும்பெரும் கருத்துகளையும் தொகுத்துப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பெட்டகமாக இத்தொகுப்பு மலர்ந்திருக்கிறது.

சிறந்த புகைப்படங்களையும், வரலாற்று ஆவணங்களையும் திரட்டி இம்மலரை நுணுக்கமாக உருவாக்கிய செய்தி மக்கள் தொடர்புத் துறையைச் சார்ந்த அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெ. இறையன்பு

தொலைபேசி: 044–25671555 நிகரி: 044–25672304 மின்அஞ்சல்: cs@tn.gov.in

மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

# நயனுரை

தனித்துவ தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட்ட 18.07.1967ஆம் நாளினை பெருமைப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 18ஆம் நாள் தமிழ்நாடு நாள் என்ற பெயரில் கொண்டாடப்படும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தெவிட்டாத அறிவிப்பிற்கிணங்க, இவ்வாண்டு முதல் கொண்டாடவுள்ளோம்.

தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வாயிலாக, தமிழ்நாடு நாள் சிறப்பு மலரினை வடிவமைத்து வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

கருத்தூன்றி காலம் முழுவதும் தமிழர்களின் இல்லங்களிலும் உள்ளங்களிலும் இச்சிறப்பு மலர் நிலைத்திருக்கும் கருத்துப் பேழையாகத் திகழும் என வாழ்த்துகிறேன்.

அன்புடன்

12/7/2022

(மகேசன் காசிராஜன்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009. மின்னஞ்சல்: tdinfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044-25672887, நிகரி : 044-25672021

**முனைவர் வீ.ப.ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

# ஆசிரியர் உரை

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து'

என்று தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் பாடிய பனம்பாரனார் தமிழ்நாட்டின் நில எல்லைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

பழந்தமிழ் இலக்கியங்களிலும் 'தமிழ்நாடு' என உரைக்கப்பட்ட தமிழ், தமிழர் வாழும் நிலப்பகுதியை, 'தமிழ்நாடு' எனப் பெயரிடுவதற்கு சட்ட வடிவம் தந்து 1967ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 18ஆம் நாள் அவ்வண்ணமே பெயர் சூட்டி மகிழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த தியாகி சங்கரலிங்கனார், எல்லைகளைக் காத்திட்டச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி., பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், உள்ளிட்ட எண்ணற்ற தலைவர்களின் தியாகப் போராட்டத்தினைப் போற்றிடும் வகையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டி மகிழ்வித்துத் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த சூலை 18ஆம் நாளினையே 'தமிழ்நாடு நாளாக' கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

அவ்வறிவிப்பிற்கிணங்க கொண்டாடப்படும் தமிழ்நாடு நாளை சிறப்பிக்கும் வண்ணம், 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றிய சட்டமன்ற அரசினர் தனித் தீர்மான விவாதங்களையும், போராட்டத் தியாகிகளின் வரலாற்றினையும், போராட்டக்கள நிகழ்வுகளையும் தொகுத்து தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 'தமிழ்நாடு நாள்' என்ற சிறப்பு மலரை வெளியிடுவதில் செய்தித்துறை வரலாற்றுப் பெருமிதம் கொள்கிறது.

அன்புடன்

14/07/2022

(வீ.ப. ஜெயசீலன்)




# பொருளடக்கம்

ஜூலை 18 தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம் ........................ 14

தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய
ஜூலை 18-ஆம் நாளினையே 'தமிழ்நாடு நாளாக'
இனி கொண்டாடப்படும்! ........................................................ 32

தலைவர்களின் முழக்கங்கள்.................................................... 36

## சென்னை மாகாணம் முதல் தமிழ்நாடு வரை


பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய தமிழ்நாடு!..........................122
- பேராசிரியர் சுப. வீரபாண்டியன்

மொழிக்கு உயிரூட்டிய கனல் சங்கரலிங்கனார்!......................128
- டி.அருள் எழிலன்

தமிழக எல்லைப் போராட்டத்தில் பெரியாரின் பங்களிப்பு........... 136
- வாலாசா வல்லவன்

புதிய தமிழகம் படைத்த ம.பொ.சி. .........................................146
- தி.பரமேசுவரி

தமிழக எல்லைக் காத்திட்ட அண்ணல் தங்கோ .........................154
- செ.அருள்செல்வன்

திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழ்நாடும்.......................... 160
- ப.திருமாவேலன்


## தமிழ்நாடு இன்று வரை


இலக்கியத்தில் தமிழ்நாடு....................................................172
- செந்தலை ந.கவுதமன்

தமிழ்நாடு என்ற கருத்தாக்கம் ...............................................178
- ஆர்.பாலகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

தியாகிகளைப் போற்றும் திராவிட ஆட்சித்திறன் ........................ 186
- கோவி.லெனின்

திராவிடத் தமிழ் மொழியுணர்ச்சியும் தேசியவாதமும்.................192
- வீ.எம்.எஸ்.சுபகுணராஜன்

சென்னை மாகாணம் முதல் 'திராவிட மாடல்' தமிழ்நாடு வரை .... 200
- உரிமைப் பாதை ஆழி செந்தில்நாதன்

ஆவணங்கள் .........................................................................218

தெற்கில் இருந்து எழுதுவோம்!................................................ 254

# தமிழ் – தமிழன் – தமிழ்நாடு –

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து

– தொல்காப்பியம்

வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு

– தொல்காப்பியம்

தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே

– புறநானூறு

மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க் கிழவர்
முரசு முழங்கு தானை மூவர் உள்ளும்
அரசு எனப்படுவது நினதே பெரும

– புறநானூறு

தண் தமிழ் பொது எனப் பொறாஅன்

– புறநானூறு

வையக வரைப்பில் தமிழகம் கேட்ப

– புறநானூறு

தண்டமிழ் வரைப்பு

– புறநானூறு

தென்குமரி வடபெருங்கடல்
வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாறு உருகெழு குமரியின் தெற்கும்

– புறநானூறு

# நிலம் – மண் – மக்கள்

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி

– சிலப்பதிகாரம்

நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு

– சிலப்பதிகாரம்

இமிழ் கடல் வரைப்பின் தமிழகம் அறியத்
தமிழ் முழுது அறிந்த தன்மையன் ஆகி

– சிலப்பதிகாரம்

தென் தமிழ்நாடு ஒருங்குகாண

– சிலப்பதிகாரம்

தென்தமிழ் நாட்டுச் செழுவில் கயல் புலி
மண் தலை ஏற்ற வரைக

– சிலப்பதிகாரம்

குண கடல் குமரி குடகம் வேங்கடம்

– நன்னூல்

தமிழக மருமருங்கில்

– மணிமேகலை

இமையவிற் பொறித்து
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்க

– பதிற்றுப்பத்து

தமிழ்நாடு
தந்த
தலைமகன்
பேரறிஞர்
அண்ணா
தலைமையில்
அமைந்த
அமைச்சரவை

*06.03.1967*





கே.ஏ.மதியழகன், இரா.நெடுஞ்செழியன், பேரறிஞர் அண்ணா,
ஆளுநர் உஜ்ஜல் சிங், அவர்தம் மனைவி, முத்தமிழறிஞர் கலைஞர், சத்தியவாணிமுத்து
நிற்பவர்கள்: செ.மாதவன், சாதிக்பாட்சா, பாவலர் முத்துசாமி, ஏ.கோவிந்தசாமி.





ஜூலை 18
தமிழ்நாடு
பெயர் மாற்றத்
தீர்மானம்

[1967 ஜூலை 18

### 9. அரசினர் தீர்மானம்.

### மாநிலத்தின் பெயரை அரசியலமைப்புச் சட்டத்தில் “ தமிழ்நாடு ” என்று மாற்றியமைத்தல்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்:—

“ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இம் மாநிலத்தைக் குறிப் பிடும் பெயர் “ தமிழ் நாடு ” என மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை உறுதியாகக் கருதுவதுடன், இதுகுறித்து அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் அமையும் வண்ணம் மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் இப்பேரவை பரிந் துரைக்கின்றது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள், முன்னுரையாக ஏதாவது குறிப்பிட விரும்புகிறார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இத் தீர்மானமே என் னுடைய முன்னுரையாக அமையும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, இப்போது முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்திற்கு எந்த விதத்திலும் ஆட்சேபனை இல்லையென்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரி வித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்) இது ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத் திலே கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஆகும். இருந்தாலும்கூட அப்போது சமய சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப, அப்போதிருந்த அமைச்சர் கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள் அந்தத் தீர்மானத்திலே, “ இதில் பெயர் சூட்டுவதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை; இருந்தாலும்கூட நமது தமிழ் நாட்டினுடைய பெயர், தமிழ்நாட்டிலே, தமிழிலே மட்டும் ‘ தமிழ் நாடு ’ என்று இருக்கலாமென்றும், ஆங்கிலத்தில் ‘ மெட்ராஸ் ஸ்டேட் ’ என்று இருக்கலாம் ” என்றும் குறிப்பிட்டுக் கூறினார்கள். அடிக்கடி வெளிநாடு சென்று வந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர் கள், வெளிநாடுகளிலே, உலக நாடுகளில் எல்லாம் எப்படி பெயர் குறிக்கப்படுகின்றது, எப்படி நாட்டினுடைய பெயர் சொல்லப்படுகிறது என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, ஜெர்மனியை எடுத்துக்கொண்டால், உள்நாட்டில் “ ட்யூஸ் லேண்ட் ”—“ தந்தை நாடு ” என்று சொன்னால்தான் தெரியும். ஆனால் வெளி உலகத்திற்கு “ ஜெர்மனி ” என்று சொன்னால்தான் தெரியும். ஜெர்மனிக்கு உள் நாட்டில் உபயோகப்படுத்துவதற்கு “ ட்யூஸ் லேண்ட் ” என்றும், வெளி நாடுகளிலே “ ஜெர்மனி ” என்றும் பெயர் இருந்து வருகிறது. அதே நிலையிலே நம்முடைய சென்னை சர்க்காரை, தமிழில்—தமிழ் நாட்டில் “ தமிழ்நாடு ” என்றும், ஆங்கிலத்தில் “ மெட்ராஸ் ஸ்டேட் ” என்றும் குறிப்பிட வேண்டுமென்று சொல்லி வந்தார்கள். உலகத்திலே எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும், சென்னை அரசாங்கத்தை “ மெட்ராஸ் ஸ்டேட் ” என்று சொன்னால்தான் புரிந்துகொள்வார்கள். இப்போதிருக் கும் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், இந்தப் பெயர் மாற்றத் தீர் மானத்தைக் கொண்டு வருவதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணை யும் இல்லை. என்னுடைய கட்சியின் சார்பாக ஒரே ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். தமிழிலே நாம் உபயோகப்படுத்துவதற்கு “ தமிழ்நாடு ” என்றும், ஆங்கிலத்தில் “ மெட்ராஸ் ஸ்டேட் ” என்றும் தமிழும் ஆங் கிலமும் இணைந்த மொழியாக இருக்க வேண்டுமென்ற நிலையிலே “ தமிழ் நாடு—மெட்ராஸ் ஸ்டேட் ” என்று இணைந்திருக்க வேண்டுமென வேண்டிக் கொண்டு, “ தமிழ்நாடு ” எனப் பெயர் சூட்டுவதை பெருமதிப்புடனும், ஆர்வத்துடனும் நான் வரவேற்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தமிழ் மொழியே இராவணேஸ்வரனுடைய வீணை நாதத்திலிருந்துதான் ஏற்பட்டது என்பதை நான் ஓரளவு சுமாராகத் தெரிந்து வைத்திருக்

1967 ஜூலை 18

'தமிழ்நாடு'
பெயர் சூட்டிய நாள்

# அரசினர் தீர்மானம்

## மாநிலத்தின் பெயரை அரசியலமைப்புச் சட்டத்தில் 'தமிழ்நாடு' என்று மாற்றியமைத்தல்

**மாண்புமிகு திரு.சி.என்.அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்:

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இம் மாநிலத்தைக் குறிப்பிடும் பெயர் "தமிழ்நாடு" என மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை உறுதியாகக் கருதுவதுடன், இதுகுறித்து அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் அமையும் வண்ணம் மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இப்பேரவை பரிந்துரைக்கின்றது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னுரையாக ஏதாவது குறிப்பிட விரும்புகிறார்களா?

**மாண்புமிகு திரு.சி.என்.அண்ணாதுரை:** இத்தீர்மானமே என்னுடைய முன்னுரையாக அமையும்.

**திரு.பி.ஜி.கருத்திருமன்:**

சபாநாயகர் அவர்களே, இப்போது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்திற்கு எந்த விதத்திலும் ஆட்சேபனை இல்லையென்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்திலேயே கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஆகும். இருந்தாலும்கூட அப்போது சமய சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப, அப்போதிருந்த அமைச்சர் கனம் சி.சுப்பிரமணியம் அவர்கள் அந்தத் தீர்மானத்திலே, "இதில் பெயர் சூட்டுவதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை; இருந்தாலும்கூட நமது தமிழ்நாட்டினுடைய பெயர், தமிழ்நாட்டிலே, தமிழிலே மட்டும், 'தமிழ்நாடு' என்று இருக்கலாமென்றும், ஆங்கிலத்தில்

'மெட்ராஸ் ஸ்டேட்' என்று இருக்கலாம்'' என்றும் குறிப்பிட்டுக் கூறினார்கள். அடிக்கடி வெளிநாடு சென்று வந்த திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள், வெளிநாடுகளிலே, உலக நாடுகளில் எல்லாம் எப்படி பெயர் குறிக்கப்படுகின்றது. எப்படி நாட்டினுடைய பெயர் சொல்லப்படுகிறது என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, ஜெர்மனியை எடுத்துக்கொண்டால், உள்நாட்டில் "ட்யூஸ் லேண்ட்'' – "தந்தை நாடு'' என்று சொன்னால்தான் தெரியும். ஆனால் வெளி உலகத்திற்கு "ஜெர்மனி'' என்று சொன்னால்தான் தெரியும். ஜெர்மனிக்கு உள்நாட்டில் உபயோகப்படுத்துவதற்கு "ட்யூஸ் லேண்ட்'' என்றும், வெளிநாடுகளிலே "ஜெர்மனி'' என்றும் பெயர் இருந்து வருகிறது. அதே நிலையிலே நம்முடைய சென்னை சர்க்காரை, தமிழில் – தமிழ்நாட்டில் "தமிழ்நாடு'' என்றும், ஆங்கிலத்தில் "மெட்ராஸ் ஸ்டேட்'' என்றும் குறிப்பிட வேண்டுமென்று சொல்லி வந்தார்கள். உலகத்திலே எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும், சென்னை அரசாங்கத்தை "மெட்ராஸ் ஸ்டேட்'' என்று சொன்னால்தான் புரிந்துகொள்வார்கள். இப்போதிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், இந்தப் பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டு வருவதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. என்னுடைய கட்சியின் சார்பாக ஒரே ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். தமிழிலே நாம் உபயோகப்படுத்துவதற்கு "தமிழ்நாடு'' என்றும் ஆங்கிலத்தில் "மெட்ராஸ் ஸ்டேட்'' என்றும் தமிழும் ஆங்கிலமும் இணைந்த மொழியாக இருக்க வேண்டுமென்ற நிலையிலே "தமிழ்நாடு – மெட்ராஸ் ஸ்டேட்'' என்று இணைந்திருக்க வேண்டுமென வேண்டிக்கொண்டு, "தமிழ்நாடு'' எனப் பெயர் சூட்டுவதைப் பெருமதிப்புடனும் ஆர்வத்துடனும் நான் வரவேற்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு.டி.எஸ்.ஆதிமூலம்:**

கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தமிழ் மொழியே இராவணேஸ்வரனுடைய வீணா நாதத்திலிருந்துதான் ஏற்பட்டது என்பதை நான் ஓரளவு சுமாராகத் தெரிந்து வைத்திருக்கிறேன். இராவணனுக்கும், இராமனுக்கும் நடக்கும் சண்டையிலே, இராவணன் கட்சியை ஆதரிக்கக்கூடிய நமது டி.எம்.கே.சர்க்கார் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதில் ஒரு தனிப்பெருமை இருக்கிறது. தமிழுக்காக உள்ள இராவணனுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், இதைக் கொண்டு வருவது நூற்றுக்கு நூறு மிகப் பொருத்தமாக இருக்கிறது. "தமிழன் என்றோர் இனம் உண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு'' என்று நாமக்கல் கவிஞர் பாடினார். இத்தகைய பெருமையையும், புகழையும் பெற்றிருந்த தமிழன், தன் நாட்டுக்குத் "தமிழ்நாடு'' என்று பெயர் வைக்க வேண்டுமென்று போராட வேண்டிய ஒரு கேவலமான – இது பார்லிமெண்டரி வார்த்தைதான் என்று நினைக்கிறேன் – நிலைக்கு அன்றைய காங்கிரஸ் சர்க்கார் நிர்ப்பந்தப்படுத்திவிட்டது. அதற்குக் காரணமாக இருந்தவர் சங்கரலிங்க நாடார் என்று சொல்லலாம். அவர் முதலில் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தார். உண்ணாவிரதம் இருந்தவரிடத்தில் "நாம் நாளாவட்டத்தில் செய்வோம்'' என்று ஒரு வார்த்தை கனம் திரு. காமராஜ் அவர்கள் சொல்லிவிட்டிருந்தால் போதும். ஆனால், "இவன் உண்ணாவிரதம் இருந்து போனால் போகிறான்'' என்று அவர் அலட்சியமாகப் பேசவே, சங்கரலிங்க நாடாரும் மண்டையை உதறிவிட்டு, உயிர்நீத்தார். தமிழனுடைய மான உணர்ச்சியைக் காப்பதற்காக – காங்கிரஸ்காரர்களுடைய அலட்சிய மனோபாவத்தினால் திரு. சங்கரலிங்க நாடார் வீணாக தன் உயிரை மாய்த்துக்கொண்டார். பொட்டி ஸ்ரீராமலு அவர்களும் ஆந்திர மாநில அமைப்புக்காகப் போராடி உயிர்நீத்தார். அவருக்கு ஆந்திராவிலே சிலை வைக்கிறார்கள். அதுபோல

இங்கேயும் சங்கரலிங்க நாடாருக்காக ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அன்று சங்கரலிங்க நாடார் எந்த காரியத்திற்காக உயிரை அந்த மாபெரும் காரியத்தை இன்று இந்த டி.எம்.கே. சர்க்கார் செய்ய வந்தது வாஸ்தவத்திலேயே ரொம்பவும் போற்றக்கூடிய ஒரு காரியம் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

“சுயமரியாதைத் திருமணம் நடத்துவதை ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்பது நாற்பது வருட காலமாக இருந்து வரும் பிரச்சினையென்று அம்மசோதாவைக் கொண்டுவந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைவிட உயிர்ப்பிரச்சினையான தமிழ், தமிழர், தமிழ்நாடு, தமிழ்ப்பண்பாடு, தமிழர் கலாச்சாரம் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் முன் நின்று வருகிறார்கள். அம்மாதிரியான ஒரு பிரச்சினையாக “தமிழ்நாடு” என்று பெயர் வைக்க வேண்டுமென்பதை இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினம் எதிர்க்கட்சியில் இருந்த காலத்திலும், அதற்கு முன் காலங்களிலும் தமிழ்நாடு பூராவும் எடுத்து விளக்கி, அதை ஒரு அரசியல் பிரச்சினையாக்கி – தமிழனுடைய மானத்தைக் காக்க ஒரு முயற்சி எடுத்து வந்தார்கள். அந்த எழுச்சியை காங்கிரஸ்காரர்களால் தாங்க முடியவில்லை. உடனே, காமராஜ் அவர்களும் மற்றவர்களும் காதைக் கடித்துக்கொண்டார்கள். ஜனங்களுக்கு மத்தியில் விஷயங்களைக் கவர்ச்சிகரமாக எடுத்துச் சொல்ல தங்களுக்கு முடியவில்லை. இந்த நிலைமை நீடித்தால் சீக்கிரத்தில் அவர்கள் மந்திரிசபையைப் பிடித்து விடுவார்கள்” என்று எண்ணி, உள்நாட்டில் ‘தமிழ்நாடு’ என்றும் ஆங்கிலத்தில் ‘மெட்ராஸ் ஸ்டேட், என்றும் பெயர் வைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து அவர்கள் வழவழாவென்று போய்விட்டார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்திலே சீர்திருத்தம் செய்து நூற்றுக்கு நூறு “தமிழ்நாடு” என்று பெயர் வைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் இன்று வந்திருக்கிறது; அதை நான் மிகவும் வரவேற்கிறேன். “செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே” என்று பாரதியார் சொல்லிக் கொண்டிருந்தார். வாஸ்தவத்தில் இன்றுதான் வாய் எல்லாம் தேன் இனிக்கிறது இன்றுதான் அந்தத் தேன்சுவை கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த வார்த்தையை இன்று கேட்கும்போதுதான் காதில் தேன் பாய்வதைப்போன்று இருக்கிறது. இந்தப் புதிய அரசு தமிழ்நாடு என்று பெயர் வைப்பது வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது. இது தனிநாடு போல் தெரிகிறதே என்று சிலர் கூறலாம். அதன்மூலம் இந்திய யூனியனில் இருந்து பிரிந்துபோக வழியேற்படும் என்று நொண்டிச் சாக்குச் சொல்லலாம். நாகர்கள் நாகாலாண்டு என்று பெயர் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னபோது பார்லிமெண்டில் அதுபற்றி விவாதம் வந்தது. அப்போது பிரதமராக இருந்த மாண்புமிகு ஜவஹர்லால் நேரு அவர்கள், “அவர்கள் அப்படி அழைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். நாம் ஒப்புக் கொள்கிறோம்” என்பதாக ஆணித்தரமாகப் பதில் சொன்னார்கள். ஆகவே 4½ கோடி மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிற இந்தப் பேரவையில் இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டால் கட்டாயம் அவர்களும் இதை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

மகாராஷ்டிராவை எடுத்துக்கொண்டால் அவர்கள் மொழி அடிப்படையில் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்மை மதராசி, மதராசி என்று கேவலப்படுத்தாத நிலையில், தமிழ் நாட்டவர்களைத் தமிழர்கள் என்று அழைக்க, அந்தச் சொல் நம் செவியில் ரீங்காரமாக ஒலிக்க வேண்டும். நாம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். அதற்கு வகை செய்கிற அளவில் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரித்து, வரவேற்று, இதை நிறைவேற்றி வைக்க முன்வந்துள்ள

திராவிட முன்னேற்றக் கழகத்தார்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான –ப்ளஸ்ஸிங்ஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எ.பாலசுப்பிரமணியன்:**

கனம் மன்றத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் ஏகமனதாக இங்கிருந்து நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்குச் செல்லும் என்று எதிர்பார்த்தேன். அப்படித்தான் இருக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் பேச ஆரம்பித்தபோது நினைத்தேன். ஆனால் இறுதியில் ‘மெட்ராஸ்’ என்று ஆங்கிலேயத்தில் இருக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தியது கொஞ்சம் வியப்பாக இருந்தது. வேதனையாகவும் இருந்தது. வெளிநாட்டார் நமக்கு என்ன பெயர் சூட்டுகிறார்களோ அதை வைத்தே அழைக்கப்பட வேண்டும் என்ற நினைப்பு சரியானது அல்ல. நமக்கு என்ன பெயரோ அதை வைத்து அவர்கள் அழைக்கிறபோதுதான் நமக்கு மதிப்பு, நமக்கு மரியாதை அளிப்பதாக ஆகும். அவர்கள் வைத்த பெயரினால் அழைக்கப்பட்டால் தான் நன்றாகத் தெரியும் என்று சொல்வது வாதமாகாது, முறை ஆகாது.

இந்தத் தீர்மானம் எந்தவிதமான கட்சிச் சர்ச்சைக்கும் இடமில்லாமல் நிறைவேறியாக வேண்டிய விஷயம். நிறைவேற்றப்படாமல் விட்டு வைத்திருப்பது பெரிய தவறு. உண்மையில் இந்தச் சந்தர்ப்பத்தில் சங்கரலிங்க நாடாரை நினைவுபடுத்திக்கொள்வது பொருத்தமாகும். ‘தமிழ்நாடு’ என்ற பெயர் வைக்கப்பட வேண்டும் என்பதற்காக மரணத்தையே ஏற்றுக்கொண்டார். ஆகவே, உடனடியாக ‘தமிழ்நாடு’ என்ற பெயரே வைக்கப்பட வேண்டும். தமிழில் ‘தமிழ்நாடு’ என்று இருக்கட்டும். ஆங்கிலத்தில் ‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்றே இருக்க வேண்டும் என்பது ஆங்கில ஆட்சியின் இயக்கத்தில் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறோம் என்பதைக் காட்டும். அது சரியல்ல. ஆகவே, இன்றைக்கு ‘தமிழ்நாடு’ என்ற பெயரை வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்து, இதில் எந்தவிதமான காலதாமதத்திற்கும் இடம் அளிக்காமல் மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதே பொருத்தமானதாக இருக்கும்.

பூகோளம் படித்தவர்களுக்குத் தெரியும். ஆப்பிரிக்காவில் ரொடிஷியா, கினி, கோல்டுகோஸ்ட் என்பதாக ஆங்கில ஆட்சியினரின் காலத்தில் வைக்கப்பட்ட பெயர்கள் எல்லாம் அவை விடுதலை பெற்றவுடன் தங்கள் தங்கள் சுயப்பெயரில் இன்று மலர்ந்திருக்கின்றன. மாலி என்று முன்பு கேள்விப்படாத பெயரை இப்போது கேள்விப்படுகிறோம். டான்சானியா புதிதாகக் கேள்விப்படுகிறோம். உலக அரங்கு இத்தகைய பெயர் மாற்றத்தை ஏற்றுக் கொள்கிறது. ஆகவே நம்முடைய மாநிலத்திற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் வைக்க வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானது. இந்தத் தீர்மானத்தைச் சபை ஏகமனதாக நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ.ஆர்.மாரிமுத்து:**

மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த தீர்மானத்தை பிரஜாசோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் முழு மனதோடு ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியா சுதந்திரம் பெற்றவுடனேயே, நாடு மொழிவாரி ராஜ்யங்களாகப் பிரித்து அமைக்கப்பட்டபோதே, இங்கு நம்முடைய மாநிலத்திற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயரை

மத்திய அரசு அரசியல் சாஸனத்திலே புகுத்தி இருக்க வேண்டும். ஆனால் அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள் அதிலே கவனம் செலுத்தாது ஒதுங்கி இருந்த காரணத்தால்தான் இன்று 'மதராஸ் ஸ்டேட்' என்ற பெயர் நிலைத்து இருக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. எப்படி இதர மாநிலங்களிலே மொழிவாரியாகப் பிரிந்தவுடன் அவர்களுடைய மொழியின் பெயரால் பெயர் வைக்கப்பட்டு உள்ளதோ அதே மாதிரி நமது மாநிலத்தையும் தமிழ்நாடு என்று அழைத்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிராது. ஏன் அப்படிச் செய்யவில்லை என்பது புரியவில்லை. இருந்தாலும் பெரும்பகுதியான மக்கள், குறிப்பாக எல்லோரும் என்றே சொல்கின்றேன். இதற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பதை மனமகிழ்ச்சியுடன், பேருவகையுடன் வரவேற்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே நான் கூறிக்கொள்கிறேன்.

ஆகவே, இன்று இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் நாள் ஒரு மகிழ்ச்சிக்குரிய நாளாகும். இந்த அரசுக்கு இம்மாமன்றத்தின் முடிவை மத்திய அரசுக்குத் தெரிவித்து தன்னுடைய அரசியல் சாஸனத்தில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதில் எவ்வித தயக்கமும் இருக்க முடியாது, இருக்கவும் கூடாது. ஆகவே, கூடிய விரைவில் தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்வதற்கான முறையில் மாநில அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை எல்லோரும் ஒருமனதாக ஆதரிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

### ஹாஜி ம.மு.பீர்முஹம்மது:

பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்திய முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக நம்முடைய தமிழ்த் திருநாட்டுக்கு "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டப்பட வேண்டும் என்பதாகச் சபை முன் கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தின் மீது பேசுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்குக் காரணம் இந்திய அரசியல் நிர்ணய சபையாகவும், பாராளுமன்றமாகவும் செயல்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் நான் சார்ந்திருக்கின்ற இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தந்தை பெருமதிப்பிற்குரிய தலைவர், அல்ஹாஜி காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாகிப் அவர்கள் "இந்தியத் திருநாட்டிற்கு விதேசி மொழியான ஒரு மொழி தேவையில்லை. சுதேசி மொழி ஒன்று தேவை" என்ற பிரச்சினை எழுந்தபோது இந்தியத் திருநாட்டைப் பொறுத்தவரையில் தனித்து இயங்குகின்ற மொழி, தொன்மை வாய்ந்த மொழி, வல்லமை படைத்த மொழி, தரணி ஆண்ட மொழி, இலக்கியச் செறிவுள்ள மொழி, இலக்கண வரம்புள்ள மொழி என்ற சிறப்பியல்பு உடைய நம்முடைய இன்பத் தாய்மொழியாகிய தமிழ்மொழியை இந்தியத் திருநாட்டின் பொதுமொழியாக – ஆதிக்க மொழியாக ஆக்குங்கள், ஆக்குங்கள் – என்பதாக இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் அமைத்துக் கொண்டிருந்த நேரத்தில் கூறினார்கள். அவர்களுடைய பெயரால் – இன்றைக்கு நம் மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட இருப்பதை நான் ஆதரிக்கிறேன். வரவேற்கின்றேன்.

அதேநேரத்தில், நான் உலக நாடுகளுக்கு எல்லாம் சென்றிருக்கிறேன். மலேசியா சென்றிருக்கிறேன். பர்மா சென்றிருக்கிறேன். சவூதி அரேபியா சென்றிருக்கிறேன். அந்த நாடுகளில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் இருந்து செல்கிறவர்களை எப்படி அழைக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். பர்மாவிலே தமிழர்களை சோழநாட்டில் இருந்து வந்தவர்கள் என்ற பொருளில் சோளியர்கள் என்று அழைக்கிறார்கள். மலேசியாவில் கலிங்க நாட்டில் இருந்து வந்தவர்கள் என்று கிளிங்சர் என்று அழைக்கிறார்கள். அது மாத்திரம்

அன்று, 157 மொழி பேசுகின்ற பத்து லட்சம் மக்கள் கூடியிருந்து வழிபாடு நடத்துகிற மாண்புமிக்க மெக்கத் திருநகரில் உள்ள முஸ்லீம் மக்களின் புனித சேத்திரமான – இறைவனை வணங்குவதற்குக் கட்டப்பட்ட பூர்வீக ஆலயம் உள்ள அந்த நகரில் தேனினும், பாகினும், தெள்ளிய அமிழ்தினும், இனித்திடும் இன்பத் தமிழ்மொழியில் இஸ்லாமியத் தத்துவத்தை விளக்கி பதினொரு நாட்கள் பேசுகின்ற பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய சொற்பொழிவைத் துருக்கியர் வீற்றிருந்து கேட்டார்கள். அல்ஜீயர் வீற்றிருந்து கேட்டார்கள். நைஜீரியர் வீற்றிருந்து கேட்டார்கள். ஜெர்மானியர் வீற்றிருந்து கேட்டார்கள். உலகத்தில் உள்ள 157 மொழிகள் பேசுகின்ற மக்கள் எல்லாம் இன்பத் தமிழ் மொழியிலே நான் ஆற்றிவந்த சொற்பொழிவை அந்த புனித இடத்திலே வீற்றிருந்து கேட்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் அல்ஜீரிய நாட்டு உயர் நீதிபதி ஒருவர் என்னைச் சந்தித்துக் கேட்டார். நீங்கள் பேசுகின்ற வண்மையும் இனிமை மிக்கதான மொழி, கேட்போர் இதயத்தை ஈர்க்கும் வன்மை மிக்க சொல் படைத்த கவின்மிகு மொழி எந்த நாட்டு மொழி'' என்று கேட்டார். நான் 'தமிழ்மொழி' என்று கூறினேன். அவருக்குத் தமிழ்மொழி என்று கூறியவுடனே புரியவில்லை. அதற்குப் பிறகு ''மெட்ராஸ் மொழி'' என்று கூறினேன். அப்போதுதான் ''மதராசி மொழியா'' என்று கேட்டார். அப்போது வெட்கமும், துக்கமும் எனக்கு ஏற்பட்டது. நம்முடைய இன்பத் தமிழ்மொழியிலே நான் பேசுகின்றபோது – நான் தமிழ்நாட்டில் இருந்து வந்திருப்பவன் என்று உணர்த்தப்பட்டால் – தமிழ் மொழியில் பேசுவதாக அறிந்திருப்பாரேயானால் எவ்வளவு மகிழ்வாக இருக்கும். அந்த நிலை இன்றைக்கு இல்லாத காரணத்தினால் அல்லவா அல்ஜீரிய நாட்டு உயர் நீதிபதிக்கே புரியவில்லை. என்றைக்கு என்னுடைய தாய்த் திருநாட்டுக்கு, தேனினும் இனிய தமிழ்மொழியின் அடிப்படையில் பெயர் சூட்டப்பட்டு செந்தமிழ் நாடு என்கிற பெயர் உலகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதாக என்னுடைய இறைவன் ஆலயத்திலேயே இதயம் உருகிப் பிரார்த்தனை செய்து கொண்டேன். அன்றைக்கு அந்தப் புனித ஆலயத்தில் முன்னின்று இறைவனிடம் நான் செய்துகொண்ட பிரார்த்தனையின் பலனைத்தான் இன்றைக்குப் பெறுகிறேன். அதனால் பாராட்டுகின்றேன்! வரவேற்கின்றேன்.

நாலரைக் கோடி மக்களின் நாயகர், தமிழ் அறிந்த மக்களுக்கு மத்தியில் தமிழுக்குத் தனித்ததொரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தந்த தவச்செல்வர், மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சராக இந்தப் பேரவையில் வீற்றிருக்கும் காலத்தில் நம்முடைய தாய்த் திருநாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்கிற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற நேரத்தில் அதை ஆதரித்துப் பேசுகின்ற பேற்றை பெற்றுள்ள நான் அதை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் (பலத்த ஆரவாரம்). தமிழ் மொழியை இந்தியத் தேசிய ஆதிக்க மொழியாக்க வேண்டும், இந்திய நாட்டின் பொது மொழியாக்க வேண்டும் என்பதாகக் கூறிய தந்தை காயிதே மில்லத் அவர்கள் கட்சியின் எளிய ஊழியன் என்ற அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். தமிழ்நாட்டிற்கு உள்ளே மட்டும் அல்ல, தமிழ் மக்கள் வாழ்கின்ற பகுதியிலே மட்டும் அல்ல, தமிழ் கூறும் நல்லுலகம் பூராவிலும் உள்ள மக்கள் அழைக்கின்ற வகையில் அதுவும் – சிறந்ததோர் மொழியை அடிப்படையாக வைத்து, தமிழ்நாடு என்று நம் மாநிலம் அழைக்கப்பட வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தை முழுக்க முழுக்க ஆதரித்து நமது அரசியல் சட்டத்தில் திருத்தம் நிறைவேற்றப்படுகிற பணியைச் சீக்கிரமே எடுக்க வேண்டும் என்று கூறி – தமிழ்நாட்டுக்கு உள்ளேயும், தமிழ் கூறும் நல்லுலகிலும், உலகம் எங்கிலும் தமிழ்நாடு என்ற பெயரில் நம்மை அழைக்கும் வண்ணம் பெயர் மாற்றம் செய்துள்ளதை ஆதரித்து அமர்கிறேன்.

**திரு. க.ர.நல்லசிவன்:**

தலைவர் அவர்களே, சபை முன்புள்ள தீர்மானத்தை ஆதரிக்கிறேன். மொழிவாரியாக நமது மாநிலம் அமைந்த நேரத்திலேயே 'தமிழ்நாடு' என்ற பெயரை இதற்கு வைத்திருக்க வேண்டும். அரசியல் சாசனத்தில் மட்டும் அல்ல, வெளிநாடுகளிலும் இது 'தமிழ்நாடு' என்று அழைக்கப்படாது வேறு ஏதோ பெயரில் அழைக்க விட்டிருப்பது சரியல்ல.. என்னைப் பொறுத்த வரையில் இதற்கு முன்னிருந்த அரசாங்கம் மொழிப் பிரச்சினை பற்றிய உணர்வில் கொஞ்சம்கூட மக்கள் உணர்ச்சியை மதித்து நடக்காததுதான் இன்றைய அவர்களது நிலைக்குக் காரணம் என்று சொல்வேன். 1956லேயே இந்தப் பிரச்சினை எழுந்தது. தட்டிக் கழித்து விட்டார்கள். பாராளுமன்றத்தில் தீர்மானம் வந்தது. ஒதுங்கிவிட்டார்கள். ஆகவே இன்றைக்குப் புதிதாக வந்துள்ள அரசு இத்தகைய தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்திருப்பதை ஆதரிக்கிறேன். 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கப்பட்டால்தான் தமிழ் நாகரீகம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் கலாசாரம் ஆகிய எல்லாவற்றுக்கும் மரியாதை இருக்கும். ஆந்திராவில் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை.

தமிழ் மக்களுடைய மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்றே பெயர் வைக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டு அரசாங்க நிர்வாகம் அனைத்தும் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும். மசோதாக்கள் இங்கே ஆங்கிலத்தில் வருவதைப் பார்த்து மனம் சங்கடப்படுகிறேன். வேதனைப்படுகிறேன். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிற நமது தொன்மை மொழியில் சொல்ல முடியாத விஷயங்களே கிடையாது. எல்லாவற்றையும் தமிழிலே நடைபெறச் செய்ய, தகுந்த வார்த்தைகளைக் கண்டுபிடிப்பதற்கு சங்கரலிங்கனார் பெயரில் ஒரு ஆராய்ச்சிக்கூடமே நிறுவப்படலாம். அவர் நினைவை நாம் மறக்க முடியாது. இன்றைக்கு எல்லாக் கல்லூரிகளிலுமே தமிழ்மொழி மூலமாகப் போதனை நடத்தப்பட வேண்டும். தமிழில் படிக்க அதிகமான பேர்கள் விரும்பவில்லை. ஆங்கிலத்திலேயே படிக்க விரும்புகிறார்கள் என்கிற பேச்சுக்கே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இன்றைக்கு ஆங்கிலத்தில் பாடம் நடத்துகிற கான்வெண்ட் பள்ளிக்கூடங்கள் எல்லாம் விரட்டி அடிக்கப்பட வேண்டும். தமிழ் உணர்ச்சியை எல்லாத் துறைகளிலும் இந்த அரசு ஊட்டியாக வேண்டும். 1957ஆம் ஆண்டிலேயே 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கப்பட வேண்டும் என்பதற்கு நாங்கள் ஆயிரம் பேர் கிளர்ச்சி செய்தோம். அன்று எங்கள் எண்ணம் நிறைவேறவில்லை. நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களின் முயற்சியால் இன்றைக்கு இந்தத் தீர்மானம் சபை முன் வந்திருப்பதை ஆதரித்து, இதை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ம.பொ.சிவஞானம்:**

பேரவைத் தலைவர் அவர்களே, இன்று முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவை முன் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை மனப்பூர்வமாக அல்ல, என்னுடைய உணர்ச்சிபூர்வமாக, உயிர்பூர்வமாக ஆதரிக்கின்றேன். **பத்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருக்க வேண்டிய புண்ணிய காரியம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருகிற வரையில் காத்திருந்தது என்கிறபோது இது கடவுளின் கட்டளை என்றே நம்புகிறேன்.** காங்கிரஸ் கட்சித் தலைவர் தீர்மானத்தை ஆதரித்தார்கள். அதைக் கண்டு பூரிக்கிறேன். இந்த உணர்வு பத்து ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருந்தால் காங்கிரஸ் கட்சியின் நிலை இன்று வேறாக இருந்திருக்கும் என்பதைப் பூர்வ நண்பர் என்ற முறையில் அவருக்கு நினைவூட்டிக் கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தீர்மானத்தை ஆதரித்தார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். தேவையில்லா ஒரு குறிப்பையும் கொடுத்தார்கள். ஆயினும் அவர் தீர்மானத்தை எதிர்க்கவில்லை என்பதை மனப்பூர்வமாக உணர்கிறேன். ஆதரிக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். தமிழில் 'தமிழ்நாடு' என்று இருக்கட்டும். ஆங்கிலத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றே இருக்கட்டும் என்ற குறிப்பைத் தந்தார். அந்தக் குறிப்பை ஏற்போமானால் இந்தத் தீர்மானமே தேவையற்றதாகி விடுகிறது. சட்ட நுணுக்கப்படி பார்க்கிறவர்களுக்கு இது புரியும். அந்தக் குறிப்பு நடைமுறையில் இருக்கிற ஒன்றுதான். நான் சொல்கிறேன், "ஆங்கிலத்தில் மட்டும் அல்ல. ஆண்டவன் உலகம் என்று ஒன்று இருக்குமானால் அங்கேயும் என் தாய்நாடு 'தமிழ்நாடு' என்றே அழைக்கப்பட வேண்டும்" இந்தத் தீர்மானத்தின் பொருள் அதுதான். என்னை என் பெயரால் அல்லாமல் இன்னொரு பெயரிட்டு அழைக்க இந்த உலகத்தில் இருக்கும் யாருக்கும் உரிமை இல்லை, என்னை இன்னொரு பெயரால் அழைப்பதைத் தடுக்க என் தன்மானம் தயங்காது. என் மொழிப் பெயரால், என் இனப் பெயரால், என் நாட்டின் பெயரால்தான் அழைக்கப்பட வேண்டும்; தமிழிலே 'தமிழ்நாடு' என்றும் ஆங்கிலத்திலே 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றும் அழைக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வந்திருக்கின்ற குறிப்பு அவருடைய நம்பிக்கையிலிருந்து பிறந்திருக்குமானால், அவருடைய கட்சியின் மாநில கிளைக்குப் பெயர் அப்படியில்லை என்பதை நான் அவருக்கு நினைப்பூட்டுகிறேன். இங்கே இருக்கின்ற அகில இந்தியக் காங்கிரஸின் கிளைக்கு 'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி' என்று தமிழிலேதான் பெயரிடப்பட்டிருக்கிறதேத் தவிர, ஆங்கிலத்திலே 'மெட்ராஸ் ஸ்டேட் காங்கிரஸ் கமிட்டி' என்று அழைக்கப்படவில்லை. ஆகவே, அவர்கள் இன்னும் சரியான இடத்திற்கு வருவதற்குச் சிக்கல் இருக்கிறது என்பதைத்தான் இதன்மூலம் நான் குறிப்பிட விரும்புகிறேனேத் தவிர இதிலே நம்முடன் ஒன்றுசேர வந்த அவரை விரட்டுவதற்காக நான் கூறவில்லை.

### திரு. பி.ஜி.கருத்திருமன்:

நான் குறிப்பிட்ட சமயத்திலே இந்தத் தீர்மானத்தை வரவேற்கின்றேன், என்று கூறி அதோடு ஒரு ஆலோசனையையும் சொன்னேன். இப்படி இருக்கலாம் என்று என்னுடைய ஆலோசனையைச் சொன்னேனேத் தவிர, இப்படித்தான் இருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஒரு ஆலோசனையாகத்தான் சொன்னேன். ஜெர்மனியை ஜெர்மானிய மொழியிலே ட்யூஸ்லேண்ட் என்றும் ஆங்கிலத்திலே ஜெர்மனி என்றும் அழைக்கிறார்கள். ஆகவே இங்கேயும் அப்படிச் செய்யலாமென்று ஆலோசனையாகத்தான் சொன்னேன். தமிழிலே திரு. சிவஞானத்தைவிடப் பற்றும் பாசமும் எனக்கு உண்டு என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### திரு. ம.பொ.சிவஞானம்:

தமிழ்ப் பற்றிலே நான் அடைப்பட்டவன் என்பதை இந்த அவையிலே நான் அவையடக்கத்தோடு சொல்லிக்கொள்கிறேன். என்னைவிடத் தமிழ்ப் பற்றில் சிறந்தவர்கள் இந்த மன்றத்திலேயும், மன்றத்திற்கு வெளியிலேயும் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நான் தெளிவாக 'குறிப்பு' என்றுதான் சொன்னேன். அவர்கள் ஆலோசனை சொன்னதாகச் சொன்னார்கள். நான் குறிப்பு என்று நல்ல

தமிழில் சொன்னேன். மெட்ராஸ் ஸ்டேட் என்று உலகத்திற்குத் தெரிகின்ற மாதிரி இருக்க வேண்டுமென்றால், மகாராஷ்டிரம் மகாராஷ்டிரம் என்று இருக்கக்கூடாது, பம்பாய் ஸ்டேட் என்று இருந்திருக்க வேண்டும். ஆனால் மகாராஷ்டிரமாகத்தான் இருக்கிறது. ஆகவே மெட்ராஸ் ஸ்டேட் என்று சொல்லப்படுவதினாலும் தமிழ்நாடு என்று இருத்தலே சிறந்தது. மெட்ராஸைவிடப் பம்பாய் உலகப் பிரசித்தி பெற்றது என்பதில் இங்கேயுள்ள எவருக்கும் இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. ஆகவே அப்படிப்பட்ட பம்பாய் மாநிலம் மகாராஷ்டிரம் என்று அழைக்கப்படுவதுபோல் மெட்ராஸ் ஸ்டேட்டும் தமிழ்நாடு என்று உலகத்தாரால் அழைக்கப்படுவதுதான் சிறந்ததாக இருக்க முடியும்.

மத்திய அரசு ரீஆர்கனிஸேஷன் ஆப் ஸ்டேட்ஸ் என்று மாநிலங்களைத் திருத்தியமைக்கின்ற பொழுது – மசோதா தயாரிக்கப்பட்டபொழுது – அதிலே பம்பாய் ஸ்டேட் என்றுதான் பெயரிடப்பட்டது. ஆனால் குஜராத் தனி ஸ்டேட் ஆக பிரிக்கப்பட்ட பிறகு, ரெஹிடுவரி பம்பாய் மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். “பம்பாய் ஸ்டேட் என்று இன்னொருவர் பெயர் வைக்கத் தேவையில்லை. அதற்குப் பாராளுமன்றம் தேவையில்லை, என்னுடைய மாநிலத்திற்கு மகாராஷ்டிரம் என்று பெயர் இடப்படும்” என்று முதலமைச்சர் அவர்களே மாநில சபையில் தீர்மானம் கொண்டு வந்தார்கள். ஆகவே, மெட்ராஸ் ஸ்டேட் என்றால்தான் உலகத்திற்குத் தெரியும் என்று எண்ணாமல் ‘தமிழ்நாடு’ என்று பெயரிடுவதுதான் சாலச் சிறந்தது. பம்பாய் ஸ்டேட்டுக்கு மகாராஷ்டிரம் என்று பெயரிட்டு அழைக்கப்படுவதைப் போன்று மெட்ராஸ் ஸ்டேட்டுக்கு தமிழ்நாடு என்று பெயரிடப்பட்டு தமிழ்நாடு என்றே உலகம் முழுவதும் அழைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு என்ற பெயர் வந்த பிறகும் மெட்ராஸ் நகரம் இருக்கும். அதனால் மெட்ராஸ் என்ற பெயரும் இருக்கும். தமிழ்நாடு என்ற பெயர் மெட்ராஸ் என்பதை மறைக்கும் திரை அல்ல; எப்பொழுதும் அதை மறைக்கக்கூடிய திரையாக அது இருக்காது. தமிழ்நாடு என்பது புத்தம் புதிய பெயரல்ல. தமிழ் இலக்கியங்களில்கூட தமிழ்நாடு என்று இல்லை என்றெல்லாம் முன்பு இந்தப் பேரவையில் சொல்லப்பட்டது. அப்படியில்லை. தமிழ் இலக்கியங்களிலே தமிழ்நாடு என்று சொல்லப்படுவதற்கு நிறையச் சான்றுகள் இருக்கின்றன. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப் பெற்ற தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் பாடிய பனம்பாரனார் என்ற புலவர்,

**“வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ்கூறு நல்லுலகம்”**

என்று தமிழ்நாட்டின் எல்லையைக் கூறுகின்ற முகத்தான் தமிழ் கூறு நல்லுலகம் என்றே குறிப்பிடுகின்றார். எனவே, உலகத்தாரால் ‘தமிழ்நாடு’ என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதேபோல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இயற்றப்பட்ட புறநானூற்றுப் பாடல் ஒன்றிலே

**“வையக வரைப்பின் தமிழகம்”**

என்று ஒலிக்கின்ற அலைகடலுலகில் தமிழ் வழங்கும் நாட்டுக்குத் தமிழகம் என்று உலகம் கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1800 ஆண்டுகளுக்கு முன்பாக இளங்கோவடிகளால் இயற்றப்பெற்ற சிலப்பதிகாரத்தில்,

**“இமிழ்கடல் வரைப்பில் தமிழகம்”**

என்று தெளிவாகத் தமிழ்நாடு பற்றி இளங்கோவடிகள் கூறியிருக்கின்றார். மணிமேகலையில் தமிழ்நாடு பற்றிக் கூறப்படுகின்றபொழுது,

**“சம்புத் தீவினில் தமிழகம்”**
என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பெரிய புராணத்தில் சேக்கிழார்

**“நற்றமிழ் நாடு”**

என்று கூறுகின்றார். அதற்குப் பிறகு வந்த கம்பன் மிகத் தெளிவாகக் கூறுகின்றார்.

**“தென் தமிழ்நாடு”**

என்று, அதற்குப் பிறகு பிறந்து, நம்மோடு வாழ்ந்து மறைந்த பாரதியார், தமிழ்நாட்டைப் பற்றிப் பாடுகின்றபொழுது,

**“செந்தமிழ் நாடு”**
என்று கூறுகின்றார்.

**“செந்தமிழ் நாடென்னும் போதினிலே**
**இன்பத்தேன் வந்துபாயுது காதினிலே”**

என்று கூறி ‘தமிழ்நாடு’ என்று கேட்டதுமே இன்பத் தேன் வாயில் பாயவில்லை, காதில் வந்து பாய்கிறது என்று அழகாகக் கூறியிருக்கிறார்.

இன்னும் தெளிவாகக் கூறுகின்றபொழுது
எங்கள்

**“தந்தையர் நாடென்ற பேச்சினிலே**
**ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே”**

என்று கூறுகிறார். இந்த நாடு எங்கள் தந்தையர் நாடு – தந்தையர்கள் இந்த நாட்டில் வந்து குடியேறியவர்கள் அல்ல. இந்த நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவர்களின் பூர்வ புண்ணிய புனிதத் திருநாடு – என்று காட்டி, தந்தையர் நாடு என்று சொன்னவுடனே மூச்சிலே ஒரு சக்தி பிறக்குது என்று கூறுகின்றார். அதோடு மட்டும் நின்றுவிடாது,

**“தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற**
**தாயென்று கும்பிடடி பாப்பா”**

என்று, “தமிழர் திருநாட்டைப் பெற்றெடுத்த தாய் என்று கும்பிடு பாப்பா” என்று கூறுகின்றார்.

ஆகவே, தமிழ் வழங்கும் நாடு – தாய்நாடு, தந்தை நாடு என்று. தமிழருக்கு மூவாயிரம் ஆண்டுக்காலத்திற்கு முன்னதாக இருந்தே தமிழ்நாடு என்று அழைக்கப்பட்டிருக்கிறது என்பதை இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இலக்கிய சான்றுகளைக் கூறினேன். அடியார்க்கு நல்லார் கூறுகின்றபொழுது, ‘தமிழ்த்தேசம்’ என்று கூறுகின்றார். ஆகவே தமிழகம், தமிழ்நாடு, தமிழ்த்தேசம், செந்தமிழ் நாடு, தென் தமிழ்நாடு என்று எல்லாப் பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன. இப்படிப்பட்ட பெயர்களை எல்லாம் வைக்க மறுப்பதற்கும் ஒரு காலம் இருந்தது என்பதனை நினைத்தபொழுது என்னுடைய உள்ளம் கொதித்தது. அப்படிக் கொதித்ததால்தான் குழம்பிக் கொண்டிருந்தேன். திராவிட முன்னேற்றக் கழகப் பொது மாநாடு சென்னையிலே நடைபெற்றபொழுது, நான் பேசியதை மீண்டும் இப்போது நினைவூட்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருவது உறுதி, அந்த ஆட்சி வந்தவுடன் முதல் காரியம் இந்த மாநிலத்தினுடைய பெயரை

'தமிழ்நாடு'ஆக ஆக்க வேண்டுமென்று சொன்னேன். இன்றைக்கு அதேமாதிரி "தமிழ்நாடு" ஆக ஆக்குவதற்குத் தீர்மானம் கொண்டு வந்த முதலைமச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் அந்தத் தீர்மானத்தைப் படித்தவுடனேயே ஓடிப்போய் அவரைக் கட்டி ஆலிங்கனம் செய்ய வேண்டுமென்ற உணர்ச்சி என் உள்ளத்தில் ததும்பியது. ஆனால், அவரது பக்கத்திலோ அல்லது நேராகவே நான் போவதற்கு இடம் இல்லை, கடைக்கோடியில் இருக்கிறேன்.

இது வாதம் எதுவும் இல்லாத பிரச்சினை என்பதால் அதிகம் பேசி நீட்டிக்க விரும்பவில்லை. 1961ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் தேதியன்று சட்டமன்றத்திற்கு வெளியே இதற்காகத் தமிழரசுக் கழகத் தொண்டர்கள் சத்தியாக்கிரகப்போர் நடத்தி, 1,700 பேர்கள் கைது செய்யப்பட்டனர். 1961 ஜனவரி 30ஆம் தேதி பிப்ரவரி 15ஆம் தேதி வரை போராட்டம் நடந்தது. அவர்களிலே முக்கியமாக நாடகச் சக்கரவர்த்தி திரு. டி.கே.ஷண்முகம், திரைப்படத் தயாரிப்பாளர் திரு.எம்.ஏ.வேணு, திரைப்பட வசனகர்த்தா திரு. ஏ.பி. நாகராஜன், வழக்கறிஞர்கள், பட்டதாரிகள், பாரதமாதா தொண்டர்கள், 1,700 பேர்கள் சிறை புகுந்தனர். அன்று நாங்கள் எதற்காகச் சிறை புகுந்தோமோ, அதை இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்து நிறைவேற்றியிருக்கிறது என்பதை நினைக்கின்றபொழுது நாங்கள் கூட்டணிக் குடும்பத்தில் கலந்தது குற்றம் இல்லை என்று மீண்டும் நினைக்கத்தான் தோன்றுகிறது. பிரதேச உணர்ச்சியையும் தேசிய உணர்ச்சியையும் பிணைக்கச் செய்வதற்கு முயன்றார் காந்தியடிகள். இந்தியன் என்று சொல்வது தமிழனுக்கு எதிர் இல்லை, தமிழன் என்று சொல்வதால் இந்தியனுக்கு எதிர் இல்லை என்று உபதேசித்த தேசீயத் தந்தையின் திருச் சந்நிதானத்தில் இப்படிப்பட்ட தீர்மானத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமை பற்றி மகிழ்ச்சியடைகிறேன் என்பதைச் சொல்லிக்கொண்டு ஒரே ஒரு குறிப்பை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

'தமிழ்நாடு' என்று பெயர் வைத்ததோடு மட்டும் நிறுத்திவிடக் கூடாது. தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டு தமிழுக்கு வாழ்வு இல்லாவிட்டால் உலகம் மதிக்காது. உலகத் தமிழ் மாநாடு நடைபெற இருக்கின்றது. உலகத்தின் பல நாடுகளிலிருந்து பேரறிஞர்கள் வர இருக்கிறார்கள். கடைகளில் பெயர்ப் பலகைகள் எல்லாம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கின்ற காரணத்தால் வருகின்றவர்கள் 'இன்னும் நாம் தமிழ்நாடு வந்து சேரவில்லையோ' என்று நினைத்துக் கொள்வார்கள். இங்கு ஒலிக்கின்ற மொழி ஆங்கிலமாக இருப்பதால் இன்னும் தமிழ் ஒலிக்கக்கூடிய தமிழ்நாடு வரவில்லையோ என்று நினைத்துக் கொள்வார்கள். ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

அதோடுகூட செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு 'வள்ளுவர் கோட்டை' என்று பெயரிட்டால் என்ன குடிமுழுகிப் போய்விடும்? டில்லிப் பாராளுமன்றத்தைச் சேர்ந்திருக்கின்ற இடத்திற்கு சாணக்கியபுரி என்று பெயரிடப்பட்டு அப்படித்தான் அழைக்கப்படுகிறது. அதைப் போல இதைத் 'திருவள்ளுவர் கோட்டை' என்று சொன்னால் ஒன்றும் ஆகிவிடாது. ஆகவேதான் இந்தத் தீர்மானத்தை மன நிறைவோடு உயிர் நிறைவோடு ஆதரித்து, வரவேற்று உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆ.கு.சுப்பையா:**

மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடிய திராவிட

முன்னேற்றக் கழக அரசைக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்றுப் பாராட்டுகிறேன். பாரதியார் கண்ட கனவு நனவாகக் கூடிய ஒருநாள் வந்திருக்கிறது. பாரதியார் அவர்கள் எவ்வாறெல்லாம் தமிழ்நாட்டைப் பற்றிப் புகழ்ந்து பாடினார் என்பதைப் பற்றியெல்லாம் மதிப்பிற்குரிய ம.பொ.சி. அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

ம.பொ.சி. அவர்கள் "தமிழ்நாடு" என்று பெயர் மாற்ற வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் சொல்லி வந்த நேரத்தில் அன்றைய தினம் இருந்த காங்கிரஸ் ஆட்சியினர் மறுத்துக் கொண்டு வந்தார்கள். அதன் பின்னாலே ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு என்று பெயரிடப்பட வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில் எல்லாம் அதனைக் காங்கிரஸ் கட்சி மெஜாரிட்டியின் காரணமாகத் தோற்கடித்துக் கொண்டே வந்தார்கள். அதற்குக் காலம் இன்றைய தினம் பிறந்திருக்கிறது. இதனைத் தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா மக்களும் பெரிய அளவில் பாராட்டுவார்கள்; வாழ்த்துவார்கள். அந்த முறையில் நானும் "தமிழ்நாடு" என்று பெயரிடப்பட வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டி, வாழ்த்தி, வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு.சி.என்.அண்ணாதுரை:**

சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் எல்லாக் கட்சியினராலும் நல்ல அளவுக்கு ஒப்புக் கொள்ளப்பட்டுத் தீர்மானமாக நிறைவேற்ற இருக்கின்ற தமிழ்நாடு என்று பெயரிடுகின்ற இந்த நிகழ்ச்சி, இந்த அவையிலே இன்றைய தினம் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும், நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாள் ஆகும். இந்தத் திருநாளைக் காண்பதற்குப் பன்னெடுங்காலம் காத்துக் கொண்டிருக்க நேரிட்டதே என்பதுதான் மகிழ்ச்சியின் இடையே நமக்கு வருகின்ற ஒரு துயரமேத் தவிர, நெடுங்காலத்திற்கு முன்னாலே நடைபெற்றிருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியை மிகுந்த காலம் தாழ்த்தி இன்றைய தினம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். என்றாலும், இதிலே எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு இந்தத் தீர்மானத்திற்கு அவர்கள் தங்களுடைய ஆதரவைத் தந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள்கூட இந்தத் தீர்மானத்தை ஆதரித்தார்களேத் தவிர வேறில்லை. அதிலே சில ஆலோசனைகள் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லியிருப்பது, எதிர்க்கட்சியில் இருப்பவர்களுடைய கடமை என்ற வகையில், ஆலோசனைகள் சொல்ல வேண்டும் என்ற முறையிலேயே தவிர – எதிர்க்கிறார்கள் என்று இல்லை. ஆகையினால் இந்தத் தீர்மானம் எல்லோருடைய ஆதரவையும் பெற்று இந்தியப் பேரரசுக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கிறது. இரண்டொரு தலைவர்களுடன் உரையாடுகின்ற வாய்ப்புக் கிடைத்தபோது, இதைப் பற்றி அவர்கள் சொல்லும்போது, தமிழகச் சட்டமன்றத்தில் இது நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படுமானால் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதிலேயே தயக்கம் இருக்காது என்பதனை முன்கூட்டியே என்னிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அங்குள்ள பல தலைவர்கள் அரசை நடத்துகிறவர்கள்கூட ஏற்றுக் கொள்கிறார்கள் என்று எண்ணத்தக்க விதத்தில், பத்து நாட்களுக்கு முன் பாராளுமன்றத்தில் இந்த மாநிலத்தைப் பற்றிய பேச வேண்டிய வாய்ப்புக் கிடைத்த நேரத்தில், அங்குள்ள உள்துறை அமைச்சர் திரு.சவான் அவர்கள் மெட்ராஸ் ஸ்டேட் என்று பேசிப் பழக்கப்பட்டவர் – மிகுந்த அக்கறையோடும், மிகுந்த கவனத்தோடும் 'Tamil Nad'

என்றுதான் பேசியிருக்கிறார். ஆக இதை அவர்களும் ஏற்றுக்கொண்டு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை இன்றைய தினம் இந்த அவையிலே நாம் பெற்றிருக்கிறோம்.

மதிப்புமிக்க திரு. ம.பொ.சி. அவர்கள், இதிலே மிகுந்த மன எழுச்சிப் பெற்றது இயற்கையானதாகும். அவர்கள் பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு என்ற பெயர் இந்த நாட்டுக்கு இடப்பட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறையோடு பாடுபட்டவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், திராவிட முன்னேற்றக் கழகம் என்பதிலே “திராவிட” என்பதை இணைத்துக் கொண்டிருப்பதாலே, தமிழ்நாடு என்பதிலே அக்கறை இல்லாமல் போய்விடுமோ என்று சிலர் எண்ணிய நேரத்தில் “தமிழ்நாடு” என்று பெயரிடுதல் வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்து கொண்டிருக்கிறோம். காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களும், மற்றவர்களும் கொண்டு வருகிறார்களே என்பதனாலே – முன்னாலே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும் இலக்கியத்தில் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டிருந்தாலும், இன்றைய தினம் அவர்களும் **“தமிழ்நாடு”** என்று சொல்லிக் கொள்வதில் மிகுந்த பெருமைப்படுகிறார்கள். ஆகையால் இந்தத் தீர்மானம் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் இந்த அவையில் நிறைவேற்றப்பட இருக்கிறது என்று கருதுகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு வெற்றி கிடைக்குமானால் அது இன்று கழகத்திற்கு வெற்றியல்ல; தமிழரசுக் கழகத்திற்கு வெற்றியல்ல; மற்ற கட்சிகளுக்கு வெற்றியல்ல – இது தமிழுக்கு வெற்றி; தமிழருக்கு வெற்றி; தமிழ் வரலாற்றுக்கு வெற்றி; தமிழ்நாட்டுக்கு வெற்றி என்ற விதத்தில் அனைவருமே இந்த வெற்றியிலே பங்குகொள்ள வேண்டும்.

**“தமிழ்நாடு”** என்ற பெயர் இருந்தால் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அறிந்துகொள்ள மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, நம்முடைய தொழில் அமைச்சராக முன்பு இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே செய்துகொள்ளக்கூடிய ஒப்பந்தம் எல்லாம் திருத்தி எழுதப்பட வேண்டி வரும். அதனாலே சிக்கல்கள் நாடுகளுக்கெல்லாம் விளையும் என்றெல்லாம் சொன்னார்கள். அதிலிருந்து அவர்கள் வெளிநாடுகளெல்லாம் போய் வந்தார்கள் என்பதைத்தான் கவனப்படுத்துகிறார்களேத் தவிர, உண்மையாகச் சிக்கல்கள் இருக்கின்றனவா என்பதைக் கவனப்படுத்துவதில்லை. மதிப்பிற்குரிய நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னபடி “கோல்டு கோஸ்ட்” என்பது “கனா” ஆகிவிட்டது; அதனால் எந்தவிதமான சர்வதேசச் சிக்கல்களும் ஏற்பட்டு விடவில்லை. தமிழ்நாடு தனிநாடாகி இந்தப் பெயரை இடவில்லை; இந்தியாவில் ஒரு பகுதியாக இருந்து கொண்டு இந்தப் பெயரை இடுவதால் இதிலே சர்வதேசச் சிக்கல்கள் எழுவதற்கு நியாயம் இல்லை. ஆகவே, இந்தத் தீர்மானத்தை அனைவரும் தங்கள் தங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்க வேண்டுமென்பதை, ஒரு கடமை உணர்ச்சியாகக் கொண்டதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

நண்பர் ஆதிமூலம் அவர்கள், “தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்காகத் தன்னைத் தானே தியாகம் செய்துகொண்ட சங்கரலிங்கனார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்” என்று குறிப்பிட்டார்கள். அதையும் அத்தனை பேரும் உள்ளத்திலே, கருத்திலே கொள்வார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். அவருடைய எண்ணங்கள் இன்றைய தினம் ஈடேறத்தக்க நிலை கிடைத்திருப்பதும், அந்த நிலையை

நண்பர் திரு. ஆதிமூலம் அவர்கள், "தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்காகத் தன்னைத் தானே தியாகம் செய்து கொண்ட சங்கரலிங்கனார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். அதையும் அத்தனைபேரும் உள்ளத்திலே, கருத்திலே கொள்ளுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். அவருடைய எண்ணங்கள் இன்றையதினம் ஈடேறத்தக்க நிலை கிடைத்திருப்பதும், அந்த நிலையை உருவாக்குவதிலே நாம் அனைவரும் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதும் நமக்கெல்லாம் நம் வாழ்நாள் முழுவதும் பெருமைப்படத்தக்க காரியமாகும்.

நம்முடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் நெடுங்காலத்திற்குப் பிறகு நம்முடைய இல்லங்களிலே அமர்ந்து பேசிக் கொள்ளுகின்ற நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள இருக்கிறார்கள். "என்னுடைய பாட்டனார் காலத்திலே தான் நம்முடைய நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் இடப்பட்டது; எதிர்க்கட்சியில் உட்கார்ந்து கொண்டிருந்த என்னுடைய பாட்டனார் கருத்திருமன் இதை ஆதரித்தார்" என்று கருத்திருமன் பேரப் பிள்ளைகளும், எங்களுடைய பேரப் பிள்ளைகளும் எதிர்காலத்திலே பேசக்கூடிய நல்ல நிலைமைகளையெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்ப்பார்களேயானால் நிச்சயமாக அந்த "ஆலோசனையை"க் கூடச் சொல்லாமல் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஒரு துளியும் ஐயப்பாடு கொள்ளவில்லை. ஆகையினால் இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கின்ற இந்த நன்னாளில் "தமிழ்நாடு" என்று நான் சொன்னதும "வாழ்க" என்று அவை உறுப்பினர்கள் சொல்லுவதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தமிழ்நாடு !

**உறுப்பினர்கள் :** வாழ்க !

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தமிழ்நாடு !

**உறுப்பினர்கள் :** வாழ்க !

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தமிழ்நாடு !

**உறுப்பினர்கள் :** வாழ்க !

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு மேலாக 17—6—1967 அன்று தொடங்கப்பட்ட பேரவையின் கூட்டத் தொடர், இன்றுடன் முடிவடைகிறது. நாள்தோறும் நடைபெற்ற கூட்டங்களைச் சிறப்பாகவும், கண்ணியத்துடனும் நடத்திக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் பேரவை கூடுகின்ற நாள் குறிப்பிடாமல், பேரவைக் கூட்டம் இன்று முடிவடைகிறது. பி.ப பகல் 1-30

பின்னர் பேரவை நாள் குறிக்கப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

### 10. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

*238. Notification issued with G.O. Ms. No. 728, Agriculture, dated the 28th February 1967, declaring the area of the Srivaikuntam market specified in the schedule of the notification and the

உருவாக்குவதிலே நாம் அனைவரும் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதும், நமக்கெல்லாம், நம் வாழ்நாள் முழுவதும் பெருமைப்படத்தக்கக் காரியமாகும்.

நம்முடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் நெடுங்காலத்திற்குப் பிறகு நம்முடைய இல்லங்களிலே அமர்ந்து பேசிக்கொள்கின்ற நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள இருக்கிறார்கள். ‘‘என்னுடைய பாட்டனார் காலத்திலேதான் நம்முடைய நாட்டுக்கு **“தமிழ்நாடு”** என்ற பெயர் இடப்பட்டது; எதிர்க்கட்சியில் உட்கார்ந்து கொண்டிருந்த என்னுடைய பாட்டனார் கருத்திருமன் இதை ஆதரித்தார் என்று திரு கருத்திருமன் பேரப் பிள்ளைகளும், எங்களுடைய பேரப் பிள்ளைகளும் எதிர்காலத்திலே பேசக்கூடிய நல்ல நிலைமைகளை எல்லாம் அவர்கள் எண்ணிப் பார்ப்பார்களேயானால் நிச்சயமாக அந்த ‘‘ஆலோசனையைக்’’ கூடச் சொல்லாமல் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஒரு துளியும் ஐயப்பாடு கொள்ளவில்லை. ஆகையினால் இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு திரு. சி.என்.அண்ணாதுரை**

சட்டமன்றத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கின்ற இந்த நன்னாளில் **“தமிழ்நாடு”** என்று நான் சொன்னதும் ‘‘வாழ்க’’ என்று அவை உறுப்பினர்கள் சொல்லுவதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

**மாண்புமிகு திரு.சி.என்.அண்ணாதுரை:** தமிழ்நாடு

**உறுப்பினர்கள்:** வாழ்க !!

**மாண்புமிகு திரு. சி.என்.அண்ணாதுரை:** தமிழ்நாடு

**உறுப்பினர்கள்:** வாழ்க !!

**மாண்புமிகு திரு.சி.என்.அண்ணாதுரை:** தமிழ்நாடு

**உறுப்பினர்கள்:** வாழ்க !!

## தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18-ஆம் நாளினையே 'தமிழ்நாடு நாளாக' இனி கொண்டாடப்படும்!



சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - நவம்பர் 1-ஆம் நாளினை "தமிழ்நாடு நாள்" என கொண்டாட ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணையை ரத்து செய்தல் - மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு - தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18 ஆம் நாளினையே இனி ஆண்டுதோறும் "தமிழ்நாடு நாள்" என்ற பெயரில் கொண்டாடுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.80

நாள் 05.07.2022
சுபகிருது, ஆனி - 21
திருவள்ளுவராண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள்: 20.07.2019.
2. அரசாணை (நிலை) எண்.118, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 1.1)த் துறை, நாள்: 21.10.2019.

படிக்க:

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்திக் குறிப்பு எண்.988, நாள்: 30.10.2021.
4. தமிழ் வளர்ச்சி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் கடித ந.க.எண். 2707/ஆமொ1/2022, நாள்: 25.04.2022.

******

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் "தனித்துவ தமிழ்நாடு உருவாக்கப்பட்ட 01.11.1956ஆம் நாளினை பெருமைப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 1-ஆம் நாள் "தமிழ்நாடு நாள்" என்ற பெயரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்" என அறிவித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. இந்நிலையில், தமிழ் உணர்வாளர்கள், பல்வேறு அரசியல் கட்சிகள், தமிழ் கூட்டமைப்பினர், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் என்று பல்வேறு தரப்பினரும் நவம்பர் 1 ஆம் நாள் எல்லைப்போராட்டத்தினை நினைவுக்கூறும் நாளாகத்தான் அமையுமே தவிர தமிழ்நாடு நாளாக கொண்டாடப்படுவது பொருத்தமாக இருக்காது என்றும் மேலும், மெட்ராஸ் மாகாணம் என்று இருந்ததை மாற்றி பேரறிஞர் அண்ணா அவர்களால் 1967-ஆம் ஆண்டு ஜூலை 18-ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி "தமிழ்நாடு" என்று பெயரிடப்பட்ட அந்த நாள் தான் "தமிழ்நாடு நாள்" என கொண்டாடப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

-2-

3. மேற்படி அமைப்புகளின் கோரிக்கையின் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.10.2021 அன்று தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18 ஆம் நாளினையே "தமிழ்நாடு நாளாக" இனி கொண்டாடப்படும் என பின்வருமாறு அறிவித்துள்ளார்.

**"தனித்துவ தமிழ்நாடு என பெயர் சூட்டப்பட்ட 18.07.1967ஆம் நாளினை பெருமைப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 18ஆம் நாள் தமிழ்நாடு நாள் என்ற பெயரில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படும்".**

4. தமிழ் வளர்ச்சி இயக்குநர் தனது கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்படி அறிவிப்பை செயல்படுத்துவது தொடர்பில் நவம்பர் 1-ஆம் நாளில் தமிழ்நாடு நாள் கொண்டாடும் வகையில் ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.118, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ 1.1)த் துறை, நாள் 21.10.2019-க்கு உரிய திருத்தம் வெளியிடலாம் என பரிந்துரைத்துள்ளார்.

5. அரசின் கவனமான பரிசீலனைக்குப்பின் தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துரு மற்றும் பல்வேறு அமைப்புகளின் கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18 ஆம் நாளினையே ஆண்டுதோறும் "தமிழ்நாடு நாளாக" இனி கொண்டாடப்படவும் மற்றும் நவம்பர் 1-ஆம் நாளினை தமிழ்நாடு நாள் என கொண்டாட ஏற்கெனவே வெளியிடப்பட்ட, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையினை இரத்து செய்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-8

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (தொழில் ....துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர்அவர்களின்
முதுநிலை தனிச்செயலர், சென்னை-9.
நிதித்(தவ(ம)செ/வ.செ.பொ.I/II) துறை, சென்னை-9.
பொது (பல்வகை)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கோ. [signature] 5/7/22
பிரிவு அலுவலர்



இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

அரசியல் கட்சிகள், தமிழறிஞர்களின் கோரிக்கைகளையேற்று – இனி

## ஜூலை 18 "தமிழ்நாடு நாளாக" கொண்டாடப்படும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.31–
ஜூலை 18 ஆம் நாளினை தமிழ்நாடு நாளாக இனி கொண்டாட விரைவில் அரசாணை வெளியிடப்படும் என்றும் எல்லைப் போராட்ட தியாகிகளை சிறப்பிக்கும் வகையில் சிறப்பு நேர்வாக ரூ.1 இலட்சம் பொற்கிழி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:–

1956ஆம் ஆண்டு நவம்பர் 1–ஆம் நாள் இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அதனடிப்படையில் அப்போதைய மெட்ராஸ் மாகாணத்திலிருந்து ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளத்தின் சில பகுதிகள் பிரிந்து சென்றன. 2019 முதல் நவம்பர் 1ஆம் நாளை தமிழ்நாடு மாநில நாளாக அப்போதைய அரசு அறிவித்திருந்தது.

**கோரிக்கைகள் பரிசீலிப்பு!**

இந்நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகள், தமிழ் உணர்வாளர்கள், தமிழ் கூட்டமைப்பினர், தமிழ் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் என பலதரப்பிலும் நவம்பர் 1ஆம் நாள் எல்லை போராட்டத்தினை நினைவு கூரும் நாளாகத்தான் அமையுமே தவிர, தமிழ்நாடு நாளாக கொண்டாடுவது பொருத்தமாக இருக்காது என்றும், மெட்ராஸ் மாகாணம் என்று இருந்ததை மாற்றி பேரறிஞர் அண்ணா அவர்களால் 1968 –ஆம் ஆண்டு ஜூலை – 18 – ஆம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி 'தமிழ்நாடு' என்று பெயரிடப்பட அந்த நாள்தான் "தமிழ்நாடு நாள்" என கொண்டாடப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

பல்வேறு அமைப்புகளின் கோரிக்கைகளை கவனமாக பரிசீலித்து தாய்த் தமிழ்நாட்டிற்கு 'தமிழ்நாடு' எனப் பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18 ஆம் நாளினையே தமிழ்நாடு நாளாக இனி கொண்டாட அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# THE HINDU on Sunday

OCTOBER 31, 2021

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

## July 18 to be observed as T.N. Day

SPECIAL CORRESPONDENT
CHENNAI

The DMK government on Saturday announced that July 18 would be observed as Tamil Nadu Day.

In a statement, Chief Minister M.K. Stalin said a government order on this would be issued soon. July 18 was the day when a resolution, moved by the then Chief Minister, C.N. Annadurai, was adopted in the Assembly to rename the Madras Presidency as Tamil Nadu in 1967.

CONTINUED ON ▸ PAGE 6

# தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

எல்லை போராட்ட தியாகிகளுக்கு ரூ.1 லட்சம் பொற்கிழி:

## தமிழ்நாடு தினம் ஜூலை 18-ந்தேதி கொண்டாடப்படும்

### மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக்.31-
தமிழ்நாடு தினம் ஜூலை 18-ந்தேதி கொண்டாடப்படும் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

**எல்லை போராட்டம்**

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:-

1956-ம் ஆண்டு நவம்பர் 1-ந்தேதி இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அதனடிப்படையில், அப்போதைய மெட்ராஸ் மாகாணத்திலிருந்து ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளத்தின் சில பகுதிகள் பிரிந்து சென்றன. 2019 முதல் நவம்பர் 1-ந்தேதியை தமிழ்நாடு மாநில நாளாக அப்போதைய அரசு அறிவித்திருந்தது.

**தமிழ்நாடு தினம்**

இந்நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகள், தமிழ் உணர்வாளர்கள், தமிழ் கூட்டமைப்பினர், தமிழ் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் என பலதரப்பிலும் நவம்பர் 1-ந்தேதி எல்லை போராட்டத்தினை நினைவு கூரும் நாளாகத்தான் அமையுமே தவிர தமிழ்நாடு நாளாக கொண்டாடுவது பொருத்தமாக இருக்காது என்றும், மெட்ராஸ் மாகாணம் என்று இருந்ததை மாற்றி பேரறிஞர் அண்ணாவால் 1967-ம் ஆண்டு ஜூலை 18-ம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி தமிழ்நாடு என்று பெயரிடப்பட்ட அந்த நாள் தான் தமிழ்நாடு நாள் என கொண்டாடப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

பல்வேறு அமைப்புகளின் கோரிக்கைகளை கவனமாக பரிசிலித்து தாய் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18-ம் நாளினையே தமிழ்நாடு நாளாக இனி கொண்டாட அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

எல்லை போராட்ட தியாகிகளை சிறப்பிக்கும் வகையில் நவம்பர் 1-ந்தேதியை எல்லை போராட்ட தியாகிகளை கவுரவிக்கும் வகையில் 1956-ம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட போது தமிழ்நாட்டின் எல்லைகளை காக்கும் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைச் சென்ற தியாகிகளை தமிழ்நாடு அரசு போற்றி சிறப்பித்து வருகிறது.

**ரூ.1 லட்சம் பொற்கிழி**

தற்போது எல்லை காவலர்கள் மொத்தம் சுமார் 110 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகையாக ரூ.5,500-ம் மருத்துவப்படியாக ரூ.500-ம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் எல்லை காவலர்களின் மரபுரிமையர்கள் 137 பேருக்கு மாதந்தோறும் உதவித்தொகையாக ரூ.3,000-ம் மருத்துவப்படியாக ரூ.500-ம் வழங்கப்பட்டு வருகிறது. எல்லை போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்டு சிறை சென்று தியாகம் செய்து தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லை காவலர்கள் 110 பேருக்கு சிறப்பு நேர்வாக வரும் நவம்பர் 1-ந்தேதி தலா ரூ.1 லட்சம் வீதம் பொற்கிழி வழங்கி கவுரவிக்கப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

-2-

# தினமலர்

நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்

## நவ., 1க்கு பதில் ஜூலை 18ல் தமிழ்நாடு நாள் விழா

**சென்னை, அக். 31–** 'தமிழ்நாடு என பெயர் சூட்டிய, ஜூலை 18ம் தேதியை, தமிழ்நாடு நாளாக கொண்டாட, விரைவில் அரசாணை வெளியிடப்படும்' என, முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: நாட்டில் 1956 நவம்பர் 1ல் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அதன் அடிப்படையில், அப்போதைய மெட்ராஸ் மாகாணத்தில் இருந்து, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளாவின் சில பகுதிகள் பிரிந்து சென்றன.

கடந்த 2019 முதல் நவம்பர் 1ம் தேதியை, தமிழ்நாடு மாநில நாளாக அப்போதைய அரசு அறிவித்திருந்தது.

இந்நிலையில், 'நவம்பர் 1 எல்லை போராட்டத்தை நினைவுகூரும் நாளாகத் தான் அமையும். அதை தமிழ்நாடு நாளாக கொண்டாடுவது பொருத்தமாக இருக்காது.

மெட்ராஸ் மாகாணம் என்பதை மாற்றி, 1967 ஜூலை 18ம் தேதி, சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி, 'தமிழ்நாடு எனப் பெயரிடப்பட்ட நாள் தான் பொருத்தமாக இருக்கும்' என்று தமிழ் அறிஞர்கள் வலியுறுத்தினர்.

அதை பரிசீலித்து, தமிழ்நாடு என அண்ணாதுரை பெயர் சூட்டிய, ஜூலை 18ம் தேதியை, தமிழ்நாடு நாளாக இனி கொண்டாட, விரைவில் அரசாணை வெளியிடப்படும்.

நவம்பர் 1ல், எல்லைப் போராட்ட தியாகிகளை சிறப்பிக்கும் வகையில், சிறை சென்ற தியாகிகளை தமிழக அரசு போற்றி சிறப்பித்து வருகிறது.

தற்போது எல்லைக் காவலர்கள், 110 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களுக்கு மாத உதவித் தொகையாக 5,500 ரூபாய், மருத்துவப் படியாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது.

எல்லைக் ... லர்களின் மரபுரிமை... பேருக்கு, ... தொகைய... மருத்துவ... ரூபாய் வழங்கப்படுகிறது.

தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும், எல்லைக் காவலர்கள் 110 பேருக்கு, சிறப்பு நேர்வாக நாளை தலா 1 லட்சம் ரூபாய் வீதம், பொற்கிழி ...ங்கி கவுரவிக்கப்படுவர். ... அவர்

# THE NEW INDIAN EXPRESS

CHENNAI • SATURDAY • OCTOBER 30, 2021 • ₹7.00 • PAGES 28 • LATE CITY EDITION

## JULY 18 TO BE OBSERVED AS TAMIL NADU DAY, SAYS CM

**EXPRESS NEWS SERVICE**
@ Chennai

ACCEPTING representations from various organisations, Chief Minister MK Stalin on Saturday announced that July 18 will hereafter be celebrated as Tamil Nadu Day and a government order to this effect will be issued soon. However, the AIADMK and PMK opposed the announcement.

Stalin's announcement came a day after Dravidar Kazhagam president K Veeramani, Suba Veerapandian, general secretary of the Dravida Iyakka Thamizh Peravai, Thamizh Unarvalargal Kootamaippu led by Tamil scholar Solomon Pappaiah made a representation to the government, saying July 18 should be declared as Tamil Nadu Day.

The CM, in a statement here, said on November 1, 1956, States were reorganised on a linguistic basis. Accordingly, Andhra Pradesh and Karnataka, and some parts of Kerala were moved out of the then Madras State. In 2019, the then government in power declared November 1 as Tamil Nadu Day.

"However, many political parties, Tamil scholars, Tamil organisations, and others conveyed to the government that celebrating November 1 will only remember the 1956 struggle to retain certain places on the border with Tamil Nadu," the chief minister said.

He added that the Tamil scholars and others also said

> *Many political parties, Tamil scholars, Tamil organisations, and others conveyed... that celebrating Nov 1 will only recall the 1956 struggle to retain certain places on the border with Tamil Nadu*
>
> MK Stalin, Chief Minister

former CM CN Annadurai had renamed the then Madras State as Tamil Nadu on July 18, 1967, and passed a resolution in this regard on that day. Citing this, the Tamil scholars have been demanding that July 18 be declared as Tamil Nadu Day.

Stalin also announced that the 110 leaders who took part in the struggle to protect Tamil Nadu's borders during the reorganisation of States in 1956 would be honoured with ₹1 lakh each on November 1. The State government has been honouring martyrs of the 1956 struggle by giving them a monthly pension of ₹5,500 and ₹500 as medical allowance. Also, 137 legal heirs of the martyrs of the 1956 struggle are given ₹3,000 per month and a medical allowance of ₹500.

Reacting to the announcement sharply, AIADMK spokesperson Kovai Sathyan said, "Just because former CM Edappadi K Palaniswami declared November 1 as Tamil Nadu Day, you are now twisting history for your convenience. I condemn this politics of hatred."

PMK founder S Ramadoss said, "The day of naming cannot become the day of birth. November 1, when the boundaries of present Tamil Nadu were decided historically, should be celebrated as the formation day of the State. The chief minister's decision cannot be accepted." He also pointed out that when November 1 was declared as Tamil Nadu Formation Day in 2019, the entire State accepted it.

# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

Dinakaran

### எல்லை போராட்ட தியாகிகளுக்கு ₹1 லட்சம் பரிசு

## ஜூலை 18ம் தேதி 'தமிழ்நாடு நாள்'

**அரசாணை வெளியாகும் என மு.க.ஸ்டாலின் அறிவிப்பு**




**சென்னை, அக். 31:** நவம்பர் 1ம் (நாளை) தேதி எல்லை போராட்ட தியாகிகளை சிறப்பிக்கும் வகையில், ₹1 லட்சம் பரிசு வழங்கப்படும். மேலும், அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18ம் தேதிதான் தமிழ்நாடு நாள் என்ற அரசாணை விரைவில் பிறப்பிக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிக்கை:

அரசியல் கட்சிகள், தமிழ் உணர்வாளர்கள், தமிழ் கூட்டமைப்பினர், தமிழ் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் என பலதரப்பிலும் நவம்பர் 1 ம் நாள் எல்லை போராட்டத்தினை நினைவு கூறும் நாளாகத்தான் அமையுமே தவிர தமிழ்நாடு நாளாக கொண்டாடுவது பொருத்தமாக இருக்காது என்றும், மெட்ராஸ் மாகாணம் என்று இருந்ததை மாற்றி பேரறிஞர் அண்ணாவால் 1968ம் ஆண்டு ஜூலை 18ம் நாள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி தமிழ்நாடு என்று பெயரிடப்பட அந்த நாள்தான் தமிழ்நாடு நாள் என கொண்டாடப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

பல்வேறு அமைப்புகளின் கோரிக்கைகளை கவனமாக பரிசீலித்து தாய்த் தமிழ் நாட்டிற்கு தமிழ்நாடு எனப் அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18ம் நாளினையே தமிழ்நாடு நாளாக இனி கொண்டாட அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

எல்லைப் போராட்ட தியாகிகளை சிறப்பிக்கும் வகையில் நவம்பர் 1ம் நாளை எல்லைப் போராட்டத் தியாகிகளை கௌரவிக்கும் வகையில் 1956ம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட போது தமிழ்நாட்டின் எல்லைகளைக் காக்கும் போராட்டங்களில் ஈடுபட்டு சிறைச்சென்ற தியாகிகளை தமிழ்நாடு அரசு போற்றி சிறப்பித்து வருகிறது.

தற்போது எல்லைக் காவலர்கள் மொத்தம் சுமார் 110 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களுக்கு திங்கள்தோறும் உதவித்தொகையாக ₹5,500, மருத்துவப்படியாக ₹500 வழங்கப்பட்டு வருகிறது. மேலும் எல்லைக்காவலர்களின் மரபுரிமையர்கள் 137 பேருக்கு திங்கள்தோறும் உதவித்தொகையாக ₹3000 மருத்துவப்படியாக ₹500 வழங்கப்பட்டு வருகிறது. எல்லைப் போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்டு சிறை சென்று தியாகம்செய்து தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லைக் காவலர்கள் 110 பேருக்கு சிறப்பு நேர்வாக வரும் நவம்பர் 1ம் தேதி தலா ₹1 லட்சம் வீதம் பரிசுகள் வழங்கி கவுரவிக்கப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# தினமணி

## தமிழ்நாடு நாள் ஜூலை 18

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு**

**சென்னை,அக்.30:** ஆண்டுதோறும் இனி ஜூலை 18–ஆம் தேதி, தமிழ்நாடு நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும், எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கு ரூ.1 லட்சம் பொற்கிழி வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:-

1956–ஆம் ஆண்டு நவம்பர் 1–ஆம் தேதி இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அதன்படி, அப்போதைய மெட்ராஸ் மாகாணத்தில் இருந்து ஆந்திரம், கர்நாடகம், கேரளத்தின் சில பகுதிகள் பிரிந்து சென்றன. 2019 முதல் நவம்பர் 1–ஆம் தேதியை தமிழ்நாடு மாநில நாளாக அப்போதைய அரசு அறிவித்திருந்தது.

**ஜூலை 18–ஆம் தேதி:** மெட்ராஸ் மாகாணம் என்று இருந்தது மாற்றப்பட்டு, 1967 ஜூலை 18–ஆம் தேதி தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட்டது. அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட இந்த மாற்றத்தின் அடிப்படையில் ஜூலை 18–ஆம் தேதிதான் தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்பட வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். நவம்பர் 1–ஆம் தேதி என்பது எல்லைப் போராட்டத்தை நினைவுகூரும் வகையிலேயே அமையும் எனக் கருத்துக் கூறியுள்ளனர்.

பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளை கவனமாகப் பரிசீலித்து தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட்ட ஜூலை 18–ஆம் தேதியே தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்படும்.

**எல்லைப் போராட்டத் தியாகிகள்:** எல்லைப் போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்ற தியாகிகளை தமிழ்நாடு அரசு போற்றி சிறப்பித்து வருகிறது. தமிழகத்தில் இப்போது 110 பேர் எல்லைக் காவலர்களாக உள்ளனர். அவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகையாக ரூ.5,500, மருத்துவப் படியாக ரூ.500 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.



மேலும், எல்லைக் காவலர்களின் மரபு உரிமையாளர்கள் 137 பேருக்கு மாத உதவித் தொகையாக ரூ.3 ஆயிரம், மருத்துவப் படியாக ரூ.500 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. எல்லைப் போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்டு சிறைசென்று தியாகம்செய்து இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லைக் காவலர்கள் 110 பேருக்கு சிறப்பு நிகழ்வாக, வரும் 1–ஆம் தேதி ரூ.1 லட்சம் வீதம் பொற்கிழி வழங்கப்படும்.

5/7/22

# சுய ஆட்சிக்கு முன் மாநிலங்களை உருவாக்குங்கள்!



**டி.எம்.நாயர்**
நீதிக்கட்சித் தலைவர்

"இந்தியாவில் அரசியல் மறு கட்டமைப்பிற்கு முதல் தேவையான மாகாண அரசு என்னும் நடைமுறை வளர்ச்சி பெற வேண்டும் என்று வில்லிங்டன் பிரபு வலியுறுத்தி இருந்தது நமது வாசகர்களின் கவனத்துக்கு முன்னமே கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாகாண அரசுகள் முதலில் தங்களின் அதிகாரங்கள் என்னென்ன

என்பதை அறிந்து உறுதிப்படுத்திக் கொள்ளாமல், மக்களின் பிரதிநிதிகளுக்கு அதிகாரங்களை அளிப்பது என்பது எவ்வாறு இயலாது என்பதையும் நாம் சுட்டிக் காட்டி உள்ளோம். மாகாண சுயாட்சி நடைமுறையை வளர்ப்பது என்று கூறும் போது, மாகாண அளவில் பொருளாதார சுய ஆட்சியையும் அது உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

கூட்டமைப்பில் மாகாண அரசுக்கான கட்டமைப்பை நாம் முறையாக உருவாக்க வேண்டும். நவீனக் காலங்களில் நாடுகளின் முன்னேற்றம் இந்த வழியில் தான் ஏற்பட்டுள்ளது.

ஒருவகையில் சுய ஆட்சி என்னும் ஹோம்ரூல் வளர்ச்சி அடைவதற்கு ஆதரவான ஒரு நிலையில் இந்தியா அமைந்துள்ளது. மன்னரின் பேரரசு மற்றும் மாகாண அரசுகள் என்னும் ஒரு நடைமுறையை அது கொண்டுள்ளது. காலம் சென்ற தாதாபாய் நவ்ரோஜி என்னிடம் 1893 ஆம் ஆண்டு குறிப்பிட்டபடி சுய ஆட்சிக்கான பிரிவுகள் என்ற அளவில் தற்போது அமைந்துள்ள மாகாணங்களைப் பார்த்தால், அவை அகண்ட பரப்பைக் கொண்டவையாக உள்ளன.

ஒரு மனநிறைவளிக்க இயன்ற இந்தியாவை உருவாக்குவதற்கு முன், முதலில் இந்திய மாகாணங்கள் அல்லது மாநிலங்களை ஒரு நியாயமான அளவைக் கொண்டவைகளாகப் பிரிக்கவேண்டும். இவ்வாறு பிரிப்பதையும் இனம், மதம், மொழிகளின் அடிப்படையில் செய்தால் நமது துன்பங்களில் பெரும்பாலானவை தீர்ந்துவிடும். இந்தியாவுக்கு முழுமையான சுய ஆட்சி அளிக்கப்படுவதற்கு முன்னம் இவ்வாறு மாகாணங்கள் அல்லது மாநிலங்கள் மாற்றியமைக்கப்படுவது முதலில் செய்து முடிக்கப்பட வேண்டும்.

**(1917 ஜஸ்டிஸ் இதழில் எழுதியது)**

# செந்தமிழ் நாடு



## மகாகவி பாரதியார்

செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே – எங்கள்

வேதம் நிறைந்த தமிழ்நாடு – உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு – நல்ல
காதல்புரியும் அரம்பையர்போல் – இளம்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு

காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி – என
மேவிய ஆறு பலவோடத் – திரு
மேனி செழித்த தமிழ்நாடு

முத்தமிழ் மாமுனி நீள்வரையே – நின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு – செல்வம்
எத்தனை உண்டு புவிமீதே – அவை
யாவும் படைத்த தமிழ்நாடு

நீலத் திரைக்கடல் ஓரத்திலே – நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை – வட
மாலவன் குன்றம் இவற்றிடையே – புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு – நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின் – மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு

வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென்றோர் – மணி
யாரம் படைத்த தமிழ்நாடு

சிங்களம் புட்பகம் சாவக – மாதிய
தீவு பலவினுன் சென்றேறி – அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் – நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு

விண்ணை யிடிக்கும் தலையிமயம் – எனும்
வெற்பை யடிக்கும் திறன்உடையார் – சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத்தார் – தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு

சீன மிசிரம் யவனரகம் – இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் – கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் – மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு

# திராவிட நாட்டில் தமிழர் கோரிக்கை



## எஸ்.எஸ்.ஆனந்தம் பண்டிதர்

வடக்கெல்லையாக வேங்கடமலையும்
தெற்கெல்லையாக நாஞ்சில் நாடும்
காரைக்காலும்
புதுச்சேரியும்
இலங்கை தீவிலுள்ள யாழ்ப்பாணம் முதலிய ஊர்களும்
சேர்ந்து 'தமிழர் ஆட்சி' அமைய வேண்டும்.

சரித்திர ஆரம்பக்காலம் முதல் இன்றுவரை தமிழ்நாட்டின் கடைக்கால வடக்கெல்லை திருப்பதி என வழங்கும் திருவேங்கட மலையாகும். திருவேங்கடம், இன்று காளாஸ்திரி என வழங்கும் திருக்காளத்தி, திருத்தணிகை மூன்றும் தமிழர் கட்டிய கோயில்களடங்கிய சித்தூர் ஜில்லா.

தமிழ்நாட்டின் தெற்கெல்லை குமரி முனை. இது தனித்தமிழர் வாழும் தமிழ் நிலமாகிய நாஞ்சில்நாடெனும் நாகர்கோயிலாகும். இது திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தது.

தமிழ் மொழி பேசும் மக்கள் தொகையும் குறைந்து தமிழ்நாட்டு நிலப்பரப்பில் வடக்கும் தெற்கும் குறைந்து தமிழ்மொழியும் குறைந்தழிகின்றது. இருதலைக் கொள்ளிக்கிடையில் அகப்பட்ட எறும்பைப்போல் இன்று தமிழர் வாழ்கின்றனர். இதனைத் தமிழர் சிந்தியாமல் வாளாவிருக்கின்றனர். இனியாவது தமிழர்கள் விழித்து வடவேங்கடத்தையும், நாஞ் சிநாடாகிய தென்குமரியையும் முறைப்படி தமிழ்நாட்டுடன் சேர்ப்பது முன்னணி வேலையாகும்.

தமிழ் மொழி, தமிழ் நிலம், தமிழர் கைத்தொழில், தமிழர் வாணிபம், தமிழர் மருத்துவம், தமிழர் சமயம், தமிழ் நாட்டுச் செல்வம் போன்றவற்றின் பாதுகாப்புக்காகத் தமிழர் ஆட்சியும் வேண்டும்.

**‘குடிஅரசு’ 28.10.1944 இதழில் பண்டித எஸ்.எஸ்.ஆனந்தம் எழுதிய கட்டுரையின் சுருக்கம்**

# "தமிழ்நாடு என்ற பெயர் இல்லாமல் நான் ஏன் வாழ வேண்டும்?"



## பெரியார்

தமிழ்நாடு தமிழருக்கே என பச்சைகுத்திக் கொள்ளுங்கள்
(விடுதலை 23.10.1938)

★ தமிழனுக்குத் தாய்நாடு எது? தாய்நாடு தமிழ்நாடு தானே?

★ நாடு என்பது தமிழ் வார்த்தை, தேசம் என்பது வடமொழி. கருத்து ஒன்றுதான். நாடு என்பதைப் பயன்படுத்துங்கள்.

(விடுதலை 20.10.1938)

★ மொழியை அடிப்படையாக வைத்து மாகாணங்கள் மட்டுமல்ல; நாடுகள் கூட அழைக்கப்படுகின்றன. கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற குடியேற்ற நாடுகள் தவிர மற்ற நாடுகள் யாவும் அநேகமாக மொழியின் பெயராலேயே அழைக்கப்பட்டு வருகின்றன.

இங்கிலாந்து, ப்ரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, ஸ்பெயின், கிரீஸ், போர்ச்சுக்கல், இத்தாலி, போலண்ட், துருக்கி, அரேபியா, சீனா, மலேயா, பர்மா, ஜப்பான் ஆகிய நாடுகளெல்லாம் மொழிகளின் பெயராலேயே அழைக்கப்பட்டு வருகின்றன. மக்களும் அவ்வாறே அழைக்கப்பட்டு வருகின்றனர்.

ஆகவே, தமிழர்களாகிய நாம் மட்டும் ''மதராசிகள்'' என்ற பெயரால் அழைக்கப்படுவது மானக்கேடாயிருக்கிறது.

தெலுங்கர் நம்மைவிட்டுப் பிரிந்து போவது உறுதிப்பட்டு விட்டது. கன்னடம், மலையாளம் போன்ற மற்ற திராவிட மொழிக்காரர்களும் தனித் தனியாகப் பிரிந்து கொள்வதற்குத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கின்றனர். ஆகவே வருங்காலத்தில் இவர்களும் நம்முடன் சேர்ந்து ஒரு கூட்டுப் பெயரை அமைத்துக்கொள்வதற்கு இசைகிற வரையில் நம் மாகாணத்தின் மிச்சப் பகுதிக்குத் 'தமிழகம்' என்ற பெயர் இருப்பதே பொருந்தும்.

வங்காளத்திலும், பஞ்சாபிலும், ஒரிசாவிலும் வேற்று மொழிக்காரர்கள் இருப்பது போல் தமிழகத்திலும் வேற்று மொழிக்காரர்கள் இருப்பது உண்மையே. ஆனால் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பவர்களே அதிகம். தமிழே மற்றத் திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி. இந்த நாடு தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. எனவே இம்மாகாணத்தை மதராஸ் என்றோ, சென்னை என்றோ அழைப்பதை விட 'தமிழகம்' என்று அழைப்பதே சிறந்ததாகும்.

தமிழில் ஆர்வமும், தமிழரிடம் அன்பும் உள்ள கவர்னர் ஜெனரல் அவர்கள் தமக்குத் தரப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பின்பற்றி இதற்குத் தமிழகம் என்றே பெயர் வைப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

( விடுதலை 26.11.1949)

★ சென்னை ராஜ்யத்தின் பெயர் தமிழ்நாடு என்று மாற்றப்படவேண்டும் என்பதை முன்னரே தெரிவித்திருக்கிறோம். கன்னட மாவட்டம் ஒன்றும், மலையாள மாவட்டம் ஒன்றும் இருப்பதற்காக, மீதியுள்ள 11 தமிழ் மாவட்டங்களின் பெயரால் இந்த ராஜ்யம் அழைக்கப்படாமலிருப்பது நேர்மையல்ல. (விடுதலை 27.4.1954)

★ "தமிழ்நாட்டுடன் சேர வேண்டிய தமிழ் வட்டாரங்களான தேவிகுளம், பீர்மேடு, சித்தூர்,நெய்யாற்றங்கரை முதலியவற்றை கேரளத்துடன் பிணைத்திருக்கின்றனர். இவ்வட்டாரங்களில் தமிழ் பேசுபவர்களே பெரும்பான்மை மக்களாவார்கள். அவர்களுக்கு தங்கள் தாய்மொழியைக் கற்கவும் பேசவும் இடமின்றி செய்த அக்கிரமம் பொறுக்க முடியாத செய்கையாகும். எனவே அவைகளைத் தமிழ்நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கெல்லாம் நாம் பெரும்கிளர்ச்சி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்" (விடுதலை, 29.10.1955)

★ தமிழ்நாட்டிலுள்ள அத்தனை பேரும் தமிழ் பேசத் தெரிந்தவர்கள். ஒரு சிலர் கன்னடம், தெலுங்கு, உருது போன்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் இவர்கள் பேசுவதும், எழுதுவதும், படிப்பதும் தமிழ்தான். ஆகவே சென்னை ராஜ்யத்தைத் தமிழ்நாடு என்றுதான் இனி அழைக்க வேண்டும்.

உலக நாடுகளெல்லாம் மொழியை அடிப்படையாகக் கொண்டே அழைக்கப்படும் போது தமிழ் பேசுகின்ற நாட்டைத் தமிழ்நாடு என்று அழைக்காமல் மெட்ராஸ் ஸ்டேட் என்றோ சென்னை நாடு என்றோ அழைப்பதற்குத் தமிழ்மக்கள் வெட்கப்பட வேண்டாமா? (விடுதலை 11.10.1955)

★ தமிழ், தமிழ்நாடு என்கின்ற பெயர் கூட இந்நாட்டுக்குச் சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாதபடி எதிரிகள் சூழ்ச்சி செய்து வெற்றி பெற்று விட்டார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டு விடுமானால், பிறகு என்னுடையவோ, என்னுடைய கழகத்தினுடையவோ என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு வேறு எதற்காக இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை? இந்தக் காரியம் மாபெரும் அக்கிரமமான காரியம் என்பதோடு மாபெரும் சூழ்ச்சி மீது செய்யப்பட்ட காரியம் என்றே கருதுகிறேன். நம் நாடு

எது? நமது மொழி எது? நமது இனம் எது? என்பதையே மறைத்து விடுவதென்றால் பிறகு தமிழன் எதற்காக உயிர்வாழ வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே இக்கேடு முளையிலேயே கிள்ளப்பட்டு விடும்படி முயற்சி செய்யும்படியாக எல்லாத் தமிழர்களையும் உண்மையிலேயே வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

(விடுதலை 29.10.1955)

★ இந்த மாகாணப் பிரிவினை அமைப்பு ஏற்பாட்டில் எனக்கிருக்கும் சகிக்கமுடியாத குறை என்ன என்றால், நாட்டினுடையவும் மொழியினுடையவும் இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய்விடுகிறதே என்கின்ற குறைபாடு மாத்திரம்தான். நம்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, இனத்திற்குத் திராவிடம் என்று பெயர்.

திராவிடத்தை அல்லது தமிழ்நாட்டைவிட்டு ஆந்திரர், கர்நாடகர், மலையாளி பிரிந்துபோன பின்புகூட, மீதி உள்ள யாருடைய ஆட்சேபனைக்கும் இடமில்லாத தமிழகத்திற்கு, தமிழ் நாட்டின் பெயர்கூட இருக்கக்கூடாது என்று சூழ்ச்சி செய்து இப்போது அந்தப் பெயரையே முற்றிலும் ஒழித்துப் பிரிவினையில் சென்னை நாடு என்று பெயர் கொடுத்ததாகத் தெரியவருகிறது.

இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும். எந்த நாடாகினும் அவன் எப்படிப்பட்ட தமிழனானாலும் இந்த அக்கிரமத்தைச் சகித்துக்கொண்டிருக்க மாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக்கொண்டிருந்தாலும், என்னால் சகித்துக்கொள்ள முடியாதென்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இதைத் திருத்தத் தமிழ்நாட்டு மந்திரிகளையும், சென்னை, டில்லி, சட்டசபை, கீழ் மேல்சபை அங்கத்தினர்களையும் மிக வணக்கத்தோடு இறைஞ்சி வேண்டிக்கொள்கிறேன். (விடுதலை 29.10.1955)

★ "தமிழ்நாட்டை 'மதராஸ்' என்று அழைக்கின்ற மடமைப் புத்தி கொண்ட தமிழர்களுக்கு இனியாவது அறிவு பிறக்க வேண்டுமென்பது நம் ஆசை. கேரளமும், ஆந்திராவும், கர்நாடகமும், மராட்டியமும், வங்காளமும், ஒரிசாவும், அசாமும்,

பஞ்சாபும் அந்தந்த மொழியின் பெயரைத் தாங்கியிருக்கும் போது தமிழ்நாட்டுக்கு மட்டும் மதராஸ் என்ற கற்பனைப் பெயர் இருக்க வேண்டிய தேவையென்ன? இதற்காகவேனும் எல்லாக்கட்சித் தமிழர்களும் ஒன்று சேர்ந்து கிளர்ச்சி செய்யக் கூடாதா என்று கேட்கிறோம். அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்பாக 'மதராஸ்' தமிழ்நாடு ஆகவேண்டும். 'மதராஸ்' என்ற பெயர் உள்ள வரையில், 'மதராசி' என்றுதான் தமிழ் மொழியை வடநாட்டார் அழைப்பார்கள்'' **(1955)**

''சென்னை மாநிலம் என்று நீண்டகாலமாக அழைத்து வரும் இம்மாநிலத்தில் ஆந்திரமும் கேரளத்தின் ஒரு பகுதியும் இணைந்திருந்தன. ஆனால் மொழி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகும் சென்னை ராஜ்யம் என்று இம்மாநிலம் அழைக்கப்பட்டு வருகிறது. இதைத் தமிழ்நாடு என்று அழைக்க வேண்டும் என்று முதன்முதலாக வலியுறுத்தியது திராவிடர் கழகமேயாகும்.

ஆந்திரம் தனியான உடனேயே இதுபற்றி வலியுறுத்தி எழுதியும் உள்ளோம். அதுமுதல் இம்மாநிலத்தைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் தமிழ்நாடு என்றே குறிப்பிட்டு வருகிறோம். கழகத் தோழர்கள் இவ்விதமே குறிப்பிட்டு வருகின்றனர். பம்பாய் மாகாணம் இரண்டு மொழிகளின் பெயரால் மகாராஷ்டிரா, குஜராத் என்று பிரிய இருக்கிறது. இதுபோலவே ஆந்திராவும் கேரளாவும் பிரியும் போதே தமிழ்நாடு என்று பெயர் சூட்டி இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் தனிப்பெரும் தியாகியான திரு. சங்கரலிங்கனார் தமிழ்நாடு என்று பெயர்சூட்ட வேண்டுமென்று கோரி உண்ணாநோன்பு கிடந்து எலும்பும் தோலுமாக ஆகி, பரிதாபமாக வீரமரணத்துக்காளான பிறகாவது தமிழ்நாடு என்று மாற்றியிருக்க வேண்டும். இதைச் செய்யாததும், இதற்கு ஆட்சி இணங்காததும் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும். இந்தியாவை டில்லி என்றோ, ஜப்பானை டோக்கியோ என்றோ, அமெரிக்காவை நியூயார்க் என்றோ, இங்கிலாந்தை லண்டன் என்றோ அழைத்தால் எப்படி இருக்கும்? இதில் அறிவு இருப்பதாகக் கூற முடியுமா?

மொழியின் அடிப்படையில் ஒரு நாட்டின் பெயரைக் குறிப்பிடும்போது அம்மொழி

பேசுவோர் மட்டுமே அந்த நாட்டில் மிகுதியானவர் என்று அறியலாம். அவர்களைப் பிற மொழிக்காரர் சுரண்டவோ அடிமைத்தனத்தில் ஆழ்த்தி வைக்கவோ அனுமதிக்க மாட்டார்கள் என்பதை உணரலாம். இது மொழிவெறியினால் ஏற்படும் உணர்ச்சியல்ல. அந்தந்த நாட்டுக்காரர்களின் தற்காப்புக்காக இருக்க வேண்டிய உணர்ச்சியாகும். விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பூச்சிகளுக்கும்கூடத் தற்காப்பு உணர்ச்சி என்பது இயற்கையாகவே அமைந்திருக்கிறதல்லவா? யானைக்குள்ள தற்காப்புணர்ச்சி, எறும்புக்கும் அதன் உருவின் அளவுக்காவது இருக்கிறதல்லவா?

ஆதலால் தமிழன் தன்னைப் பிறமொழிக்காரர் சுரண்டாமலிருக்க வேண்டுமானால் தமிழர் யாவரும் ஒரே இனம் என்ற உணர்ச்சி பெற வேண்டும். இந்த உணர்ச்சிக்குத் தமிழ்நாடு என்ற பெயரும் ஓரளவு உதவியளிக்கும் என்ற காரணத்தினால்தான் இம்மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்று திராவிடர் கழகம் கூறுகிறது.''

**(விடுதலை 28.4.1960)**

# புதிய தமிழகத்தைக் காண்போம்



**திரு.வி.க.**

உலகத்தில் பல நாடுகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்று தமிழ்நாடு. எண்ணிக்கையில் ஒன்றாயினும் அந்நாடு மற்ற நாடுகளுக்கு உயிர் போன்றது என்று கூறலாம். இதற்குக் காரணங்கள் பலபடப் பகரலாம். அவற்றுள் ஈண்டுக் குறிக்கத் தக்கன இரண்டு. ஒன்று தொன்மை; இன்னொன்று நாகரிகம்.

தமிழ்நாடு தொன்மை வாய்ந்தது. இது குறித்து எழுந்த

ஆராய்ச்சிகள் பலபல; திரண்ட நுட்பங்கள் பலபல. அப்பலப்பல், லெமூரியன் ஆராய்ச்சி, மொகஞ்சதாரோ ஹரப்பா காட்சி என்னும் இரண்டில் அடங்கும். ஆகவே, தமிழ்நாட்டின் தொன்மையைப் பற்றி விரித்துக் கூற வேண்டுவதில்லை.

ஒரு நாட்டின் தொன்மை மட்டும் அதன் விழுப்பத்தை உணர்த்துவதாகாது. தொன்மையுடன் வேறொன்றுந் தேவை. அது நாகரிகம். தொன்மையும் நாகரிகமும் ஒன்றி உருக்கொண்ட நாடு தமிழகம். ஆதலின், அது விழுப்ப முடையதாகிறது. ஒரு நாட்டின் நாகரிக உயிர்ப்பே அந்நாட்டின் தொன்மையைக் காப்பது தொன்மை மட்டும் ஒரு நாட்டின் மாண்பைக் காப்பதாகாது.

தமிழ்நாட்டின் நாகரிகத்திலுள்ள விழுப்பம் யாது? தமிழ்நாடு தனது நாகரிகத்தினின்றும் பிறந்த கலைகளின் ஊடே பொதுமை, இறைமை, பொறுமை முதலிய நல்லியல்புகளைப் பரிணமிக்கச் செய்தமையான், அதன் நாகரிகம் விழுப்பமுடையதாயிற்று. அதன் நூல்களில் இந்நல்லியல்புகள் மிளிர்வதை இன்றும் காணலாம்.

தமிழன் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றில் பெரிதும் தன் கருத்தை இருத்தினன். அவன் வீட்டின் மீது பெரிதும் கருத்தை இருத்தினான் இல்லை. அறம், பொருள், இன்பம் மூன்றன் அடைவே வீடு என்பது அவன்தன் கருத்து. வீட்டுக்கெனத் தனி முயற்சி வேண்டுவதில்லை; ஒருவன் அறவழி நின்று, பொருள் ஈட்டி, அவ்வழியே இன்பம் நுகர்வானாயின், அவன் அடைவது வீடு என்பது தமிழன் கண்ட உண்மை.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனுள் வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது பொருள். அப்பொருண்மை, பொதுமையில் அமைந்தால், அறமும் இன்பமும் நன்னெறியில் நிகழும். பொருட் பொதுமையைப் பண்டைத் தமிழன் கண்டமையால், அவன் அறவோனாய், எந்நாட்டவர்க்கும் தீமை புரியாத பெருந்தகைமை உடையவனாய் வாழ்ந்தான். ‘‘யாதும் ஊரே, யாவரும் கேளிர்’’ என்பது அவனது குறிக்கோள்.

இக்குறிக்கோளைப் பொருளாகக் கொள்வதில், இறைமை பொலியும் என்பதை விளக்க வேண்டுவதில்லை. பொதுமை வாழ்வே இறைமை வாழ்வு என்று கூறல் மிகையாகாது. இத்தகைய வாழ்வினின்றும் பல கடவுளர் உணர்வு, பல சமயக் கருத்து தோன்றுங்கொல்?

தோன்றா. ‘‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’’ திருமூலர் திருமொழியை நோக்குக.

பொதுமையும், இறைமையும் பொதுளுமிடத்தில் பொறுமை பிறங்குவது இயற்கை. ‘பொறுமை’, இந்நாளில் ‘அஹிம்சை’ என்று வழங்கப்படுகிறது. ஈண்டுப் பொறுமை என்றது, கோழமையையோ மடிமையையோ உணர்த்துவது தமிழன் கண்ட வீரநெஞ்சத்தினின்றும் பிறப்பதே பொறுமை.

இம்மூன்றனாலும் ஆக்கப்பெற்ற தமிழ் நாடு இப்பொழுது காட்சி அளிக்கிறதோ? இல்லை. வெறும் தமிழ்நாட்டு மண்ணே காட்சி அளிக்கிறது. பழந்தமிழ்நாடு பழைய ஏடுகளில் உறங்கிக் கிடக்கிறது. அது மீண்டும் உயிர்த்தெழுமா? எழாதா? என்னும் ஐயமும் சில இடங்களில் பிறந்துள்ளது. தமிழன்னை தலைவேறு, கைவேறு, கால் வேறு, உடல்வேறு வேறு வேறாகப் பிளவுண்டு கிடத்தலை உன்ன உன்ன ஐயம் மட்டுமா தோன்றும்? அழுகையும் தோன்றுமன்றோ? தமிழன் தனது நிலையைத் தனது பழம்பெரு நிலையை நினையாது திரிகிறான். அந்தோ! அந்தோ!

தமிழ்நாடு மீண்டும், உயிர்பெற்றெழ என் செய்தல் வேண்டும்? ‘தமிழன்’ முதலாவது, தன்னைத் தமிழன் என்று உணர்வது சிறப்பு. தமிழன் என்னும் உணர்வு, தமிழ்நாட்டு உணர்வாகப் பெருகும். தமிழன் வேறல்ல; அவனது நாடு வேறன்று. தானும் நாடும் ஒன்று என்று வீறு கொண்டு எழும் உள்ளம் தேவை. அவ்வுள்ளம் என் செய்யாது! கிளர்ச்சி செய்யும்; புரட்சி செய்யும்; புதிய தமிழகத்தைக் காணும்.

இக்காட்சிக்கு உரிய வாய்ப்பு இப்பொழுது தோன்றியுள்ளது. அது பாரத நாட்டின் உரிமைக் காட்சியாகும். இங்கிலாந்தினின்றும் மூன்று அரசியல் அமைச்சர் இந்தியா வந்து உரிமை வழங்க முனைந்து நிற்றல் வெள்ளிடைமலை. அன்னார் முனையினும், முனையாதொழியினும் நமது இமய நாடு உரிமை பெற்றே தீரும்.

இந்நாளில், தமிழ் நாடு இமய நாட்டின் உரிமையைக் காக்கவும், அதன் வாயிலாக உலக அமைதியை நிலைபொறுத்தவும் முயலுதல் வேண்டும். அம் முயற்சி இப்போது பொதுமை அறத்தை அடிப்படையாகக் கொண்டு எழுவதாயிருத்தல் வேண்டும்.

தமிழனது பண்டைப் பெருமையெல்லாம் பொதுமை அறத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதை மறத்தலாகாது. ஆகவே, தமிழன் பொதுமை உணர்வுடன் தொண்டாற்ற முந்துவானாக!

தமிழன் முதலாவது தனக்கென்று ஓர் அரசியலைக் கோரிக்கொள்ளுதல் நலம். அவ்வரசியல் பாரத அரசியலுடன் கலப்புறல் சிறப்பு. அச்சிறப்பு, உலகுக்குரியதாய் அமைதல் மாண்பு.

இக்கால நல்லரசியலுக்கு இன்றியமையாதது பொருண்மை. அப்பொருண்மை ஒருபால் பெருகியும், மற்றொருபால் அருகியும் பயன்படுதல் கூடாது. இல்லார் உள்ளார் என்னும் வேற்றுமை, உலகைப் பலதிற இடுக்கண்களுக்கு உட்படுத்தி, அடிக்கடி பெரும் போரை எழுப்புவது இயல்பாகியது. இதனால் மக்களுக்கு உணவு முட்டு, உடைமுட்டு, வாழ்க்கை முட்டு முதலியன விளைந்த வண்ணம் இருக்கின்றன. இவ்விளைவைப் பொருட் பொதுமையே மாற்ற வல்லது. இது தமிழ்நாட்டுக்குப் புதியதன்று; பழமையே. பழமையுடன், சில புதுமை விரிவு சேர்தல் வேண்டும். சேர்ந்தால், 'புது உலகம்' உருக் கொள்ளும்.

பழந்தமிழ்க் கலைகள் பொதுமை, இறைமை, பொறுமை முதலியவற்றை அறிவுறுத்துவன என்று மேலே சொல்லப்பட்டது. அக்கலைகளின் வழி அக்காலத்துக் கேற்ற சமூகம் அமைந்தது. இப்பொழுது சமூகம் என்பது, உலகத்திற்குரியதாய் பரந்து விரிந்து வருதல் கண்கூடு. உலக ஒருமைப்பாட்டை பண்டை நாளிலேயே அறிவுறுத்திய தமிழ்நாடு தன் அறக்கருவிகளாய் கலைகளைக் கொண்டு, இற்றை ஞான்றும் அறிவுறுத்தலாம். தமிழன் கலை. தமிழகத்திற்கு உரியது; பாரத நாட்டிற்குரியது; உலகுக்குரியது. தமிழ் பொதுமை. பொதுமை வாழ்க! தமிழ்நாடு வெல்க!!

**– தமிழ்முரசு – 1945**

# நமது தமிழ்நாட்டின் எல்லைகள்



மங்கலங்கிழார்

**தமிழ்நாட்டின் நாற்புற எல்லை.**

"வட வேங்கடம் தென்குமரி ஆயிடை
தமிழ்க் கூறு நல்லுல கத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி
**– தொல்காப்பியம் பனம்பாரனார்.**

“குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனும் நான் கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்

**– நன்னூல் – பவணந்தி முனிவர்.**

“வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம்
என்றின்நான்கெல்லை தமிழது வழக்கே’’

**– சிகண்டி முனிவர்.**

“குமரி வேங்கடம் குணகுட கடலாம்
மண்திணி மருங்கில் தன்தமிழ் வரைப்பில்”
நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்ததண்புனல்நன்னாட்டு”

**– சிலப்பதிகாரம். (நெடியோன் குன்றம் என்பது திருப்பதிமலை)**

“மேற்குப் பவளமலை வேங்கடம் நேர் வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்குபர்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழ் இருபதின் காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு’’

**– கம்பநாடர்.**

**சந்திரகிரி.**

சந்திரகிரியில் கல்வெட்டுகள் 4. கண்டுபிடிக்கப்பட்ட நான்கும் தமிழே.

**திருப்பதி.**

இவ்வூரில் உள்ள கல்வெட்டுகள் மொத்தம் 38 அவற்றுள்ள கன்னடம் 2; தெலுங்கு 4; தெலுங்கும் தமிழும் கலந்தவை 2; கிரந்தம் 1; தமிழும் கிருந்தமும் 4; தமிழ் 25.

**சீகாளத்தி.**

இங்கு உள்ள கல்வெட்டுகள் மொத்தம் 80. அவற்றுள்ள : தெலுங்கு 1; சமஸ்கிருதம் 1; தமிழும் கிரந்தமும் கலந்தவை 9; தமிழ் 69.

**தொண்டை நாடு:**

இவ்வூர் காளத்திக்கு அருகில் உள்ளது. இங்குள்ள கோதண்டராமசாமி கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் ஆலயபரிபாலனம் செய்வதற்காக மதுரை கொண்ட பரகேசரி வர்ம சோழ மன்னன் பொருளும் பூதானங்களும் கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளன.

**திருச்சானூர்.**

இவ்வூரில் உள்ள கல்வெட்டுகள் 5. அவையாவும் தமிழே

**நெல்லூர்.**

இவ்வூர் அரங்கநாதர் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் யாவும் தமிழே.

புராணம்

தொண்டை நாட்டிலுள்ள சிவ ஸ்தலங்கள் 32. அவற்றுள் ஒன்று சீகாளத்தி.

தொண்டை நாட்டில் உள்ள விஷ்ணுஸ்தலங்கள் 24. அவற்றில் ஒன்று திருவேங்கடம்மலை.

திருவேங்கடத்தையும், திருக்காளத்தியையும் பல ஆழ்வார்களும், சிவனடியார்களும் புகழ்ந்து பாடிய பாக்கள் பலஉள.

தணிகைமலை, வள்ளிமலை, காளத்தி, வேங்கடமலை ஆகிய நான்கு கோயில்களும் தமிழருக்கு உரிமையானவை.

வேங்கடத்தான் கோயிலில் நடக்கும் பூசைச் சிறப்பெல்லாம் தமிழ் மாதக் கணக்கின்படி நடக்கின்றன.

எனவே, தமிழர் வேண்டுவதெல்லாம் தங்கள் உரிமைகொண்ட வடார்க்காட்டின் சித்தூர் சில்லாவேயாகும். இங்கு பயிர்த் தொழிலும் நெசவுத் தொழிலும் செய்யும் தமிழரேவாழும் பல ஊர்களும், அவற்றையடுத்து வாழும் பழந்தமிழர் சேரிகளும் நூற்றுக்கணக்கில் உள்ளன. நகரங்களிலெல்லாம் தமிழர்களே முக்கால் பகுதியினராக வாழ்கின்றனர். இந்த வகையில் நோக்கின், சித்தூர் சில்லாவின் ஜனத்தொகையிலும்

தமிழர்களே அதிகமாக இருக்கின்றார்கள் என்பது திண்ணம்.

நமது தமிழ் இலக்கண இலக்கிய ஆசிரியர்கள், கவிஞர்கள், புலவர்கள், மன்னர்கள் முன்னமே நமது நாட்டிற்கு எல்லை வகுத்துச் சென்றார்கள். அதுவரை ஆட்சிபுரிய நமக்கு உரிமையுண்டு.

நாட்டுப் பிரிவினைக்கும், நாட்டுக்குள் சில்லாப் பிரிவினைக்கும் எல்லை வகுப்பதில் வேற்றுமையுண்டு. சில்லா பிரிவினைக்கு நமது வசதியான இடத்தில் எல்லைக்கல் நட்டுவிடலாம். ஆனால் நாட்டுப் பிரிவினைக்கு அப்படியன்று. இயற்கையான பெரிய ஆறு; அல்லது மலை எல்லையாக இருக்க வேண்டும் என்று அறிந்தோர் கூறுகின்றனர். விரிவான ஆறு ஒன்றும் சிற்றூர் சில்லாவில் இல்லை, மலையே எல்லைப் பிரிவினைக்கு நிலைப்பானது. ஆதலின் திருவேங்கடமலையே தமிழ் ஆந்திர நாட்டைப் பிரிப்பதற்கு இயற்கையான எல்லைச் சுவராகும்.

'சித்தூர் சில்லாவின் தலை எழுத்தானது சென்னை நகரத்தோடு பிணைக்கப் பட்டுள்ளது' என்று முடிவுகூறலாம். இந்தச் சில்லாவில் வாழும் மக்களின் முடிந்த கருத்து இதுவே.

தெற்கே குமரிமுனை முதல், வடக்கே வடவேங்கடமலை வரை, சென்னை நகரைத் தமிழ்த் தலைநகராகக் கொண்டது நமது தமிழ் நாடு.

**தமிழ் வாழ்க தமிழறம் ஓங்குக. தமிழ் நாடு வெல்க.**

**– 1945**

# தமிழ்நாடு எனப் பெயரிடுதல் வேண்டும்



## தியாகி சங்கரலிங்கனார்

**காங்கிரசு கட்சிக்கு அனுப்பி வைத்த 12 கோரிக்கைகள்:**

1. மொழி வழி மாகாணம் அமைத்தல் வேண்டும்.
2. சென்னைக்குத் தமிழ்நாடு எனப் பெயரிடுதல் வேண்டும்.
3. இரயிலில் ஒரே வகுப்பில் அனைவரும் பயணம் செய்தல் வேண்டும்.
4. வெளிநாட்டு விருந்தினர்க்கு நடனம் முதலான ஆடம்பரங்களை விலக்கி, சைவ உணவு கொடுத்தல் வேண்டும்.
5. சர்க்கார் உத்தியோகத்தில் உள்ளவர் அனைவரும் கதர் அணிதல் வேண்டும்.

6. ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து அரசியல் தலைவர்கள் சாதாரண மக்கள் போல் வாழ்தல் வேண்டும்.

7. தேர்தல் முறையில் மாறுதல் செய்தல் வேண்டும்.

8. தொழிற் கல்வி போதித்தல் வேண்டும்.

9. இந்தியா முழுவதும் மதுவிலக்கைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

10. விவசாயிகளுக்கு 60 சதவிகிதம் வாரம் அளித்தல் வேண்டும்.

11. மத்திய அரசாங்கம் இந்தியை மட்டும் உபயோகிப்பது கூடாது.

12. பொது இடங்களில் ஆபாசமாக நடந்துகொள்வதைத் தடுத்தல் வேண்டும்.

**ஜனசக்தி 01.10.1956**

கம்யூனிஸ்டு இயக்கச் சகோதரர்களுக்கு எனத் தலைப்பிட்டு எழுதிய கடிதம்

**29.09.1956**

பட்டினியாலும், பசியாலும் வாடும் ஏழை மக்கள், என் மனக்கண் முன் தோன்றிக் கண்ணீர் வடிக்கிறார்கள். தமிழன்னை இந்தியத் தாய் இவர்கள் வடிக்கும் கண்ணீர் வீண் போகாது.

இன்று முதல் அசதி அதிகம். பேச சக்தி குறைவு; கூடிய சீக்கிரம் சாவு ஏற்படும்.

பூ வேண்டாம்; பூமாலை வேண்டாம்; கௌவீனம் கட்டுவது போதும்.

பாடையில் குளிர்ந்த நேரம் எடுத்துச் செல்லுங்கள்.

காந்தி தங்கி இருந்த, சூலைக்கரை மண் மேட்டில், நான் தங்கி இருந்த இடத்திற்கு முன்னால், இரண்டு வேப்ப மரத்திற்கு அடியில் குழியில் போடுங்கள். அந்த இடத்தில் என் சவத்தை அடக்கம் செய்யுங்கள்.

சர்க்கார் மறுத்தால் திரு. வெ.நா.பு. இராமசாமி நாடார் அவர்கள் நந்தவனத்திற்கு முன்பு, குண்டும் குழியுமாக உள்ள இடத்தில், மத்தியில் மேடையில் அடக்கம் செய்யுங்கள். எல்லோருக்கும் வணக்கம். வந்தே மாதரம்.

**– ஆண்டவர் ஆத்துமன்**
**க.பெ. சங்கரலிங்க நாடார்**

# ஒரு புதிய தமிழகத்தை அமைப்போம்



**ம.பொ.சி.**

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தெற்கே ஆஸ்திரேலியா வரை தமிழகம் அகன்றிருந்ததாகவும், பின்னர் பஃறுளி ஆறும், குமரிக்கோடும் கடலால் கொள்ளப்பட்ட காரணத்தால் குமரி முனைவரை குறுகி விட்டதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இன்றோ அந்தக் குமரி முனைக்கும் வடக்கே இரண்டாயிரம் சதுர மைல் பிரதேசம் கேரள இனத்தவரால் அபகரிக்கப்பட்டு விட்டது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழர் வடக்கே இமயம் வரை பரவி வாழ்ந்ததாகவும், பின்னர் இமயத்திற்குத் தெற்கே விந்தியம் வரை குறுகி, அப்புறம் வேங்கடம் வரை பின்வாங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது. இன்றோ, அந்த வேங்கடத்திற்கும் தெற்கே நாலாயிரம் சதுர மைல்கள் கொண்ட நிலப்பரப்பு ஆந்திர ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

ஒரு காலத்தில், தமிழ் வேந்தர்கள் கடல்கடந்து சென்று சிங்களத்தையும் பர்மாவையும் தங்கள் ஆதிக்கத்தில் வைத்து ஆட்சி புரிந்ததாக சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இன்றோ, கடலுக்கு அப்பாலுள்ள பிரெஞ்சுக்காரர்கள் புதுவையையும் காரைக்காலையும் அடிமைப்படுத்தி ஆளும் அநீதியைப் பார்க்கின்றோம்.

இப்படி, பழம்பெருமைகளையெல்லாம் இழந்து, பல துண்டுகளாகப் பிளவுபட்டுக் கிடக்கும் தமிழ்ப்பகுதிகளையெல்லாம் ஒன்றுசேர்த்து, ஒரு புதிய தமிழகத்தை அமைப்பதற்கென்றே தமிழரசு இயக்கம் பிறந்தது.

தமிழகம் தனி ஆட்சி பெறவேண்டும்; துண்டு பட்ட தமிழ்ப் பகுதிகளெல்லாம் தாய்த் தமிழகத்தோடு ஒன்றுபடவேண்டும். தமிழகத்தில் தமிழ் ஒன்றே ஆட்சிமொழியாதல் வேண்டும்; இந்தியக் குடியரசில், தமிழர் ஒரு தனித் தேசிய இனமாக, தமிழாட்சி ஒரு சுயாட்சி அங்கமாக விளங்கவேண்டும். இவையே தமிழ் இனத்தவரின் தேசியக் கோரிக்கைகள். இந்தக் கோரிக்கைகளுக்காகக் குரல் கொடுப்பதே நமது கொள்கை.

**தமிழன் குரல் – ஆகஸ்ட் 1954**

# கொட்டினோம் தமிழ்முரசு!



## பாவேந்தர் பாரதிதாசன்

கட்டாயத் தமிழ்க் கல்விக் கழகம் யாண்டும்
கவினுறவே தமிழ்நாட்டில் நிறுவ வேண்டும்
தட்டாமே அரசியலின் துறைகள் யாவும்
தமிழ்ப் பேச்சால் தமிழ் எழுத்தால் நடத்தல் வேண்டும்.

பட்டோம் இந் நாள்வரைக்கும்! தமிழர் ஒன்று
பட்டவுள்ளம் விடுத்திட்ட அறிக்கை இஃது!
கொட்டினோம் தமிழ்முரசு! நாட்டை ஆள்வோர்,
குறைமுடிக்க! இல்லையெனில் புரட்சி தோன்றும்!

தமிழ்நாட்டில் துறைதோறும் தமிழருக்கே
தலைமைஇருந் திட வேண்டும். தமிழர் நாட்டில்
தமிழர்களாற் குழு அமைத்துச் சட்ட திட்டம்
தமக்கான முறையினிலே அமைக்கச் சொல்லி,

அமைத்தபடி நிறைவேற்றி வைத்தல் வேண்டும்!
ஆள்வோர்க்குத் தமிழர்விடும் அறிக்கை இஃது!
தமிழ்முரசு கொட்டினோம் இணங்கா விட்டால்
சடசெடெனச் சரித்துபடும் ஆட்சிக் கோட்டை!

திராவிடரின் பகைவர்க்கே அடிமை யானோர்
திராவிடர்க்கு நலம்புரிதல் குதிரைக் கொம்பே!
அரியதமிழ் நாட்டுரிமை வேண்டும்; அன்றே
அன்புள்ள தெலுங்கர்க்கும் கேரளர்க்கும்

உரிமையினை நாட்டுவதும் தமிழர் வேலை!
ஒன்றுபட்டோம்; சாதியில்லை; சமய மில்லை;
குரல்கேட்க ஆள்வோரின் காதே!
ஒப்பம் கூறுவாயே இன்றேல் புரட்சி தோன்றும்.

**– தமிழ்முரசு – 1946 ஆகஸ்ட்**

# தமிழர் நாட்டை தமிழர் ஆண்டு...



## நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்

முரசுகொட்டி தமிழ் முழங்க முன்னணிக்குச் செல்லுவோம்
அரசு பற்றி உலகனைத்தும் அன்பு கொண்டு வெல்லுவோம்
பரிசு பெற்ற இளைஞரென்ன பாய்ந்து நான்கு எல்லையும்
வரிசைமிக்க புதுமை வாழ்வை வானொலிக்கச் சொல்லுவோம்.

தமிழர் நாட்டை தமிழர் ஆண்டு தமிழ் குணத்தைக் காப்பதே
அமுதமுறும் அன்பின் வாழ்க்கை அகிலமெங்கும் பூப்பதாம்
நமது பண்பு உலகின் மற்ற நாட்டினர்க்கு வாய்ப்பதே
சமதையாக மக்கள் தம்மில் சண்டைநீக்கிச் சேர்ப்பதாம்.

அறமறிந்து பொருள் வளர்த்து அதிலடைந்த இன்பமே
முறைதெரிந்த வாழ்க்கையென்ற முடிவறிந்து நம்பினோர்
இறைவனென்ற ஒன்றையன்றி எதையும் என்றும் கும்பிடா
திறமிருந்த தமிழர்இன்று திடமிழந்து வெம்பினோம்.

நானிலத்தில் இணையிலாத நாகரீகம் உற்றவர்
வானகத்தின் இன்பம் யாவும் வையகத்தில் பெற்றவர்
ஞானமென்ன பொதுநலத்தை நாளும் போற்றக் கற்றவர்
மானமிக்க தமிழரென்ற மாண்பை மீண்டும் பற்றுவோம்.

கொலைமறுத்து பொய்வெறுத்த குணமிருந்து கூறினோர்
தலைசிறக்க தரணிதன்னில் தமிழரன்றி வேறுயார்?
நிலைகுலைந்து அரசிழந்த நிந்தைமுற்றும் மாறவே
கலகலத்து முரசுகொட்டி கடனுரைத்து தேறுவோம்.

வீரம் என்ற பலவும் ஆற்றி வேணவெற்றி கண்டவர்
தீரம்மிக்க பணிகள்செய்து தியாகபுத்தி கொண்டவர்
ஈரம்மிக்க கருணைவாழ்வை என்றும்போற்றும் தொண்டர்நாம்
சாரம் அற்ற கதைகள்பேசி சஞ்சலங்கள் மண்டினோம்.

உலகமெங்கும் மக்கள்யாரும் ஒரு குடும்பம் என்னவே
குலவிவாழும் கொள்கைதன்னை கொண்டுபண்டு சொன்னவர்
கலைமலிந்த வாழ்க்கைமுற்றும் கடவுள் உண்மை தன்னையே
விலைகடந்த செல்வமென்ற தமிழர்மேன்மை உன்னுவோம்.

முட்டி எட்டு திக்கும் எங்கள் முரசொலிக்கக் கொட்டுவோம்
வட்டமிட்ட வறுமைதந்த மடமை போக்கிக் கட்டுவோம்
விட்டுவிட்ட தமிழுணர்ச்சி வீறுகொள்ளத் தட்டுவோம்
அட்டியின்றி தமிழறங்கள் ஆட்சிகொள்ளும் மட்டிலும்

ஆழும் மிக்க அறிவறிந்து அறமிகுந்த தமிழகம்
ஊழைவென்ற உத்தமர்க்கு உறையுளான தமிழகம்
வாழிஎங்கள் கலைசிறந்த பண்புமுற்றும் வாழ்கவே
வாழிஇந்த உலகம் முற்றும் வம்பிலாது வாழ்கவே

# பூர்வீக மண்ணுக்கான தகுதியைப் பெறுவோம்!



## பேரறிஞர் அண்ணா

மெட்ராஸ் என்னும் பெயரைத் தமிழ்நாடு என்று மாற்றக்கோரி இந்த மசோதாவை முன்மொழிந்த உறுப்பினர் பூபேஷ்குப்தாவின் வாதங்களுக்கு அதை எதிர்த்துப் பேசிய எந்தப் பேச்சாளரும் பதிலளிக்கவில்லை.

'தண்டமிழ் வேலி தமிழ்நாட்டு அகமெல்லாம்' என்று பரிபாடல் கூறுகிறது. முப்புறமும் இனிய தமிழால் சூழப்பட்ட தமிழ்நாடு என்று

அதற்குப் பொருள். 1800 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட பதிற்றுப்பற்று என்னும் இலக்கியம், 'இமிழ்கடல் வேலி தமிழகம்' என்கிறது. கடலைத் தனது எல்லையாகக் கொண்ட தமிழகம் என்று இதற்குப் பொருள்.

குஜராத்தின் தலைநகரமாக அகமதாபாத் இருப்பதைப் போல, பஞ்சாப்பின் தலைநகராக சண்டிகர் இருப்பதைப் போல மெட்ராஸ் என்பது தமிழ்நாட்டின் தலைநகரம் தான். தலைநகரின் பெயரையே மாநிலத்திற்கு வைப்பது என்னும் இந்த நியதி பின்பற்றப்பட்டால், கேரளா என்பது திருவனந்தபுரம் என மாற்றப்பட வேண்டும். ஆந்திரா என்பது ஹைதராபாத் என்றும், பஞ்சாப் என்பது சண்டிகர் என்றும், குஜராத் என்பது அகமதாபாத் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

தமிழ்நாடு என்று பெயரை மாற்றுவதால் நாங்கள் என்ன லாபம் அடைகிறோம் என்று கேட்கிறீர்கள். தமிழ்நாடு என்று பெயரை மாற்றுவதால் உணர்வுப்பூர்வமாகத் திருப்தி அடைகிறோம். எங்களின் பூர்வீக மண்ணுக்கான தகுதியைப் பெறுகிறோம். மெட்ராஸ் என்பது தலைநகரத்தின் பெயர். தமிழ்நாடு என்ற பெயர் மாநிலத்துக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

**(நாடாளுமன்ற மாநிலங்களவையில் ஆற்றிய உரை – 1962)**

# தென்னெல்லைக் காத்தருளும் தேவி



## கவிமணி தேசிய விநாயகம்

பண்டைக் காலத்தில் தென் திருவிதாங்கூர் பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆய் நாடு, தெங்க நாடு, படப்ப நாடு, வள்ளுவ நாடு, குறு நாடு, நாஞ்சில் நாடு, புறத்தாய நாடு என்பவை அவற்றுள் முக்கியமானவை. யாவும் செந்தமிழ் நாடுகளே. இது பாண்டிய நாட்டைச் சேர்ந்த ஊர். கல்லெழுத்துக்களில் இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் தேவி, அடியில் வருமாறு குறிப்பிடப்பட்டு இருக்கிறாள். 'ராஜ ராஜ பாண்டி நாட்டு உத்தம சோழ வள நாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரி கன்னியா பகவதியார்'.

இந்தத் தேவியை 'தென்னவர் தம் குல தெய்வம்' என்று பொறித்திருப்பது குறிப்பிடத்தக்கது. பாண்டிய மன்னனுக்குக் குமரிச் சேர்ப்பன் என்று பெயர்.

**பொதிய பொருப்பன் புனல்வையைத் துறைவன்**
**குமரிச் சேர்ப்பன் கோப்பாண்டியனே**
**என்பது சேந்தன் திவாகரச் சூத்திரம். இத்திவாகரம் தமிழ் நிகண்டுகளுள் மிகவும் பழமையானது. இதன் காலம் கி.பி. எட்டாவது நூற்றாண்டின் நடுப்பகுதி என்பது ஆராய்ச்சி முடிவு.**
**மேலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் கல்வெட்டுகளாலும்,**

தென் திருவிதாங்கோட்டில் வேறு பல பாகங்களில் காணப்படும் கல்வெட்டுகளாலும் விளவங்கோட்டுத் தாலுகாவில் உள்ள முன்சிறை பார்த்திப சேகரபுரம் செப்பேடுகளாலும் தென்திருவிதாங்கோடு ஓர் செந்தமிழ்நாடே என்பதும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தே, ஏன்... சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே தமிழர்கள் இங்கு வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் பிறவும் தெள்ளத் தெளிய அறியக் கூடியவையாம். உண்மை இவ்வாறு இருந்தும் ஒரு மேதாவி திருவிதாங்கோட்டிலுள்ள தமிழர்கள் இடைக்காலத்தில் தோட்ட வேலைக்காக வந்த கூலியாட்கள் என்று பிதற்றியிருக்கிறார். உண்மையைச் சொல்கிறேன் கேளப்பா, கேளப்பா என்றால் கேட்பதுமில்லை. இந்நாடு முழுமையும் நம்முடையது என்பதற்கு மலையாள நண்பர்களும் சில ஆதாரங்களைக் காட்டுகின்றனர். அவர்கள் காட்டும் ஓர் ஆதாரம் கேரளோற்பத்தி, கேரள மகாத்மியம் என்னும் நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு பாட்டி கதை.

பரசுராமர் கோகர்ணத்திலிருந்து மழுவை எறிந்து கன்னியாகுமரியில் வீழ்த்தி 160 யோசனை தூரம் கடலை விலக்கி, பிராமணர்களுக்குத் தானம் செய்த கதை இது. திரேதாயுகத்தில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் இந்தக் கதை, கலியுகத்தில் அதுவும் அனுகுண்டு சகாப்தத்தில் சரித்திரப் பிரமாணமாக முன் நிறுத்தப்படுகிறது. இந்தப் பிரமாண நூல்களைப் படித்துவிட்டு 'மலபார் அண்ட் அஞ்சங்கோ' என்ற நூல் எழுதிய திருலோகன் என்பார், அவை 'பொருளற்ற புராணப் புளுகுகள்' என்றார். இப்படியிருக்க இந்த நூல்களின் புனிதத்தன்மையை எடுத்து விளம்பரப்படுத்தும் பெரியோர்களின் நேர்மையை மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.

முடியாட்சி நீங்கிக் குடியாட்சி ஓங்கும் இக்காலத்தில் மக்கள் சாதி, சமய வேறுபாடுகளை ஒழித்து, மொழியால் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வகை ஏற்படுவது இன்றியமையாதது. அதற்காகவே தெலுங்கர்கள், ஆந்திர மாகாணம் கேட்கின்றனர். கேரளர்களும் தனி மாகாணத்திற்கு அரும்பாடுபடுகின்றனர். இவ்வேளையில் தென்திருவிதாங்கோட்டிலும் செங்கோட்டையிலும் தேவிகுளத்திலும் பீர்மேட்டிலும் வாழும் தமிழர்கள் தங்கள் இடங்களையும் தாய்த் தமிழ்நாட்டோடு சேர்க்க வேண்டுமென்று கேட்பதில் குற்றம் என்ன இருக்கிறது?

எந்தெந்த மொழியாளர்கள், அண்டையிலுள்ள தம் தாய்மொழிப் பகுதியோடு சேர விரும்பினாலும் அவர்களைப் பிரித்தும், சேர்த்தும் ஒற்றுமையாய் வாழத் துணைசெய்வது தான் பொது நோக்கம் கொண்ட சிறந்த அரசியல் தலைவர்களின் கடமை ஆகும். இதற்காகச் சரித்திரமும் புராணமும் சாசனமும் இலக்கியமும் புரட்டிப் பார்க்க வேண்டிய தேவையில்லை. கண்முன்னே காணும் உண்மையை நிரூபிக்க ஆதாரம் தேட வேண்டிய அவசியம் உண்டோ? இமயமலையில், சேர சோழ பாண்டியர்களின் வில்லும் புலியும் கயலும் பொறிக்கப்பட்டிருப்பதாகத் தமிழ் நூல்கள் சொன்னால் சிரிக்க மாட்டார்களா இந்தக் காலத்தில்?

திருவிதாங்கோட்டுத் தமிழர்கள் அண்டையில் இருக்கும் தாய்த் தமிழகத்தோடு இணைய விரும்புகின்றனர். தமிழ் நாட்டவரும் இவர்களைச் சேர்த்துக்கொள்ள ஆசைப்படுகின்றனர். இந்நிலையில் இவ்விருசாராரையும் இணைத்து வைப்பது ஒன்றே ஆளும் அதிகாரிகளின் கடமை. கேரளியர் இதில் தலையிட்டுக் கலைக்க முயலுவது ஒரு சிறிதும் நியாயமாகாது. ‘தமிழர்கள் ஏன் பிரிந்து போகவேண்டும்? வேற்றுமை உணர்ச்சியின்றி இன்று போல் என்றும் இருந்தால் என்ன?’ என்று சிலர் கேட்கின்றனர்.

தமிழன் என்றும், மலையாளி என்றும் வேற்றுமை பாராத ஒரு பொது மன்னர் ஒரு பொது அரசாங்கம் இருந்த காலம்வரை யாருக்கும் இந்தப் பிரிவினை உணர்ச்சி உண்டானதில்லை. “நாம் மலையாளிகள்; மலையாளப் பகுதிகள் அனைத்தையும் ஒன்றாகத் திரட்டி ஒரு மலையாள மாகாணம் அமைக்க வேண்டும்” என என்று மலையாளிகள் கருதிவிட்டார்களோ அன்றே வேற்றுமை உணர்ச்சி வேரூன்றி விட்டதல்லவா? அதற்கு

மேல் சிறுபான்மை சமூகத்தாரான தமிழர்கள் ஆட்சியாளர்களின் தயவை எதிர்பார்த்து வாழ்வதைத் தவிர நியாயமான உரிமையைப் பெற்று வாழ முடியுமா?

இச்சந்தேகம் அவர்கள் உள்ளத்தில் எழுவது இயல்புதானே? இதற்குள் தமிழர்கள் இகழப்பட்டுவிட்டார்கள். புறக்கணிக்கப்பட்டுவிட்டார்கள். இதை நிரூபிக்க எத்தனையோ சான்றுகள் தரமுடியும். இன்று திருவிதாங்கோடு முழுமையும் 'ஒரே நாடு', 'ஒரே நாடு' என்று சொல்வதெல்லாம் குப்பிகளில் தண்ணீரும் எண்ணையும் நிறைத்து கார்க்கினால் இறுக மூடி ஒன்றெனக் காட்டுவதற்கு ஒப்பேயன்றி வேறல்ல. உண்மை யாவரும் அறிந்ததே.

செந்தமிழ்ச் செல்வர்களே நீங்கள்! தமிழ்நாட்டின் எல்லையை விவாதித்து, வழக்காடி நிலைநாட்டிவிட்டீர்கள். 'மதராஸ் மனதே' என்ற பேச்சு அடங்கிவிட்டது. இப்பொழுது தென் எல்லைக்கு வந்திருக்கிறீர்கள். இங்கும் 'நாஞ்சி நாடு ஞங்ஙளிடேது' என்ற பேச்சையும் அடக்கி வெற்றிக் கொடியேற்றி வீரத் தமிழர் முரசை முழக்குவீர் என்பதில் யாதும் ஐயமில்லை. அதற்குத் தேவி குமரி திருவருள் புரிவாராக.

தென்னெல்லை காத்தருளும் தேவி குமரீநின் பொன்னடியைக் கும்பிட்டு போற்றுகின்றேன் மன்னுபுகழ் செந்தமிழ் நாடொன்றாகித் தேவர் நாடொத்துலகில் சந்தமும் வாழ வரம் தா – என்ற பிரார்த்தனையோடு இந்த மாநாட்டினைத் திறந்து வைக்கிறேன். வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்நாடு, வாழ்க தமிழ் மக்கள் மகிழ்ந்து.

# தேசிய ஒற்றுமை அதிகரிக்கும்



**ஜீவா**

ராஜ்ய புனரமைப்பு மசோதாவை நான் ஆதரிக்கிறேன். இது சட்டம் ஆக்கப்பட்டவுடன் தமிழ் அங்கத்தினர் மட்டும் இந்த சபையை நடத்தும் நிலைமை வரும் என்று பார்க்கும்போது, மிக மகிழ்ச்சி அடைகிறேன். இப்படி தமிழர்களும், மலையாளிகளும், கன்னடியர்களும் தனித்தனியாகச் சட்டசபை நடத்துவதால் மேலும் மேலும் நம் நாட்டில் ஜனநாயகம் உயர்வு அடைந்து இன்று இன்றியமையாத தேசிய ஒற்றுமை அதிகரிக்குமேத் தவிர அந்த ஒற்றுமை சிதறிக்கப்படும் என்று எதிர்பார்க்கவில்லை.

மொழிவழியாக ராஜ்யங்களை அமைப்பது தான் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தும். அதுதான் உண்மையில் நாட்டை ஜனநாயக முறையில் நடத்திச் செல்வதற்கு வாய்ப்பு வசதியளிக்கும்.

மொழிவழியாக நாடு அமைய வேண்டும் என்று சொல்கிறவர்கள் தேசிய ஒற்றுமைக்கும் உறுதியாக நின்றிருக்கிறார்கள். வாழ்க பாரத மணித்திருநாடு என்ற பாரதி தான், செந்தமிழ் நாடென்னும் போதினிலே என்றும் பாடினான். இமிழ் கடல் வரைப்பால் தமிழகம் என்று பாரதி சொன்னபடி 2000 ஆண்டுகளாக இருந்தது தமிழகம்.

சென்னை ராஜ்யம் தமிழ் ராஜ்யம் ஆனால்தான் என்ன? கேரளம் ஆகலாம், ஆந்திரம் ஆகலாம், பம்பாய் என்பது மகாராஷ்டிரம் என்று ஆகலாம். குஜராத் ஆகலாம்.

சென்னைக்கு முக்கியத்துவம் உண்டு. ஆனால் நாட்டின் முக்கியத்துவம் நகரின் முக்கியத்துவத்துக்காகக் குறையக் கூடாது. சரித்திர வளர்ச்சியில் மொழியை அடிப்படையாக எடுத்துக் கொள்வது முற்போக்குதான். மொழி அடிப்படையில் பிரிவது பிற்போக்கல்ல.

நம்முடைய சென்னை ராஜ்யத்தைத் தமிழ்நாடு என்று தாராளமாகச் சொல்லலாம். தமிழ் பேசும் பகுதியைத் தமிழ்நாடு என்றே குறிப்பிட வேண்டும். தமிழ் என்பது குறிப்பிட்ட கட்சி சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல. ஆகவே தமிழ்நாடு என்று சொல்லும் போது அதில் ஒரு குறிப்பிட்ட கட்சி தான் இருக்க வேண்டும் என்பதல்ல. இந்த ராஜ்யத்தைத் தமிழ்நாடு என்று தான் சொல்ல வேண்டும். தமிழர்கள் தாயகமான தமிழ் ராஜ்யத்தோடு சேர்ந்தாற்போல் இருக்கின்ற பிரதேசத்திலுள்ள தமிழர்களைத் தமிழ் ராஜ்யத்தோடு சேர்க்க வேண்டும். ஒரு மொழி பேசுபவர்களுடைய தாயகத்தை ஒரு தனி ராஜ்யமாக்க வேண்டும். அந்த ராஜ்யத்தில் அந்த மொழி பேசுபவர்களை முன்னணியில் நிறுத்தி ஜனநாயகத் தன்மையில் ஆட்சி நடத்தப்பட வேண்டும்.

**(தமிழ்நாடு சட்டமன்றத்தில் 28.3.1956 அன்று பேசியது)**

# கல்வெட்டுகள் யாவும் தமிழே



## நேசமணி

ஆங்கில ஆதிக்கம் பிரித்தாளும் சூழ்ச்சிக்காக இனம் மொழி, கலாச்சாரம் முதலியவற்றைப் பொருட்படுத்தாமல் பாரதக் கண்டத்தைப் பல மாகாணங்களாகவும் அரசுகளாகவும் பங்கிட்டது.

ஒத்த மொழியும் கலாச்சாரமும் படைத்த இனங்கள் பிரிவுப்பட்டு வாழ்வது இனவளர்ச்சிக்கும் தேசிய உணர்விற்கும் இடையூறு எனக்கருதி மகாத்மா காந்தியடிகள் மொழிவழி மாகாணங்கள் வகுக்கப்பட வேண்டுமென்று விதித்த திட்டத்தை இந்தியத் தேசிய காங்கிரஸ் 1928இல் ஏற்றுக்கொண்டது.

மொழி வழி மாகாணத் திட்டத்தைக் காங்கிரஸ் உருவாக்கிய வெகுகாலத்திற்குப் பின். எங்கள் மலையாள சகோதரர்கள் கேரள மாகாணத்தைக் கனவு கண்டார்கள். அன்று சமஸ்தானக் காங்கிரஸ் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழன், ஐக்கியக்கேரளம் உருவாகும் பொழுது தமிழர்கள் தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்று கோர 1946 முதல் போராடி வருகிறோம்.

ஆந்திர மாகாணம் பிரிக்கப்படும் இந்நேரத்தில் தாய்த்தமிழகம் உருவாக வேண்டும். கொச்சி மன்னர் ஆட்சி மறைந்துவிட்டது. கொச்சியையும் திருவிதாங்கூரையும் இணைத்துக் கொச்சி மகாராஜாவைப் பிரதிபலன் பெற்று ஓய்வு பெறச் செய்தது போல மத்திய சர்க்கார் தமிழர் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் சேர்க்கப்பட வேண்டுமெனக் கட்டளை பிறப்பிக்க வேண்டும். இதை உடனடியாக செய்ய வேண்டும். இது எங்கள் மானத்தின் குமுறல், எங்கள் உயிரின் துடிப்பு. அல்லாவிடில் தமிழ் இனம் கேட்பாரற்றுப் போகும்.

தேவிகுளம் பீருமேடு தாலுகாக்கள் இன்று கண்ணுக்கினிய தோட்டங்களாக மிளிர்வதற்குத் தமிழனின் உழைப்பும் வியர்வை முத்துக்களுமேக் காரணமாகும்.

திருவிதாங்கூரில் நாலாப் பாகங்களிலும் சிதறிக் கிடக்கும் கல்வெட்டுகள் யாவும் தமிழில் செதுக்கப்பட்டனவேவாகும்.

தமது கலை பேண, மொழி பேண, மானம் பேண தமிழன் சாத்வீக வழி விலகிப் போக அனுமதிக்க வேண்டும்.

**(06.01.1950)**

# எல்லைகளை வகுப்பது வரலாறும், இலக்கியமுமே!



பேராசிரியர்
மா.இராசமாணிக்கனார்

**இதுவரையிலான உண்மைகள்:**

சங்ககாலம் முதல் வெள்ளையர் ஆட்சி ஏற்படும்வரை வேங்கடமே (திருப்பதியே) தமிழகத்தின் வட எல்லையாக இருந்தது தொண்டை நாடு வேங்கடம், காளத்தி, கூடுர் இவற்றைத் தன்னகத்தே பெற்றிருந்தது தொண்டை நாடு சங்ககால முதல் வெள்ளையர் ஆட்சிவரை தமிழ் நாடாகவே இருந்துவந்தது என்பதை இலக்கியம், வரலாறு, கல்வெட்டு

இவற்றைக் கொண்டு அறியலாம் தொண்டை நாட்டின் 24 கோட்டங்களும் அவற்றில் அடங்கிய ஊர்களும் தமிழ்ப் பெயர்களாகவே இருந்தன விஜயநகர ஆட்சிக் காலத்தில் சில ஊர்ப்பெயர்கள் புதிய பெயர்களைப் பெற்றன (ஆட்சி மாறுபாட்டால் ஊர்ப்பெயர்கள் மாறுதல் அடைதல் யாண்டும் வழக்கமே ஆகும்.) விஜயநகர ஆட்சியின்போது தெலுங்கு வடதொண்டை நாட்டில் ஓரளவு பரவத் தொடங்கியது. தெலுங்கர் வடதொண்டை நாட்டில் நிலைக்கலாயினர். ஆதலின் தெலுங்கக் கல்வெட்டுகள் சில குடியேறி வடதொண்டை நாட்டில் காணப்படுகின்றன.

**வட எல்லையில் மாற்றம்**

வட பெண்ணையாறு முதலில் தமிழகத்தின் வட எல்லையாக இருந்தது. பின், வேங்கடம்–காளத்தி என்பன வட எல்லை இடங்களாகக் குறிக்கப்பட்டன. நெல்லூர் ஜில்லாவின் தென்பகுதி பையூர் இளங் கோட்டமாக இருந்ததுபின்னர்த் தெலுங்கச் சோழர் ஆட்சியில் பையப்பைய மாறலாயிற்று அதனால் தமிழ்க் கல்வெட்டுகளும் தெலுங்கக் கல்வெட்டுகளும் சில கோவில்களில் விரவிக் காண்கின்றன நாளடைவில் ஊர்கட்கிருந்த தமிழ்ப் பெயர்கள் தெலுங்கப் பெயர்களாக மாறி வழங்கலாயின.

**தென் நெல்லூர்சித்தூர் ஜில்லாக்கள்**

இந்த ஜில்லாக்கள் தொண்டை நாட்டைச் சேர்ந்தவை என்பது பல சான்றுகள் கொண்டு நிறுவப்பட்டது. மேலும் உண்மை அறிய அவாவுவோர் இந்த ஜில்லாக்களில் உள்ள பழைய கோவிற் கல்வெட்டுகளைப் படித்து உண்மையை உணரலாம். ‘பல நூற்றாண்டுகளாக இந்த ஜில்லாக்கள் தொண்டை நாட்டினவே’ என்பதைக் கல்வெட்டுகள் நடுவு நிலையினின்று நமக்கு இன்றளவும் உணர்த்தி நிற்கின்றன. ‘நெல்லூர் ஜில்லாக்கல் வெட்டுகள் மூன்று பாகங்கள்’ வெளியாகியுள்ளன. அவற்றில் பண்டைக்காலக் கல்வெட்டுகள் யாவை? அவை எம்மொழியில் உள்ளன? ஊர்ப்பெயர்கள் எம்மொழியில் விளங்கின? அவ்வூர்களில் இருந்த மக்கள் யாவர்? அவ்வூர்க் கடவுளர் திருப்பணி செய்தவர் கோவில் பணியாளர் இவர் தம் பெயர்கள் எம்மொழியில் இருந்தன? என்பனவற்றுக்கான விடைகள் தெளிவானவை.

'தென் நெல்லூர், சித்தூர் ஜில்லாக்களில் வழங்கும் தூயதன்று தமிழ் கலந்த தெலுங்கு' என்று கோதாவரி, கிருஷ்ணை ஜில்லாக்களில் உள்ள தெலுங்கர் இன்றளவும் குறை கூறுவதற்கும் இந்த இரண்டு ஜில்லா மக்களையும் மாற்றாந்தாய் மக்களைப்போலக் கருதுவதற்கும் உரியக் காரணம் யாது? நெல்லூர் சித்தூர் ஜில்லாக்கள் பல நூற்றாண்டுகளாகத் தமிழ் நாட்டுப் பகுதிகளாக இருந்து, அண்மையில் தெலுங்கர் குடியேற்றத்திற்கு ஆனமையே காரணம் ஆகும். இந்த இரண்டு ஜில்லாக்களும் தமிழகத்தின் வட எல்லைப்புறப் பகுதி ஆதலின், தமிழும் தெலுங்கும் விரவியுள்ள தமிழரும் தெலுங்கரும் கலந்துள்ள பகுதியாக இருக்கின்றது. அதனால் இப்பகுதியில் தூயத் தமிழ் வழக்கும் இல்லை; தூய தெலுங்கு வழக்கும் இல்லை. உண்மைத் தமிழ்நாட்டுப் பகுதி நாளடைவில் இம்மாறுபாடு உற்றதற்குத் தென்னிந்திய வரலாறேக் காரணமாகும்.

**ஒரு தாய் ஈன்ற மக்கள்**

பழைய தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய பல மொழிகள் பிரிந்து நாளடைவில் வேறு மொழிகளாக மாறின என்பது ஒரு சார் மொழி ஆராய்ச்சியாளர் கூற்று. தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம் என்பன மிகப் பழைய திராவிடமொழி ஒன்றிலிருந்து பிரிந்தவை என்பது பிறிதொருசார் ஆராய்ச்சியாளர் முடிவு. உண்மை எதுவாயினும், 'தமிழ்–தெலுங்கு' ஆகியவை ஓர் இனமொழிகள் என்பதை அனைவரும் ஒப்புகின்றனர். அஃது உண்மையாயின், இந்த இரண்டு மொழிகளைப் பேசும் மக்களும் ஓர் இனத்தவர் என்பது உண்மையாகும்.

**மண்ணாசை ஒழிக**

ஆகவே, இருதிறத்தாரும் ஒத்த அன்பும் நல்லெண்ணமும் உடையராக இருந்து அடுத்தடுத்த இடங்களில் நிலைத்து நின்று வாழ வேண்டுபவர் ஆவர். ஆதலின் இவர்கட்குள் 'பிறர் மண்' கவரவேண்டும் என்னும் ஆசை இருத்தல் நன்றன்று. மண்ணாசையால் மடிந்த மாகாணங்கள் பல; அழிந்த அரசுகள் பல; ஒழிந்த பேரரசுகள் பல. இஃது உலக வரலாறு உரைக்கின்ற உண்மை.

வரலாறு இலக்கியம் கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டே நாட்டு எல்லைகள் வகுக்கப்படல் வேண்டும். இம்முறை தவறி, ஆள்பலம் கொண்டோ அன்றித் தோள்பலம் காட்டியோ அல்லது பிறவாறோ தங்கட்குச் சாதகமாக மாகாணப் பிரிவினையை ஒரு சாரார் அமைப்பாராயின், இரு மாகாணத்தார்க்கும் என்றும் அமைதி உண்டாகாது. அதன் விளைவாக என்றும் அல்லலே ஆட்சி பெறும். எல்லைப் பிரிவினையும் மண்ணாசையுமே ஐரோப்பிய வல்லரசுகளை அழித்து வருகின்றன என்பதைக் கண் முன்னர்க் காண்கின்றோம் என்பதைத் தமிழரும் தெலுங்கரும் அறிந்து, நேர்மையான முறையில் நடந்துகொள்ளக் கடமைப்பட்டவராவர்.

**இன்றைய தேவை யாது?**

1. இலக்கியம் – வரலாறு – கல்வெட்டு இவற்றுக்கு மதிப்பீந்து உண்மை வழியில் மாகாணப் பிரிவினை வேண்டும் என்று நினைப்பின், வடபெண்ணையாறே தமிழ் மாகாணத்தின் வட எல்லையாக அமைதல் வேண்டும். இதுவே இயற்கை வழிப்பட்ட பிரிவினையாகும். நெல்லூர் தமிழ் மாகாணத்தின் வடமுனை நகரமாகத் திகழ்தல் வேண்டும். இன்றேல்,

2. வேங்கடம் காளத்தி ஆகிய இரண்டையும் தமிழ் மாகாண வடகோடி நகரங்களாக அமைக்கும் முறையில் தமிழ் மாகாணம் பிரிக்கப்படல் வேண்டும்.

இந்த இரண்டாம் குறிப்புப்படி தமிழ் அறிஞர் இசைதல் அவர்களது விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மையையும் தம் இனத்தவராகிய தெலுங்கரிடம் கொண்டுள்ள உடன்பிறப்புப் பற்றையும், என்றும் நிலையுள்ள அமைதியை அவாவும் அருங்குணத்தையும் காட்டும் அறிகுறியாக நல்லறிஞரால் நன்கு மதிக்கப்படும்.

**– தமிழ்நாட்டு வடக்கெல்லை – 1953**

# தென்னாடு முழுநாடாக இருந்தது



**கா.அப்பாத்துரையார்**

தென்னாடு உலகின் பழம்பெரு நாடுகளில் ஒன்று என்பது மட்டும் அன்று. அது இயற்கையன்னையின் முதல் மாநிலக் கன்னியாகவும் இருந்தது. இமயம் உண்டாவதற்கு நூறாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பும், சிந்து கங்கை ஆறுகளும் அவற்றின் சமவெளிகளும் தோன்றுவதற்குப் பன்னூறாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரும் தென்னாடு ஒரு முழு மாநிலமாகவே இருந்தது.

தென்னாட்டின் தென்பாலுள்ள மாகடலில் பல தீவுகள் இருக்கின்றன. இப்பெருங்கடல் முன்பு தென்னாட்டின் தொடர்ச்சியான ஒரு மாபெருங் கண்டமாயிருந்தது. இப்பெரு நிலப்பகுதியைத் தமிழ் மரபு 'குமரிக்கண்டம்' என்று வழங்குகிறது. ஆராய்ச்சியாளர்கள் இதனை இலெமுரியா என்று குறிக்கின்றனர். உயிரினங்கள் முதன் முதல் இங்கேயே தோன்றின.

நில இயல் முறைப்படி தென்னாட்டின் வட எல்லை விந்தியமலை என்றாலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தென்னாட்டு மக்கள் சிந்து கங்கை சமவெளிகளிலும் பரந்த பல நாடு நகரங்களை அமைத்து வாழ்ந்து வந்தனர். இன எல்லையில் தென்னாட்டுப் பழங்குடி இமயம் வரை பரந்து கிடக்கும் ஒன்றாகும். எகிப்து, சால்டியா ஆகிய நாடுகளிலும் பரவி இருந்தார்கள். ஆகவே தென்னாட்டின் பண்டைய நாகரிக எல்லை இமயங்கடந்த ஒன்றாகும்.

இக்காலங்களில் நில இயலையும், இன நாகரிக அடிப்படையையும் விட மொழியே நாட்டின் அரசியல் எல்லையை வகுக்கப் பெரிதும் காரணமாயிருக்கிறது. உலகின் மிகப் பெரும்பான்மையான நாட்டுப் பிரிவுகளும் எல்லைகளும் பெரிதும் மொழியையே அடிப்படையாகக் கொண்டவை. தென்னாட்டிலும் நாட்டு எல்லை மொழி அடிப்படையாகவே வகுக்கப்படுதல் இயல்பு. ஆனால் மொழி அடிப்படையில் தென்னாட்டின் எல்லை நில இயல் எல்லையினும் சற்றுக் குறுகியதேயாகும்.

நாடு என்ற சொல் பண்டு மிகக் குறுகிய ஒரு சிறிய எல்லையையே குறித்தது. நாடு கடந்து பண்பாடு மட்டுமே வளர்ந்தது. ஆனால் அரசியல் எல்லை, பண்பாட்டெல்லையை எட்டிப் பிடிக்குந்தோறும் நாடு என்ற சொல்லும் விரிந்த எல்லையைக் குறித்தது. மொழி எல்லையில் வந்தபின் நாட்டெல்லையின் வளர்ச்சியில் ஒரு புது மாறுதல் ஏற்பட்டது. புற எல்லை விரிவை விட அக எல்லையின் ஆழம் மிகுதி ஆற்றல் தரும் என்ற உண்மை உணரப்பட்டது. ஆகவே, மொழி எல்லையில் நின்று நாடுகள் தம் எல்லையுட்பட்ட மக்கள் வாழ்வின் உயர்வு தாழ்வுகளை வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்ட வலுநாடிற்று.

**– தென்னாடு – 1954**

# ஐந்து உயிர்களைத் தரத் தயார்!



முத்தமிழறிஞர் கலைஞர்

"**....** கவர்னருடைய உரையைப் பற்றி இங்குப் பேசிய பல நண்பர்கள், 'கன்னியாகுமரியை வரவேற்கிறோம்' என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கன்னியாகுமரியை நாம் தேவிகுளக் கரையிலோ அல்லது பீர்மேட்டின் மீதோ நின்று கொண்டு வரவேற்காமல் சிதைந்து போன செங்கோட்டையின் மேல் நின்று கொண்டு வரவேற்கிறோம் என்று எண்ணும் போது தேவிகுளம், பீர்மேட்டைப் பெறுவதற்கு வழிவகை காணப்படவில்லை கவர்னர் உரையில் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்**....**"

**(தமிழ்நாடு சட்டமன்றத்தில் 04.05.1957 அன்று ஆற்றிய உரை)**

"**...** உறுப்பினர் ப.உ.சண்முகம் அவர்கள் கூறியது போல நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கவில்லை, உதகையிலுள்ள ஒரு வீட்டுக்கு தமிழகம் என்று கனம் அமைச்சர் சுப்பிரமணியம் வைத்துள்ளார். நாட்டுக்கு வைக்க வேண்டிய ஒரு பெயரை ஒரு வீட்டுக்கு வைத்திருக்கிறார்.

தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்காக சங்கரலிங்கனாரின் பிணம் வீழ்ந்தது. உங்களுக்கு ஒரு எழுத்துக்கு ஒரு பிணம் வீதம் வேண்டுமென்று சொன்னால் தயாராக இருக்கிறோம். ஐந்து பிணங்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். எழுத்துக்கு எத்தனை பிணங்கள் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறோம். தமிழ்நாடு என்று இந்த நாட்டுக்கு பெயரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்**....**"

**(தமிழ்நாடு சட்டமன்றத்தில் 10.08.1960 அன்று ஆற்றிய உரை)**

# உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு!



## சி.பா.ஆதித்தனார்

தமிழ்நாடு முழுவதும் தொடக்கப்பள்ளிகளில் கற்றுக் கொடுப்பதற்காகப் பூகோள சாஸ்திரம் ஒன்று எழுதப்பட்டு இருக்கிறது. அதில் தமிழ்நாட்டைப் பற்றி ஏதாவது சொல்லப்பட்டு இருக்கிறதா? இல்லை. என்ன எழுதி இருக்கிறார்கள் என்று பாருங்கள்.

'நாம் வசிக்கும் தேசத்துக்கு இந்தியா என்று பெயர். இதன் தென் பாகமாகிய தென்னிந்தியாவில் உள்ள சென்னை மாகாணத்தில் நாம் வசிக்கிறோம்' என்று எழுதப்பட்டுள்ளது.

இதிலே, 'தமிழ்நாடு' என்ற வார்த்தைகூடக் காணப்படவில்லை. நாம் வாழுகிற நாடு, தமிழ்நாடு என்று சொல்லிக் கொடுத்தால் என்ன? தமிழ்நாடு என்று சொன்னால் தமிழ்ப் பிள்ளைகளின் பிஞ்சுமனத்திலே தமிழ்நாடு என்ற பற்று பதிந்துவிடும் என்ற அச்சமா?

அதே காரணத்துக்காகத்தான் தமிழகத்தின் வரலாறும் தமிழ் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவது இல்லை.

தமிழ் மக்கள் சிதறுண்டு கிடக்கிறார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரே நாடாக வாழ வேண்டும் என்ற ஆசை தமிழ் மக்களின் இதயத்தில் எழுந்து உள்ளது. பாண்டிச்சேரியிலும் வேங்கடத்திலும் பீர்மேட்டிலும் யாழ்ப்பாணத்திலும் சென்னை மாகாணத்திலும் சிதறுண்டு தன்னந்தனியாக வாழ்வதால் தமிழினம் வலுவற்றுக் கிடக்கிறது.

உலகில் ஒரு மொழி பேசுகிற மக்கள் ஒரு நாடாகவே வாழுகிறார்கள் என்பது பூகோளத்தைப் பார்த்தால் தெரியும். ஒரு மொழி ஒரு நாடு என்ற முறை உலகெங்கும் உள்ளது.

**உடல் மண்ணுக்கு**
**உயிர் தமிழுக்கு !** **- 1942**

# பழைய தமிழகமே புதிய தமிழகம்



## சாமி சிதம்பரனார்

அடிமைத் தளையை அறுத்து வீசுவோம்! ஆண்டான் அடிமையற்ற புதிய சமுதாயத்தை ஆக்குவோம்! பள்ளம் படுகுழியற்ற சமநிலைச் சமுதாயத்தைக் கட்டுவோம்! மக்கள் வாழ்விலே இன்பத் தேன் பாய்ந்தோடச் செய்வோம்! இன்று எங்கும் இதே முழக்கந்தான். இத்தகைய வாழ்க்கைக்கு வழி காட்டும் சாலை அமைப்பதே இன்று நமது முன்னே நிற்கும் முதல் வேலை.

இதற்காகவே இந்நாட்டில் உள்ள ஒவ்வொரு மொழியினரும் உரிமையாட்சி கேட்கின்றனர். எல்லோரும் இன்புற்றிருக்கும் இனிய வாழ்வை விரும்பாதவர்கள் யார்? மனிதத் தன்மையை அறிந்த அனைவரும் மனிதத் தன்மையுடைய மக்கள் அனைவரும் ஒற்றுமை வாழ்வையும், உரிமை ஆட்சியையும் வரவேற்றேத் தீர்வார்கள்.

புதிய தமிழகம்! ஒன்றுபட்ட தமிழகம்! புத்துணர்ச்சி! புது வாழ்வு! தமிழ் முன்னேற்றம்! தமிழ்க் கல்வி! தமிழர் ஒற்றுமை! தமிழ் ஆட்சி! இந்த முழக்கங்கள் தமிழ் நாட்டிலே எங்கும் கேட்கின்றன. ஏன் இம்முழக்கங்கள்! ஏழை அடிமையற்ற சமுதாய வாழ்வு ஏற்பட்டேயாகவேண்டும் என்பதே இம்முழக்கங்களின் குறிக்கோள். மக்கள் சமுதாய வளர்ச்சி வரலாற்றை அறிந்தவர்கள் இந்த நோக்கத்தில் மாறுபடமாட்டார்கள்.

மக்களின் கூட்டுறவு வாழ்க்கைதான் இன்றைய மகத்தான நாகரீக வளர்ச்சிக்குக் காரணம். மக்கள் விலங்குகளைப் போலத் தனித்தனியே வாழ்ந்திருப்பார்களாயின் இந்த உலகம் காடாகத்தான் காட்சியளிக்கும்; விலங்குகளைப்போல் தம் வயிற்றுப்பாடு ஒன்றையே குறியாகக்கொண்டு வாழ்ந்திருப்பார்களாயின் இன்றைய நாகரீக உலகப் பூஞ்சோலையை நாம் காணவே முடியாது. மக்களும் விலங்குகளைப் போலத்தான் வாழ்வார்கள். உலகமும் வெறும் காடு, மலை, வனம், பள்ளம் படுகுழி, மேடுகளாகத்தான் காட்சியளிக்கும். இவை உண்மையா அல்லவா? சிந்தியுங்கள்!

கூட்டு வாழ்க்கையின் சிறப்பைப் பல மக்கள் இன்னும் உணரவில்லை. பொது மக்கள் இதை உணராமல் இருக்கவேண்டும் என்பதே சில குள்ள மனத்தார்களின் குறிக்கோள். இவர்கள்தாம் சமுதாயப் புல்லுருவிகள். தன்னலவாதிகள். மக்களை அடிமைப்படுத்தி அவர்கள் உழைப்பைச் சுரண்டி உயர்ந்தவர்கள் போல் வாழ்வு நடத்துகிற சிலந்திப் பூச்சிகள். இவர்களால்தான் மனித முகம் சின்னாபின்னமாகச் சிதைந்து கிடக்கிறது. இப்படிச் சிதைந்து கிடக்கும் மக்களை ஒன்று சேர்த்தாக வேண்டும். இதுவே இன்று மனிதாபிமானிகள் மக்கள் அன்பர்கள் மக்கள் ஊழியர்கள் செய்யவேண்டிய முதல் வேலை.

மக்களை ஒன்றுசேர்க்கும் பணியின் முதற் படிதான் மொழிவாரியாக மாகாணங்கள் பிரியவேண்டும் என்பது; அல்லது தேசிய இனவாரியாக மாகாணங்கள் பிரிய வேண்டும் என்பது. இந்த மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியுடன் இணைந்ததுதான் ஐக்கிய தமிழகக் கிளர்ச்சி.

பழைய சிறந்த தமிழகத்தை மீண்டும் உருவாக்குவதே புதிய தமிழகம்!

பழைய தமிழர்களின் சிறந்த பண்பாடுகளை இந்திய நாடு முழுவதும் பரப்புவதே புதிய தமிழகத்தின் நோக்கம். “எல்லோரும் இன்புற்றிருக்க வழி காண்பதே எங்கள் நோக்கம்” என்று முழங்கிய பண்டைத் தமிழனுடைய குறிக்கோளை உலகுக்குப் பறை சாற்றுவதே புதிய தமிழகத்தின் அடிப்படைக் கொள்கை.

புதிய தமிழகத்திற்குச் சென்னையே தலைநகரம். தமிழகத்தின் நடுப்பாகத்திலே தலைநகரை மாற்றிக் கொள்ளும்படி நேர்ந்தாலும் சென்னை தமிழ்நாட்டைச் சேர்ந்ததாகவே இருக்கும்.

சென்னை நகரை ஆந்திர மாகாணத்துடன் சேர்க்க முடியாது. சென்னை நகரை இரு துண்டாக வெட்ட வேண்டும் என்பது வெறும் பேச்சு.

சென்னை நகரைத் தனி மாகாணமாக்க வேண்டும் என்பது பொறாமைப் பேச்சு. சென்னை நகரம் தனி மாகாணமாவது புதிய தமிழகத்துக்குப் புற்று நோய்.

திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தில் நீண்ட நெடுங்காலமாக அடங்கிக் கிடக்கும் தமிழ் மக்களும் தமிழ்த் தாயகத்தோடு இணையப் போராடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய போராட்டத்திற்கும் ஆதரவளித்தாக வேண்டும். அவர்களையும் அவர்கள் வாழும் நிலப்பகுதியையும் தமிழ்த் தாயகத்தோடு இணைத்தாக வேண்டும்.

இந்த தமிழகத்துடன் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த சில நிலப் பகுதிகளையும் சேர்க்கவேண்டும் என்ற கிளர்ச்சி தமிழகத்திலும் இருந்து வருகிறது. சித்தூர் மாவட்டத் தமிழ் மக்களிடையும் இருந்து வருகிறது.

திருத்தணி, புத்தூர், சித்தூர், கங்குந்திகுப்பம் ஆகிய சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு தாலுக்காக்களிலும் தமிழர்களே பெரும்பான்மையோர். ஆகையால் அந்த வட்டாரங்களையும் தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இந்த இணைப்பை வரவேற்க வேண்டும்.

நமது நாட்டை நாமே ஆள வேண்டும் என்ற உணர்ச்சி முழக்கம், தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்திய நாடெங்கும் வேரோடிவிட்டது. ஒவ்வொரு மொழியினரிடமும் தோன்றியுள்ள இந்த உணர்ச்சி வரவேற்கத்தக்கது.

இது இந்திய ஒற்றுமைக்கு ஊறுவிளைவிப்பதாகும் என்று சிலர் பிதற்றுகின்றனர். ஜனநாயக ஆட்சி முறைப்படி ஆட்சி நடக்க வேண்டும் என்று விரும்புகிறவர்களின் முழக்கம் தான் மொழிவழி மாகாணம் ஆகும். தேசத்தின் ஆட்சி உண்மையில் மக்களாட்சியாக இருக்கவேண்டும் என்று நினைப்பவர்கள்தான் மொழிவழி மாகாணம் கோருகிறார்கள்.

இந்தியாவை பதினேழு மொழிவாரி மாகாணங்களாகப் பிரிக்க வேண்டும் என்ற திட்டத்தை 1946ஆம் ஆண்டிலேயே இந்த நாட்டு ஜனநாயகவாதிகள் வெளியிட்டனர். அவர்கள் தங்கள் தேர்தல் திட்டமாகவும் அறிவித்தனர். மொழிவாரி மாகாணம் என்றாலும் தேசிய இனவாரி மாகாணம் என்றாலும் ஒன்றுதான். இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் மொழிவாரி அல்லது தேசிய இனவாரி மாகாணங்களைத்தான் விரும்புகின்றனர்.

**– புதிய தமிழகம் 1952**

# மொழியும் இனமும்



## ஏ.கோவிந்தசாமி

ராஜ்ய சீரமைப்பு மசோதா தமிழர்களுக்குப் பெரிய பாதகத்தை விளைவித்திருக்கிறது. தமிழர்களுடைய உரிமையைப் பறித்திருக்கிறது. தமிழ்நாட்டுக்குச் சேர வேண்டிய தேவிகுளம், பீர்மேடு, கொச்சி, சித்தூர், நெய்யாற்றங்கரை போன்ற பகுதிகள் தமிழ்நாட்டுடன் சேர்க்கப்படவில்லை. தமிழர்களைப் பழிவாங்குகிற நிலையில் தமிழர்களுடைய உரிமையைப் பறித்துக் கொண்டார்கள்.

செங்கோட்டையின் ஒரு பகுதியைக் குரங்கு அப்பத்தைப் பங்கிட்ட கதையாகப் பிரித்து அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள்.

தமிழ்நாடு என்று பெயர் வையுங்கள் என்று அன்றைக்கும் வாதாடினோம், இன்றைக்கும் வாதாடுகிறோம். திருத்தம் கொண்டு வர வேண்டிய நேரத்தில் நம்மை ஏமாற்றி விட்டார்கள். குழந்தை பிறப்பதற்கு முன்பே பேர் வைக்கச் சொல்கிறார் கோவிந்தசாமி என்று அன்று சொன்னார்கள். இன்றைக்குக் கேட்கிறேன்...

வெள்ளைக்காரன் பேரால் மெட்ராஸ் என்று வைக்கப்போகிறீர்களா? அல்லது தமிழ்நாடு என்று வைக்கப்போகிறீர்களா?

பெயரை மாற்றினால் உலகத்துக்குத் தெரியாது என்கிறார்கள். தமிழ்நாடு என்றால் உலகத்துக்குத் தெரியாது என்கிறார்கள். மூவேந்தர் ஆண்டது உலகத்துக்குத் தெரியாதா? தமிழ்நாட்டின் பெயரால்தான் அவர்கள் ஆண்டார்கள்?

இந்தியாவுக்கு பாரத் என்று பெயர் வைக்கவில்லையா? இந்தியாவுக்கு பாரத் என்று பெயர் வைக்கும் போது சென்னைக்கு ஏன் தமிழ்நாடு என்று பெயர் வைக்கக் கூடாது? வெள்ளைக்காரன் வைத்த பார்லிமெண்ட் என்ற பெயரை லோக்சபா என மாற்றவில்லையா? தமிழ்நாடு என்று பெயர் வைக்கக் கூட நீங்கள் தயங்கினால் வேறு என்ன சாதிக்கப் போகிறீர்கள்?

யாருடனும் எங்களுக்கு வெறுப்பு கிடையாது. மொழிவழியாகப் பிரிந்து இனவழியாகச் சேர்ந்து வாழ வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு என்று பெயர் வைக்கவில்லை என்றால் எதிர்காலத்தில் தேர்தல் வரும்போது அதன் பலனை அனுபவிப்பார்கள் என்று எச்சரிக்கிறேன்.

**(தமிழ்நாடு சட்டமன்றத்தில் 28.03.1956 அன்று பேசியது)**

# தனிக் குடித்தனம்



## டாக்டர். ஆர்.கே.சண்முகம்

தேசம் சுதந்திரம் அடைந்தவுடன் மொழி வாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படும் என்று நம்பியிருந்தோம்; மகாத்மா காந்தியின் கனவும் அதுதான். மொழிவாரி மாகாணத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த தலைவர்களே பிரிக்கப் பயப்படுகிறார்கள். காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. 'ஒற்றுமை குலைந்து போய்விடும்' என்று கூறுகின்றனர்.

நாட்டை மொழிவாரி பிரிப்பதை ஒரு நிமிட நேரம் கூட ஒத்திப்போடக் கூடாது. ஒத்திப் போடுவதால், மன வேற்றுமையும் மனக் கசப்பும் விபரீதமாக முடியும் என்பதே என் அபிப்பிராயமாகும்.

மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிப்பது சம்பந்தமாக மாறுபட்ட அபிப்பிராயத்தைத் தார் கமிஷன் தெரிவித்திருக்கிறது. மகாத்மாவை விடவா இந்தக் கமிட்டியினர் அறிவாளிகள்?

இந்தியாவின் சுதந்திரம் நிலைபெற்றதாக இருக்க வேண்டுமென்றால், மொழி, கலை, கலாச்சார வளர்ச்சிக்கு இன்றியமையாததான பாஷாவாரி அடிப்படையில் மாகாணங்கள் அமைந்தாக வேண்டும். இதில் தாமதம் ஏற்படுத்தினால் கலகம், சச்சரவு அதிகமாகும். ஆந்திர மாகாணத்தை உடனடியாகப் பிரிக்கச் செய்திருக்கிறார்கள். ஆந்திரர்களை விட இவ்விஷயத்தில் தமிழர்கள் ரொம்ப ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்து வந்தோம். பிரிக்க வேண்டுமென விரும்பும்போது, அதைத் தவிர்ப்பது சரியல்ல. குடும்பத்தில் வயது வந்த சகோதரர் தனிக் குடித்தனம் நடத்த இஷ்டப் பட்டால், அவருக்கு வீடு ஏற்பாடு செய்து பிரித்து அனுப்புவது போல, ஆந்திரர்களை அனுப்பத் தயார்! ஆனால், ஆந்திர சகோதரர் பிரிந்து போகும்போது பிதுரார்ஜிதச் சொத்தில் கை வைக்கப் பார்த்தால், அது திருப்திகரமான நிலையல்ல.

“சித்தூர் பற்றித் தமிழர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். இது, வடக்கெல்லை. தெற்கு மேற்கு எல்லை என்ன? நாஞ்சில் நாட்டை நாம் எப்படி மறக்கமுடியும்? தனி மாகாணம் நிர்ணயிருக்கும்போது அந்த மாகாணத்தோடு சேர வேண்டிய பிரதேசங்களுக்காக நாம் போராடியேத் தீருவோம். ஆகவே அப்பிரதேச மக்கள் பயப்பட வேண்டியதில்லை.”

# அகில இந்தியாவையே காக்கும் கொள்கை



கவி காமு ஷெரீப்

பல மொழிகளைக் கொண்ட ஒரு பரந்த நாட்டில் வாழும் தேசிய இனங்கள் அனைத்திற்கும் சுதந்திரம் வழங்கி, அவைகள் தானாக இயங்கும்போது, அந்த இயக்கங்களின் ஜீவனாக மத்திய ஆட்சி இருப்பதுதான் தேசிய இனங்களுக்கும் அந்த தேசிய இனங்களின் நாயகமாக விளங்கும் மத்திய ஆட்சிக்கும் நல்லது. ஏதாவது ஒரு தேசிய இனத்தின் சுதந்திரம் பறிக்கப்பட்டாலும், அது தேசத்திற்கே ஆபத்தைத் தேடி அழைப்பது என்றுதான் அர்த்தம்.

ஆகவேதான், உலக நாடுகள் தேசிய இனங்களின் சுதந்திரத்தை அங்கீகரிக்கின்றன. இதை உணர்ந்தேதான் தேசியத் தந்தை மகாத்மா, இந்தியாவிற்குத் தேசிய இன சுதந்திரத்தை வலியுறுத்தினார். இந்தியத் தேசியக் காங்கிரசின் முக்கியக் கொள்கையாக– ஏன், முதற்கொள்கையாகவும்கூட – மொழிவழி ராஜ்ய அமைப்பை வைத்தார். அவர் ஆத்மா பறிக்கப்பட்ட நாள் வரையிலும் மொழிவழிப் பிரிவினையை உடனடியாகச் செய்யும்படி இந்திய ஆட்சிக்கு விடாது எடுத்துக்கூறி வந்தார். ஆனால் இன்று அதை பத்தாம் பசலிக் கொள்கை என்று சொல்லிவிட்டார்கள் சிலர்.

யார் வெறுத்தாலும், யார் ஆதரித்தாலும் அதற்காகவெல்லாம் சூரியன் தன் கடமையை நிறுத்தவோ செய்யவோ தொடங்குவதில்லை. இயற்கைப்படி அது இயங்குகிறது. மொழிவழி நாடுகள் அமைவதும் அப்படியே!

“ஒரே பலகையில் செய்த வண்டிக் காலைவிடப் பல துண்டுகளால் செய்யப்பட்ட வண்டிக் கால்தான் பலமுடையது. துண்டு துண்டாக இருக்கக்கூடாது ஒரே பலகையாக இருக்கவேண்டும்” என்று கூறுபவன் தன்னை அறியாமலேயே வண்டியைச் சிதைப்பவனாகிறான். பல துண்டுகளைக் கொண்டு கால் செய்ய எண்ணுபவன் மிகக் கனமான பாரத்தையும் சுமக்கும்படியாக வண்டியை வலுவுடையதாகச் செய்கிறான். ஆனால், துண்டுகள், துண்டுகளாகவே இல்லாமல் ஒரு பலமான மத்தியத்தில் இணையவேண்டும். இல்லையெனில் பலமிராது. இதை ஆட்சிக்கும் ஒப்பிடலாம்.

இந்திய ராஜ்யங்கள் தனித் தனிச் சுதந்திர நாடாகி, தேச நலத்திற்காக மத்திய ஆட்சியில் இணைந்து நின்று தங்கள் தாயகம் மட்டுமல்ல; அகில இந்தியாவும் வாழவேண்டும் என்ற அகண்ட கொள்கையைக் கொண்டவர்களே நாங்கள். இதை மறுப்பவர்கள் தங்களை அறியாமலே தேசத்தின் பொது ஐக்கியத்தைக் குலைக்கிறார்கள்.

**தமிழரசுக் கழகம் ஏன் வந்தது? என்ன சொல்கிறது? – 1954**

# செய் அல்லது செத்துமடி!



## கே.விநாயகம்

வடக்கெல்லைப் பிரச்சினையைத் தீர்க்க எல்லைக் கமிஷனை அனுப்பி வைப்பதாக இரண்டாண்டுகளுக்கு முன்பு பிரதமர் நேரு வாக்குறுதி தந்தார். அதன் பேரில்தான் எல்லைப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. கடந்த ஆகஸ்டு மாதம் நேரு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில், எல்லைக் கமிஷன் நியமிப்பது நிச்சயமென்றும் புள்ளி விபரம் தயாரித்துக் கொண்டிருப்பதால்தான் காலதாமதமாகிறதென்றும், அது முடிந்தவுடன் எல்லைக் கமிஷனை நியமிப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். புள்ளி விபரம் எடுக்கும் வேலை முடிந்து சேகரிக்கப்பட்ட விபரங்கள் பல மாதங்களுக்கு முன்பே மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில், எல்லைக் கமிஷனுக்கு அவசியமில்லாமலே ஆந்திர அரசாங்கத்தோடு சமரசம் பேசிச் சிக்கலைத் தீர்த்துக் கொள்ளலாமென்று சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம் கூறினார். 'எப்போது தீர்க்கப்படும்?' என்று நான் அசெம்பிளியில் கேட்டதற்கு, '1954–ஆம் வருட இறுதிக்குள் தீர்க்கப்பட்டுவிடும்' என்றார். அந்த வருடம் முடிந்த பின்னரும் பிரச்சினை தீரவில்லை, 'ஆந்திராவில் மந்திரி சபை கலைக்கப்பட்டு விட்டதால், மறுதேர்தல் முடிந்து புதிய மந்திரி சபை அமைந்ததும், சித்தூர் விஷயம் தீர்க்கப்படும்' என்று சி.சுப்பிரமணியம் கூறினார். புதிய மந்திரி சபை அமைத்துப் பல மாதங்களாகிவிட்டன. ஆனால், இன்னும் சித்தூர் தமிழர்களின் கஷ்டம் தீரவில்லை.

சமீபத்தில் ஆந்திர முதலமைச்சர் கோபால் ரெட்டி சென்னைக்கு வந்தார். அப்போது "சித்தூர் பிரச்சினை அவசர விஷயமல்ல. இராஜ்யப் புனரமைப்புக் கமிஷனின் அறிக்கை வெளிவந்த பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்" எனக் கூறிக் கைவிரித்துவிட்டார். நிதியமைச்சரும் கோபால் ரெட்டியைப் பின்பற்றி அடுத்த பொதுத் தேர்தலுக்குள் சித்தூர் விஷயம் தீர்ந்துவிடும் என்று கூறியிருக்கிறார். இவர்கள் சொல்லுவதிலிருந்து எல்லைக் கமிஷன் நியமிக்கப்படமாட்டாது என்று தெரிகிறது. அதோடு, ஆந்திர அரசாங்கத்துடன் பேரம் பேசிச் சமரசம் செய்துகொள்ளும் வேலையும் சீக்கிரத்தில் எளிதில் முடியுமென்று தோன்றவில்லை. தமிழருக்கு நஷ்டம் நேராத வகையில் ஆந்திர அரசாங்கத்தோடு பேரம் பேசும் திறமை சென்னை அரசாங்கத்துக்கு இல்லை. சித்தூர் பிரச்சனையைத் தனது சொந்தப் பிரச்சனையாக இந்த அரசாங்கம் எண்ணவில்லை. ஏதோ தலைவர் ம.பொ.சி.யின் குடும்பப் பிரச்சனை மாதிரி எண்ணுகின்றது.

நாங்கள் இறுதி முடிவுக்கு வந்துவிட்டோம். அதாவது இரண்டு வருடங்கள் காத்திருந்தும் எல்லைக் கமிஷன் அனுப்பப்படாததுதான் தற்காலிகமாக நிறுத்திவைத்த எல்லைப் போராட்டத்தை மீண்டும் துவக்குவதென்று தீர்மானித்து விட்டோம். இந்தப் போராட்டத்தை எப்போது நடத்துவது? எப்படி நடத்துவது? என்ற விஷயங்களை முடிவு செய்யும் பொறுப்பைத் தலைவர் ம.பொ.சி.க்கே விட்டுவிட்டோம். அவர் ஆணையிடும் எந்த நேரத்திலும் கடுமையான தியாகத்திற்குத் துணிந்து போராட்டத்தில் ஈடுபட நாங்கள் தயாராக இருக்கிறோம். தமிழகத்தில் தமிழரசுக் கழகமும் சித்தூர் மாவட்டத்தில் வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியும் போராட்டத்தை நடத்தும் பொறுப்பை மேற்கொள்ளும். '**செய் அல்லது செத்துமடி**' என்ற உறுதியுடன் நாம் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். இறுதி வெற்றி நமக்கே இதில் ஐயமில்லை.

**(சென்னையில் நடந்த தமிழரசுக் கழக மாநாட்டில் பேசியது)**

# இது உணர்ச்சிகரமான பிரச்சினை!



## பி.எஸ்.சின்னத்துரை

“எனது பெயரிலே கொடுக்கப்பட்டு இருக்கும் தீர்மானமாகிய சென்னை ராஜ்யத்திற்குத் தமிழ்நாடு என்று பெயரிடத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த சட்டசபை அரசாங்கத்தாருக்குச் சிபாரிசு செய்கிறது என்பதை நான் பிரேரேபிக்கிறேன்.

1956ஆம் ஆண்டு இறுதியிலே முதல் முதலாக மொழிவாரி ராஜ்யம் பிரிவினை ஏற்பட்ட காலத்திலேயே நம்முடைய மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயரிட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் யாது காரணத்தாலோ தமிழ்நாடு என்று பெயரிடத் தவறிவிட்டார்கள்.

சென்னை ராஜ்யம் அல்லது மெட்ராஸ் ஸ்டேட் என்று சொல்வதற்குப் பதிலாகத் தமிழ்நாடு என்று சொன்னால்தான் வெளியில் இருக்கிறவர்கள் சிறப்பாக வரவேற்பார்கள். தமிழ் பேசுகின்ற மக்கள் நிறைந்த இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயரிடுவது தான் மிகவும் சிறந்தது. எல்லா அரசியல் கருத்துக் கொண்டவர்களும் தமிழ்நாடு என்று அழைப்பதைப் பெருவாரியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பெருவாரியான மக்களின் அபிப்பிராயம் இது என்பதில் துளிகூட சந்தேகம் வேண்டாம்.

தமிழ்நாடு என்ற பெயர் எப்போதும் இருந்ததில்லை என்று சிலர் வாதிட வருகிறார்கள். சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு ஆகிய அனைத்து நாடும் தமிழ்நாட்டுக்குள் பகுதிகளாகத்தான் இருந்திருக்கின்றன.

தமிழ்நாடு என்று பெயர் வைப்பதானது உணர்ச்சியைப் பொறுத்த விஷயம். காரணங்கள் எவையாக இருந்தபோதிலும் உணர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க இந்த சபையின் அங்கத்தினரும் சர்க்காரும் தயங்க மாட்டார்கள் என நம்புகிறேன்.

நம்முடைய ஆட்சி நடக்கும்போது சொந்த மக்கள் ஆட்சி நடக்கும்போது தங்களுடைய மக்கள் தன்னை சரியான பெயரிட்டு அழைக்காமல் இருப்பார்களேயானால், அழைக்கத் தவறுவார்களேயானால், அழைக்க மறுப்பார்களேயானால் தமிழ் அன்னையினுடைய வருத்த உணர்ச்சி எவ்வளவு கடுமையானதாக எவ்வளவு வருத்தம் உடையதாக இருக்கும் என்பதைச் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த சபையின் அங்கத்தினர்களை நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

**(தமிழ்நாடு சட்டமன்றத்தில் 19.08.1960 அன்று பேசியது)**

# என் பெயர் தமிழிலும் ஆங்கிலத்திலும் நெடுஞ்செழியன்தான்!



## நாவலர் நெடுஞ்செழியன்

மூன்றரைக் கோடி தமிழ் மக்கள் வாழ்கின்ற பரப்பை 'தமிழகம்' என்றும் 'தமிழ்நாடு' என்றும் அழைக்கப்பட வேண்டுமென்ற கருத்திலே ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. இப்போது தமிழிலே 'தமிழ்நாடு' என்று அழைக்கப்படுகிறது. அதை இந்த மன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆங்கிலத்திலே அழைக்கப்படுகின்றபோது வேறு ஒரு பெயராலே

அழைக்கப்படுகின்றது. எல்லோரும் விரும்புகிற ‘தமிழ்நாடு’ என்ற பெயராலேயே ஆங்கிலத்திலும் அழைக்கப் பட வேண்டும் என்பதுதான் இப்போது இருக்கிற பிரச்சினையாகும்.

இதனுடைய அடிப்படை நோக்கம் உணர்வுப்பூர்வமான ஒன்று, இந்தியா என்பதை ‘பாரத்’ என்று அழைப்பதால் என்ன உணர்வுப்பூர்வமான அகமகிழ்ச்சியை எதிர்ப்பார்க்கிறோமோ; சைனா பசார் ரோடை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு என்று மாற்றுவதன் மூலம் எப்படிப்பட்ட உள்ள உயர்வை எதிர்பார்க்கிறோமோ அதையேதான் ‘தமிழ்நாடு’ என்ற பெயரால் அழைக்கப்படும்போது பெறுகிறோம். ஒரு பெயரை மற்றொரு பெயராக மாற்றுவதற்குக் காரணங்கள் இருக்கலாம். ‘தமிழ்நாடு’ என்று சொல்லும்போது அதனுடைய தொன்மையான நாகரீகம், பண்பாடு, வரலாற்றுச் சிறப்புக்கள் ஆகியன எல்லாம் மனத்திலே தோன்றுகின்றன.

ஆனால் சென்னை என்பது ஒரு நகருடைய பெயர்; அந்தப் பெயர் இந்த மாகாணத்தினுடைய பெயராகச் சமீப காலத்திலே மாறியிருக்கிறது. சென்னை என்ற பெயர் இடைக்காலத்தில் வந்தது. ‘தமிழ்நாடு’ என்ற பெயர் இலக்கிய ஆதாரங்கள் கொண்டது; தொன்மை வாய்ந்தது. அது புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பெயரல்ல.

உலகத்தில் உள்ளவர்கள் தமிழ்நாடு என்று அழைக்கும்போது நமக்கு ஒரு பெருமை, பூரிப்பு ஏற்படுகிறது. ஒரு தனி மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதன் காரணமாக அமைச்சரவைக்குப் பெருமை ஏற்படுமேத் தவிரப் பொருளாதார நஷ்டம் எதுவும் ஏற்படப் போவதில்லை.

நான் தமிழிலும் நெடுஞ்செழியன் என்றுதான் எழுதுகிறேன். ஆங்கிலத்திலும் நெடுஞ் செழியன் என்றுதான் எழுதுகிறேன். ஆங்கிலத்தில் எழுதுவதற்கு என்று நான் தனிப் பெயரை வைத்துக் கொள்ளவில்லை. ஆகவே இதைப் பெருந்தன்மையோடு தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# ‘தமிழ்நாடு’ – என்ற பெயர் நம்மைக் காக்கும்!



பேராசிரியர் க.அன்பழகன்

உண்மையாகவே, தமிழ்நாடு என்று அழைப்பதிலே, தமிழ் நாட்டிற்கு எந்த வகையிலே கேடு? ஏதாவது ஒரு வகையிலே கேடு ஏற்படுகிறது என்று சொன்னால், தமிழ்நாடு தாழ்ந்துவிடுமென்று சொன்னால் தமிழ்நாடு பாதிக்கப்படலாமென்று சொன்னால், அந்த வாதத்தை எண்ணிப் பார்க்கவேண்டிய அவசியம் என்போன்றவர்களுக்கு ஏற்படும். ஆனால் ‘தமிழ்நாடு’ என்று பெயர் வைத்தால் என்ன இலாபம் என்று ஒரு அமைச்சர் கேட்கிறார். நான்

சொல்லுகிறேன், ''நான் தமிழன்'' என்று சொல்லிக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு அந்தப் பெயர் நம்மைக் காப்பாற்றும்.

தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்கு இவ்வளவு மறுப்புச் சொல்லுகிறவர்கள், தமிழ்நாடு என்று சொன்னால் என்ன இழுக்கு என்று சொல்லட்டும். தமிழ்நாடு என்று பெயர் வைப்பது நம்முடைய பிறப்பு உரிமை என்று நான் சொல்லுகிறேன். தமிழ் நாட்டிலே தமிழன் மூச்சோடு வாழ்கிற வரையில், தமிழ் நாட்டில் தமிழ் இனம் இருக்கிற வரையில், ''தமிழர் என்று ஓர் இனம் உண்டு, தனியே அவருக்கொரு குணம் உண்டு'' என்று நாமக்கல் கவிஞர் பெருமையாகப் பாடியிருக்கிற மக்கள் உள்ள வரையில், அவர்கட்கு அடையாளமாக என்ன தரப்போகிறீர்கள் என்று கேட்கிறேன். அடையாளமாக ஒரு பட்டயம் தருவீர்களா? தமிழர் என்று நெற்றியிலே எழுதி ஒட்டுவீர்களா? தமிழ்நாட்டார் என்ற பெருமையைப் பெறுவதற்கு இந்தப் பெயரை வைக்கச் சொல்லிக் கேட்கிறோமேத் தவிர. பலர் எண்ணுவதைப்போல், நாட்டைப் பிரிப்பதற்கு இந்தப் பெயர் தேவை என்று நாங்கள் கேட்கவில்லை.

நாட்டிற்குப் பெருமை என்று கருதுவதால்தான் தமிழ்நாடு என்று கேட்கிறோம். பெயர் வைத்தாக வேண்டும் என்று பொதுமக்கள் கிளர்ச்சி செய்ய எழுந்தால் அதை எளிதில் எவரும் அடக்கிவிட முடியாது. தங்களுக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு கிளர்ச்சியை அடக்கிவிடலாம் என்று நினைத்துக்கொள்ளலாம். அப்படி அடக்கிவிடும் மனப்பான்மை இருந்தால், பொதுமக்களுடைய ஒருமித்த கருத்தை எடுத்துக்கொள்ளவில்லையானால், இதுதான் ஜனநாயகமா என்று கேட்க விரும்புகிறேன். அப்படிக் கிளர்ச்சி செய்வதை அடக்கிவிட்டு அவர்கள் கேட்கக்கூடிய இயற்கை உரிமையை மறுப்பது என்று நினைத்தால் அது சரியான ஜனநாயகமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே பொது மக்களுடைய அடிப்படையான விருப்பத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப் பெயர் வைக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் சொல்லவில்லை. சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தப் பெயரை ஏற்கவேண்டுமென்று தக்கார்பலர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

அதை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? பெயரை மாற்றிக் கொள்வதால் என்ன இலாபம் என்று ஒரு அமைச்சர் கேட்கிறார். அவர் அமைச்சராக இருப்பதால் என்ன லாபம் என்று கேட்க வேண்டியதுதான். லாபம் என்று பார்த்தால், ஆடை உடுத்துவதால் என்ன லாபம் என்று கேட்க வேண்டியதுதான். ஆடை அணிந்து கொள்வதால் அதில் இலாபம் இல்லை. அது செலவினத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது. மானத்தை இழந்துவிட்டால் ஆடை அணியத் தேவையில்லை. நாட்டு மக்களுடைய மானம் பாதிக்கப்படுகிறது என்பதால்தான் பெயரை மாற்றி அமைக்கவேண்டும் என்று சொல்லுகிறோம்.

சங்க காலத்திலே தமிழ்நாடு என்ற பெயர் இல்லை என்றும் பாரதியார் காலத்தில் தான் தமிழ்நாடு என்று பெயர் வைக்கப்பட்டது என்றும் முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இதன் உண்மையைக் காண ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஏடுகளைப் புரட்டிப் பார்க்க வேண்டும். அவற்றுள் பல பாடல்களில் தமிழ்நாடு என்ற பெயர் வந்திருக்கிறது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட சங்க இலக்கியப் பாடல்களில் தமிழ்நாடு என்ற பெயர் வழங்கியுள்ளது. சேர, சோழ, பாண்டிய நாடுகள் தனித்தனியாக இருந்த காலத்திலேயே தமிழ்நாடு இருந்திருக்கிறது.

பற்பல இலக்கியங்களில் அந்தப் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. தொல்காப்பியத்தில் அதன் பாயிரத்தில் அந்தப் பெயர் இருக்கிறது. பதிற்றுப்பத்தில் இந்தப் பெயர் வழங்கி யிருக்கிறது. பரிபாடலில் இந்தப் பெயர் வந்திருக்கிறது. எல்லாவற்றிலும் இந்தப் பெயர் இருக்கிறது என்பதை அதைப் படித்துப் பார்த்தாலே நன்றாகத் தெரியவரும். பரிபாடலில் கூறப்பட்டு இருக்கிறது. சிலம்பில் ஒலிக்கிறது. மணிமேகலையில் வருகிறது.

தமிழ்நாடு என்னும் பெயர் கம்பராலும், சேக்கிழாராலும் கையாளப்பட்டுள்ளது. குமரகுருபரர் பாடினார். ஆகவே சமீபகாலத்தில்தான் சொல்லப்படுகிறது, பாரதியார் காலம் முதல்தான் சொல்லப்படுகிறது என்பது அறியாமையாகும். அந்தக் காலத்திலேயே தமிழ்ப் புலவர்கள் வழங்கிய பெயரை இப்பொழுது வைப்பதற்கு ஏனோ மனம் வரவில்லை. என்ன கஷ்ட நஷ்டம் வரப்போகிறது என்று கேட்கிறேன்?

இந்தப் பெயரை வைக்க வேண்டும் என்று தமிழ்ப்பெரியார் திரு.வி.க. சொல்லி இருக்கிறார். விருதுநகர் சங்கரலிங்கனார் இதற்காகவே உண்ணாவிரதம் இருந்து

உயிர்நீத்துள்ளார். ம.பொ.சி. போராட்டம் தொடங்கி இருக்கிறார். பம்மல் சம்பந்த முதலியார் சொல்லி இருக்கிறார். தமிழறிஞர்கள் பலரும் சொல்லி வருகிறார்கள். அந்தப் பெரியவர்களை மதித்தாவது பெயரை வைக்க வேண்டாமா?

வள்ளுவருக்குக் கோவில், பாரதியாருக்கு மணிமண்டபம், சேக்கிழாருக்குச் செம்மண் குடிசை, கம்பனுக்குக் கல்தூண் நிலைநாட்டிவிட்டால் மட்டும் தமிழ்நாடு வாழ்ந்து விடுமா? தமிழ்நாடு என்று பெயரை வைக்காமல் தமிழர்களை வாழ வைக்க முடியாது. நடுத்தெருவோ, கடைத்தெருவோ அத்தனை பேருக்கும் தமிழ்ப்பற்று ஏற்பட ஏன் அமைச்சர்கள் 'தமிழ்நாடு' என்று பெயரிட்டு ஏன் வழிகாட்டக் கூடாது?

உறுப்பினர் சின்னதுரையின் தீர்மானம் மட்டுமல்ல இது, மூன்றரைக் கோடி தமிழர்களின் தீர்மானம் இது. இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று நீங்கள் சொன்னால் நாடு தக்க பதிலைத் தக்க நேரத்தில் தரும். நாடு 1957இல் இருந்தபடி 1962 இல் இருக்காது. 1962இல் இருந்தபடி 1967இல் இருக்காது. அமைச்சர் சுப்பிரமணியமும் இருக்கிற இடத்தில் இருக்க முடியாது. தமிழ்நாடு என்று பெயர் வைத்து வாழ்க என்று சொல்வதன் மூலமாக அவரும் 100 வயது அல்ல, 120 வயது வரை வாழலாம். தமிழ்நாடு என்ற பெயரை வைத்து நீண்ட காலம் வாழுங்கள் என்று நான் வாழ்த்துகிறேன்.

ஒரு வேளை அவர்களே அந்தப் பெயரை வைத்து அதனால் திராவிட முன்னேற்றக் கழகம் சரிந்து போய்விடுமானாலும், அவர்களுக்கு ஏற்படுகிற நல்ல பெயரைக் கேட்டு முன்னேற்றக் கழக வளர்ச்சி குறைந்துவிடுமானாலும், கம்யூனிஸ்ட் கட்சிப் பிரச்சாரம் குறைந்துவிடுமானாலும், அதற்காகக்கூட நான் வருத்தப்பட மாட்டேன். இந்த நல்ல பெயரைத் தயவுசெய்து தேடிக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**(தமிழ்நாடு சட்டமன்றத்தில் 24.2.1961 பேசியது)**

# இனமும் மொழியும் நுட்பமானவை



## எம்.கல்யாணசுந்தரம்

"தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை நான் முழுமையாக ஆதரிக்கிறேன்.

1956ஆம் ஆண்டில் சட்டம் அமலுக்கு வந்து மொழி அடிப்படையிலேயே ராஜ்யங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கின்றன. இனமும், மொழியும்

மிக நுட்பமான பிரச்சினைகள். அது சம்பந்தமாக அதிருப்தி வளர நாம் இடம் கொடுக்கக் கூடாது.

இந்தியா ஒன்று, நாம் இந்தியர்கள் ஒன்று என்ற எண்ணம் பிரதானமாயிருக்க வேண்டுமென்ற எண்ணத்திலேயே தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஆதரிக்கிறேன். தமிழ்நாடு என்று பெயரிடுவது நியாயமான கோரிக்கை. தமிழ்நாடு என்று பெயரிடுவதால் வேறு எந்த ராஜ்யத்தோடும் அல்லது எந்த நாட்டோடும் ஒருவித சிக்கலும் ஏற்படுத்தாத பிரச்னை. அதேசமயத்தில் அது ஒற்றுமையை வளர்க்கும் பிரச்சினையுமாகும். ஆகவே இது அவசிய அவசரமுமாகும்.

1956ஆம் ஆண்டுக்குப் பிறகு இது நியாயமான கோரிக்கையாகும். தமிழ் பேசும் பெரும் பகுதி தமிழ்நாட்டில் வந்துவிட்டது. தமிழ்நாட்டின் எல்லை நிர்ணயிக்கப்பட்டு விட்டது. அப்படி தகராறுக்கு இடமில்லாமல் எல்லை நிர்ணயித்த பிற்பாடு தமிழ்நாடு என்று பெயரிடாமல் இருப்பதற்கு நியாயமான காரணம் எதுவும் காட்ட முடியாது.

தமிழ் இலக்கியத்தில் தமிழ்ராஜ்யம் இருந்ததில்லை என்று அமைச்சர் வெங்கட்ராமன் சொன்னதாகப் படித்தேன். தமிழ் ராஜ்யம், பல ராஜ்யங்களாக இருந்திருக்கலாம். குமரி முதல் காஷ்மீர் வரையில் ஒரே ஆட்சியின்கீழ் கொண்டு வந்தது பிரிட்டிஷ் ஆட்சிக்கு பிறகுதானேத் தவிர அதற்கு முன் பல பிரிவுகளாக இருந்தன. வெள்ளைக்காரன் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்ற கோஷம் வந்ததே, அதுதான் இந்தியா பூராவும் ஒன்று என்ற உணர்வை வளர்த்தது என்று கூறினால் இன்னும் பொருத்தமாக இருக்கும். விடுதலை அடைந்த நமக்குப் பல இலட்சியங்கள் உண்டு. விடுதலையோடு நமது இலட்சியங்கள் முடிந்துவிடவில்லை.

மொழி அடிப்படையில் ராஜ்யங்கள் அமையவேண்டும் என்ற இலட்சியம் பூர்த்தியாகிவிட்டது. அடுத்து தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும். தமிழ் மக்கள் இந்திய யூனியனில் தாங்களும் சுய அந்தஸ்தோடு இருப்பதற்கு மெட்ராஸ் என்று இருப்பது சரியல்ல.

**(தமிழ்நாடு சட்டமன்றத்தில் 24.02.1961 அன்று பேசியது)**

# இந்தியக் கலாச்சாரத்தின் மையம் தமிழ்நாடு



## பூபேஷ் குப்தா

வரலாறு, மொழி, கலாச்சார அடிப்படைகளுக்கு இசைவாகத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்னும் கருத்து மெட்ராஸ் மாகாணம் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள மக்களிடம் மிக ஆழமாக உள்ளது. இது சாதாரணப் பெயர் மாற்றம் அல்ல. கலாச்சாரம் மற்றும் பிற காரணங்களின் அடிப்படையில் முக்கியமானது ஆகும்.

அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது தெலுங்கானா அல்லது ஹைதராபாத் பகுதி தவிர்த்த ஆந்திரா மற்றும் கேரளாவில் மலபார்பகுதி ஆகியவை உள்ளிட்ட ஒரு கூட்டு மாநிலமாக மெட்ராஸ் இருந்தது. தமிழ்நாடும் அதில் இருந்தது. இந்த மூன்று முக்கியப் பகுதிகளும் ஆங்கில ஆட்சியின்கீழ் இன்றைய மெட்ராஸ் மாகாணமாக இருந்தது. அதன்பின் அரசியல் சட்டம் அமலுக்கு வந்ததும் அது மெட்ராஸ் என்பதாகவே அழைக்கப்பட்டது. இதற்கிடையில் மொழி அடிப்படையில் மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. தமிழ் பேசாத மக்களின் பகுதிகள் நீக்கப்பட்ட மாநிலமாக மெட்ராஸ் திருத்தி அமைக்கப்பட்டது. இருப்பினும் அதே பெயர் இன்னமும் நீடிக்கிறது. இதுதான் நமது நாட்டில் தமிழ் பேசும் மக்களின் நிலை.

மெட்ராஸ், என்பது தமிழ்நாடு என்று அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மாநிலப் பணிகள் எல்லாம் தமிழில்தான் நடைபெறுகிறது. தங்களது தாய்மொழியைக் கிட்டத்தட்ட ஆட்சிமொழியாக ஆக்கியிருக்கும் மாநிலங்களில் இதுவும் ஒன்று. அதில் அவர்கள் மிக உறுதியாக இருக்கிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாய்மொழியில் மட்டுமே உரைகள் ஆற்றப்படுகின்றன.

உலகத்திலேயே மிகவும் தொன்மையான மொழிகளில் ஒன்று தமிழ். உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள மக்களின் பேச்சுமொழியே வளர்ச்சியடையாதிருந்த பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் இருக்கிறது. உலகத்தின் பல மொழிகள் வளர்ச்சியடைவதற்கு முன்னமேயே சிறப்பான இலக்கியங்களைப் படைத்தது தமிழ். தமிழ் அத்தகு புகழ் படைத்தது. நமது நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கு அவ்வளவு சிறப்பாகவும் வளமாகவும் பங்களிப்புச் செய்த தமிழ் மக்களின் மேன்மை அத்தகையது. தமிழைப் பற்றிப் பேசும்போது நமக்கு மிகுந்த பாசம் உண்டாகிறது. ஏனெனில் நாம் இன்றைக்குப் பார்க்கிற இந்தியா, ஏராளமான மொழிக்கூறுகளும், குழுக்களும் அடங்கியதாக இருக்கிறது. அவர்களில் தமிழ்நாட்டு மக்கள் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகிறார்கள். அவர்களின் இலக்கியத்தில், அவர்களின் கலாச்சாரத்தில், அவர்களின் பாடல்களில், இசையில், அவர்களின் வாழ்க்கை முறையில், நமது மக்களின் கலாசாரம் என்று நாம் கருதுகின்றவற்றின் தொன்மைப் பெருமை மிளிர்கிறது. ஆகவே எல்லாவகையிலும் இந்தியக் கலாச்சாரத்தின் மையமாகத் தமிழ்நாடு இருக்கிறது.

எனவே, தமிழ்நாட்டில் பெரும்பாலோர் நல்ல ஆங்கில அறிவு உடையவர்களாக இருந்தும் மெட்ராஸ் என்கிற இப்போதைய தமிழ்நாடு மாநிலத்தின் ஆட்சிமொழியாகத் தமிழே இருக்கவேண்டும் என்று வலியுறுத்தும் முதன்மை மாநிலமாக இருக்கிறது. அவர்கள் அவ்வாறு வலியுறுத்துவது மிகவும் சிறந்த ஒன்றாகும்.

இந்த மெட்ராஸ் என்ற பெயர் ஆங்கிலேயர் ஆட்சியில் தரப்பட்டது ஆகும். தமிழ் மொழி வழக்கில் இந்தப் பெயர் இல்லை. ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலேயே கூட காங்கிரஸ்காரர்கள் அதைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்றுதான் அழைத்தார்கள்.

மாநில அளவில் தமிழ்நாடு என்றும், அகில இந்திய அளவில் மெட்ராஸ் என்றும் சொல்லலாம் என்கிறார்கள் சிலர். இதனை ஏற்கமுடியாது. தமிழ்நாடு என்பதன் மொழிபெயர்ப்பு மெட்ராஸ் அல்ல. மாநில மொழிகளில் வருகின்ற பெயர்கள் மற்றும் மாநிலம் சம்பந்தப்பட்ட விவகாரங்களை மத்திய ஆட்சிமொழியில் நேர்மையாக மொழிபெயர்க்க வேண்டும்.

நான் இந்தியக் குடிமகன். எனது வங்காள மக்களை எவ்வளவு நேசிக்கிறேனோ அவ்வளவு தமிழ்நாட்டு மக்களையும் நேசிக்கிறேன். ஒரு எளிய மக்கள் சேவகன் என்ற முறையில் நான் யாருக்காக நிற்கிறேனோ அந்த வங்காள மக்களுக்குப் பேசும் உரிமையை விடத் தமிழ்ப் பெருமக்களுக்காகப் பேசும் உரிமை குறைந்ததல்ல என்று எண்ணுகிறேன். ஒரு மொழிக்குழுவினருக்கும் மற்றொரு மொழிக்குழுவினருக்கும் இடையே இத்தகைய கூட்டுறவை வளர்க்கவே நான் விரும்புகிறேன்.

திமுக தனது பிரச்சாரத்திலும், தங்கள் எழுத்துக்களிலும் பத்திரிக்கைகளிலும் தமிழ்நாடு என்பதற்கு ஆதரவாக நிற்கிறார்கள். இப்பொழுது முப்பது இலட்சம் வாக்குகளை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். பெயர் மாற்றத்துக்கு ஆதரவான கட்சிகளுக்கு நாற்பது இலட்சம் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். அதிக சதவிகித தமிழ்நாட்டு மக்கள், தேர்தலின் போது பெயர் மாற்றத்தை விரும்பும் கட்சிகளோடுதான் தாங்கள் நிற்கிறோம் என்பதை அறிவித்திருக்கிறார்கள். வாக்காளர்களையும் தாண்டி மக்கள் என்று கணக்கெடுத்தால் எண்ணிக்கை இன்னும் அதிகமாகும். தமிழ்நாட்டு

மக்களின் உணர்வுகளையும் உள்ளக்கிடக்கையையும் நான் வெளிப்படுத்தி இருக்கிறேன். தமிழ்நாட்டு மக்கள் மேல் உள்ள மரியாதை காரணமாக, அவர்களோடு எனக்குள்ள உணர்வொற்றுமை காரணமாக நான் இதைச் செய்திருக்கிறேன்.

இந்தியாவின் வேறு எந்தப் பகுதி நாகரிகத்தை விடவும் தமிழ்நாட்டு நாகரீகம் பழைமையானது. தனது வளமான கலாச்சார பாரம்பரியத்துடனும் தனது கலாச்சார மேன்மையுடனும் நாடு முழுவதும் அது ஒளிபரப்பியது. தனக்குச் சொந்தமில்லாத பெயரை அது ஏன் தாங்கி நிற்க வேண்டும் என்று கேட்கிறேன். தன்னுடையது இல்லாத பெயரைத் தமிழ்நாடு ஏன் தாங்கி நிற்க வேண்டும் என்று கேட்கிறேன். அந்த மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். ஏனென்றால், அது உடனே இந்தியாவின் மிகப்பெரும், மிக வளமை வாய்ந்த மொழிகளில் ஒன்றான தமிழை நமக்கு நினைவுபடுத்தும். அதனால் தான் பெயர் மாற்றம் வேண்டும் என்கிறேன்.

**(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழ்நாடு என்று திருத்தம் செய்ய ஒரு மசோதாவை அறிமுகம் செய்து மேற்கு வங்க உறுப்பினர் பூபேஷ்குப்தா பேசியது – 1961)**

# தமிழ்நாடு பெயர் மாற்றம் தன்மானம் தொடர்புடையது



## ப.உ.சண்முகம்

“இதே அவையில் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன் நான் பேசியபோது, இந்த நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டச் சொன்னேன். பாரதியார் அவர்களின் பாடலைச் சொல்லி – பாரதியார் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிற தமிழ்நாடு என்ற பெயரை இந்த நாட்டிற்கு இடவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். இரண்டு ஆண்டுகள் பேசாமல் இருந்தால் அதைப் பற்றி யோசிக்கிறேன் என்று அமைச்சர்

சி.சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது. நாட்டிற்குப் பெயர் வைக்கின்ற நல்ல மனமும் நல்ல குணமும் பெற்றிருக்கிற நிதி அமைச்சர் அவர்கள் நாட்டிற்குப் பெயர் வைப்பார்கள் என்று நாங்களெல்லாம் எதிர்பார்த்தோம்.

நாட்டிற்குப் பெயர் வைக்கும் பரந்த மனம் இல்லாது நீலகிரியில் ஒரு வீட்டிற்குப் பெயர் வைத்தார்கள். உள்ளபடியே வருத்தப்படுகிறேன். பெயர் வைக்க பணம் தேவைப்படுமா என்று நண்பர் கோதண்டராமன் கேட்டார்கள். பணம் தேவையில்லை, மனம்தான் தேவை.

நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதால் என்ன கேடு வந்துவிடும் என்று புரியவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்கு இதைவிட அநீதி இருக்க முடியாது. அமைச்சரவையானது, நாட்டின் பெயரை மாற்றியேத் தீர வேண்டும். மாற்றவே முடியாது என்று அரசாங்கம் சொல்லுமானால் தமிழ்நாட்டு மக்களைப் பார்த்து அரசாங்கம் விடுத்த சவாலாகும் இது. தன்மானத்தைக் குத்திக் கெடுப்பதாகும். ஏன் பெயர் வைக்க மறுக்கிறீர்கள் என்பதற்குத் தக்க பதில் இதுவரை சொன்னது கிடையாது. இது அவசரப் பிரச்சினை இல்லை, சோறு போட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் நாட்டின் பெயரை மாற்றச் சொல்வது முக்கியப் பிரச்சினை அல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எப்போதும் பெயர் மாற்றம் செய்வதில்தான் போராட்டம் என்று கேலி செய்கிறார்களேத் தவிர இந்தக் கோரிக்கை மிகவும் நியாயமான கோரிக்கை என்று ஒத்துக்கொள்ள எதற்காகத் தயங்க வேண்டும்?

தமிழ்நாட்டில் தமிழ்நாட்டு மக்களுக்காகத் தமிழர்களால் நடத்தப்படும் தமிழர் ஆட்சி அவையிலும் இந்த நியாயம் வழங்கப்பட வேண்டாமா? ஜனநாயகத்தின் கடைசி மூச்சையாவது காப்பாற்ற வேண்டும். ஜனநாயகம் முன்னேற வேண்டும், எதிர்க்கட்சித் தீர்மானமாக இருந்தாலும் அதைப் பெருந்தன்மையோடு ஏற்று நாட்டின் பெயரை மாற்ற வேண்டும்.

**(தமிழ்நாடு சட்டமன்றத்தில் 24.02.1961 அன்று பேசியது)**

# உள்ளத்தை, இதயத்தை தொட்ட தீர்மானம்!



இராம.அரங்கண்ணல்

நான் இந்தத் தீர்மானம் கொண்டு வந்ததற்கு முதற் காரணம் இன்றைய தினம் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருக்கின்ற திருவாளர் காமராஜ் அவர்கள் செல்லுகின்ற இடங்களில் எல்லாம் நமது அருமையான தமிழில்தான் பேசி, வங்காளத்துச் சிக்கலானாலும் சரி, பஞ்சாப் சிக்கலானாலும் சரி, இவ்விதம் எந்த சிக்கல்கள் வந்தாலும் சரி, தமிழில் பேசித்தான் தீர்த்து வருகிறார் என்கின்ற பெருமை நமது தமிழ்நாட்டுக்குக்

கிடைத்திருக்கிறது. அந்தப் பெருமை கிடைத்திருக்கிற நேரத்தில் அவரும் நாமும் வாழ்ந்துகொண்டிருக்கிற இந்த அருமையான மண்ணுக்குத் தமிழ்நாடு என்ற பழைய பெயர் வரவேண்டுமென்ற ஆசையினாலேதான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தேன். அது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம் பாராளுமன்ற மேலவையில் இப்படி ஒரு தனிப்பட்ட தீர்மானம் திரு. பூபேஷ் குப்தா அவர்களால் கொண்டுவரப்பட்ட நேரத்தில் அதற்குப் பதிலளித்த உள்நாட்டு மந்திரி திரு. ஹஜர் நாவிஸ் அவர்கள் "It at any time, the State Government expressed their opinion in favour of any change in the name, it would receive due consideration of the Centre" என்று சொல்லியிருக்கின்றார்கள். இதே பதிலை 1961இல் சட்ட அமைச்சராக இருந்த திரு.ஏ.கே.சென் அவர்களும் மாநில அரசிடமிருந்து ஒரு கோரிக்கை வருமானால் அந்த கோரிக்கையை நாங்கள் கவனிக்கிறோம் என்று 1961லே பார்லிமெண்டிலே சொல்லியிருக்கிறார்கள்.

அதே பதிலை 1963லே மத்திய அமைச்சிலே இருக்கிற அமைச்சர் அளித்திருக்கிறார். இந்தக் கோரிக்கைக்கு மத்திய அரசில் இருக்கிறவர்களுக்கு எந்த விதமான ஆட்சேபமும் இல்லை. டில்லியில் இருக்கிற அரசுதான் இங்கே இருக்கிற நம்முடைய அமைச்சர்களுடைய வாயையும் கையையும் கட்டிப் போட்டிருக்கிறது என்ற எண்ணம் எங்களுக்கெல்லாம் இருந்தது. அப்படிப்பட்ட எண்ணம் தங்களுக்கு இல்லை என்று மத்திய அரசு சொன்ன பிறகு, அந்தப் பழி நமது அருமையான அமைச்சர்களுக்கு, தமிழ்நாட்டு அமைச்சர்களுக்கு வராமல் இருக்க வேண்டும், அதற்கு நாம் தூண்டு கோலாக இருப்போம் என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன்.

நான் தெளிவாகச் சொல்கிறேன். இதில் எந்த விதத்திலும் அரசியல் நோக்கம் கிடையாது. உங்களுடைய உள்ளத்தை, இருதயத்தை ஒரு தடவை நீங்கள் அத்தனை பேர்களும் தொடவேண்டும், தொட்டுப் பார்த்துக் கொண்டு இதற்கான முடிவை எடுங்கள்.

**(தமிழ்நாடு சட்டமன்றத்தில் 23.07.1964 அன்று பேசியது)**

# மாநிலங்களின் பெயர்கள் மொழியை வைத்தே!



## காரைக்குடி சா.கணேசன்

தமிழ்நாடு என்ற பெயர் உலகம் எல்லாம் வழங்கி வந்த பெயர். அதை வைப்பது உலகத்தினருக்குத் தெரியாது என்று சொல்கிற வாதம் ஊற்றுக்கு நிற்காத வாதம் என்று சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு என்று இந்த மாநில சர்க்கார் பெயர் ஏற்றுக் கொண்டிருப்பதற்குப் பொருள் என்ன? ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டிருக்கிற நாம் முழு அளவுக்கு ஏற்றுக்கொள்வது தவறு என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மொழி அடிப்படையில் தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் உலகத்தவர்களுக்குப் புரியாது என்கிற வாதம்தான் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. மொழிவழி ஆட்சி அமையவேண்டுமென்ற கொள்கை மகாத்மா காந்தி நமக்குக் கொடுத்த கொள்கைகளில் ஒன்று, மொழிவழியாக மாநிலம் அமைந்தால்தான் அந்த அந்த மொழியில் அந்த அந்த மாநில நிர்வாகம் செயல்பட்டு, நிர்வாக விஷயங்களை மக்களுக்கு எடுத்து நன்றாக உணர்த்த முடியும் என்பது அவரது கருத்து. அந்த அடிப்படையில்தான் மெட்ராஸ் மாநிலத்தில் கேரளா, ஆந்திரா, கன்னடப் பகுதியில் ஒரு பாகம். தமிழ்நாடு எல்லாம் இணைந்திருந்தபோதே, இந்த ராஜ்யத்தில் காங்கிரஸ் கமிட்டிகளை நிறுவியபோது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஆந்திர காங்கிரஸ் கமிட்டி, கர்நாடக காங்கிரஸ் கமிட்டி, கேரள காங்கிரஸ் கமிட்டி என்று மொழி அடிப்படையில் வகுத்தார்.

அதுமட்டுமல்ல. ஆதி நாளில் இருந்து பார்த்து வந்திருந்தால் கூட பல்வேறு மாநிலங்களுக்கும்கூட பஞ்சாப், குஜராத், மகாராஷ்டிரா, பெங்கால், ஒரிசா என்பதாக மொழியின் கொண்டே மாநிலங்களின் பெயர்கள் எல்லாம் அமைந்திருப்பதை மறந்துவிடக் கூடாது.

சேர சோழ பாண்டியர் காலத்தில் இந்நாட்டுக்கு வந்த மெகஸ்தனீஸ், டுஷியான், பாஹியான் முதலியவர்கள் இந்தப் பகுதி நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், டமில் லாண்டு, டமில் (Tamil Land, Tamil) என்று குறிப்புக்கள் எழுதி வைத்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிட முடியாது. சேர, சோழ, பாண்டியர்கள் என்று சொல்லவில்லை.

தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் வயிற்றுக்குச் சோறு கிடைத்துவிடுமா என்று கேட்டார்கள். எதைச் செய்தால்தான் வயிற்றுக்குச் சோறு கிடைத்துவிடும். உடம்பு முக்கியம். நெற்றியில் பொட்டு வைத்தால் என்ன, வைக்காவிட்டால் என்ன? உடம்பு சுத்தமாக இருந்தால் போதாதா? பொட்டு வைத்தால்தான் அழகு வருமா? ஏன் பொட்டு வைத்துக் கொள்கிறோம்? அந்த முறையில், தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் உணவு கிடைத்துவிடுமா என்று கேட்கிறார்கள். நான் கேட்கிறேன் - தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் உணவுப் பஞ்சம் வந்து விடுமா? தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் என்ன கெட்டுப் போகிறது?

இந்தத் தீர்மானம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவரால் கொண்டு வரப்பட்டது என்பதற்காக எதிர்ப்புச் சொல்லக்கூடாது.

**(23.07.1964)**

# தமிழ்நாடு என்ற பெயரில் என்ன குறை இருக்கிறது?



புலவர் கா.கோவிந்தன்

நாடு என்று சொல்லும்போது, இமயம் முதல் குமரி வரைக்கும் இருக்கின்ற நாட்டைத்தான் நாடு என்று சொல்லமுடியும் என்ற கருத்தையும் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தமிழ்நாட்டைப்பற்றி பாரதியார் அவர்கள் சொல்லும்போது,

**“செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே.**
என்று சொல்லிவிட்டு, மேலும் எல்லையைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில்,

**“நீலத்திரைக்கட லோரத்திலே - நின்று நித்தந் தவஞ் செய் குமரி யெல்லைவட மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ் மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு”**

என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு நிலப்பரப்பும் தமிழ்நாட்டைச் சேர்ந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. தமிழுக்கு வழிகாட்டியாக இருந்த தொல்காப்பியர் அவர்கள்.

“வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து.”

என்று வடவேங்கடத்தையும் குமரியையும் எல்லையாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப்பற்றி பாரதியார் பாடியிருப்பதையும், நாட்டைப்பற்றியும் சொல்லியிருக்கின்ற இலக்கியங்களைப் பெரியவர் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அதோடு மொழி நூல்களில் தமிழ்நாட்டைப்பற்றி தமிழ் மொழியைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியும் அவர்கள் படித்திருக்கவேண்டும்.

மதராஸ் என்ற சொல்லைத் தமிழில் பேசும்போது சொல்லுகிறோமேத் தவிர ஆங்கிலேயர்கள் மதராஸ் என்று சொல்வதில்லை, மட்ராஸ் என்றுதான் சொல்வார்கள். அதுபோல் தமிழ்நாட்டை ஆங்கிலேயர் “டமில் நாட்” என்பார்கள் என்பதற்காகத் தமிழ்நாடு என்ற நல்ல பெயர் இருக்கும்போது, அதை மட்ராஸ் என்று சொல்வது நமக்கு கேவலமாகத் தெரியவில்லையா என்று கேட்கிறேன்.

பழைய இலக்கியங்களைப் பார்த்தாலும் தமிழ்நாட்டைப்பற்றி பெருமையாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். இராமாயணத்தில்கூட தமிழ்நாட்டைப்பற்றி பெருமையாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. அகத்தியன்தான் இந்த நாட்டுக்குத் தமிழைக் கற்றுக்கொடுத்தான் என்று உறுப்பினர் சொன்னார்கள். அதே அகத்தியன் வட நாட்டிலிருந்து தென்னாட்டை நோக்கி வருகின்ற நேரத்தில்

**“விடைகொடு போவான் ஒன்றை வேண்டினன்; ஏரும்தேயம்**

**தொடைபெறு தமிழ்நாடு என்று சொல்லும்; அதே நாட்டின்**

**இடைபயில் மளித்தரெல்லாம் இன்தமிழ் ஆய்ந்து கேள்வி**

**உடையவர் என்ப; கேட்டார்க்கு உத்தரம் உரைத்தல் வேண்டும்** என்று சொல்லி, தமிழ்நாடு என்பதுதான் அப்போதும் இருந்தது என்று அப்போதே சொல்லியிருக்கிறார். அது அகத்தியனே ஆண்டவனிடமிருந்துதான் தமிழை மட்டுமல்ல, கொண்டான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதில் என்ன தவறு இருக்கிறது?

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் 23.07.1964 அன்று பேசியது)**

## எம்.பி.சுப்பிரமணியம்

ராஜ்ய புனரமைப்பு மசோதாவின் பேரில் ஏற்கனவே திட்டவட்டமாகக் கருத்துகளை தெரிவித்து இருக்கிறோம். அந்தக் கருத்து என்னவாயிற்று என்று இதுவரை தெரியவில்லை.

தேவிகுளம், பீர்மேடு தமிழ்நாட்டுக்கு வேண்டுமா வேண்டாமா என்ற அடிப்படையில் எப்பொழுது வேண்டுமானாலும் தேர்தலில் நின்று பார்க்கட்டும். தேவிகுளம், பீர்மேடு தமிழருக்குச் சேர்ந்தது என்று சொல்வது நியாயம்தான். ஏன் அதைக் கொடுக்கவில்லை.

அடிமை நாட்டிலே மொழி எவ்வளவு அவசியமோ, அதைவிட அவசியம் ஜனநாயகத்திலே மொழி.

தமிழனுடைய நாகரிகத்தைப் பற்றி உலகம் நன்கு அறிந்திருக்கிறது. சிறந்த நூல்களைக் கொண்ட மொழியாகிய தமிழைப் பேசும் மக்களுடைய நாட்டை தமிழ்நாடு என்று அழைப்பதற்கு ஏன் இவர்கள் தயங்க வேண்டும். ஏன் தமிழைப் போற்ற ஏன் தயங்க வேண்டும்? தமிழ்நாடு என்று பெயர் வைக்க ஏன் மறுக்க வேண்டும்? இது தமிழ் மக்களுடைய சாதாரண விருப்பம்.

(29.03.1956)

## எம்.பழனியாண்டி

அனைத்து உறுப்பினர்களும் தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும் என்று சொன்னார்கள். அதனை இந்த அரசு ஏற்க வேண்டும். நம்முடைய மொழியின் அடிப்படையில் நாட்டைப் பிரிக்க வேண்டும். மொழி வழி மாகாணம் வேண்டும். இது கட்சிப் பிரச்சினை அல்ல, இது இனப் பிரச்சினை.

(29.03.1956)

## என்.ரத்னா கவுண்டர்

இப்போது புரியும் நமது ராஜ்யத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயரிட வேண்டும். 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாடினார் பாரதியார். அவரை ஏற்றுக்கொள்ளும் இந்த அரசு, தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும். 'மதராஸ் மாகாணம்' என்று சொல்வதை நினைத்து மிக மிக வருந்துகிறேன். தமிழ்நாடு பூராவும் உள்ள தமிழர்களாகிய அந்த இனத்தின் பெயருக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தமிழர்களுக்கும் நாம் வந்த பரம்பரைக்கும் மதிப்பு கொடுங்கள்.

(29.3.1956)

## கே.ஆர்.நல்லசிவம்

தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய தமிழ்ப் பகுதிகள் எல்லாம் நம் ராஜ்யத்துடன் சேர்ந்து தமிழ்நாடு என்று பெயர் வைக்காவிட்டால் நம் நாட்டில் கிளர்ச்சி இருக்கத்தான் செய்யும்.

(29.3.1956)

## கே.டி.ராஜு

அக்டோபர் 1 முதல் இம்மாநிலம் தமிழ்நாடு என அழைக்கப்பட வேண்டும். இதில் நாம் ஏகோபித்த முடிவு எடுக்க வேண்டும்.

(29.3.1956)

## வி.கே.கோதண்டராமன்

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னாலேயே இந்தத் தமிழ்நாடு என்கிற பெயர் திட்டவட்டமாக வழக்கத்திலே வந்திருக்கிறது.

(24.02.1961)

## கே.ஆர்.நல்லசிவம்

இன்றைக்குத் தமிழ்நாடு என்று பெயரிடுவதற்கான அறிவிப்பு தமிழ்நாட்டுச் சர்க்காரிடமிருந்து வரும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அறிவிப்பு வந்தால் தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். வெள்ளைக்காரர்கள் டாஞ்சூர், ட்ரிச்சி, ட்யூட்டிக்கோரின் என்றதை நாம் மாற்றியது போல மெட்ராஸ் என்பதைத் தமிழ்நாடு என மாற்ற வேண்டும்.

(24.02.1961)

## டி.எஸ்.ஆதிமூலம்

தமிழ்நாடு என்று பெயர் வைப்பது தமிழ்நாட்டுக்குச் செய்யும் பெரிய காரியமாகும்.

(24.02.1961)

## டி.எல்.சசிவர்ணம் தேவர்

தமிழ்நாடு பெயர் மாற்றத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். சமீபத்தில் இங்கே வந்த ராணியாருக்கு திருக்குறளைப் பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள். திருக்குறள் எந்த நாட்டைச் சேர்ந்தது? அது மெட்ராஸ் நாட்டைச் சேர்ந்தது என்று சொன்னால் அதைவிடக் கேவலம் வேறு இருக்க முடியுமா? திருக்குறள் பிறந்தது தமிழ்நாட்டிலே என்றுதான் சொல்ல முடியுமே தவிர மெட்ராஸிலே பிறந்தது என்று சொல்வது நலமாயிருக்குமா? எந்த வகையிலாவது உங்களது ஆட்சிக் காலத்திலேயே தமிழ்நாடு என்று பெயர் வையுங்கள்.

(24.02.1961)

## கே.சட்டநாத கரையாளர்

தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவது மிக நீண்டகாலமாக உள்ள பிரச்சினை ஆகும். 1956க்கு பிறகாவது இந்தப் பெயரைச் சூட்டி இருக்க வேண்டும். தமிழனுடைய தன்மான உணர்ச்சியைப் பாதிக்கக்கூடிய எந்தக் காரியமும் செய்யக் கூடாது. தமிழினியைத் தன்மான உணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டிருப்பது தமிழகம், தமிழ்நாடு என்ற பெயர் ஆகும்.

(24.02.1961)

## நா.இராசாங்கம்

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு மொழி உண்டு. மொழி அடிப்படையில்தான் பெயரை வைக்கிறார்கள். இது தமிழர்கள் வாழும் நாடு. ஆகவே தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்கிறோம். இப்படி ஒரு அரசியல் சூழல் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. இந்த நாடு செய்த துர்பாக்கியம் இது.

(23.07.1964)

## எம்.வி.கரிவேங்கடம்

தமிழ்நாடு என்று பெயர் மாற்ற இந்த மன்றத்தில் ஆட்சேபனை இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது தமிழ்த்தாய் கண்ணீர் வடிப்பாள். நாம் தமிழ்நாட்டில் பிறந்தோம். வளர்ந்து வருகிறோம். ஆகவே நிச்சயமாக நம் நாட்டை தமிழ்நாடு என்று அழைப்பதே நமக்கு உகந்தது.

(23.07.1964)

## வி.கே.ராமசாமி முதலியார் (24.2.1961)

தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை ஆளும் கட்சியில் உள்ளவர்கள் அனைவரும் ஏற்க வேண்டும்.

(24.02.1961)



Imperial Gazetteer Atlas of India
Plate 43
MADRAS
(SOUTHERN SECTION)
WITH
MYSORE, COORG &
MADRAS STATES
Scale 1:4,000,000 or 63.1 Miles to an Inch
English Miles
Indian States coloured yellow
Railways opened and in construction
Canals
Longitude East 78 of Greenwich
ARABIAN SEA
BAY OF BENGAL
GULF OF MANNAR
PALK STRAIT
CEYLON
MYSORE
MADRAS
COORG

# சென்னை மாகாணம் முதல்
# தமிழ்நாடு வரை

# பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய தமிழ்நாடு!

தந்தை பெரியாரை அறிந்தவர்கள் அறிவார்கள் – அவர் எப்போதும் எதனையும் உரத்த குரலிலும், உரிமையோடும்தான் கேட்பாரேயன்றி, யாரிடத்திலும் எதனையும் கெஞ்சிக் கேட்டதில்லை. ஆனால் அவர் அப்படிக் கேட்ட ஒரு தருணம் வரலாற்றில் உண்டு! தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுங்கள் என்ற கோரிக்கையைப் பெரியார் மிகவும் வேண்டிக் கேட்டுக்கொண்டார். அவர் வரிகளிலேயே அதனைப் பார்க்கலாம்.

“ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்துபோன பின்பு கூட, மீதியுள்ள, யாருடைய ஆட்சேபனைக்கும் இடமில்லாத தமிழகத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் கூட இருக்கக் கூடாதென்று சூழ்ச்சி செய்து, இப்போது அந்தப் பெயரையே மறைத்து, ஒழித்துப் பிரிவினையில் ‘சென்னை நாடு’ என்று பெயர் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும். எந்தத் தமிழனும், அவன் எப்படிப்பட்ட தமிழனாலும், இந்த அக்கிரமத்தைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக் கொண்டிருந்தாலும், என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியாது என்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இதைத் திருத்தத் தமிழ்நாட்டு மந்திரிகளையும், சென்னை, டில்லி, சட்டசபை கீழ், மேல் அங்கத்தினர்களையும் மிக மிக வணக்கத்தோடு, இறைஞ்சி வேண்டிக்கொள்கிறேன்”.

**(விடுதலை – 11.10.1955)**



# பேராசிரியர் சுப. வீரபாண்டியன்

மொழிவாரி மாநிலங்கள் பிரிவதற்கு முன், ஆந்திர மாநிலம் மட்டும் உருவாகி இருந்த காலகட்டத்தில் பெரியார் விடுத்த அறிக்கை இது!

எனினும் இதற்கு முன்பே, பெயர் மாற்றக் கோரிக்கை, சட்டமன்றத்திலும், பொதுவெளிகளிலும் எழுந்துவிட்டது. சிலம்புச் செல்வர் ம.பொ.சி., 1953ஆம் ஆண்டு, சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தபோது, ஆந்திர மாநிலச் சட்ட முன்வடிவின் மீது பேசுகையில், 'மெட்ராஸ் ஸ்டேட்' என்னும் பெயரைத் தமிழ்நாடு என்று மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையைத் தன் உரையில் முன்வைத்தார்.

தமிழரசு கட்சி, பிளவுபடாத கம்யூனிஸ்ட் கட்சி, பிரஜா சோசலிஸ்ட் கட்சி ஆகியன இதே கோரிக்கைக்காக, 20.02.1956 அன்று முழுநாள் கடை அடைப்புப் போராட்டம் நடத்தினர். இப்போராட்டம் நடத்தக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டு, தண்டோரா போடப்பட்டபோது, அரசின் போக்கைக் கண்டித்துத் தி.மு.க. ஆர்ப்பாட்டம் நடத்தியது.

சட்டமன்றத்தில், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், ப.ஜீவானந்தம் அழுத்தமாகத் தங்கள் கட்சியின் கருத்தைப் பதிவு செய்தார். "தமிழ் என்பது ஒரு கட்சி சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல. ஆகவே, தமிழ்நாடு என்று சொல்லும்போது அதில் ஒரு குறிப்பிட்ட கட்சிதான் இருக்க வேண்டும் என்பதல்ல. தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியும் இருக்கலாம். கம்யூனிஸ்ட் கட்சியும் இருக்கலாம். வேறு எந்தக் கட்சி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆகவே இந்த சாம்ராஜ்யத்தைத் தமிழ்நாடு என்றுதான் சொல்ல வேண்டும்" என்று 1956 மார்ச் 28 அன்று அவர் பேசினார்.

அன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் ஏ.வேலு, ஏ.ரத்தினம், கே.விநாயகம், கே.டி.ராஜு ஆகியோரும் தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். மாறாக, பெயரை மாற்றினால் உலகிற்கு அது தெரியாமல் போய்விடும் எனும் ஒரே வாதத்தைத்தான் ஆளும்கட்சி வைத்தது.

ஆளும் கட்சியின் வாதத்திற்குச் சரியான மறுமொழியை, திமுக ஆதரவோடு 1952 தேர்தலில் சுயேட்சையாக வெற்றி பெற்றிருந்த உறுப்பினர் ஏ.கோவிந்தசாமி எடுத்து வைத்தார். "பெயரை மாற்றினால், உலகத்துக்குத் தெரியாது, தமிழ்நாடு என்றால், உலகத்துக்குத் தெரியாது என்று சொல்கின்றீர்கள். மூவேந்தர் ஆண்டது உலகத்துக்குத் தெரியாதா? தமிழ்நாட்டின் பெயரால்தான் அவர்கள் ஆண்டார்கள். இந்தியாவுக்கு பாரத் என்று பெயர் வைக்கவில்லையா? அது எந்த வெள்ளைக்காரனுக்குத் தெரியும்? இந்தியாவுக்கு பாரத் என்று பெயர் வைக்கும்போது, சென்னைக்கு ஏன் தமிழ்நாடு என்று பெயர் வைக்கக்கூடாது?" என்று ஏ.கோவிந்தசாமி கேட்டார்.



தந்தை பெரியார்

எல்லோருடைய வாதங்களுக்கும் அன்றைய சட்டமன்றம் இடம் கொடுத்தது என்றாலும், பெயர் மாற்றத் தீர்மானம் அவையில் நிறைவேறவில்லை.

அந்தச் சூழலில்தான், தமிழ்நாட்டில் ஒரு பெரிய பரபரப்பு ஏற்பட்டது. விருதுநகரைச் சேர்ந்த காங்கிரஸ்காரரான சங்கரலிங்கனார், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, 1956 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் நாள், சாகும்வரையிலான பட்டினிப்போர் ஒன்றைத் தொடங்கினார். அவர் கோரிக்கைகளில் முதன்மையானது, தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்பது! தொடங்கும்போது, அப்போராட்டம் சாதாரணமாகத்தான் பார்க்கப்பட்டது. நாளாக ஆக, தமிழகத்தில் ஒரு பெரிய பரபரப்பை அது உருவாக்கியது. தமிழ்நாடே விருதுநகரைப் பார்க்கத் தொடங்கியது. அப்போராட்டத்திற்கு மக்கள் ஆதரவும் பெருகியது.

பட்டினிப்போர் நடத்திய சங்கரலிங்கனாரை, தி.மு.கழகத் தலைவர் அறிஞர் அண்ணா நேரில் சந்தித்தார். உடல்நலம் கருதிப் போராட்டத்தை நிறுத்திக்கொள்ளுமாறு வேண்டினார். ஆனால் சங்கரலிங்கனார் அதற்கு உடன்படவில்லை. “என் கோரிக்கையை நிறைவேற்றித்தரும் கடமையை உங்களிடம் ஒப்படைக்கிறேன்” என்று சங்கரலிங்கனார் கூறினார். அன்று அவர் ஒப்படைத்த பொறுப்பை, 11 ஆண்டுகளுக்குப் பின் அண்ணா நிறைவேற்றினார் என்பது ஓர் அரிய வரலாறு!

சங்கரலிங்கனாரின் உடல்நிலை நாளுக்கு நாள் நலிவடைந்தது. பட்டினிப்போர் தொடங்கி 60 நாட்களுக்குப் பிறகு, அவர் பிழைப்பார் என்று தோன்றவில்லை.

காங்கிரஸ்காரராகப் பட்டினிப்போர் தொடங்கிய அவர், அன்று எதிர்க்கட்சியாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியிடம் நம்பிக்கை கொள்ளலானார். 1956 செப்டம்பர் 26ஆம் நாள், “கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்களுக்கு” என்று தலைப்பிட்டு, அக்கட்சிக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், தான் இறந்த பிறகுத் தன் உடலைக் கம்யூனிஸ்ட் கட்சியிடம் கொடுத்துவிட வேண்டும் என்று தன் உறவினர்களுக்குச் சொல்லியிருந்தார்.

73 நாள்கள் நடைபெற்ற அந்தப் போராட்டம் 13.10.1956 அன்று முடிவுக்கு வந்தது. ஆம் அன்று அவர் இறந்துபோய்விட்டார். அவர் உடல் மறைந்தது. அவர் புகழ் நிலைத்தது!

ஓர் உயிர்ப்பலிக்குப் பிறகும் தமிழ்நாடு பெயர் மாற்றம் நடைபெறவில்லை.

1957இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில், முதன்முதலாகத் தி.மு.கழகம் பங்கேற்று 15 இடங்களில் வெற்றியும் பெற்றது. தேர்தல் அறிக்கையில், தேர்தல் மேடைகளில் எல்லாம் தமிழ்நாடு பெயர்மாற்றம் வலியுறுத்தப்பட்டது.

இறுதியாக ஒருநாள் தமிழ்நாடு சட்டமன்றம் அதனை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டது. அந்த நாள் 1961 பிப்ரவரி 24. பிரஜா சோசலிஸ்ட்



ஜீவா

கட்சியைச் சேர்ந்த பி.எஸ். சின்னத்துரை அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார். வழிமொழிந்து பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தங்கள் கருத்தை எடுத்து வைத்தனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய பேராசிரியர் க. அன்பழகன், “(பெயர் மாற்ற விவகாரத்தில்) இன்றைய ஆட்சியாளர்கள் நடந்துகொள்வதைப் பார்த்தால், உண்மையில், எதிர்காலத்தில் இந்த ஆட்சியாளர்கள் இந்த ஆட்சி பீடத்தில் இருப்பார்களா என்ற சந்தேகம் எனக்குள் எழுகிறது” என்று கூறினார். ப.உ.சண்முகமும், “அடுத்த தேர்தலில் நாட்டு மக்கள் தங்கள் தீர்ப்பைச் சொல்வதற்கு முன், அமைச்சர்கள், எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வது நல்லது” என்று எச்சரிக்கை விடுத்தார்.

தோழர் எம்.கல்யாணசுந்தரம், வி.கே.கோதண்டராமன் ஆகிய உறுப்பினர்களும் தீர்மானத்தை வலியுறுத்திப் பேசினர்.

இறுதியில் பதில் அளித்து நிறைவாகப் பேசிய நிதி அமைச்சர் சி.சுப்ரமணியம், தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளாத போதும், ஒரு புதிய அறிவிப்பை வெளியிட்டார். “காங்கிரஸ் தமிழ் உணர்வுக்கு எதிரானது இல்லை. தமிழுக்கு முதலிடம் என்பது மற்ற மொழி பேசுபவர்களுக்கு எதிராக அமைந்துவிடக் கூடாது. இளைஞர்களுக்கு இதன் மூலம் மொழி வெறியை ஏற்படுத்தக் கூடாது. உலக



கே.விநாயகம்



பேரறிஞர் அண்ணா

நாடுகளுக்கு மதராஸ் என்றால்தான் எளிதில் புரியும், தெரியும். நாட்டில் தொழில் வளம் பெறுக வேண்டுமானால், அனைத்து மொழி பேசுபவர்களுக்கும் இடம் தர வேண்டும்” என்ற உணர்வில் காங்கிரஸ் அரசு செயல்படுவதாகத் தங்கள் நிலையை வெளிப்படுத்தினார்.

எனினும், இனிமேல் ஆங்கிலத்தில் எழுதும்போது ‘மதராஸ் ஸ்டேட்’ என்றும் தமிழில் எழுதும்போது ‘தமிழ்நாடு அரசு’ என்றும் அரசுக் குறிப்புகளில் எழுதப்படும் என்றும் கூறினார்.

இது ஒரு மாற்றம்தான் என்றாலும், முழுமையாகச் சரியானது இல்லை. இருந்தபோதிலும், நிதி அமைச்சரின் இந்த விளக்கத்தை ஏற்று, பி.எஸ். சின்னத்துரை தன் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

1962 தேர்தலில் தி.மு.க. கூடுதல் இடங்களைப் பெற்றது என்றாலும், காங்கிரஸ்தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தது. அதனையொட்டி இந்தப் பிரச்சினையும் மறுபடி எழுந்தது.

இம்முறை நாடாளுமன்றத்திலேயே இச்சிக்கல் எழுப்பப்பட்டது. 1963 செப்டம்பர் 24 அன்று நாடாளுமன்றத்தில், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பூபேஷ் குப்தா தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அதனை முழுமையாக ஏற்று அன்று அறிஞர் அண்ணா அவையில் ஆற்றிய உரை வரலாற்றுப் புகழ் பெற்றது.



சி.சுப்பிரமணியம்

பரிபாடல், பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பழந்தமிழ் நூல்களில் இருந்தெல்லாம் மேற்கோள்களை எடுத்துக் காட்டி அண்ணா அன்று உரையாற்றினார். தமிழ்நாடு என்று பெயர் வைப்பதால் என்ன லாபம் எனச் சிலர் கேட்கின்றனர். என்ன நட்டம் என்பதை அவர்கள் எடுத்துச் சொன்னால் நல்லது என்றார்.



எம்.கல்யாணசுந்தரம்

இடையிடையே தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டி.எஸ். பட்டாபிராமன் குறுக்கிட்டபோது, "நாம் இங்குக் காங்கிரஸ்காரராகவும், தி.மு.க. காரராகவும் மோதிக் கொள்ள வேண்டாம். தமிழர்களாக நின்று பேசுவோம் என்றார்".

இறுதியாக, "Pl call my state Tamizhnaadu" என்ற முழக்கம் நாடாளுமன்ற மாநிலங்களவையில் எதிரொலிக்க, அண்ணா தன் உரையை நிறைவு செய்தார்.

ஆனால் அப்போதும் நம் நாட்டின் பெயர் மாற்றப்படவில்லை. காலம் அண்ணாவின் வரவுக்காய்க் காத்திருந்தது.

1967 மார்ச் மாதம் தமிழ்நாட்டின் முதலமைச்சராய்ப் பதவியேற்ற அறிஞர் அண்ணா, நான்கே மாதங்களில் பெயர் மாற்றத் திருத்தத் தீர்மானத்தை அரசின் சார்பில் முன்மொழிந்தார்.

**அந்த நாள் 1967 ஜூலை 18**

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பி.ஜி. கருத்திருமன் கூட பெரிதாக எதிர்ப்பு எதனையும் காட்டவில்லை. தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது.

அன்றைய நாள் அண்ணா மனம் நெகிழ்ந்து உரையாற்றினார். "இந்த அவையிலே இன்றைய தினம் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும், நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாள் இது ஆகும்" என்றார்.

மேலும் "இன்று கழகத்திற்கு வெற்றியல்ல, தமிழரசு கழகத்திற்கு வெற்றியல்ல, மற்ற கட்சிகளுக்கு வெற்றியல்ல. இது தமிழுக்கு வெற்றி! தமிழருக்கு வெற்றி! தமிழ் வரலாற்றுக்கு வெற்றி! தமிழ்நாட்டுக்கு வெற்றி என்ற விதத்தில் அனைவருமே இந்த வெற்றியில் பங்கு கொள்ள வேண்டும்" என்று மனம் மகிழ்ந்து கூறினார்.

இறுதியாக, "அவருடைய (சங்கரலிங்கனார்) எண்ணங்கள் இன்றைய தினம் ஈடேறத்தக்க நிலை கிடைத்திருப்பதும், அந்த நிலையை உருவாக்குவதில் நாம் அனைவரும் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதும் நமக்கெல்லாம் நம் வாழ்நாள் முழுவதும் பெருமைப்படுத்தத்



ஏ.கோவிந்தசாமி



தக்க காரியமாகும். நம்முடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் நெடுங்காலத்திற்குப் பிறகு நம்முடைய இல்லங்களிலே அமர்ந்து பேசிக்கொள்கின்ற நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள இருக்கிறார்கள். என்னுடைய பாட்டனார் காலத்திலேதான் நம்முடைய நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயரிடப்பட்டது'' என்று சொல்லித் தன் உரையை நிறைவு செய்கின்றார்.

பிறகு ''தமிழ்நாடு'' என்று அண்ணா குரல் எழுப்ப, உறுப்பினர்கள் அனைவரும் ''வாழ்க'' என்று முழக்கமிடுகின்றனர்.

தமிழக வரலாற்றில் உணர்ச்சி பொங்க நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானம், குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற ஒன்றரை ஆண்டுகள் ஆகி, 1969ஆம் ஆண்டு தமிழர் திருநாளான பொங்கல் அன்றுதான் நடைமுறைக்கு வந்தது என்றாலும், தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள் ஜூலை 18.

அறிஞர் அண்ணா சொன்னதைப்போல, தலைமுறை தலைமுறையாகக் கொண்டாட வேண்டிய அந்த நாளை, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ''தமிழ்நாடு நாள்'' என்று அறிவித்து, அறிஞர் அண்ணாவையும், தமிழ்நாட்டையும் பெருமைப்படுத்தி உள்ளார்.

அருஞ்செயல் செய்த முதலமைச்சரையும் தமிழ்நாடு காலமெல்லாம் கொண்டாடும்!

# மொழிக்கு உயிரூட்டிய கனல் சங்கரலிங்கனார்!

உலகில் மொழி காக்க உயிர்நீத்தவர்கள் தமிழர்கள். மொழியை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிலப்பரப்புக்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்ட முதன் முதலாக உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தவர் சங்கரலிங்கனார். ஜூலை 18 என்ற அடையாள நாளை பேரறிஞர் அண்ணா உருவாக்க முதன்மைக் காரணங்களுள் ஒருவராக இருந்தவர் சங்கரலிங்கனார்.

அந்த தியாகத்தின் பின்னால் பொதிந்துள்ள வரலாற்று உண்மைகளைத் தாய் மொழி பற்றிய அறியாமையில் உழல்வோர் அவசியம் வாசிக்க வேண்டும்.

மனித உணர்வுகளின் தொடர்ச்சிதான் மொழி என்கிறார் ரூஸோ. மொழியின்றி மனிதன் வாழ்ந்த காலமுண்டு. உழைப்புதான் மொழியை உருவாக்கியது. வியக்கத்தக்க வகையில் இந்த உலகை மாற்றியமைத்த மனிதர்களின் சமூக உற்பத்தியோடு எந்த மொழி பிணைக்கப்பட்டிருக்கிறதோ அந்த மொழி இன்றளவும் ஜீவித்திருக்கிறது. உற்பத்தியோடு தொடர்பில்லாத மொழிகள் அழிந்து போயின. அழிந்து கொண்டிருக்கின்றன.

மொழி அழியாமல் இருக்க உணர்ச்சி அவசியம். உணர்ச்சி என்பது மொழி உணர்வு மட்டுமே அல்ல உழைக்கும் உணர்வும் கூட.

ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும் மக்கள் தங்கள் மொழியை உயிர்ப்பித்துக்கொள்ளும் புரட்சிகரமான நடவடிக்கையைச் சாதித்துக் காட்டியவர்கள் தமிழ் மக்கள். மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ் மொழியின் வரலாற்றில் அது காலந்தோறும் தன்னை புதுப்பித்து வந்திருக்கிறது. வேதகால பண்பாட்டுத் தாக்குதலுக்குப் பின்னர் தமிழ் மிகப்பெரிய சரிவையும் அழிவையும் சந்தித்தது.

இந்திய ஒன்றியத்தில் தன்னை சீர்படுத்தி, புதுப்பித்துக் கொண்டு இன்று நவீனத் தமிழாக உயிர்த்து நிற்கிறது. மொழியைக் காக்கும் புரட்சிகரமான நடவடிக்கையில் தங்கள் இன்னுயிரை ஈந்தவர்கள் தமிழர்கள்.

அதன் முதல் புள்ளியே தியாகி சங்கரலிங்கனார். மொழிக்காக பொட்டி



# டி.அருள் எழிலன்

ஸ்ரீராமுலுவும், சங்கரலிங்கனாரும் உண்ணா நோன்பு இருந்து உயிர்துறக்கக் காரணமாக இருந்தது வரலாற்றுப் போக்கில் ஆள்வோருக்கு இருந்த மொழி பற்றிய அறியாமையே. இந்திய ஒன்றியத்தில் மக்கள் பேசிய மொழிகளைப் பிரி வினைக் கருவிகளாகவே அன்று அதிகாரிகளும் ஆட்சியாளர்களும் கருதினார்கள். நீண்ட வரலாற்றில் தாங்கள் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தே சங்கரலிங்கனார் தன் இன்னுயிரைத் தமிழ் மொழிக்காக ஈந்தார்.

இதில் மொழிக்காகத் தன்னுயிர் ஈந்த சங்கரலிங்கனாரில் முக்கியத்துவம் எது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம். காலத்தாலும் சூழலாலும் தமிழ் மொழியும் தமிழரும் எப்போதும் தனித்த பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருக்கிறார்கள். இதை அன்றே உணர்ந்த காந்தியடிகள் இந்தியை ஒரு போதும் சென்னை மாகாண மக்கள் குறிப்பாகத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற உறுதியான நிலைப்பாட்டோடு இருந்தார். சென்னை தியாகராயர் நகரில் உள்ள இந்தி பிரச்சார சபா இன்றளவும் தட்ஷணபிரதேசம் என்ற அடையாளத்தைத் தாங்கியே நிற்கிறது.

போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர்கள், பின்னர் ஆங்கிலேயர் என அடுத்தடுத்து வந்தவர்களுள் ஆங்கிலேயர் மட்டுமே நம்மை முழுமையாகப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நிர்வாக அலகிற்குள் ஆட்சி செய்தவர்கள். அவர்கள் அவர்களே நூற்றுக்கணக்கான சமஸ்தானங்களை இந்தியத் துணைக்கண்டம் என வரையறுத்தனர். இந்தியத் துணைக்கண்டத்தின் மாநில எல்லைகளை வரையறுப்பது மொழி அடிப்படையிலா, மத அடிப்படையிலா என்பது பற்றி எல்லாம் அப்போது விவாதங்கள் நடந்தது.

மொழிவாரி உணர்ச்சிகள் அப்போது துணைக்கண்டத்து மக்களிடம் பரவியிருந்தது.

1919ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் நேரு சமர்ப்பித்த குறிப்பில் “பேசப்படும் மொழிகள் அடிப்படையில் மாநிலங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். இப்போது இருக்கும் எல்லை வகுப்புகள் எந்தவித அடிப்படையும் அற்றவை. நாடு சுதந்திரம் அடைந்து ஒரு அரசு அமையும் என்றால் இப்போதிருக்கும் நிலைமையை வைத்து ஆட்சி செய்ய முடியாது. எனவே ஒரே மொழியைப் பேசுகின்ற மக்களின் விருப்பங்களுக்கு ஏற்ப மாகாணங்கள் உருவாக்கப்பட வேண்டும்” என்றார்.

ஆனால், அப்போதிருந்த ஆளும் கட்சித் தலைவர்களில் பெரும்பான்மையோருக்கு மதம் பற்றிய அறிதல் முறை இருந்த அளவுக்கு மொழி பற்றிய புரிதல் இருக்கவில்லை. மொழிவாரி மாநிலங்கள் அமைக்கத் தேவையில்லை; அப்படி அமைந்தால் இந்தியா சிதறி விடும் என்பதுதான் அவர்களின் எண்ணமாக இருந்தது. இந்தக் கருத்து காங்கிரஸ் மாநாடுகளில் எதிரொலித்தும் வந்தது.

மாண்டேகு செமஸ்போர்ட் அறிக்கையின்



சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் இருந்தபோது...



சங்கரலிங்கனார்

246 –ஆவது பக்கத்தில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. 1919 காலப்பகுதியில் வெள்ளையர் ஆட்சியில் நடைமுறையில் இருந்த சட்டத்தின்படி 52 ஏ பிரிவின்படி இந்திய நாட்டின் வைஸ்ராய்க்கு மொழி வழி மாநிலங்கள் அமைப்பது தொடர்பான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

1870 ஆம் ஆண்டு ஜார்ஜ் செங்கனி என்பவர் மொழி அடிப்படையில் ஒரிசா மாநிலம் பிரிக்கப்பட வேண்டும் என்றார். அவர் கருத்தின் அடிப்படையில் ஒரிய மொழி பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரிசா மாநிலம் உருவானது. இது மொழி ரீதியாக மாநிலங்கள் பிரிய முடியும் என்ற கருத்தை அரசியல் அரங்கில் ஆழமாக விதைத்தது.

1902ஆம் ஆண்ட் லார்ட் கர்சன் பிரபு மாநிலங்களின் எல்லைகள் நிர்வாக அமைப்புகளை மாற்றியமைப்பது அவசியமும் அவசரமும் ஆகும் என்றார்.

மொழிவாரி மாநிலங்கள் என்ற கருத்தை முதலில் ஏற்றுக்கொள்ளாத காங்கிரஸ் கட்சி 1917ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் என்ற கருத்தைக் கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டது. 1921 செப்டம்பர் மாதம் டெல்லி சட்டமன்றத்தில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி வைத்தது. 1936ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் நாள் இந்திய வரலாற்றிலேயே சுதந்திரத்துக்கு முன்பு உருவான முதல் மொழிவாரி மாநிலமாக “ஒரிசா” அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

ஒரிசா உருவாக்கமும், காங்கிரஸ் மகாசபைக்குள் ஏற்பட்ட கொள்கை மாற்றமும், டெல்லி சட்டமன்ற தீர்மானமும் சென்னை மாகாணத்திற்குள் கொழுந்துவிட்ட மொழிவாரி உணர்வுக்குத் தூண்டுகோலாக இருந்தது.

1922ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் வசித்த தெலுங்கு பேசும் மக்கள் விசாலாந்திரம் கேட்டு போராட்டங்களைத் துவங்கினார்கள். அதற்கான மாநாடுகளையும் நடத்தினார்கள்.

இந்த எண்ணங்கள் மக்களிடம் வேர்விட்டாலும் திராவிட இயக்கம் அரசியல் சமூக விடுதலைக்காகவும், உரிமைகளுக்காகவும் ஆற்றிய பணியின் விளைவாக மொழிவாரி உணர்ச்சிகள் பரவலாக அதிகரித்துச் சென்றன.

1950 ஜனவரி 26ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த போது தனிமாநிலக் கோரிக்கைகள் பற்றி அதில் எதுவும் இல்லை. அது மக்களை ஏமாற்றியது.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பே காங்கிரஸ் கமிட்டி மொழிவாரி மாநிலங்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொண்ட போதும் சுதந்திர இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சியமைத்த


பிரதமர் நேரு - இராஜாஜி

பின்னர் மொழிவாரி மாநிலம் என்ற கருத்தை கண்டுகொள்ளாமல் விட்டதோடு, மொழிவாரி மாநிலங்கள் இந்தியாவைச் சிதைத்துவிடும் என்ற கருத்தையும் உருவாக்கிப் பரப்பத் துவங்கினார்கள்.

அதற்குத் தோதாக நீதிபதி தார் கமிஷனின் அறிக்கையும் அமைந்தது. 1948இல் நீதிபதி தார் தலைமையில் மாநிலங்கள் சீரமைப்பு பற்றி ஆய்வு செய்ய கமிஷன் ஒன்றை உருவாக்கியது. திருவிதாங்கூர், கொச்சி சமஸ்தானத்திற்கு இந்த குழு சென்றபோது திருவிதாங்கூர், கொச்சி முதல்வராக இருந்த பட்டம் தாணுப்பிள்ளை இக்குழுவைச் சந்திக்க மறுத்து விட்டார்.

சென்னை மாகாணத்தில் தமிழ்நாடு கேட்டுப் போராடிக்கொண்டிருந்த தந்தை பெரியாரும், திராவிடர் கழகமும் தார் கமிஷனை புறக்கணித்து தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

இறுதியில் அரசியல் நிர்ணய சபைத் தலைவர் ராஜேந்திர பிரசாத்திடம் அந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

“சுதந்திர இந்தியாவின் முதல் தேவை ஒரே நாடாகத் தேசப்பற்றுடன் செயல்படுவதாகும். மற்ற எல்லா விஷயங்களையும் தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சிக்கு உட்பட்டுதான் தீர்க்க முயலவேண்டும். இந்தியத் தேசியம் மலர்வதற்குத் தடையாக இருக்கும் மொழி வாரி மாநிலக் கோரிக்கைகளைத் தள்ளி வைக்க வேண்டும்” என்றது தார் அறிக்கை.

இதனையொட்டி நீண்டகால சிந்தனைப் போக்காக இருந்த இந்தியாவை ஐந்தாகப் பிரிக்கும் திட்டத்தை வெளியிட்டார்கள். அதிலொன்று சென்னை மாகாணத்தை தட்சணபிரதேசம் ஆக்குவது. இதற்கு கடுமையான எதிர்ப்பை திராவிடர் கழகமும், தி.மு.க., இடதுசாரிகள் என எதிர்க்க இத்திட்டத்தைத் தள்ளிப்போட்டார்கள்.

கொதித்து எழுந்த பெரியார் அப்போதைய முதல்வர் காமராஜருக்கு “தட்சணப்பிரதேசம் தற்கொலைக்குச் சமமானது” எனத் தந்தி அனுப்பினார். 01.02.1956இல் வெளியிட்ட செய்தியில்,



காந்தியின் உப்புச் சத்தியாகிரக போராட்டத்தில்...

“தட்சணப்பிரதேசம் ஏற்படுவதென்பது தமிழர்களுக்கு வாழ்வா சாவா என்பது போன்ற உயிர் பிரச்சினையாகும். உங்களுக்கும் மற்றோர்களுக்கும் தற்கொலையானதாகும், தட்சணப்பிரதேசம் ஏற்படுமானால் முன்பின் நடந்திராத கிளர்ச்சி செய்வதற்குத் தமிழ் மக்களைத் தள்ளிவிடும், தயவு செய்து நாம் எல்லோரையும் தமிழ்நாட்டையும் காப்பாற்ற வேண்டுகிறோம்” என்று தெரிவித்திருந்தார் பெரியார்.

இந்தப் பிராந்தியம் முழுக்க விசால ஆந்திரமும், கன்னடம் பேசுவோர் சம்யுக்த கர்நாடகமும், மலையாளம் பேசுவோர் ஐக்கிய கேரளம், தமிழ் பேசும் மக்களுக்குத் தமிழ்நாடு என்ற உணர்ச்சி எரியத் துவங்கியது.

சுதந்திரத்திற்கு முன்பே மொழிவாரி மாநிலக் கோரிக்கைகள் எழுந்து சுதந்திரத்திற்குப் பின்னரும் அது சாத்தியமாகாத நிலையில் காந்தியவாதியான சங்கரலிங்கனார் 1956ஆம் ஆண்டு ஜூலை, 27ஆம் நாள் விருதுநகரில் தமிழ்நாடு என்ற பெயர் கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கிறார்.

1895ஆம் ஆண்டு கண்டன் சங்கரலிங்கன் விருதுநகரில் கருப்பசாமிக்கும் வள்ளியமைக்கும் பிறந்தவர். திருமால் நாடார் ஓலைப்பள்ளியிலும், சுவிடீஷ் மிஷன் ஞானமாணிக்கம் உபதேசியார் பள்ளியிலும், 1902ஆம் ஆண்டு சத்திரிய வித்யா சாலை தொடக்கப்பள்ளியிலும் ஆரம்பக்கல்வியை முடித்தார். சங்கரலிங்கனார் கற்றது அவ்வளவுதான்.

விடுதலை உணர்ச்சியும், தேசிய உணர்ச்சியும் எரிந்து கொண்டிருந்த அக்காலத்தில் அவரை வ.உ.சிதம்பரனாரின் விடுதலை உரைகள் அவரை தேசிய இயக்கத்தின் பக்கம் ஈர்த்தது.

1915இல் செந்தியம்மாள் என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்ட சங்கரலிங்கனாருக்கு 1916இல் ஒரு மூத்த பெண் குழந்தை பிறந்தது. பின்னர் குடும்பத்தோடு சங்கரலிங்கனார் மும்பை சென்ற போதும் அங்கு அவருக்கு ஒரு குழந்தை பிறந்து இறந்து விடுகிறது.

பங்கஜன் வெயில் காத்த பெருமாள் கோவில் அறங்காவலர், நாடார் கல்வி சங்கம், நாடார் குல அபிவிருத்திச் சங்கம், பால்ய நாடார் சங்கம் போன்ற அமைப்புகளில் பணி செய்தார்.



காமராஜர் - இராஜாஜி

1920இல் சங்கரலிங்கனாருக்கு சமுத்திரக்கனி நாகரத்தினம் என்ற பெண் பிள்ளையும், 1922இல் வடிவேல் முருகன் என்ற ஆண் பிள்ளையும் பிறக்கிறார்கள்.

பெண் கல்வியில் அக்கறை கொண்ட சங்கரலிங்கனார், அதற்காக தன் ஆரம்பக்காலத்திலேயே பணி செய்தார். மாதர் கடமை என்ற நூலை 1920இல் எழுதியபோது மூதறிஞர் ராஜாஜியின் தொடர்பு கிடைக்கிறது.

காதி வஸ்திராலயத்தை விருதுநகரில் நிறுவி அதன் பெயரையும் 'மகாத்மா காந்தி கதர் வஸ்திராலயா' என்று பெயர் வைக்கிறார். அக்கடைக்கு அவர் உரிமையாளர் அல்ல, அவரது முயற்சியால் அக்கடை துவங்கப்பட்டபோதும், அ.அய்யாமுத்து என்பவரே இக்கடையின் உரிமையாளராக இருந்தார். கதர் மீதும் காந்தி மீதும் கொண்ட அன்பால் அக்கடையை கவனித்துக் கொண்டார். 1936ஆம் ஆண்டு அக்கடை பொருளாதார நட்டத்தால் மூடப்படும் நிலைக்கு வந்துவிடுகிறது.

சங்கரலிங்கனார் காதி வஸ்திராலயத்தை விருதுநகரில் துவங்கியபோது சென்னை மாகாண கதர் வாரியத் தலைவராகத் தந்தை பெரியாரும், செயலாளராக எஸ்.இராமநாதனும் தொண்டாற்ற அவர்களின் உதவி சங்கரலிங்கனாருக்கு பெரிதும் பயன்பட்டது.

02.10.1927ஆம் தேதி காந்தி விருதுநகர் வந்தபோது அவரை கவனித்துக்கொண்டு அவருக்குத் தேவையான உணவுகளைப் பரிமாறினார் சங்கரலிங்கனார்.

பின்னர் மும்பை சென்று விடுகிறார். குடும்பச் சூழ்நிலைக்காக சங்கரலிங்கனார் இடம்பெயர்ந்தாலும் காங்கிரஸ் கட்சியோடு தொடர்ந்து தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார். தான் எப்போதும் ஒரு ஆழ்ந்த தேசியவாதி என்பதை அவரது வாழ்வே தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

மும்பை சென்ற சங்கரலிங்கனார் 1929இல் தன் மகளுக்கு எழுதிய கடிதத்தில், "அலகாபாத்தில்



பேரறிஞர் அண்ணா - தந்தை பெரியார்

ஸ்ரீமான்கள் மோத்திலால் நேருஜி, ஜவஹர்லால் நேருஜி, அவர்களையும் அவர்களின் குடும்பத்தாரையும், குழந்தை இந்திராவையும் அவர்கள் பங்களாவில் பார்த்தேன். காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்துக்காக மகாத்மா வந்திருந்தார். அவர் பிரயாணமான அதே வண்டியில் அவருடன் அலகாபாத்தில் இருந்து ஆக்ரா வரை 250 மைல்கள் 7 மணி நேரம் அவருடனே பயணித்தேன். கொஞ்ச நேரம் அவருடன் பேசவும் சந்தர்ப்பம் கிடைத்தது" என மகளுக்கு எழுதுகிறார்.

காந்தியின் உப்புச் சத்தியாகிரக போராட்டத்தில் மூன்று நாட்கள் அவரோடு பயணிக்கிறார். பின்னர் சத்தியாகிரகத்தை விரிவுபடுத்தும் நோக்கோடு கரூர், திருச்சியில் சத்தியாகிரக போராட்டம் நடத்துகிறார்.

திருச்சி சத்தியாகிரக போராட்ட வழக்கில் ஆறு மாத கடுங்காவல் சிறையும், கரூர் வழக்கில் ஆறு மாத தண்டனையும் 50 ரூபாய் அபராதமும் பெற்று திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். அவரது கைதி எண் 7218.

சங்கரலிங்கனாருக்கும் ராஜாஜிக்கும் இருந்த தொடர்பு அடர்த்தியானது. சங்கரலிங்கனார் மகள் பங்கஜம் அவர்களின் திருமணம் இராஜாஜி தலைமையில்தான் நடந்தது.

அரசியல் வாழ்க்கையில் அப்பழுக்கற்ற தியாகியாகக் காந்தியை நெஞ்சில் சுமந்து வாழ்ந்த சங்கரலிங்கனார் மும்பையில் நல்லெண்ணெய் வணிகராக இருந்தபோது சென்னையில் மனைவியோடு வாழ்ந்து வந்த மகன் காலரா நோய் தாக்கி 1944ஆம் ஆண்டு இறந்து விடுகிறார். இது தனிப்பட்ட முறையில் மிகப்பெரிய அளவில் பாதித்தது.

விருதுநகர் கோட்டைப்பட்டி காளியம்மன் கோவில் தெருவில் உள்ள இரண்டு வீடுகளையும் ரூபாய் 4 ஆயிரத்து ஐம்பது ரூபாயையும் விருதுநகர் சத்திரியப் பெண்கள் பாடசாலைக்கு தானமாக எழுதி வைத்தார்.

தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட இழப்புகள் ஒரு பக்கம் என்றால் தேசிய அரசியலில் காங்கிரஸ் கட்சி மொழிவாரி மாநில கோரிக்கைகள் மீது காட்டிய பாரபட்சம் அவருக்கு அதிருப்தியை உருவாக்கியது.

மதராஸ் பெயர் மாற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். 12 கோரிக்கைகளை முன் வைத்து விருதுநகர் சூலக்கரை மேட்டில் உண்ணாவிரதத்தைத் துவங்கினார்.

உண்ணாவிரத்தை சங்கரலிங்கனார் துவங்கிய போது அவர் தேசிய இயக்கமான காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் என்பதால் அதை ஆதரித்து நிற்பதில் பலருக்கும் நடைமுறை அரசியல் சிக்கல் இருந்தது. ஆனாலும் அறிஞர் அண்ணா, ம.பொ.சிவஞானம் போன்றோர் ஆதரித்தனர்.

அப்போதைய சென்னை மாகாண முதல்வர் காமராஜரும் காங்கிரஸ் கட்சியினரும் அவரது கோரிக்கைகளில் எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. 12 கோரிக்கைகளில் சிலவற்றை



ஐ.மாயாண்டி பாரதி



இராம.அரங்கண்ணல்

நிறைவேற்றியிருந்தால் கூட சங்கரலிங்கனார் தனது உண்ணாநோன்பைக் கைவிட்டிருப்பார்.

அறிஞர் அண்ணா அப்போது சங்கரலிங்கனாரைச் சந்தித்தபோது "அண்ணா நீங்களாவது என்னுடைய கோரிக்கைகளுள் தலையாய கோரிக்கையான தமிழ்நாடு என்ற கனவை நனவாக்குங்கள்" எனக் கோரிக்கை வைத்தார்.

## மூன்று கடிதங்கள்

அப்போதைய ஜனசக்தி இதழின் ஆசிரியரும், மூத்த விடுதலை இயக்க தோழருமான ஐ.மாயாண்டி பாரதிக்கு சங்கரலிங்கனார் எழுதிய கடிதத்தில்,

'உயிரோடு வாழ மனமில்லை. ஜனசக்தி தலையங்கம் பார்த்தேன். காங்கிரஸ் காந்தியத்திற்காக உழைத்தும் அவர்கள் என் உண்ணாவிரதத்தில் கூட உதவி செய்யத் தவறி விட்டார்கள். வெற்றி கிடைத்தால் வாழ்கிறேன் அல்லது சாகிறேன்' என்று எழுதியிருந்தார்.

29.09.1956 அன்று கம்யூனிஸ்ட் இயக்க தோழர்களுக்கு என்று தலைப்பிட்டு எழுதிய கடிதத்தில் தன் மரணம் பற்றிப் பதிவு செய்கிறார் சங்கரலிங்கனார்.

"பட்டினியாலும் பசியாலும் வாடும் ஏழை மக்கள் என் மனக்கண்முன் தோன்றி கண்ணீர் வடிக்கின்றனர். இது வீண் போகாது. இன்று முதல் அசதி அதிகம், பேச சக்தி குறைவு, கூடிய சீக்கிரம் சாவு ஏற்படும், பூ வேண்டாம், பூ மாலை வேண்டாம். கௌபீனம் கட்டுவது போதும், பாடையில் குளிர்ந்த நேரம் எடுத்துச் செல்லுங்கள். காந்தி தங்கிய ஆத்துக்கரை மண் மேட்டில் நான் தங்கியிருந்த இடத்திற்கு முன்னால் இரண்டு வேப்பமரத்துக்கு அடியில் குழியில் போடுங்கள். அந்த இடத்தில் என் சவத்தை அடக்கம் செய்யச் சர்க்கார் மறுத்தால் திரு. வே.நா.பு.ராமசாமி நாடார் அவர்கள் நந்தவனத்துக்கு முன்னால் குண்டும் குழியுமாக உள்ள இடத்தின் மத்தியில் மேடையில் அடக்கம் செய்யுங்கள். எல்லோருக்கும் வணக்கம். வந்தே மாதரம்!" – என்று எழுதியிருந்தார்.

உடல் நலம் மோசமடைந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட சங்கரலிங்கனார் 13.10.1956 அன்று மருத்துவமனையில் தனது 62ஆவது வயதில் உயிரிழந்தார்.

அண்ணா தன் எழுத்துக்களால் சங்கரலிங்கனாருக்கு அஞ்சலி செலுத்தினார். சங்கரலிங்கனாரின் மரணம் ஏற்படுத்திய கொதிப்பும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணாவின் எழுத்தும் பேச்சும் கொதிப்பை உருவாக்க அது பச்சையப்பன், சென்னை மாநிலக் கல்லூரியில் மாணவர் போராட்டமாக வெடித்தது. சங்கரலிங்கனாரின் உயிர்த்தியாகம் வீண் போகவில்லை.

தியாகி சங்கரலிங்கனார் மறைந்த உடன் அவரது தமிழ்நாடு என்ற கோரிக்கை நிறைவேறி விடவில்லை. அவர் மறைந்தபோது 62 வயது. அதன் பின்னர் பத்தாண்டுகள் கழித்தே பேரறிஞர் அண்ணா முதல்வராகிறார். 1967 ஜூலை 18ஆம் நாள் தமிழ்நாடு உதயமானபோது சங்கரலிங்கனார் உயிரோடு இருந்திருந்தால் அவருக்கு 71 வயதாகியிருக்கும்.

சங்கரலிங்கனாரின் நிறைவேறாத கனவைப் பேரறிஞர் அண்ணா நிறைவேற்றி அவருக்கு நிம்மதியைக் கொடுத்தார்!

# தமிழக எல்லைப் போராட்டத்தில் பெரியாரின் பங்களிப்பு

இந்தியாவில் மொழிவழி மாநிலம் பிரிப்பதற்காக இந்திய அரசினரால் முதன் முதலில் அமைக்கப்பட்டது நீதிபதி தார் தலைமையிலான குழு ஆகும். குடியரசுத் தலைவரால் 1948இல் இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் மொத்தம் நான்கு பேர் இருந்தனர் நீதிபதி எ.கே. தார் தலைவராகவும் டாக்டர் பன்னாலால், திரு ஜகத்நாரியன் லால், பி.சி.பானர்ஜி ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருந்தனர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் எழுதும் குழுவினருக்கு அறிவுரை வழங்குவதற்காக இந்த குழு உருவாக்கப்பட்டது.

10.12.1948 அன்று இந்திய அரசிடம் இக்குழு அறிக்கையைக் கொடுத்தது. இப்போது உள்ள நிலையில் புதிய மாநிலம் எதையும் உருவாக்கத் தேவையில்லை என்று இக்குழு கருதியது.

அந்த அறிக்கையில் மொழிவாரி மாநிலம் பிரிக்கப்படும்போது ஒரு குறிப்பிட்ட பகுதியில் 70 சதவிகிதத்துக்கும் மேல் ஒரே மொழியைப் பேசும் மக்கள் இருந்தால்தான் அதை ஒரு மொழிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்றும் 70 சதவிகிதத்துக்குக் கீழ் ஒரு மொழியைப் பேசும் மக்கள் உள்ள பகுதியை இரு மொழியாளர் பகுதி (அ) பல மொழியாளர் பகுதி என்றே கருதவேண்டும் என்ற கருத்தை அறிவித்தது. திருவாங்கூர், கொச்சி இரண்டு நாடுகளும் மன்னராட்சியில் இருந்து விடுபட்டு இந்திய அரசில் இணைந்துள்ள இரண்டு மாநிலத்தையும் ஒரே மாநிலமாக இணைக்கப் பரிந்துரைத்தது.

புதிய மாநிலப் பிரிவினை வேண்டாம் என்று அக்குழு கருத்தறிவித்ததால் ஆந்திரர்கள் கோபமுற்றனர். ஏனென்றால் அவர்கள் 1913 முதலே தனி மாநிலம் வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர். அதற்காக 1937க்குப் பிறகு தீவிரமாகப் போராடி வந்தனர்.

1913இல் ஆந்திர மகாசபை உருவானது. அன்றைய சென்னை மாகாண அரசின் வேலைவாய்ப்பில் ஆந்திர மாணவர்களுக்குப் போதுமான இடம் கிடைக்கவில்லை.



# வாலாசா வல்லவன்

**திராவிடர் இயக்க ஆய்வாளர்.**

இதன் காரணமாகவே அவர்களுக்குத் தனிமாநிலம் வேண்டும் என்ற கோரிக்கை உருவானது. (Political History of Andhra Pradesh 1901-2009) (Innaiah பக்கம். 13) நாளடைவில் அந்தக் கோரிக்கை வலுப்பெற்றுவந்தது. 1917இல் கல்கத்தாவில் அன்னிபெசன்ட் தலைமையில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரசு மாநாட்டில் ஆந்திரர்களுக்குத் தனிமாநிலம் வேண்டும் என்ற கோரிக்கை விண்ணப்பத்தை அளித்தனர். அன்னிபெசன்ட்டும் காந்தியும் அக்கோரிக்கையை ஏற்க மறுத்தனர். திலகர் அக்கோரிக்கையை ஆதரித்தார்.

காந்தி மொழி வாரியாக காங்கிரசு கமிட்டிகளை அமைப்பதற்கு முன்பே ஆந்திரர்கள் 20.01.1918 அன்று நீதிபதி சுப்பராவ் தலைமையில் ஆந்திரப் பிரதேச காங்கிரசு கமிட்டியை அமைத்துக் கொண்டனர். அதனால் காந்தி மொழி வாரியாகக் காங்கிரசு கமிட்டிகளை 1920இல் அமைத்தார்.

1948இல் ஜெய்ப்பூரில் கூடிய காங்கிரசு கமிட்டி மொழிவாரி மாநிலங்களை அமைக்க ஆய்வு செய்யுமாறு காங்கிரசில் இருந்த மூவர் குழுவை அமைத்தது. அந்தக் குழுவிற்கு ஜெ.வி.பி. குழு என்று பெயர். ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், பட்டாபி சீத்தாராமையா ஆகிய மூவர் அடங்கிய அந்தக் குழு ஆய்வு செய்து அகில இந்தியக் காங்கிரசு கட்சியின் தலைமையிடம் அறிக்கையை 1.4.1949 அன்று அளித்தது.

அந்தக் குழுவிற்கும் மொழி அடிப்படையில் மாநிலங்களைப் பிரிப்பதற்கு விருப்பம் இல்லையெனினும் ஆந்திர மக்களின் போராட்டங்களைக் காரணமாகக் காட்டி ஆந்திராவை மட்டும் பிரித்துத் தனிமாநிலமாகக் கொடுக்கச் சிபாரிசு செய்தது. சென்னையை ஆந்திரர்கள் கேட்கக்கூடாது என்ற நிபந்தனையும் விதித்தது. அக்குழுவில் இடம் பெற்றிருந்த பட்டாபி சீத்தாராமய்யா எவ்வளவோ முயன்றும் நேருவும், பட்டேலும் சென்னையை ஆந்திராவுக்குக் கொடுக்க மறுத்துவிட்டனர்.

1949இல் கூடிய காங்கிரசு காரியக் கமிட்டி சென்னை மாகாண அரசாங்கத்தையும், ஆந்திர மாகாண காங்கிரசு கமிட்டியையும், தமிழ்நாடு காங்கிரசு கமிட்டியையும் அழைத்து ஆந்திர மாநிலப் பிரிவினை தொடர்பான அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து முடிவெடுக்க இந்திய அரசுக்குப் பரிந்துரை செய்து கேட்டுக்கொண்டது.

இந்திய அரசு இந்த மூவர் குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொண்டு ஆந்திரத்தைத் தனி மாநிலமாகப் பிரித்துக்கொள்ளச் சென்னை மாகாண அரசாங்கத்தையே ஒரு குழுவை அமைத்து முடிவு செய்யக் கேட்டுக் கொண்டது.

இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கடித எண். 651/49/15 நாள் 25.11.1949. இதன் அடிப்படையில் ஆந்திர மாநிலப் பிரிவினை



தந்தை பெரியார்

தொடர்பாக ஒரு அதிகாரப்பூர்வ குழுவைச் சென்னை மாகாண அரசு அமைத்தது. அக்குழு அப்போதைய முதலமைச்சர் குமாரசாமி ராசா தலைமையில் அமைக்கப்பட்டது. அக்குழுவில் டி.பிரகாசம், டி.கோபால் ரெட்டி, என்.சஞ்சீவரெட்டி, காலா வெங்கட் ராவ் ஆகிய நால்வர் ஆந்திர காங்கிரசின் பிரதிநிதிகளாகவும், குமாரசாமிராசா, எம்.பக்தவச்சலம், டி.டி.கிருஷ்ணமாச்சாரி ஆகிய மூவர் தமிழகக் காங்கிரசின் பிரதிநிதிகளாகவும், மாதவமேனன் கேரளக் காங்கிரசின் பிரதிநிதியாகவும் உறுப்பினர்களாக இருந்தனர். 17 முறை அக்குழு கூடி விவாதித்தது.

சென்னை மாகாண அரசு சென்னைக்கு ஈடாக ஆந்திராவில் புதிய தலைநகரை ஏற்படுத்திக்கொள்ள ரூபாய் ஒரு கோடி கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அப்போது இருந்த சட்டமன்ற உறுப்பினர்களில் 95 பேர் ஆந்திராவுக்குப் பிரிந்து செல்ல வேண்டும் என்றும் மீதம் 174 உறுப்பினர்கள் சென்னை மாகாணத்திலேயே இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர். புதிய ஆந்திரத்தின் தலைநகர் ஆந்திர எல்லைக்குள் அமைய வேண்டும் என்றே முடிவு செய்யப்பட்டது.

ஆந்திராவின் உயர்நீதி மன்றம் ஆந்திர எல்லைக்குள் அமைய வேண்டும். சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் 16 பேரில் 7 நீதிபதிகள் புதிய ஆந்திர உயர்நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டும்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரும் புதிய ஆந்திர மாநில அரசுக்குச் செல்ல வேண்டும். I.C.S. அதிகாரிகளைப் பொறுத்து அவர்கள் இந்திய

அரசால் நியமிக்கப்படுவதால் மொத்தம் உள்ள 43 பேரில் ஆந்திராவுக்கு 16 பேர் பேச்சுவார்த்தை மூலம் அவரவர்களின் விருப்பத்தை அறிந்து மத்திய அரசுக்குத் தெரிவித்துச் சுமூகமான முறையில் மாற்றிக்கொள்ள வேண்டும். (அறிக்கை பக். 28)

I.A.S. அதிகாரிகள் மொத்தம் 28 பேர் சென்னை மாகாண அரசில் பணியில் இருந்தனர். அதில் 38 சதவிகித மக்கள் தொகை அடிப்படையில் 11 பேர் ஆந்திராவுக்குச் செல்ல வேண்டும் என முடிவு செய்யப்பட்டது (அறிக்கை பக். 30)

சென்னை மாகாண அரசு எல்லாத் துறைகளைப் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டு ஆந்திர மாநிலப் பிரிவினை அறிக்கையை 25.12.1949 அன்று இந்திய அரசுக்கு அனுப்பியது.

இந்தியா குடியரசு நாளாக மலரவிருக்கும் 26.01.1950 அன்று ஆந்திர புதிய மாநிலம் உருவாக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குழுவின் முடிவைச் சென்னை மாகாண அரசின் கெசட் மூலம் பதிவு செய்து இந்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது.

நேருவின் தலைமையிலான இந்திய அரசு வழக்கம்போல மொழிவழி மாநிலப் பிரிவினையில் விருப்பம் இல்லாததால் இந்தக் குழுவின் அறிக்கையை வாங்கிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டது.

பொட்டி ஸ்ரீராமுலு அவர்கள் சென்னை மயிலாப்பூரில் புலுசு. சாம்பாமூர்த்தி வீட்டில் தனி ஆந்திர மாநிலம் அமைக்க வலியுறுத்திச் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். 19.10.1952 முதல் 15.12.1952 வரை 57 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து இறந்துவிட்டார். பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்தபோதே பிரதமர் நேரு அவர் இறப்பதற்கு முன் 09.12.1952இல் பாராளுமன்றத்தில் ஆந்திரர்கள் சென்னை நகரைக் கேட்காமல் இருந்தால் தனி ஆந்திர மாநிலம் உருவாக்குவது குறித்து ஆலோசிக்கப்படும் என்று அறிவித்தார். (Political History of Andhra Pradesh 1909 - 2009 by Narisatti Innaiah, 44)

பொட்டி ஸ்ரீராமுலு 15.12.1952 அன்று



சர்தார் படேல் - ஜவஹர்லால் நேரு



பி.எஸ்.குமாரசாமி ராஜா

இறந்த பிறகு ஆந்திராவில் பெரும் வன்முறை மூண்டது. விஜயவாடா இரயில் நிலையத்தை அடித்து நொறுக்கினர். துணை இராணுவப்படை வரவழைக்கப்பட்டது. துப்பாக்கிச்சூடு நடைபெற்றுச் சிலர் கொல்லப்பட்டார்கள். மேலும் போராட்டம் அதிக அளவில் வெடித்த பிறகுதான், நேரு பாராளுமன்றத்தில் 19.12.1952 அன்று தனி ஆந்திர மாநிலம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார். புதிய ஆந்திர மாநிலத்தை உருவாக்குவதற்காக நீதிபதி வாஞ்சு தலைமையிலான குழுவை அமைத்தது ஒன்றிய அரசு. இத்தகைய பின்புலத்தில் தந்தை பெரியாரின் பங்களிப்பு குறித்துப் பார்ப்போம்.

வடக்கெல்லை மீட்புக் குழுவின் முதல் மாநாட்டிற்குப் பெரியார் வாழ்த்து செய்தி அனுப்பினார் (செங்கோல் 11.01.1953), நகரியில் நடைபெற்ற தமிழர் மாநாட்டுக்கும் பெரியார் வாழ்த்து கொடுத்தார். (செங்கோல் 15.02.1953).

ஆந்திரா பிரச்சனை குறித்துத் திராவிடர் கழக மத்திய நிர்வாகக்குழு பெரியாரின் தலைமையில் 11.01.1953 அன்று நிறைவேற்றிய தீர்மானம்;

(அ) ஆந்திர நாடு பிரிவினை விஷயத்தில் ஆந்திரர்கள் பிடிவாதமாக இருப்பதால் ஆந்திர நாட்டைப் பிரிக்கும் விஷயத்தில் காலதாமதம் செய்யாமல் உடனடியாகப் பிரித்து விடவேண்டுமென்று இக்கமிட்டி தெரிவித்துக் கொள்ளுகிறது.

அப்படிப் பிரிப்பதில் ஆந்திர நாட்டினரிலேயே சிலர் பிரிவினைக்கு முட்டுக்கட்டை போடுகிற மாதிரியில் தாங்கள் பிரிந்துபோன பின்பும் எஞ்சியுள்ள சென்னை நாட்டில் தங்களுக்குச் சில உரிமையோ சலுகையோ, அதாவது பொது நீதிமன்றம், பொது கவர்னர் முதலியவை சென்னையிலிருக்க வேண்டுமென்று கேட்பதையும், சென்னையைத் தற்காலிகத் தலைநகரமாக இருக்க இடம் தரவேண்டுமென்பதையும், இக்கூட்டம் கண்டிப்பதுடன், அப்படிப்பட்ட உரிமைக்கோ சலுகை முதலியவற்றிற்கோ மத்திய சர்க்கார் இடம் கொடுக்குமானால் தமிழர்களின் அதிருப்திக்கும், கிளர்ச்சிக்கும் ஆளாகவேண்டி நேரிடுமென்று மத்திய சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கின்றது.

ஆ) எந்தக் காரணத்தைக் கொண்டும் மத்திய அரசாங்கத்தார் சென்னை நகரத்தையும் அதைச் சேர்ந்த எந்த பாகத்தையும் சேர்த்து கமிஷனர் ராஜ்யமாக (Commissioner State) ஆக்கவோ கூடாதென்றும் இக்கமிட்டி வற்புறுத்தித் தெரிவித்துக்கொள்கிறது.

(இ) பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்தில் அவர்கள் நிர்வாக வசதிக்கு ஆக அமைத்துக் கொள்ளப்பட்ட ஜில்லா எல்லையில் தமிழ் பெரும்பான்மையாகப் பேசப்படும் பிரதேசத்தையும், தெலுங்கு பெரும்பான்மையாகப் பேசப்படும் பிரதேசத்தையும் ஒன்றாக ஒரே ஜில்லாவாக அமைத்திருந்தினர். சித்தூர் ஜில்லாவில் திருத்தணி முதலிய பெரும்பாலாக தமிழ் பேசும்



பொட்டி ஸ்ரீராமுலு



மா.பொ.சி. - இராஜாஜி

மக்களடங்கிய பிரதேசங்கள் இருப்பதனால் இப்போது மொழியை அடிப்படையாகக் கொண்ட நாடே பிரிக்கப்படுவதனால், ஒரு மொழி பேசும் நாட்டுடன் வேறு மொழி பேசும் பெரும்பான்மையான மக்களைக் கொண்ட பிரதேசம் சேர்க்கப்படுவதென்பது மொழிவாரிப் பிரிவினைத் தத்துவத்திற்கே எதிர்ப்பானது என்பதோடு வேறு மொழி பேசும் மக்களுக்கும் இடையூறானது. ஆதலால் இந்த மொழிவாரி நாடு பிரிவினையில் சித்தூர் ஜில்லாவிலுள்ள தமிழ் மொழி அதிகமாகப் பேசும் பிரதேசத்தைக் கண்டிப்பாகத் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது. (விடுதலை 12.01.1953)

“பிரிவினைக்குப் பெயர் மொழிவாரி நாட்டுப் பிரிவினை; இதில் பிரிந்துபோக வேண்டுமென்று வாதாடுகிறவர்கள் மொழியை ஆதாரமாகக் கொண்டுதானே பிரிவினை கேட்க வேண்டும்? அதை விட்டு விட்டு, வேறு மொழி 100க்கு 69, 70, 80 வீதம் பேசுகிற மக்கள் உள்ள நிலத்தை தங்கள் நாட்டுடன் சேர்க்கவேண்டுமென்று கேட்பது எப்படி யோக்கியமாகும்? அல்லது, இந்தப் பிரிவினைக்கு, மொழிவாரி மாகாணப் பிரிவினை “என்றாவது எப்படிச் சொல்லமுடியும்?”

[ 05.01.1953 அன்று இலட்சிமிபுரம் கூட்டத்தில் பெரியார் ஆற்றிய உரை விடுதலை 07.01.1953, 08.01.1953. ]

01.02.1953ஆம் தேதி தமிழ் முஸ்லிம்கள் சார்பில் சென்னை கடற்கரையில் நடைபெற்ற சென்னை தமிழருக்கே என்ற சர்வக்கட்சிக் கூட்டத்தில் இலட்சக்கணக்கான மக்கள் மத்தியில் பேசிய பெரியார், பிரிய நினைப்பவர்களைச் சந்தோஷமாகப் பிரித்து அனுப்பிவிடுவோம். சுயநலக்காரர்களோடு சண்டை போட்டுக் கொண்டிருப்பதைவிட வெளியே அனுப்பிவிடுவது நல்லது. மற்றபடி இரண்டு, மூன்று பிரச்சினைகள் சொல்லப்படுகின்றன; அதாவது ஆந்திரா ஐகோர்ட், சர்க்கார் காரியாலயம், தலைநகர் முதலியவை எல்லாம் சென்னையில் கொஞ்ச நாளைக்காவது இருக்க வேண்டும் என்கிறார்கள். எப்போது போகிறோம் என்று போகிறார்களோ, அவர்களுக்கு இங்கு என்ன வேலை? ஒரு வீட்டில் பாகப்பிரிவினை எல்லாம் செய்யப்பட்ட



பாபு இராஜேந்திர பிரசாத்



சர். பி.டி.ராசன்



எம்.பக்தவத்சலம்

பிறகு சமையல் மட்டும் கொஞ்ச நாளைக்கு இங்கே செய்துகொள்கிறேன் என்பது என்ன நியாயம்?

அடுத்தபடியாக கமிஷனர் மாகாணமாகச் சென்னையை ஆக்கவேண்டும் என்று ஆந்திரர்கள் சொல்வதைப் பற்றிக் கூறவேண்டுமானால், மடத்தை விட்டுப் போகின்ற ஆண்டிக்கு நந்தவனத்தைப் பற்றி என்ன கவலை மற்றும் நஷ்ட ஈடு கேட்பது என்பதும் அப்படித்தான் நியாயமில்லாத கோரிக்கையாகும் என்று ஆந்திரர்களைக் கண்டித்துப் பேசினார்.

(விடுதலை 03.02.53)

சென்னை நகர மேயர் தி.செங்கல்வராயன் முதலமைச்சர் இராசாசியைக் கலந்து ஆலோசித்து அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். முதலமைச்சர் இராசாசி அக்கூட்டத்திற்குப் பெரியாரையும் அழைக்கும்படி கூறினார். பெரியாருக்கு மட்டும்தான் நேரு பயப்படுவார் என்பது இராசாசிக்கு நன்கு தெரியும். அக்கூட்டத்திற்குப் பெரியாரை அழைக்க மேயர் செங்கவல்வராயனும் ம.பொ.சியும் வந்தனர். பெரியார் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு இரண்டு இலட்சம் மக்களிடையே எழுச்சியுரை ஆற்றினார். ஒரு நாள் கடையடைப்பும் வேலை நிறுத்தமும் செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். அதனை காங்கிரசாரோ, ம.பொ.சி.யின் தமிழரசு கழகமோ ஏற்றுக்கொள்ளவில்லை. அக்கூட்டத்தில் எம்.பக்தவச்சலம், எ.என்.கரையாளர், பி.டி.ராசன், மீனாம்பாள் சிவராஜ், ம.பொ.சி. உட்படப் பலர் பேசினர். மேயர் நன்றி கூறினார்.

(விடுதலை 17.02.1953).

வாஞ்சு அறிக்கை வெளிவருவதற்கு முன்பிருந்தே அதன் செய்திகள் கசிய ஆரம்பித்த காலம் முதலே விடுதலையில் அதன் ஆசிரியர் குத்தூசி சா.குருசாமி மத்திய அரசைக் கண்டித்தும், ஆந்திரர்களைக் கண்டித்தும், வாஞ்சு அறிக்கையைக் கண்டித்தும் 07.01.1953 முதல் பல தலையங்கங்கள் எழுதியுள்ளார்.

13.02.1953 அன்று சென்னை மேயர் தலைமையில் அவருடைய அலுவலகத்தில் நடைபெற்ற அனைத்துக்

கட்சிக் கூட்டத்தில் பெரியார் கலந்துகொண்டு ஆந்திராவின் தற்காலிகத் தலைநகராகக் கூட சென்னை இருக்கக்கூடாது என்ற தீர்மானத்தில் பெரியார் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் கையொப்பமிட்டு பிரதமர் நேருவுக்கு விண்ணப்பம் அனுப்பினர்.

15.02.1953 அன்று சென்னை மாவட்ட திராவிடர் கழகச் செயற்குழு 22.02.1953 அன்று சென்னைக்கு வரும் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்துக்குக் கருப்புக்கொடி காட்டத் தீர்மானித்தது. (விடுதலை 16.02.1953) அன்றே திராவிடர் கழக மத்திய செயற்குழு கூடி, இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் சென்னைக்கு வரும் அன்றே தமிழக உரிமைப் பாதுகாப்பு நாள் தமிழகமெங்கும் கொண்டாடும்படித் தீர்மானம் நிறைவேற்றியது

(விடுதலை 16.02.1953)

திட்டமிட்டபடி இராசேந்திர பிரசாத்துக்குக் குத்தூசி குருசாமி தலைமையில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கருப்புக்கொடி காட்டினர். காவல் துறையினரின் தாக்குதலால் சில தி.க. தோழர்களுக்கு மண்டையும் உடைந்தது.

22.02.1953 அன்று வாஞ்சு அறிக்கைக் கண்டன நாள் தி.க. தோழர்களால் தமிழகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டது. தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாடு கருதாமல் புதுதில்லியில் 1953 மார்ச் 23இல் பிரதமர் நேருவைச் சந்தித்து, ஆந்திரத்தின் தற்காலிகத் தலைநகரமோ, உயர்நீதி மன்றமோ சென்னையில் இருக்கக் கூடாது என்று வலியுறுத்தினர். (விடுதலை 04.03.1953)

இவ்வளவு போராட்டங்களுக்கு பிறகுதான் நேரு ஆந்திரத் தலைநகர் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என்றார். தெற்கெல்லைப் போராட்டத்தையும் பெரியார் முழுமையாக ஆதரித்தார்.

மார்ஷல் நேசமணி தலைமையில் 1946 முதலே திருவாங்கூர், கொச்சி பகுதியில் உள்ள தமிழ்ப்பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று போராடி



நேசமணி



சி.சுப்பிரமணியம்



குத்தூசி சா.குருசாமி



வந்தனர். இந்த அறிக்கை வெளிவந்தவுடன் அவர்களுடைய போராட்டமும் அதிகரித்தது. தமிழகமும் கொந்தளித்து எழுந்தது. 10.07.1954 முதலே 'விடுதலை'யில் திருவாங்கூர் தமிழர் கிளர்ச்சிக்கு ஆதரவான தலையங்கங்கள் எழுதப்பட்டு வந்தன.

"நாடு பிரிவினைக் கமிட்டி" அறிக்கையைப் பார்த்தேன். இந்த அறிக்கை வெளியாவதற்கு முன்பே அறிக்கை பற்றிய சேதிகளின் சுருக்கம் ஒருவாறு எனக்குத் தெரிய வந்தது.

பொதுவாக, ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலை இல்லாமல் போய்விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும் கேரளாவும்) பிரிவதில் இரண்டு மூன்று காரணங்களால் இவை சீக்கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கின்ற எண்ணம் தோன்றிவிட்டது.

இவர்கள் இருநாட்டவர்களும் பெயரளவில் இருநாட்டவர்களானாலும், அளவில், எஞ்சிய சென்னை இராச்சியம் என்பதில் 14 மாவட்டங்களில் (ஜில்லாக்களில்) இரண்டே ஜில்லாக்காரர்களாவார்கள்.

1. சென்னை, 2.செங்கற்பட்டு, 3.வடஆர்க்காடு, 4. சேலம், 5. கோவை, 6. நீலகிரி, 7. திருச்சி, 8. மதுரை, 9. இராமநாதபுரம், 10. திருநெல்வேலி, 11. தஞ்சை, 12. தென்னார்க்காடு, 13. தென்கன்னடம், 14. மலபார்.

அப்படி 14இல் 7இல் ஒரு பாகஸ்தர்களாக இருந்து கொண்டு, தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் முதலியவற்றில் 3இல் 2 பாகத்தை அடைந்துகொண்டு, இவை கலந்து இருப்பதால் நம் நாட்டைத் தமிழ்நாடு என்றுகூடச் சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்து ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.

இதை, நான் ஆந்திரா பிரிந்தது முதல் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறேன். அந்தப்படி நல்ல சம்பவமாகப் பிரிய நேர்ந்துவிட்டது. ஆதலால், நான் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்.

நிற்க, இந்தப் பிரிவினை அமைப்பு ஏற்பாட்டில் எனக்கிருக்கும் சகிக்கமுடியாத குறை என்ன இருக்கிறது என்றால், நாட்டினுடையவும், மொழியினுடையவும், இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய்விடுகிறதே என்கிற குறைபாட்டு ஆத்திரந்தான்;

அதுதான் திராவிடத்தை அல்லது

தமிழ்நாட்டைவிட்டு ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்துபோன பின்புகூட, மீதியுள்ள – யாருடைய ஆட்சேபனைக்கும் இடமில்லாத தமிழகத்திற்குத் 'தமிழ் நாடு' என்ற பெயர்கூட இருக்கக்கூடாதென்று சூழ்ச்சி செய்து, இப்போது அந்தப் பெயரையே மறைத்து ஒழித்துப் பிரிவினையில், ' சென்னை நாடு' என்று பெயர் கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும். எந்தத் தமிழனும், அவன் எப்படிப்பட்ட தமிழனானாலும் இந்த அக்கிரமத்தைச் சகித்துக் கொண்டிருக்கமாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக்கொண்டிருந்தாலும் என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியாதென்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

'தமிழ்', 'தமிழ்நாடு' என்கின்ற பெயர்கூட இந்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாதபடி எதிரிகள் சூழ்ச்சி செய்து வெற்றிபெற்றுவிட்டார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடுமானால், பிறகு என்னுடையவோ, என்னுடைய கழகத்தினுடையவோ, என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு வேறு எதற்காக இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை.

இந்தக் காரியம் மாபெரும் அக்கிரமமான காரியம் என்பதோடு, மாபெரும் சூழ்ச்சிமீது செய்யப்பட்ட காரியம் என்றே கருதுகிறேன். நம் நாடு எது! நமது மொழி எது? நமது இனம் எது? என்பதையே மறைத்துவிடுவதென்றால், பிறகு தமிழன் எதற்காக உயிர்வாழ வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, இக்கேடு முளையிலேயே கிள்ளப்பட்டு விடும்படி முயற்சி செய்யும்படியாக எல்லாத் தமிழர்களையும் உண்மையிலேயே வணங்கி வேண்டிக்கொள்கிறேன்.

**(விடுதலை அறிக்கை 11.10.1955)**

21.11.1955 முதல் 24.11.1955 வரை தமிழகச் சட்டமன்றத்தில் தேவிகுளம், பீர்மேடு குறித்த அறிக்கை மீது விவாதம் நடைபெற்றது. நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம் தேவிகுளம் பீர்மேடு தமிழகத்திற்குச் சொந்தம் என்பதை ஆதாரங்களுடன் விளக்கினார். இறுதி நாளில் நடைபெற்ற வாக்கெடுப்பில் தேவிகுளம் பீர்மேடு தமிழகத்திற்குச் சேரவேண்டுமென்ற தீர்மானத்திற்கு ஆதரவாக 122 வாக்குகளும் அதற்கு எதிராக 18 வாக்குகளும் கிடைத்தன.

தமிழகச் சட்டமன்றத் தீர்மானத்தை ஆதரித்து விடுதலையில் தலையங்கம் எழுதினார் குத்தூசி குருசாமி **(விடுதலை 25.11.1955)**

இப்படி வடக்கு எல்லை, தெற்கு எல்லை, தேவிகுளம் – பீர்மேடு ஆகிய போராட்டங்களில் தமிழர்களின் உரிமையைப் பெறக் குரல் கொடுத்த தந்தை பெரியார், தமிழ் நிலத்துக்கு 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டவே போராடி வந்தார்.

**தந்தையின் கோரிக்கையைத் தனயன் நிறைவேற்றிய நாள்தான் 1967 ஜூலை 18.**

# புதிய தமிழகம் படைத்த ம.பொ.சி.

**1947** ஆகஸ்ட் 15 இந்தியா விடுதலை பெற்ற தினம். அதற்கு முன்னரே விடுதலைக்குப் பிறகான இந்தியா, அதன் மாநிலங்கள், எல்லைகள், உரிமைகள் குறித்த குரல்கள் வெவ்வேறு பகுதிகளில் எழத் தொடங்கிவிட்டன. தமிழகத்தில் அப்படி எழுந்த வீரியமிக்கக் குரல் ம.பொ.சி.யினுடையது.

இந்தியத் தேசிய காங்கிரசில் தன்னை இணைத்துக்கொண்டு, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட அவர், மூன்றாம் வகுப்பினை முழுமை செய்யாதவர். எனினும் சிறைச்சாலைகளையே தம் கல்லூரியாக்கிக் கொண்டார். சங்க இலக்கியங்களையும் காப்பியங்களையும் ஆழ்ந்து கற்றார். இலக்கியத்திலும் அவர் அரசியலையே பயின்றார். இலக்கியச்சுவையில் மாய்ந்து எழுந்தாலும் அவர் கவனம் முழுவதும் தமிழ், தமிழர், தமிழ்நாடு எனும் சிந்தனையிலேயே ஊறி நின்றது. கசடறக் கற்ற புறநானூறு, அவருக்குத் தமிழன் எனும் இன உணர்வையும் தமிழர்கள் தனித் தேசிய இனத்தவர் எனும் தெளிவையும் அளித்தது. தமிழகத்தின் எல்லைகளைக் காக்க அவர் தொடங்கிய புனிதப் போராட்டத்திற்குத் தொல்காப்பியமும் சிலப்பதிகாரமும் அடித்தளமிட்டன.

தமிழகத்தைத் தமிழரே ஆண்ட காலத்தில் இருந்த அதன் இயற்கை எல்லைகளைப் பின்னர் தமிழகம் இழந்தது பற்றி அவர் வருந்தினார். அதன் எல்லைகளை மீட்க வேண்டுமென்ற ஆர்வத்தில் தன் இலட்சியங்களை வெளிப்படுத்தவே, ‘தமிழ் முரசு’ எனும் இதழினை 1946இல் தொடங்கினார். அதில் சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தித் தொடர்ந்து எழுதி வந்தார். தமிழ் முரசின் முதல் இதழில் ‘தமிழகத்தில் தமிழரசு’ என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு :

“வருங்கால சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு அமைத்தேத் தீர வேண்டும். தமிழ் வளர, தமிழர் வாழ, தமிழ்நாடு செழிக்க ‘தமிழரசு’ வேண்டும். அந்த அரசியலை வகுக்கும் சுயநிர்ணய உரிமை தமிழருக்கு உண்டு. இந்தச் சுயநிர்ணய உரிமையானது இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் உண்டு என்பதே எனது கொள்கை.



## தி.பரமேசுவரி

வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடி, தமிழகத்தில் சுதந்திரத் (சுயாட்சி) தமிழரசை அமைப்பர். அந்தப் புதிய தமிழரசு, தனது கலாச்சாரத்துடன் நெருங்கிய தொடர்புள்ள ஆந்திர, கேரள, கன்னட இன அரசுகளுடன் கூட்டுறவு கொண்டு ஒரு துணை சமஷ்டியை நிறுவிக்கொள்ளும் உரிமையையும் உடையதாயிருத்தல் வேண்டும்.'' (தமிழ் முரசு – மே, 1946) இத்தலையங்கமே அவர் சிந்தனைத் தெளிவை விளக்கும்.

அதற்கு முன்னரே, 26.06.1945 அன்று திருச்சி மலைக்கோட்டையில் காந்தியக் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த இலக்கியக் கூட்டத்தில் பேசிய ம.பொ.சி, "சுதந்திர இந்தியாவில் ராஜ்யங்கள் மொழிவாரித் திருத்தியமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ராஜ்யமும் இந்தியச் சமஷ்டியில் பூரண சுயாட்சி பெற்ற அங்கங்களாக இருக்க வேண்டும். மத்திய அரசிடம் பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டுறவு ஆகிய மூன்று அதிகாரங்கள் மட்டுமே விடப்பட்டு, 'எஞ்சிய அதிகாரங்கள்' உள்பட இதர எல்லா அதிகாரங்களும் மாநில அரசுகளுக்கே உரிமையாக்கப்பட வேண்டும்'' என்று கூறியது காங்கிரஸ் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. தேசியச்சார்புள்ள தலைவர்களால் அவர், சந்தேகத்துடன் பார்க்கப்பட்டார். காலில் நகம் முளைத்த நாள் முதலாய் நான் காங்கிரஸ்காரன் என்று பெருமைப்பட்ட பேரியக்கத்திலிருந்து வெளியேற நேர்ந்தது. தன் வாழ்நாளின் இறுதிவரையில் தேசியத்துக்கும் தமிழர் நலனுக்கும் இடையில் கயிறுபோல் இழுபட்டார்.

எடுத்த பணியை விடாது சிந்திப்பதும் மீளமீள நாடுவதும் அவர்தம் இயல்பு. அதற்குத் தன் பேச்சையும் எழுத்தையும் உற்றதுணையாக்கிக் கொண்டார். 1946 ஏப்ரல் மாதத்தில் சென்னை மண்ணடியில் கஸ்தூரிபாய் சங்கத்தின் சார்பில் "புதிய தமிழகம்'' என்னும் தலைப்பில் ஞாயிறுதோறும் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

புதிய தமிழகத்தை உருவாக்கும் அவரின் கோரிக்கைக்கு அவர் சார்ந்த காங்கிரஸ் இயக்கம் ஆதரவு தரவில்லை. எனவே, திரு.வி.க, தெ.பொ.மீ, மு.வ போன்றோர் முன்னிலையில் சென்னையிலுள்ள மண்ணடியில் லிங்கிச் செட்டித் தெருவில் 21.11.1946 அன்று 'தமிழரசுக் கழகம்' எனும் பெயரில் அமைப்பொன்றைத் தொடங்கினார். 14.01.1947 அன்று செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கழக விழாவில் தைத்திங்கள் முதல் நாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடும்படி வேண்டுகோள் விடுத்தார். 1947 ஆகஸ்டு 15ஆம் நாள் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை பெற்றது. அதே நாளில், போர் முனையும் போர் முறையும் மாறும் நாளென்று அறிவித்து, 16.08.1947 அன்று 12 தோழர்களுடன் திருப்பதிக்குப் புறப்பட்டார். அவருக்கு மங்கலங்கிழார், தளபதி விநாயகம்




**தமிழரசு கழக மாநாட்டு காட்சிகள்**

போன்றோர் துணை நின்றனர். திருவாலங்காடு, கனகம்மா சத்திரம், திருத்தணி எனச் செல்லும் வழி தோறும் வடவெல்லை மீட்பின் தேவையை வலியுறுத்திப் பொதுக்கூட்டங்களில் பேசினார். கனகம்மா சத்திரத்திலேயே ஆந்திரர்களின் எதிர்ப்பு தொடங்கிவிட்டது. திருப்பதியிலும் கடும் எதிர்ப்பு. கல்லடிகளுக்கிடையில் அஞ் சாது உரை நிகழ்த்தித் திரும்பினார்.

அச்சமயம் ஆந்திர தேசியத் தலைவர்கள் ஆந்திர மகாசபையின் துணையுடன் ‘விசால ஆந்திரம்’ கோரினர். கேரளத் தேசியத் தலைவர்கள், ஐக்கிய கேரளம் அமைத்தே தீருவோம் என முழங்கினர். அப்போதைய ஆந்திரா, பெரும்பகுதி சென்னை மாகாணத்திலும் மற்றொரு பகுதி ஐதராபாத் சமஸ்தானத்திலுமாகப் பிளவுபட்டிருந்தது. மலையாளப் பகுதிகளில் மலபார் சென்னை மாகாணத்திலும் திருவிதாங்கூர் – கொச்சி ஆகிய இரு சமஸ்தானங்களிலுமாகப் பிளவுண்டு கிடந்தது. கன்னட மொழி பேசுவோர் அகண்ட கர்நாடகம் எனக் கொந்தளித்தனர். ஆந்திரத் தலைவர்கள், அரசியல் பேதம் மறந்து மொழிவழி நின்று தங்கள் தேசிய இனத்திற்கு நியாயம் செய்ய உறுதியாக இருந்ததுடன் பல்வேறு வழிகளில் அரசியல் அழுத்தம் தந்தனர்.

1947 அன்று டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் தலைமையில் நடைபெற்று வந்த அரசியல் நிர்ணய மன்றத்தில் சர்.பி.என்.ராவ் என்பவரை ஆலோசகர் பொறுப்பில், மத்தியில் இயங்கிய இடைக்கால அரசு நியமித்திருந்தது. அப்போதைய சென்னை மாகாணத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு அவர் கூறியிருந்த திட்டம்,

மறைமுகமாகச் சென்னையின் மீது ஆந்திரர் உரிமை கொண்டாட வழிவகுத்துத் தந்தது. தமிழகம், மலபார், தென் கன்னட மாவட்டம் ஆகிய மும்மொழிப் பிரதேசங்களைக் கொண்ட தென்சென்னை ஓர் உபமாகாணமாகவும் தெலுங்கு மொழி பேசும் ஆந்திரம் மற்றொரு உபமாகாணமாகவும் இரண்டுக்கும் சென்னை ஜில்லா தலைநகரென்றும் கூறியது அத்திட்டம். அதற்கு ஆந்திரத் தலைவர்களான வி.வி. கிரி, டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், டி.பிரகாசம் போன்றோர் ஆதரவு தெரிவித்தனர். இதை ஒருமுறை ஏற்றுவிட்டாலும் தமிழகத்தை மீட்க முடியாது என்பதை உணர்ந்து ம.பொ.சி எழுப்பிய முழக்கமே, "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்பது. "உரிமைக்கு எல்லை வேங்கடம்; உறவுக்கு எல்லை இமயம்; நட்புக்கு எல்லை உலகம்" என்று ம.பொ.சி எழுதிய தலையங்கம் தமிழர்களைத் தட்டியெழுப்பியது. 'எப்படியும் இப்போதுள்ள சென்னை மாகாணம் அப்படியேதானே இருக்கப் போகிறது' என்று எதிர்க்கேள்வி கேட்டுச் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்தார் காமராசர்.

1948ஆம் ஆண்டில் இந்திய மாகாணங்களை மொழிவழியில் திருத்தியமைக்க அரசியல் நிர்ணய மன்றமே முன்வந்தது. அரசமைப்பை அமல்படுத்துவதற்கு முன்பு இந்த மன்றமே இந்தியாவின் முதல் நாடாளுமன்றமாக இயங்கி வந்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மன்றத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத், அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி என்.கே.தார் தலைமையில் கமிஷனை நியமித்தார். அரசியல் கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட பலரிடமும் கருத்துகளைப் பெற்றுக்கொண்ட கமிஷன், இந்தியாவை மொழிவாரிப் பிரிப்பதற்கு எதிராகத் தன் கருத்துகளை அ.நி. மன்றத்திற்கு வழங்கியது.

1948 ஜெய்ப்பூர் காங்கிரஸ் மாநாட்டிற்குப் பிறகு மீண்டும் மொழிவாரி மாநிலக் கோரிக்கையைப் பரிசீலிக்க, விஜேபி கமிட்டி என்று அழைக்கப்பட்ட நேரு, படேல், பட்டாபி சீதாராமையா ஆகிய மூவர் கமிட்டி அமைக்கப்பட்டது. ஆந்திராவுக்குச் சாதகமான அவர்தம் தீர்ப்பினை மறுத்துத் தமிழரசுக் கழகம் சார்பாக, சென்னை நகரில் 'தமிழக எல்லைப் பாதுகாப்பு மாநாடு நடத்தப்பட்டது. இந்திய அரசின் நிதியமைச்சராக இருந்த ஆர்.கே.சண்முகம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் திரு.வி.க, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், டி.கே.சண்முகம், மங்கலங்கிழார், மு.வ, தெ.பொ.மீ, நேசமணி ஆகியோர் வடக்கெல்லை, தெற்கெல்லைப் போராட்டங்களை ஆதரித்தும் தலைநகர் சென்னையை மீட்கவும் ஆதரவு தெரிவித்துப் பேசினர்.

1949 அக்டோபர் மாதத்தில் சென்னை நகர் பற்றிய பிரச்சினை குறித்து விவாதிக்க அப்போதைய மேயர் எஸ். இராமசாமி நாயுடுவுடன் இணைந்து ஆல்டர்மேனாக


திரு.வி.க.


தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்


மு.வரதராசனார்



மங்கலங்கிழார்



மார்ஷல் நேசமணி



கலைவாணர் என்.எஸ்.கே.

இருந்த ம.பொ.சி. சென்னை மாநகராட்சியில் சிறப்புக்கூட்டமொன்றைக் கூட்டினார். சென்னை நகரம் தமிழருக்கே எனும் தீர்மானம் வாக்கெடுக்கப்பட்டு நிறைவேறியதாக மேயர் அறிவித்தார். தீர்மானத்தின் நகல்கள் மூவர் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது.

1952 அன்று பொட்டி ஸ்ரீராமுலு ஆந்திர மாநிலக் கோரிக்கையோடு 'மதராஸ் மனதே' என்று உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கினார். சென்னை நகர் மீது உரிமை கோருவதைக் கைவிட்டால் ஆந்திர மாநிலக் கோரிக்கைக்குத் தமிழரசுக் கழகம் துணை நிற்குமென்று அவரை நேரில் சந்தித்த ம.பொ.சி உறுதியளித்தார். அதற்கு உடன்படாது, போராட்டத்தைத் தொடர்ந்த பொட்டி ஸ்ரீராமுலு 15.12.1952 அன்று உயிர் துறந்தார். பெருங்கலவரம் வெடித்தது. உடனடியாகத் தனி ஆந்திர மாநிலம் அமையுமென்று 19.12.1952 அன்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார் பிரதமர் நேரு. அதற்காக நியமிக்கப்பட்ட இராஜஸ்தான் நீதிபதி வாஞ்சு, ஆந்திராவின் இடைக்காலத் தலைநகராகச் சென்னை இருக்கப் பரிந்துரை செய்தார். இதனை எதிர்த்து மீண்டும் மாநகராட்சியின் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது. அப்போதைய மேயர் செங்கல்வராயனின் ஒத்துழைப்பில், 'ஆந்திர அரசுக்குத் தற்காலிகமாகக்கூடச் சென்னை நகரில் இடம்தரக் கூடாது' எனும் தீர்மானத்தை 03.01.1953 அன்று நிறைவேற்றினார் ம.பொ.சி.

சென்னை மேயர் த.செங்கல்வராயன், ம.பொ.சி. ஆகியோர் 16.03.1953 அன்று சென்னை நகரின் உரிமை குறித்துக் கட்சிச் சார்பற்ற கூட்டமொன்றைச் சென்னைக் கடற்கரையில் கூட்டினர். இக்கூட்டத்தில் பெரியார், எஸ்.எஸ்.கரையாளர், மீனாம்பாள் சிவராஜ், எஸ்.முத்தையா முதலியார், எம்.பக்தவத்சலம், ம.பொ.சி ஆகியோர் பேசினர். சென்னை நகரம் தமிழருக்கே உரியது என்ற தீர்மானம் இக்கட்சிக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

சென்னை மாநகராட்சியின் தீர்மானமும் முதல்வர் இராஜாஜியின் பதவி விலகல் முடிவும் நேருவுக்குக் கடும் நெருக்கடியைத் தரவும் சென்னை நீங்கலாகத் தகராறுக்கு இடமில்லாத சித்தூர் மாவட்டம் உள்படத் தெலுங்கு பேசும் மாவட்டங்களைக் கொண்டு ஆந்திர மாநிலம் உருவாக்கப்படும் என்று உறுதியளித்தார். ஆனால் தகராறுக்குரிய தமிழ்ப்பகுதிகளான திருத்தணி, புத்தூர், சித்தூர், காளஹஸ்தி, திருப்பதி, பலவனேரி ஆகிய ஆறு வட்டங்கள் சித்தூர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தன. இதை எதிர்த்து சித்தூர் பகுதியில் பொது வேலை நிறுத்தம், இரயில் மறியல் போன்ற போராட்டங்கள் நடத்தப்பட்டன.

1953இல் எல்லை ஆணையம் அமைக்கக் கோரித் திருத்தணிகையில் தடையை மீறி அறவழிப் போராட்டம் நடத்தப் போவதாக ம.பொ.சி அறிவித்தபோது அதனைக்



பேரறிஞர் அண்ணாவுடன் ம.பொ.சி.

கைவிடும்படி முதல்வர் இராஜாஜி தந்தி அனுப்பினார். அவருக்கு ம.பொ.சி. எழுதிய கடிதத்தில், “தலைவர்கள் வருவார்கள், போவார்கள். தமிழ்நாடு அப்படி வந்துபோகும் பொருளல்ல; புனித பூமி. தலைவருக்குக் காட்ட வேண்டிய மரியாதைக்காகத் தமிழகத்தின் எல்லைகளைப் பறிகொடுக்க இயலாது” என்று பதில் அனுப்பிவிட்டுத் தடையை மீறிச் சிறைப்பட்டார். எல்லை ஆணையம் அமைக்கப்படுமென்று ஒப்புக்கொண்டு ஓராண்டாகியும் அமைக்கப்படாததால் அதனைக் கண்டித்து, 03.07.1954 அன்று சித்தூர் தினம் கொண்டாடப் பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

காங்கிரஸ் கட்சி விதித்த தடையை மீறித் தமிழரசுக்கழகம் சென்னையில் பொதுக்கூட்டத்தை நடத்தியது. 1956 தொடங்கி தமிழரசுக் கழகம் சார்பாக இடைவிடாத போராட்டங்கள் நடைபெற்றன. ம.பொ.சி, தளபதி விநாயகம், கோல்டன் சுப்பிரமணியம், கவி கா.மு.ஷெரீப், டி.கே.சண்முகம், ரஷீத், ஜி.உமாபதி ஆகியோர் சட்டமன்றம் முன்பு தொடர் மறியல் போராட்டம் நடத்திக் கைது செய்யப்பட்டனர். இந்தப் போராட்டத்தில் சிறைப்பட்ட தமிழரசுக் கழகத் தோழர்கள் பழனி மாணிக்கம், திருவாலங்காடு கோவிந்தசாமி ஆகியோர் சிறைச்சாலையிலேயே வீர மரணம் அடைந்தனர். பழனி மாணிக்கம், தெற்கெல்லைப் போரில் 15 நாளும் சென்னையைக் காக்கும் போரில் 7 நாளும் வடக்கெல்லைப் போரில் 15 நாளும் சிறைத்தண்டனை அனுபவித்து பழனிச் சிறையிலேயே பலியானார்.

1956 டிசம்பர் இறுதியில் நேரு அரசு படஸ்கர் தலைமையில் எல்லை ஆணையம் அமைத்தது. 1957இல் ஆணையம் வழங்கிய தீர்ப்பின்படி திருத்தணி வட்டத்தில் 290 கிராமங்கள், சித்தூரில் 29 கிராமங்கள், புத்தூரில் 320 கிராமங்கள், 417 சதுர மைல் நிலப்பரப்பு ஆகியவை தமிழகத்தில் சேர ஆணையிடப்பட்டது. வள்ளிமலை, திருவாலங்காடு, திருத்தணி, ஒசூர் பகுதிகள் தமிழகத்துக்குக் கிடைத்தன. ஆனால் முன்பு



தமிழ்ப்பகுதிகளாக இருந்த சித்தூர், நெல்லூர் மாவட்டத்தின் பல பகுதிகளை ஆந்திரத்துக்கு இழந்தோம். அதனால் வடபெண்ணாறு, ஆரணியாறு, பொன் வாணியாறு முதலிய ஆறுகளை இழந்ததுடன் அதன் வளமான மண் தமிழகத்திற்குச் சேராமல் போனது. ஆரணி ஆற்றின் பாசனப் பகுதி தமிழ்நாட்டில் இருந்தாலும் அணைக்கட்டுப் பகுதியினை ஆந்திராவுக்குத் தாரை வார்த்தோம்.

1946 அக்டோபர் 25 அன்று நாகர்கோயில் நகரின் ஒரு பகுதியான வடிவீசுவரத்தில் வடிவை வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழாவில் பேசியதே ம.பொ.சியின் தெற்கெல்லைக் கிளர்ச்சி பற்றிய முதல் பேச்சு. அந்நாளில் திருவிதாங்கூர் சமஸ்தானம் தனி அரசாக இருந்தது. 1953–54 ஆண்டுகளில் தெற்கெல்லைப் பகுதிகளைக் கேரள முடியாட்சியிலிருந்து மீட்கப் போராடியது தமிழரசுக் கழகம். தமிழக வடக்கு – தெற்கு எல்லைக் கிளர்ச்சிகளைத் தமிழகம் தழுவிய அளவில் தொடங்கி வைத்தது தமிழரசுக் கழகமே. அக்கட்சியைச் சேர்ந்த பி.எஸ்.மணி, ம.சங்கரலிங்கம், நாஞ்சில் மணிவர்மன், பி.ஜே. பொன்னையா ஆகியோர் தெற்கெல்லைக் கிளர்ச்சியில் திருவிதாங்கூர் ஆட்சி நடத்திய துப்பாக்கிச்சூடு காரணமாக உயிர்நீத்த தமிழரசுக் கழகத் தோழர்களான தேவசகாயம், செல்லையா ஆகிய இருவரையும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

1946 முதல் 1960 வரை தமிழக எல்லைப் போரில் தீவிரம் காட்டினார். பின்னர் ம.பொ.சி. சென்னை மாகாணத்திற்கு "தமிழ்நாடு" பெயர் சூட்டக் கோரி தமிழரசுக் கழகச் செயற்குழு கூட்டத்தில் 29.11.1951 அன்று தீர்மானம் நிறைவேற்றினார். 1967இல் அன்றைய முதலமைச்சர் அண்ணா அவர்கள் சட்டப்பேரவையில் "தமிழ்நாடு" பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டு வந்தார். அது ஆங்கிலத்தில் டமில்நாட் (Tamil Nad) என்று இருந்தது. அதை ஆங்கிலத்திலும் Thamizh Nadu என்று திருத்தம் கொடுத்தார் ம.பொ.சி. இத்திருத்தத்தின்





ஒரு பகுதியை ஏற்றுக்கொண்ட அண்ணா அவர்கள் Tamil Nadu என்று தீர்மானத்தை முன் மொழிந்தார். அத்தீர்மானம் பின்னர் நாடாளுமன்ற ஒப்புதல் பெற்றது.

ம.பொ.சி. எழுப்பிய தமிழக எல்லைக் காப்பு, தமிழ்நாடு பெயர் மாற்றம், தமிழ் ஆட்சிமொழி, மாநில சுயாட்சிக் கோரிக்கைகள் என அனைத்துமே தமிழ், தமிழர், தமிழ்நாடு எனத் தமிழ்த்தேசிய இனத்தின் நலனை முன்வைத்தவை. எல்லைப்போர், தலைநகர் மீட்பில் அவர் காட்டிய மனவுறுதியும் விடாமுயற்சியும் தொடர் போராட்டமுமே இன்றைய தமிழகத்தை நமக்குப் பெற்றுத் தந்தது. அதற்குப் புதிய தமிழகம் என அவர் பெயரிட்டார். அதை அவருடைய சொற்களிலேயே பார்க்கலாம்.

“பூரண சுதந்திரம் உடைய தமிழகமே என் குறிக்கோளாக இருந்ததால், அந்தத் தமிழகம் தானே விரும்பி மத்திய சமஷ்டியில் இணைய வேண்டும் என்பது எனது கொள்கையாக இருந்ததால் – மூன்று அதிகாரங்களை மட்டுமே தானே விரும்பி மத்திய அரசிடம் விட்டுவிட்டு, ‘எஞ்சிய அதிகாரங்கள்’ உள்ளிட்ட இதர எல்லா அதிகாரங்களையும் கொண்ட சுயாட்சிப் பிரதேசமாகத் தமிழகம் விளங்க வேண்டும் என்று நான் விரும்பியதால், அந்தத் தமிழகத்திலே சுரண்டலுக்கு வாய்ப்பில்லாத சோஷலிசத் தமிழரசு அமைய வேண்டும் என்றும் நான் எண்ணியதால், எல்லா வகையிலும் புத்தம்புதிய ஒரு தமிழகமே என் உள்ளத்தில் உருவாகி யிருந்தது. அதனாற்றான் ‘புதிய தமிழகம்’ எனப் பெயர் கொடுத்தேன்” என்று தமிழ் முரசு முதல் தலையங்கத்தில் எழுதியிருப்பார்.

தமிழ் மண்ணைக் காக்க எத்தனையோ பேர் உயிர்த் தியாகம் செய்திருக்கின்றனர். பலர் தம் சுக வாழ்வை இழந்திருக்கின்றனர். பல போராட்டங்களுக்குப் பிறகு கிடைத்திருக்கும் இன்று நாம் வாழும் நம் புதிய தமிழகத்தைக் காக்கும் பொறுப்பு நம் ஒவ்வொருவருடையதுமாகும். உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்.

**கட்டுரையாளர் குறிப்பு தி.பரமேசுவரி**

ம.பொ.சி. பார்வையில் பாரதி, சமூகம் வலைத்தளம் பெண், சொல்லால் அழியும் துயர் ஆகிய நூல்களின் ஆசிரியர். மூன்று கவிதைத்தொகுப்புகளும் வெளி யிட்டிருக்கின்றார். 1940 – 1980 வரையிலான அரசியல் காலம் குறித்து ஆய்வு செய்வதுடன் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வருகிறார்.

# தமிழக எல்லைக் காத்திட்ட அண்ணல் தங்கோ

**‘வீட்டுக் கரண் சுவரும்! – வயலுக்கு**
**வேலியும் வைப்பது போல்!**
**நாட்டுக் கரண் வகுப்போம்! – முத்தம்மா!**
**நல்லர சாட்சி செய்வோம்!**
**திருப்பதி, திருக்கா ளத்தி! – வடவெல்லை!**
**தென் எல்லை குமரி முனை!**
**சிறப்புள்ள குடகு மேற்காம்! – சென்னை தான்**
**செந்தமிழ் நிலக் கிழக்காம்!**

தமிழ்நாட்டின் எல்லைகளை நாம் எவ்வாறு காக்க வேண்டும், தமிழ்நாட்டின் பூர்விக எல்லைகள் நாம் எதுவெதுவென வரையறை செய்து எழுதப்பட்ட மேற்கண்ட கவிதை வரிகள்தாம், அண்ணல் தங்கோ கவிதை நூல்களின் வைர வரிகளாகும்.

முருகப்ப – மாணிக்கம்மாள் இணையருக்கு முதல் மகனாக 12.04.1904 அன்று பிறந்து 04.01.1974 அன்று மறைந்த அண்ணல் தங்கோவின், தமிழ்நாட்டு எல்லைகளைக் காத்த போரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததும், இங்குப் பதிவிடத்தக்கதாகும்.

இந்தியத் துணைக்கண்டம் வெள்ளையரின் அடிமைத்தளத்திலிருந்து விடுபட்டு, 1947இல் விடுதலை பெற்றதும், பல்தேசிய இனங்களின், பல மாநிலங்களின் தொகுப்பான இவ்விந்தியத் துணைக் கண்டத்தில், பல்வேறு இனக் குழுக்களிடையேயும், பல மாநிலங்களிடையேயும், முரண்பாடான முட்டல், மோதல்கள் தீவிரமடையத் துவங்கின.

பல்தேசிய இனங்களின் கூட்டிணைப்பான இத்துணைக் கண்டத்தில், பல மாநிலங்கள், தத்தமது அண்டை மாநிலங்களின் எல்லைகளையோ, அதையும் தாண்டி அவ்வம்மாநிலங்களின் பூர்வீகப் பகுதிகளையும் சொந்த உரிமை கொண்டாடி, தமக்கென உரித்தாக்கத் துடித்தன. பல மோதல்கள் தொடர்ந்தன.



# செ.அருள்செல்வன்

**(அண்ணல் தங்கோ பெயரன்)**

ஒவ்வொரு மாநிலமும், தம் தேசிய இன சுய நிர்ணய உரிமையை நிலைநாட்ட, மண்மீது பேராசை கொண்டு அபகரிக்க முயன்றன. இவ்வாறு தத்தமது மொழிவாரியாகப் பிரிக்கப்பட வேண்டிய தேவையேற்பட்ட நிலையில், தமிழ்நாடும், தம் உரிமையை நிலைநாட்டி, தம் எல்லைகளைக் காக்க வேண்டிய நெருக்கடி நிலை உருவாயிற்று.

வெள்ளையர்களால் இணைக்கப்பட்ட இந்தியத் துணைக் கண்டம், ஒரே நாடாகப் பரிணமிக்கத் துவங்கியபின், ஒவ்வொரு மாநிலமும் தத்தமது தனித்தன்மை, மொழி, இனப் பண்பாடுகளை, சிறப்புக் கூறுகளை மீட்டுருவாக்கம் செய்யத் துடித்தன.

நம் தமிழ்நாட்டின் எல்லைகளை வரையறை செய்தபோது, அண்டை மாநில அரசுகள், தங்கள் மாநிலங்களின் எல்லைகளில், தமிழ்நாட்டு பூர்வகுடி பகுதிகளை, அபகரிக்கத் துடித்து, ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டனர்.

தமிழர்களான நமக்கு, பேராசை கொண்டு பிற மாநிலங்களின் பூர்வீக இடங்களையோ, எல்லைகளையோ, வலுக்கட்டாயமாக அபகரிக்கும் தீங்கெண்ணம் என்றும் இருந்ததில்லை.

பிற மாநிலத்திற்குச் சொந்தமான பகுதிகளையோ – எப்போதும் உரிமை கொண்டாடியதில்லை.

‘கடல் கொண்ட தென்னாடு’ எனும் நூலில் பன்மொழிப் புலவர் க.அப்பாதுரையார் அவர்கள், சங்க காலத்திற்கு முன்பே, தமிழ்நாட்டின் எல்லைகளாக நிலவியவற்றைச் சான்றாக / சான்றாவணங்களாகச் சுட்டிக்காட்டியதை, மீட்டெடுக்கவே தமிழர்களின் நெருக்கடியாயிற்று.

மாநிலங்களை மொழிவாரியாகப் பிரிக்க வேண்டுமென, அந்தந்த மாநிலங்கள் போராடத் துவங்கிய வேளையில், தலைமை அமைச்சர் நேரு அவர்கள், இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமேயே, ஐந்து அரசாளும் பகுதிகளாகப் பிரித்து, திட்டம் ஒன்றை வெளியிட்டார்.

1. **தட்சிணப் பிரதேசம்**
2. **உத்தரப் பிரதேசம்**
3. **மேற்குப் பிரதேசம்**
4. **கிழக்குப் பிரதேசம்**
5. **மத்தியப் பிரதேசம்**

இதில், தட்சிணப் பிரதேசம் என்பது, தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் என 3 மாநிலங்களை உள்ளடக்கியதாகும். இயல்பான இன உணர்வும், தம் பூர்வீக எல்லைகளைக் காத்து, அடுத்த தலைமுறையினருக்குத் கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டுமென்ற தலைமை அமைச்சர் நேரு அவர்களின், தட்சிணப் பிரதேச திட்ட அறிக்கை, தமிழர்களிடையே மாபெரும் கொந்தளிப்பையும், போராட வேண்டிய மிகு உணர்வையும் தூண்டியது.




தட்சிணப் பிரதேச திட்டத்தை எதிர்க்கவும், தமிழ்நாட்டின் எல்லைகளைக் காத்திடவும், பிற மாநிலங்கள் நம் எல்லை / அண்டைப் பகுதிகளைக் கைப்பற்றா வண்ணம் – போராட்டங்களும் கிளர்ச்சியும் வெடிக்கத் துவங்கின.

பல்வேறு தமிழறிஞர்கள், தமிழ் காப்பு அமைப்புகள், எல்லை காப்பு மறவர்கள் களத்தில் குதித்துப் போராடினர். அக்காவலர்களின் பட்டியல் பெரிது.

ஒரு கட்டத்தில், சி.பா.ஆதித்தனார் அவர்கள், தமிழ்நாடு மற்றும் தமிழ்நாட்டின் எல்லை இயற்கை அமைப்பு என்பதே –

தமிழ்நாடும், புதுச்சேரி மற்றும் இலங்கை உட்பட்ட ஒரே நிலப்பரப்பு முழுமை கொண்ட நிலவரைபடமே, தமிழ்நாட்டின் முழு வடிவம் – அதையே நாம் மீட்டெடுக்க வேண்டுமெனக் கோரும் அளவிற்குச் சென்றது.

தலைமை அமைச்சர் நேரு அவர்களின் தட்சிணப் பிரதேச திட்ட அறிவிப்பை, அண்ணல் தங்கோ கொதித்தெழுந்து எதிர்த்தார். நம் பூர்வீகத் தமிழ்மண்ணின், நீண்டகால, சங்க காலம் தொட்டே, தமிழர்கள் காலங்காலமாக, (பாட்டன், பூட்டன் என்று வரிசையாக) வாழும் பகுதிகளின் எதிர்கால நிலையெண்ணி வருந்தி, தமிழர்கள் விழிப்புணர்வு பெற்று, எந்த நிலப்பகுதிகளையும் அண்டை மாநிலத்திற்கு விட்டுவிடக் கூடாது என்று போராட வேண்டிய தேவையை உணர்த்தினார்.

நம் மண் – நம் தமிழ் மண் என்றென்றும் நமக்கே உரிமையானது. இவ்வுரிமையை நிலைநாட்ட, அண்ணல் தங்கோ நடத்திய ‘தமிழ் நிலம்’ வார இதழில் கவிதைகளாகவும், அறிஞர் பெருமக்களின் விழிப்புணர்வு கட்டுரைகள் வாயிலாகவும், துண்டறிக்கைகள் மூலமாகவும் வெளிப்படச் செய்தார்.

கடல்சூழ் கன்னியாகுமரி மாவட்டத்தை நாம் இழந்துவிடக் கூடாது என,



...க்கல்லில் செதுக்கிவைத்துக் கொள்ளவேண்டிய–

தமிழர் முன்னேற்றத் திருவாய்மொழிகள்!

1. தமிழ்மொழி—வளர்ந் தோங்குக!
2. தமிழர்கள்—சிறந் தோங்குக!
3. தமிழ்நிலம்—உயர்ந் தோங்குக!
4. தமிழ்க்கலை—மலர்ந் தோங்குக!
5. தமிழ் அரண்—எழுந் தோங்குக!
6. தமிழ்க்கொடி—பறந் தோங்குக!
7. தமிழர் படை—மறம் ஓங்குக!
8. திருக்குறள்—அறம் ஓங்குக!
9. திருவருள்—நிறைந் தோங்குக!
10. பகுத்துண்டு—பல்லுயிர் ஓம்புக!
11. அறத்தொண்டு—அன்பினில் ஓங்குக!
12. பொய்ம்மை, பொறாமை,—போர், பகை ஒழி[illegible]
13. உண்மை, நன்மை,—உலகெலாம் ஓங்குக!
14. அடிமை, வறுமை—மடமை ஒழிக!
15. உரிமை, ஆண்மை—கடமை, எழுக!
16. உலகந் தமிழ்மக்கள் தற்காப்புப் பேரவை— உரம்பெற் றோங்குக! ஓங்குக!



அண்ணல் தங்கோ



‘கோமதியின் காதலன்’ திரைப்படத்தில் பாடல் இயற்றிய அண்ணல் தங்கோ,

**தெள்ளித் தரும் திணைமா! – முத்தம்மா!**
**தித்திக்கும் நன்மலைத் தேன்!**
**முத்தளித்த கடலைப் – பகைவர்**
**முற்றுகை போடுவதோ!**

எனக் கேள்வியெழுப்பிப் பாடல் வாயிலாக உணர்வூட்டினார்.

தமிழ் நிலத்தின் பூர்வீக எல்லையிடங்களை அண்டை மாநிலங்களின் பேராசைக்கு விட்டு விடக்கூடாது எனத் தாம் எழுதிய ‘அண்ணல் முத்தம்மாள் பாடல்’ நூலில்,

**தலைகள் கொடுத்தும் – தமிழ்**
**நாட்டைப் புரப்போம்!**
**திருமலை மேலே – தமிழ்க்**
**கொடி உயர்த்துவோம்!**
**சென்னை, காளத்தி – குமரி**
**எங்கு மாளுவோம்!**

எனத் தமிழர்களை தட்டியெழுப்பும் வரிகளை எழுதி, எல்லைக் காக்கும் போராட்டத்தை மேற்கொள்ள, தமிழர்களிடையே விழிப்புணர்வைத் தூண்டினார்.



நேரு

அனைத்திற்கும் மேலாக, 24, 25.01.1953 சனி, ஞாயிறு இரு நாளில் ‘**தமிழக எல்லைத் தற்காப்பு மாநாட்டை**’ (Tamil Nadu Territories Protection Conference) புரட்சிகரமான வரலாற்றில் பதிவு செய்யத்தக்க மாநாட்டை, தமிழக முன்னணித் தலைவர்களைக் கொண்டு நடத்திக் காட்டினார்.

தமது வறுமை நிலையிலும், தம் துணைவியார் சிவமணி அம்மாளின் நகைகளை விற்று, அந்தப் பணத்தில் அம்மாநாட்டை நடத்தி, தமிழக எல்லைப் பகுதிகளைக் காக்கத் துணிந்தார்.

1952இல் சிறப்புற நடைபெற்ற மாநாட்டில், நாவலர் ச.சோமசுந்தர பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், கி.ஆ.பெ.வி., க.அப்பாதுரையார், தாரிபிடோ – சனார்த்தனம், கலைஞர் கருணாநிதி, திருக்குறள் முனுசாமி, பேராசிரியர் க.அன்பழகன் போன்றோர் கலந்துகொண்டனர்.

தமிழ்க் கொடியை ஏற்றித் துவக்கப்பட்ட இந்த மாநாட்டின் தலைவர் பாவேந்தர் பாரதிதாசன் தமிழக எல்லைப்பட திறப்பு விழா திறப்பு நாவலர் ச.சோமசுந்தர பாரதியார்.

அண்ணல் தங்கோவின் ‘உலகத் தமிழ் மக்கள் தற்காப்புப்

பேரவை' அமைப்பு மூலமாக நடந்த இந்த 'தமிழக எல்லைத் தற்காப்பு மாநாட்டில்' அண்ணல் தங்கோ, தமிழக எல்லைகளை வரையறை செய்து, கொணர்ந்த மாநாட்டுத் தீர்மானம்:

"தமிழர் பெருமைக்குரிய தமிழ்க் கொடியின் கீழ் நிமிர்ந்து நின்று, உரிமை முரசு கொட்டி, தமிழர் முன்னேற்றத் திருவாய் மொழிகளை வானிசைக்க முழக்கி, யாம் தமிழர்! எமது நிலம் தமிழ் நிலம்! இத் தமிழ்த் திருநிலம் இக்கால வரலாற்றுப்படி, – வட வேங்கடம் – தென்குமரி ஆயிடைத் தமிழ்க் கூறு நல் உலகம்! ஆம்! அஃதாவது, வடக்கெல்லையாகத் திருமலை, திருப்பதி, காளத்தி, திருத்தணி, புத்தூர், வள்ளிமலை, பல்லவனேரி, கங்குத்தி முதலிய வட்டங்களைக் கொண்ட சிற்றூர் மாவட்டத்தையும், கிழக்கெல்லையாக நெல்லூர் மாவட்டத்தையும், தமிழக மாநகர (சென்னை) மாவட்டம், புதுவை, வங்கக் குடாக் கடல் சூழ் சோழ மண்டலப் பெருவட்டத்தையும், தெற்கெல்லையாகக் கன்னியாகுமரி மாவட்டம் எனும் தமிழ்க் கலையழகி மாவட்டம், திருவிதாங்கூர் மாவட்டமும், தென்கடலையும், மேற்கெல்லையாக நீலமலை, பாலைக்காடு, கோழிக்கோடு, கண்ணனூர் வட்டங்கள் கொண்ட மலைஞாலப் பகுதிகளையும், குடக்கோ (மான்) வாழ்ந்த குடகு, கொச்சி, மேற்குக் கடலையும் கொண்ட தமிழ் நிலம் ஆகும்!

இம் முத்தமிழ் நிலம் சேர, சோழ, பாண்டியத் தமிழர் மூவேந்தராண்ட தமிழ்நிலம்! இது தமிழர்களாகிய எமக்கே உரியதாகும்! – என உரிமை முரசொலித்து முழங்கி, தீர்மானத்தைக் கொணர்ந்தார்.

மேற்படித் தீர்மானத்தைத் துண்டறிக்கைகள் மூலமாகவும், தாம் நடத்திய '**தமிழ் நிலம்**' வார இதழிலும் கொணர்ந்து தமிழ்மக்களுக்கு அறியப்படுத்தி, எல்லைப் பகுதிகளைக் காக்க அணியப்படுத்தினார்.

'உரிமைத் தமிழரசு கண்டு, எமது தமிழ் நிலத்தை (தமிழ் நாட்டை) யாமோ யாளுவோம்!' என முரசறைந்தார் அண்ணல் தங்கோ.

மேற்படி 'தமிழக எல்லைத் தற்காப்பு மாநாடு' அண்ணல் தங்கோ நடத்தியமைக்கு சான்றாவணமாக, பூக்கூடைப் பதிப்பக நூல் 'என் நினைவுகளில் பாவேந்தர்' நூலாசிரியர் த.கோ. வேந்தன் எழுதியமையும், தமிழ்க்குலம் பதிப்பகத்தில் பழ.நெடுமாறன் அவர்களெழுதிய 'தமிழன் இழந்த மண்' நூல்களும், அண்ணல் தங்கோ அவர்களெழுதிய 'அண்ணல் முத்தம்மாள் பாடல்கள்' நூலும் சான்றாகும்.



**பாரதிதாசன்**



**நாவலர் சோமசுந்தர பாரதி**



**திருக்குறளார் முனுசாமி**



கலைஞர்



சி.பா.ஆதித்தனார்



பேராசிரியர் க.அன்பழகன்

24, 25.01.1953இல் அண்ணல் தங்கோ நடத்திய **'தமிழக எல்லை உரிமை தற்காப்பு மாநாடு'** (Tamil Nadu Territories Protection Conference) இம்மாநாட்டில் அவருக்கு உறுதுணையாக இருந்த முன்னோடி போராளிகள் வி.ஆர்.சி.சீதாபதி வழக்கறிஞர் வரவேற்புக் கழகத் தலைவராகவும், துணைத் தலைவர்களாக ஷி.அரங்கநாத முதலியார் (இவர் சிற்றூரைச் சார்ந்தவர்), வழக்கறிஞர் வி.சி.சதாசிவம் அவர்களும், துணைச் செயலாளர்களாக, வாணியம்பாடி வெ.ச.விசுவநாதன் அவர்களும், சி.சாமண்ண கவுண்டர் ஆகிய பெருமக்களாவர். மேலும் இம்மாநாட்டில் டி.சீனிவாசன், இ.திருநாவுக்கரசு மற்றும் ஆர்.சுப்ரமணியம் கூடுதல் செயலாளர்களாக அமைக்கப்பட்டனர்.

அருணாசலம் பிள்ளை அவர்கள் மாநாட்டின் பொருளாளராக விளங்கினார்.

இம்மாநாட்டின் மிகப் பெரிய சிறப்பென்னவெனில், மாநாட்டு அழைப்பிதழில், மாநாட்டு வரவேற்புக் கழக உறுப்பினர்களாக – அப்போதைய தமிழ்நாட்டின் முன்னணி தமிழறிஞர்களும், அரசியலாளர்களும், பேராசிரியர்களும், வழக்கறிஞர்களும், என அனைவரின் பெயரையும் அச்சிட்டு வெளியிட்டமையாகும்.

இக்கட்டுரை எழுத அடிப்படைச் சான்றாவணங்கள்;

1. **என் நினைவுகளில் பாவேந்தர்**
   **த.கோவேந்தன்** பூக்கூடை பதிப்பகம்
2. **தமிழன் இழந்த மண்**
   **பழ.நெடுமாறன்** தமிழ்க்குலம் வெளியீடு
3. **அண்ணல் தங்கோ கவிதைகள் தொகுப்பு** அண்ணல் தங்கோ பதிப்பகம்
4. **தமிழக எல்லை உரிமைத் தற்காப்பு மாநாடு**
   24, 25.01.1953 அன்று அண்ணல் தங்கோ வெளியிட்ட துண்டறிக்கை.

# திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழ்நாடும்

'**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**' என்றது தொல்காப்பியம்.

'**வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகு**' என்று தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார் சொன்னார்.

'**நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்**
**தமிழ் வரம்பறுத்த தண்புனல் நல்நாட்டு**' - என்கிறது சிலப்பதிகாரம்.

அப்படி அழைக்கப்பட்ட நாடு இடைக்காலத்தில் சென்னை மாகாணம், மெட்ராஸ் பிரசிடென்சி, மதராஸ் மாகாணம், மெட்ராஸ் என்று எந்த அடையாளமுமற்று அழைக்கப்பட்டது.

'தமிழ்நாடு' என்று தனிப்பெருமையுடன் எப்போது அழைக்கப்பட்டது? திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்தபிறகு 1967ஆம் ஆண்டு சூலை 18ஆம் நாள் அன்னைத் தமிழகத்துக்குப் பெயர் சூட்டத் தனயன் அண்ணா, முதலமைச்சராக வந்த பிறகுதான் நடந்தது.

'ஒரே ஒரு சங்கரலிங்கனார் தான் செத்துப் போயிருக்கிறார் என்று நினைப்பீர்களேயானால் தமிழ்நாடு என்ற ஒவ்வொரு எழுத்துக்கும் சேர்த்து ஐந்து உயிர்களைத் தரத் தயாராக இருக்கிறோம்' என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் குரல் கொடுத்தவர் தமிழினத்தலைவர் கலைஞர் அவர்கள்!

'எல்லாரும் பிரிந்து போனபிறகு தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டாமல் ஏன் இருக்க வேண்டும்? அதனைப் பார்த்துக் கொண்டு நான் ஏன் உயிரோடு இருக்க வேண்டும்?' என்று 1956இல் கேட்டவர் தந்தை பெரியார்.

பிள்ளை பிறந்ததும் பேர் வைத்திருந்தால் பிறந்தநாளைக் கொண்டாடலாம். பெயர் வைக்கவே 12 ஆண்டுகள் ஆனதால்தான் பெயர் வைத்த நாளே முக்கியமானதாகிறது. ஏன் 12 ஆண்டுகளாகப் பேர் வைக்க முடியவில்லை என்பதில்தான் வரலாறு அடங்கி இருக்கிறது.

'**தமிழ்நாடு வாழ்க**' என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் குரல் கேட்க நடந்த போராட்டங்கள், தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால்



## ப.திருமாவேலன்

பொறிக்கத்தக்கவை. அதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்களிப்புகள் உன்னதமானவை.

‘திராவிட நாடு’ கேட்டுப் போராடிய காலத்திலும் மொழிவாரி மாகாணம் அமைக்கும் போராட்ட நோக்கத்தைக் கழகம் ஏற்றுக்கொண்டது. தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் தமிழ்நாட்டுக்குள்தான் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டது தி.மு.க. அதே நேரத்தில் ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மாகாணங்கள் கொண்ட தனிக்கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு போராட்டங்களை முன்னெடுத்தது தி.மு.க. 1963 வரை இத்தகைய போராட்ட இலக்குகள் இருந்தன.

இந்நிலையில் தமிழகத்தின் வடக்கு எல்லை, தெற்கு எல்லை ஆகியவற்றைக் காக்கும் போராட்டங்களில் கழகத்தின் செயல்பாடுகள் கவனத்துக்குரியவை.

வடக்கு எல்லை என்பது திருத்தணியைத் தமிழகத்துக்குப் பெறும் போராட்டம் ஆகும். தென் எல்லை என்பது குமரி உள்ளிட்ட பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்கும் போராட்டம் ஆகும்.

### மும்முனையின் ஒரு முனை!

சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர்கள் தங்கள் பகுதி தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று போராட்டம் நடத்தினார்கள். தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி.யும், விநாயகமும் பேரறிஞர் அண்ணாவைச் சந்தித்து இந்த போராட்டத்துக்கு ஆதரவு தர வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார்கள். சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினர்கள் அனைவரும் இதில் பங்கெடுப்பார்கள் என்று பேரறிஞர் அண்ணா அறிவித்தார். 144 தடை உத்தரவை மீறி கழகத் தொண்டர்கள் ஏ.எல்.சி. கிருஷ்ணசாமி தலைமையில் மறியல் செய்து கைதானார்கள். இதைத் தொடர்ந்து தினந்தோறும் ரயிலை மறிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. தி.மு.க.வினர் இதில் பங்கெடுத்தனர். ‘இப்படிப் போராடுபவர்கள் அனைவரும் முட்டாள்கள்’ என்று பிரதமர் நேரு கூறியது போராட்டக்காரர்களை அதிகம் கொந்தளிக்க வைத்தது.

தமிழர்களை பிரதமர் நேரு விமர்சித்ததைக் கண்டித்து அவருக்கு எதிராகக் கருப்புக் கொடி போராட்டத்தை தி.மு.க. செயற்குழு அறிவித்தது. இதுதான் வரலாற்றுச் சிறப்பு மிக்க மும்முனைப் போராட்டம் ஆகும். மும்முனைப் போராட்டத்தில் ஒன்று தான், சித்தூர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திய நேருவைக் கண்டித்து ரயில் மறியல் நடத்துவது என்பதாகும். இப்போராட்டத்தை எழுச்சியுடன் தி.மு.க. நடத்தியது.

நாடு முழுவதும் இரயில் மறியல் போராட்டத்தைக் கழகம் அறிவித்தது. (1953 – ஜூலை 15) சுமார் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தமிழகம் முழுவதும் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார்கள். தூத்துக்குடியில் நடந்த ரயில் மறியல் போராட்டத்தில் பங்கெடுத்த கழகச் செயல்வீரர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. நான்கு பேர் உயிரிழந்தார்கள்.

01.10.1953 அன்று மதுரைக்கு வந்தார் பிரதமர் நேரு. மதுரை முத்து தலைமையில் நேருவுக்கு கருப்புக்கொடி காட்டப்பட்டது. நேரு செல்லும் பாதை எல்லாம் கருப்புக் கொடி பறந்தது. 'நான்சென்ஸ் என்று எங்களைக் கூறிய நேருவே திரும்பிப் போ' என்று முழக்கமிட்டார்கள். கோவையிலும் பிரதமருக்குக் கருப்புக் கொடி காட்டப்பட்டது.

## "தேசிய உணர்வே அரசியல் அமைப்பு"

**மொ**ழிவழி மாநில சீரமைப்புக் குழு 1953 டிசம்பர் 23 அமைக்கப்பட்டது. இக்குழுவின் முன் 03.05.1954 அன்று தி.மு.க. தனது கருத்தை அளித்தது.

"பரந்த இந்தியத் துணைக்கண்டமானது, இன்றைய தினம் வலிந்து திணிக்கப்பட்ட பல நிருவாகப் பகுதிகளின் தொகுப்பாகக் காட்சியளிக்கிறது. மொழிவழி பிரிவினை என்பது பல்லாயிரக்கணக்கானவர்கள் தத்தமது தாயகத்தைப் பெறவும், தங்களது அறிவால் ஆற்றலால் அதைச் சீராக்கிச் செம்மைப்படுத்தவும் விரும்பும் இதய எழுச்சியாகும். இதுதான் தேசிய உணர்வாகும். மொழிப்பற்று இந்த உணர்வின் வெளிப்படை அம்சமாகும். ஒரு பொதுவான தாய்மொழியின் மூலம் உறவு கொண்ட ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தங்கள் இயற்கையான தேசிய விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள அமைக்கப்படும் ஒரே அரசியல் அமைப்பு இது." என்று தனது அறிக்கையில் தி.மு.க. குறிப்பிட்டது.

07.03.1954 திருச்சி தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இப்பிரச்சினை விரிவாகச் சொல்லப்பட்டது. "தமிழகத்தை ஒட்டித் தொடர்ந்தாற்போல் உள்ள சித்தூர் மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகள் மொழிவழி மாநில அடிப்படையில் தமிழகத்தோடு இணைக்கப்படுதல் வேண்டும். சித்தூர் தமிழ்ப்பகுதிகளை இப்பொழுது ஆந்திர மாநிலத்தோடு சேர்த்துக் கணக்கிட்டிருப்பது தமிழக மொழிவழி உரிமைக்கு இழைத்த அநீதியாகும். இந்த அநீதியைத் துடைப்பதற்கான முயற்சிகளிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டு கழகத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் தங்களால் ஆன அளவு பாடுபட்டு வரும் கழகத் தோழர்களைப் பாராட்டுகிறோம். அதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுக்க என்.வி.நடராசனைத் தலைவராகவும் சி.வி.எம்.அண்ணாமலை, ஏ.எல்.சி. கிருஷ்ணசாமி, கே.எம்.கண்ணபிரான் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட குழு அமைக்கப்படுகிறது" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## அண்ணாவின் அகண்ட தமிழகம்!

**இ**தேபோல் தெற்கு எல்லை குறித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "தமிழகத்தின் தெற்குப் பகுதியில் தமிழகத்தோடு ஒட்டி திருவிதாங்கூர் கொச்சி மாநிலத்தில் இருக்கும் நாஞ்சில் பகுதியும், பிற தமிழ்ப் பகுதிகளும் தமிழகத்தோடு இணைய வேண்டும் என்ற கருத்தை நாஞ்சில் மாவட்டம் முதல் தி.மு.கழக மாநாட்டிலும் திராவிட முன்னேற்றக் கழக முதல் சென்னை மாநில மாநாட்டுத் தீர்மானத்திலும் வலியுறுத்திச் சொல்லப்பட்டது.

இதைத் தொடர்ந்து சித்தூர் மாவட்ட மாநாடு 1954 ஜூலை 10, 11 ஆகிய நாட்களில் பொதட்டூர்பேட்டையில் நடந்தது. ஆந்திர மாநிலத்தோடு இணைக்கப்பட்ட தமிழ்ப்பகுதிகளை தமிழகத்தோடு இணைக்க இம்மாநாடு வலியுறுத்தியது. இம்மாநாட்டில் பேசிய பேரறிஞர் அண்ணா அவர்கள், "சித்தூரை ஆந்திராவில் இருந்து மீட்டு தமிழகத்தோடு சேர்க்க வேண்டியது

மகத்தான வேலை. அதேபோல் நாஞ்சில் பகுதிகள் கொச்சியில் இருந்து பிரித்து தமிழகத்தோடு சேர்க்க வேண்டும். புதுவையிலே பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருக்கும் தமிழர்களைத் திராவிடத்துடன் இணைக்க வேண்டும். இந்த நாட்டிலே பிறந்து வாழ வழியின்றி கடல் கடந்து வயிறு வளர்க்கச் சென்றவர்களில் இலங்கையிலே வாழுகின்ற இலட்சக்கணக்கான திராவிடரின் உரிமை காக்க பணிபுரிய வேண்டும்'' என்று அனைத்தையும் வரிசைப்படுத்தினார்கள்.

சித்தூர் பிரச்சினைக்காக மத்தியில் ஆளும் நேருவையோ, மாநிலத்தை ஆளும் காமராசரையோ எதிர்த்துப் போராடத் தேவையில்லை, ஆந்திர முதலமைச்சர் பிரகாசத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்று தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி. சொல்லி இருந்ததை அண்ணா கண்டித்தார்.

சித்தூரை தமிழகத்தோடு இணைக்கவேண்டும் என்று கே.ஏ.மதியழகன், நாகர்கோவில் வி.எம்.ஜான், சித்தூர் என்.கேசவன் ஆகியோர் முன்மொழிந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதே மாநாட்டில் தெற்கு எல்லை தொடர்பாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு-கொச்சியில் வாழும் 15 இலட்சம் தமிழ் மக்கள் மொழி அடிப்படையில் தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டும் என்ற கிளர்ச்சியை இம்மாநாடு வரவேற்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதே கோரிக்கையை வலியுறுத்திப் போராடியவர்கள் கைது செய்யப்பட்டு இருப்பதை இம்மாநாடு கண்டித்தது. இந்தத் தீர்மானத்தை நாகர்கோவில் வி.எம்.ஜான், அ.பொன்னம்பலம் ஆகியோர் முன்மொழிந்தார்கள்.








நேரு


ம.பொ.சி.


பூபேஷ் குப்தா

## தென் எல்லையில் திமுக!

**ஜூ**லை 23 தென் எல்லை போராட்டத்தில் கலந்துகொள்ளப் பேரறிஞர் அண்ணாவும் கே.ஏ.மதியழகனும் நாகர்கோவில் வந்தார்கள். நாகர்கோவில் நீதிமன்றம் முன் நடந்த மறியலில் 600 பேர் கைது செய்யப்பட்டார்கள். நாகர்கோவில் நகர தி.மு.க. செயலாளர் வி.எம்.ஜான் அவர்களுக்கு இப்போராட்டம் தொடர்பாக அனைத்து முடிவுகளும் எடுக்க அதிகாரம் கொடுத்தார் அண்ணா. அவர் வெளியிட்ட அறிக்கை தென் எல்லைப் பிரச்சினையினை முழுமையாக விளக்குவதாக அமைந்திருந்தது. நாகர்கோவில் வந்த அண்ணா, திருவிதாங்கூர் போராட்டத் தலைவர்கள் அனைவரையும் சந்தித்தார். இது தொடர்பாக நடந்த பொதுக்கூட்டங்கள் அனைத்திலும் மதியழகன் கலந்துகொண்டு பேசினார்.

நாகர்கோவில், செங்கோட்டை ஆகிய ஊர்களில் மறியல் போராட்டம் திமுக சார்பில் 06.08.1954 அன்று நடந்தது. தமிழ் வாழ்க, நாஞ்சில் நாடு தமிழருக்கே, மத்திய அரசே நியாயம் வழங்கு என்று இவர்கள் முழக்கமிட்டனர். பத்து பத்து பேராகக் கைதானார்கள். நாகர்கோவிலில் 79 பேரும், செங்கோட்டையில் 31 பேரும் கைது செய்யப்பட்டனர். முன்னதாக பல்வேறு அமைப்பைச் சேர்ந்தவர்கள் கைதாகி சிறையில் இருந்தார்கள். மொத்தம் 919 பேர் சிறை வைக்கப்பட்டார்கள்.

இதன் தொடர்ச்சியாகத் தென் திருவிதாங்கூரில் நடந்த அனைத்து போராட்டங்களிலும் தி.மு.க.வினர் கலந்து கொண்டனர். ஆகஸ்ட்–11 அன்று நடந்த மாபெரும் போராட்டத்தைக் கலைக்கத் துப்பாக்கிச்சூடு நடத்திய காவல்துறை 11 பேரைச் சுட்டுக் கொன்றது. ஆகஸ்ட் 15 அன்று தி.மு.க.வினர் நடத்திய போராட்டம் காரணமாக குழித்துறையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. திமுக செயலாளர் ஜான் உள்ளிட்ட 19 பேர் மீது வழக்கு நடந்தது.

ஆகஸ்ட் 11 துப்பாக்கிச்சூட்டைக் கண்டித்து தமிழகம் முழுவதும் அக்டோபர் 22ஆம் நாள் பொது வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டது. அதில் திமுக பங்கெடுத்தது.

## தமிழர் பகுதி பறிபோனதற்கு எதிர்ப்பு!

**மொ**ழிவாரி சீரமைப்புக்குழு தனது அறிக்கையை 30.09.1955 அன்று ஒன்றிய அரசிடம் வழங்கினார்கள். இதன்படி திருவிதாங்கூரில் இருந்த ஐந்து தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. இது

குறித்த விரிவான அறிக்கையைக் கழகப் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் 17.10.1955 அன்று வெளியிட்டார். மிக நீண்ட அறிக்கையில், ‘‘மக்களின் ஆவலை இந்தக் குழு முழுமையாக நிறைவேற்றவில்லை, பல இடங்களில் முரண்பாடாக இருக்கிறது, மொழிவழி பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மற்ற பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள், திருவிதாங்கூரில் பெரும்பான்மை தமிழர் வாழும் ஒன்பது தாலுகாக்களில் ஐந்தைதான் தமிழகத்துடன் இணைத்துள்ளார்கள், தேவிகுளம் - பீர்மேடு - நெய்யாற்றங்கரை – சித்தூர் ஆகியவை எதற்காகத் தமிழகத்துடன் இணைக்கப்பட வில்லை? தட்சிணப் பிரதேசம் அமைப்பதை இக்குழு ஏற்காதது வரவேற்புக்குரியது, தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதியைச் சென்னை மாநிலம் என்று அழைப்பதை யாரும் விரும்ப மாட்டார்கள், தமிழ்நாடு என்றுதான் அழைக்கப்பட வேண்டும், மாநில அரசு பதவிகளில் பாதி அளவு வெளிமாநிலத்தவர்க்கு ஒதுக்க வேண்டும் என்பதை ஏற்க மாட்டோம், உயர்நீதிமன்ற நீதிபதிகளில் மூன்றில் ஒரு பங்கு வெளிமாநிலத்தவராக இருக்க வேண்டும் என்பதை ஏற்க மாட்டோம், மாநில அரசுப்பதவிகள் அனைத்தும் அந்த மாநிலத்தவர்க்கு மட்டும்தான், மத்திய அரசு அலுவல்கள் மாநிலங்களுக்குச் சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும், தென்னகத்தில் இந்திப்பல்கலைக் கழகம் அமைக்கக் கூடாது’’ - என்று நாவலரின் விரிவான அறிக்கை கூறுகிறது.

‘‘மொழிவழி மாநில அமைப்பையும், சுதந்திர ஜனநாயகத் திராவிடக் கூட்டாட்சியின் தோற்றத்தையும் திராவிட முன்னேற்றக் கழகம் கோரிக்கை நிறைவேறும் வரை வலியுறுத்தி வரும்’’ என்றும் அறிவித்தார்.

## தட்சிணப் பூதம்!

**1955** செப்டம்பர் மாதம் தட்சிணப்பிரதேசம் என்ற பூதம் கிளம்பியது. இந்தியாவை நான்காகப் பிரிப்பது என்றும் அதில் தென் மாநிலங்கள் மொத்தமாக தட்சிணப்பிரதேசம் ஆகும் என்றும் சொல்லப்பட்டது. இதனை திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்த்தது. தட்சிணப்பிரதேசம் திட்டத்தை முழுமையாக நிராகரிப்பதாக அண்ணா சொன்னார். ‘நீங்கள் கேட்ட திராவிட நாடு தானே இது?’ என்று சிலர் கிண்டல் அடித்தார்கள். இரண்டுக்குமான வேறுபாடு குறித்து அண்ணா விளக்கம் அளித்தார். தமிழகச் சட்டமன்றத்திலும் தி.மு.க. உறுப்பினர்கள் இதனைக் கடுமையாக எதிர்த்துப் பேசினார்கள்.



ஈ.வெ.கி.சம்பத்



கே.ஏ.மதியழகன்



இரா.நெடுஞ்செழியன்


என்.வி.நடராஜன்


ஏ.கோவிந்தசாமி


ப.உ.சண்முகம்

29.01.1956 அன்று சிதம்பரத்தில் கூடிய பொதுக்குழுவில் மொழிவாரி மாகாணப் பிரிவினையில் தமிழருக்கு ஏற்பட்ட அநீதி குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஈ.வெ.கி.சம்பத், சத்தியவாணிமுத்து, அலமேலு அப்பாத்துரை ஆகிய மூவரும் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். பசல் அலி குழுவின் முடிவை இப்பொதுக்குழு கண்டித்தது. இந்த விவகாரத்தில் நேரு குழு எடுத்த முடிவு தன்னிச்சையானது என்று குற்றம் சாட்டப்பட்டது. தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சி – சித்தூர், பாலக்காடு ஆகிய தாலுகாக்களிலும், வடக்கே சித்தூர் மாவட்டத்திலும் உள்ள தமிழர் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்றும் அந்த தீர்மானம் வலியுறுத்தியது. பிப்ரவரி 20 அன்று நடக்க இருக்கும் பொது வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வது என்றும் முடிவுசெய்யப்பட்டது. தட்சிணப்பிரதேசம் திட்டத்தை எதிர்த்து என்.வி.நடராசன், எஸ்.முத்து, பாலகுருசாமி ஆகியோர் தீர்மானம் கொண்டு வந்தார்கள்.

இது தொடர்பான அனைத்துக்கட்சிக் கூட்டம் 06.02.1956 அன்று சென்னையில் நடந்தது. இதில் கழகப் பொதுச்செயலாளர் அண்ணா கலந்துகொண்டார். பிப்ரவரி 20 ஆம் நாள் நடக்க இருக்கும் பொது வேலை நிறுத்தத்துக்கான கூட்டம் இது. "சுதந்திரத்துக்குப் பின் நடந்த மிகப்பெரிய பொது வேலை நிறுத்தம் இதுதான்" என்று எழுதுகிறார் ம.பொ.சி. அதன்பிறகு நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், சென்னை ராஜ்யத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்தும், கேரள மாநிலத்துடன் சேர்க்கப்பட்ட எல்லைத் தமிழ்ப்பகுதிகளை தமிழ்நாட்டுடன் சேர்த்தும், மாநிலப் புது அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சட்டசபை உறுப்பினர்களையும் அரசையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் தி.மு.க. பங்கெடுத்தது. இத்தீர்மானத்தை அன்றைய ஒன்றிய அரசு மதிக்கவில்லை.

## மொழிவாரி மாகாணம் அமைக்கப்பட்ட பிறகும்...

**1956** நவம்பர் 1 அன்று மொழிவாரி மாகாணம் அமைக்கப்பட்டது. 04.11.1956 கோகலே அரங்கில் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கூடி, இந்த திட்டத்தில் உள்ள குறைகளை விவரித்தன. கண்டித்து தீர்மானம் போட்டார்கள்.

நவம்பர் 11ஆம் நாளை தமிழக அமைப்பு நாள் என நாடு முழுவதும் கொண்டாட அண்ணா அறிவிப்பு

செய்தார். தமிழகம் முழு உருவம் பெறவில்லை, பெற வேண்டும் என்றார் அண்ணா. 1956 மே மாதம் திருச்சியில் கூடிய தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டுத் தீர்மானங்களும் இதனை வலியுறுத்தியது. தமிழர் பகுதிகள் ஆந்திராவுக்கும் கேரளாவுக்கும் போனதை கண்டித்தது. இது ஜனநாயகத்துக்குப் புறம்பான முடிவு என்றது. சென்னை மாநில அரசு காட்டிக் கொடுக்கும் போக்கைக் கடைப்பிடித்தது என்று கண்டித்தது. தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்படாததையும் கண்டித்தது. இந்த தீர்மானத்தைப் பேராசிரியர் க.அன்பழகன், புதுவை சிவப்பிரகாசம், கலையழகன், சுப்பையா, வாணிதாசன் ஆகியோர் கொண்டுவந்தார்கள்.

16.11.1957 நடந்த தி.மு.க. பொதுக்குழுவில் சென்னை வரும் பிரதமர் நேருவுக்குக் கருப்புக் கொடி காட்ட மீண்டும் முடிவெடுக்கப்பட்டது. ஜனவரி 6 - 1958 சென்னை வர இருந்தார் பிரதமர் நேரு. 3ஆம் தேதியே அண்ணா கைது செய்யப்பட்டார். தமிழகம் முழுவதும் திமுக தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆனாலும் பிரதமர் சென்ற பாதையில் கருப்புக் கொடி பறந்தது. அண்ணாசாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியானார்கள்.

1957ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில், தமிழ்நாடு என்ற தனித்தலைப்பில் தி.மு.க. நிலைப்பாடு சொல்லப்பட்டது. ‘‘தேவிகுளம், பீர்மேடு, திருத்தணி போன்ற தமிழ்ப்பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்படுவதற்கும், சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயரிடப்படுவதற்கும் முயற்சிக்கப்படும். இருமொழி, மும்மொழி, மாநில அமைப்பு ஏற்பாட்டினை எதிர்த்துப் போராடும்’’ என்று சொல்லப்பட்டது.

இப்படி வடக்கு எல்லைப் போராக இருந்தாலும், தெற்கு எல்லைப் போராக இருந்தாலும் தி.மு.கழகம் முழுமையாக ஈடுபட்டது. மொழிவாரி மாகாணம் அமைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் தமிழர் வாழும் அனைத்துப் பகுதிகளும் நமக்குக் கிடைக்கவில்லை. ‘தமிழ்நாடு’ என்ற பெயரும் கிடைக்கவில்லை!

அனைவரும் நினைப்பதைப்போல 1956 நவம்பர் 1ஆம் நாளோடு பிரச்சினை முடியவுமில்லை. தமிழர்கள் பகுதிகள் இணைப்பு குறித்த சர்ச்சைகளுக்குத் தீர்வு காண படாஸ்கர் தலைமையிலான ஆணையம் அதன் பிறகு தான் அமைக்கப்பட்டது. ஒசூர், ஆந்திராவுக்கு கிடையாது என்று 1957ஆம் ஆண்டு தான் அறிவிக்கப்பட்டது. பொன்னேரியை ஒட்டிய கிராமங்கள் ஆந்திராவுக்குப் போவது குறித்த பிரச்சினைகள் 1959ஆம் ஆண்டு நடந்தன. 1960 ஏப்ரல் மாதம் தான் இறுதிமுடிவுக்கு வந்தது. அப்போதும் ‘தமிழ்நாடு’ என்ற பெயர் வைக்கப்படவில்லை!

## சட்டமன்றத்தில் போராடிய தி.மு.க.:

‘‘தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்காக சங்கரலிங்கனாரின் பிணம் வீழ்ந்தது. உங்களுக்கு ஒரு எழுத்துக்கு ஒரு பிணம் வீதம் வேண்டுமென்று சொன்னால் தயாராக இருக்கிறோம். ஐந்து பிணங்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். எழுத்துக்கு எத்தனை பிணங்கள் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறோம். தமிழ்நாடு என்று இந்த நாட்டுக்குப் பெயரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்....’’ என்ற தலைவர் கலைஞரின் முழக்கம் ஒலித்த ஆண்டு 1957 ஆகும்.

“பெயரை மாற்றினால் உலகத்துக்குத் தெரியாது என்கிறார்கள். தமிழ்நாடு என்றால் உலகத்துக்குத் தெரியாது என்கிறார்கள். மூவேந்தர் ஆண்டது உலகத்துக்குத் தெரியாதா? தமிழ்நாட்டின் பெயரால்தான் அவர்கள் ஆண்டார்கள்?’’ என்று சட்டமன்றத்தில் கேட்டார் ஏ.கோவிந்தசாமி.

“நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைப்பதால் என்ன கேடு வந்துவிடும் என்று புரியவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்கு இதைவிட அநீதி இருக்க முடியாது’’ என்று கேட்டவர் ப.உ,சண்முகம். அவர் தனது 1959, 1960, 1961

ஆகிய ஆண்டுகளில் ஆற்றிய உரைகளில் தொடர்ந்து வலியுறுத்தினார். தமிழ்நாடு என்று சொல்வது குறுகிய மனப்பான்மையா என்று கேள்வி எழுப்பினார் ப.உ.ச.

“தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும் என்று தமிழர்கள் சிலர் பேசுவதும், சில தமிழர்கள் அதை எதிர்ப்பதையும் பார்த்து உலகமே எள்ளிநகையாடும். கருப்பையும் சிவப்பையும் பார்த்து நீங்கள் மிரள்வதைப்போல நாங்கள் கொண்டுவந்த தமிழ்நாடு தீர்மானத்தைப் பார்த்து ஏன் மிரள்கிறீர்கள்?’ என்று கேட்டார் புலவர் கோவிந்தன்.

1961 - டெல்லி மாநிலங்களவையில் ‘தமிழ்நாடு’ பெயர் மாற்றத் தீர்மானத்தை மேற்கு வங்க கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பூபேஷ் குப்தா கொண்டு வந்தார்.

அப்போது அண்ணா ஆற்றிய உரை என்பது தமிழினப் பிரகடனமாக அமைந்திருந்தது.

1961 சனவரி 30 : தமிழ்நாடு சட்டமன்றத்தில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் சின்னத்துரை ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டும் தீர்மானத்தைக் கொண்டு வந்து உரையாற்றினார். சின்னத்துரையின் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்தது. தி.மு.க. சார்பில் இதனை ஆதரித்து பேராசிரியர் அன்பழகன் பேசினார். ‘பெயர் வைப்பதால் என்ன பயன் என்று ஒரு அமைச்சர் கேட்கிறார். அவர் அமைச்சராக இருப்பதால் என்ன பயன்?’ என்று கேட்டார் பேராசிரியர் அன்பழகன்.

1962 - சூலை 27 : தமிழ்நாடு என்று பெயர் சூட்ட திமுக உறுப்பினர் கே.ஏ.மதியழகன் சட்டமன்றத்தில் கோரிக்கை எழுப்பினார். தமிழ்நாடு என்று ஏன் பெயர் சூட்டவில்லை என்று கேட்டார். ஏன் தயங்குகிறீர்கள் என்று 1964 ஆம் ஆண்டும் கேட்டார் மதியழகன்.

1964 - சூலை 23: தமிழ்நாடு என்று பெயரிடும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என தி.மு.க. உறுப்பினர் இராம. அரங்கண்ணல்



அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தார். “தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்ற சொந்தப் பெயர் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தீர்மானம். அது ஆளும் கட்சியினரால் வரவேற்கப்படமாட்டாது என்ற அறிகுறி தெரிகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை வரவேண்டாம். நான் இதைக் கட்சிப் பிரச்சினையாகச் சொல்ல வில்லை. உங்களுடைய உள்ளத்தைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன் என்பதற்காக அல்ல. உங்களுடைய உள்ளத்தை, இருதயத்தை ஒரு தடவை நீங்கள் அத்தனை பேர்களும் தொடவேண்டும், தொட்டுப் பார்த்துக் கொண்டு இதற்கான முடிவை எடுங்கள்” என்று கேட்டுக் கொண்டார்.

இதன் மீது நாவலர் நெடுஞ்செழியன் சட்டமன்றத்தில் பேசும்போது, “இதனுடைய அடிப்படை நோக்கம் உணர்வுப்பூர்வமான ஒன்று,



இந்தியா என்பதை 'பாரத்' என்று அழைப்பதால் என்ன உணர்வுப்பூர்வமான அகமகிழ்ச்சியை எதிர்பார்க்கிறோமோ; சைனா பசார் ரோடை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு என்று மாற்றுவதன் மூலம் எப்படிப்பட்ட உள்ள உயர்வை எதிர்பார்க்கிறோமோ அதையேதான் 'தமிழ்நாடு' என்ற பெயரால் அழைக்கப்படும்போது பெறுகிறோம். ஒரு பெயரை மற்றொரு பெயராக மாற்றுவதற்குக் காரணங்கள் இருக்கலாம். 'தமிழ் நாடு' என்று சொல்லும்போது அதனுடைய தொன்மையான நாகரிகம், பண்பாடு, வரலாற்றுச் சிறப்புக்கள் ஆகியன எல்லாம் மனத்திலே தோன்றுகின்றன'' என்றார்.

இப்படி தொடர்ச்சியாக மாநிலங்களவையிலும் சட்டமன்றத்திலும் வாதாடி வந்தது தி.மு.க.

## தி.மு.க. வரவேண்டியதாக இருந்தது

**இ**றுதியாக அந்த இலக்கை அடையத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரவேண்டி இருந்தது. பேரறிஞர் அண்ணா முதல்வராக வேண்டி இருந்தது. 18.07.1967 அன்று தமிழக வரலாற்றில் பொன்னான நாள். தாய்த்தமிழ் நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று தனயன் பெயர் சூட்டிய நாள்!

'தமிழ்நாடு என்று பெயர் சூட்டுங்கள்' என்பது உள்ளிட்ட 12 கோரிக்கைகளுக்காக உண்ணா விரதம் இருந்தார் தியாகி சங்கரலிங்கனார். அவரை மரணப் படுக்கையில் பார்த்தார் அறிஞர் அண்ணா. அந்த தியாகிக்குக் கொடுத்த வாக்குறுதியை 12 ஆண்டுகள் கழித்து நிறைவேற்றினார் அண்ணா!

அதனால் தான் சூலை 18ஆம் நாளை **'தமிழ்நாடு'** நாள் என்கிறோம்!

**வாழ்க தமிழ்நாடு!**
**வாழ்க பேரறிஞர் அண்ணா!**



ஆந்திரா
பிரதேஷ்
N
W
E
S
தமிழ்நாடு
திருவள்ளூர்
திருவள்ளூர்
சென்னை
ராணிப்பேட்டை
வேலூர்
வேலூர்
ராணிப்பேட்டை
காஞ்சிபுரம்
சென்னை
காஞ்சிபுரம்
செங்கல்பட்டு
கிருஷ்ணகிரி
திருப்பத்தூர்
கர்நாடகா
கிருஷ்ணகிரி
திருவண்ணாமலை
திருப்பத்தூர்
செங்கல்பட்டு
திருவண்ணாமலை
தருமபுரி
தர்மபுரி
விழுப்புரம்
விழுப்புரம்
புதுச்சேரி
சேலம்
கள்ளக்குறிச்சி
கடலூர்
சேலம்
கள்ளக்குறிச்சி
நீலகிரி
ஈரோடு
கடலூர்
விரிகுடா
வங்காளம்
உதகமண்டலம்
நாமக்கல்
ஈரோடு
பெரம்பலூர்
நாமக்கல்
பெரம்பலூர்
அரியலூர்
கோயம்புத்தூர்
திருப்பூர்
கரூர்
திருச்சிராப்பள்ளி
அரியலூர்
புதுச்சேரி
(காரைக்கா)
கோயம்புத்தூர்
திருப்பூர்
கரூர்
தஞ்சாவூர்
திருவாரூர்
நாகப்பட்டினம்
திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
நாகப்பட்டினம்
புதுக்கோட்டை
திருவாரூர்
திண்டுக்கல்
புதுக்கோட்டை
திண்டுக்கல்
கேரளா
தேனி
சிவகங்கை
மதுரை
சிவகங்கை
தேனி
மதுரை
Virudhunagar
ராமநாதபுரம்
விருதுநகர்
ராமநாதபுரம்
தென்காசி
தூத்துக்குடி
Tenkasi
இலங்கை
தூத்துக்குடி
திருநெல்வேலி
பால்க் ஜலசந்தி
திருநெல்வேலி
கன்னியாகுமரி
நாகர்கோவில்
இந்திய
பெருங்கடல்

# தமிழ்நாடு இன்று வரை

# இலக்கியத்தில் தமிழ்நாடு





# செந்தலை ந.கவுதமன்

**பா**வேந்தர் பாரதிதாசன் – பொருள்பொதிந்த கேள்வி ஒன்றைக் கேட்பார். **"செந்தமிழா உன் நாட்டின் பேர் என்ன செப்பு"** – வினா கேட்ட அவரே விடையும் கூறிவிடுவார்.

**"நின்னாடு பொன்னாடு – நீணிலம்புகழ் தமிழ்நாடு!"**

நிலத்தால் கோடுபோட்டுக் கொண்டாலும் மொழியால் தமிழ்நாடு என்னும் ஒரு குடையின் கீழ் நிற்கும் வழக்கத்தை நீண்ட காலமாகத் தமிழர்கள் பின்பற்றி வந்துள்ளனர்.

## தொல்காப்பியம்

இன்று கிடைக்கும் தமிழ் நூல்களுள் முதல் நூலாகிய தொல்காப்பியம் இந்த மரபைச் சுட்டுகிறது.

**"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்**
**நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்"** (தொல்.1336) என்று தம் காலத் தமிழ்நாட்டைக் காட்டுகிறார் தொல்காப்பியர்.

எல்லை பெயரைக் குறிப்பிடாமல் – '**நாற்பெயர் எல்லை**' எனப் பொதுப்படச் சொல்லியுள்ளார்.

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம்

**"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ்கூறு நல்லுலகம்"**

என இருதிசை எல்லைகளைக் குறிப்பிடுவதோடு '**தமிழ்கூறு நல்லுலகம்**' எனத் தமிழ்நாட்டைக் குறிப்பிடுகிறது. வேங்கட மலைக்குத் தெற்கே தமிழைத் தவிர வேறு மொழிகள் அப்போதில்லை என்பதையும் இவ்வரிகள் தெளிவுபடுத்தும்.

### தமிழ் பெற்ற வாழ்வு

கி.பி ஐந்தாம் நூற்றாண்டு வரை இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ், பாலி, பிராகிருதம், மூன்று மட்டுமே பேச்சு மொழிகளாக



இருந்தன. இன்றுள்ள மொழிகள் அனைத்தும் ஐநூறு ஆண்டுகளுக்குள் பிறப்பெடுத்தவை. வட மொழி அப்போது வழங்கு மொழியாக இருந்தாலும் பேச்சு மொழியாக எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

மூவேந்தரும் ஆண்டிற்கு ஒரு முறை கலிங்க (ஒரிசா) நாட்டில் சந்தித்து அந்நியர் எவரும் தமிழ்நாட்டிற்குள் நுழையாமல் தடுக்கும் உறுதியோடு இருந்துள்ளனர். காரவேலன் கல்வெட்டு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

அத்திக்கும்பாவில் நடந்து வந்த மூவேந்தர் தொடர் சந்திப்புகளை '**திராவிட சங்கதம்**' எனச் சொல்கிறது அந்தக் கல்வெட்டு.

தமிழ்நாடு, திராவிடம் என்னும் சொற்களே தமிழர் ஒற்றுமை முயற்சியின் அடையாளங்களாகத் தொடக்கம் முதலே இருந்து வந்துள்ளதை வரலாறு உறுதிபடுத்துகிறது.

தமிழர்கள் இனமாக ஒன்றுபடவும் நாடாக இணைந்து நிற்கவும் தடையாக இருப்பவை வட மொழிச் செல்வாக்கு, வைதீகச் செல்வாக்கு என்னும் இரண்டுமே!

இலக்கியமும் இயக்கமும் ஒன்றையொன்று பற்றி உயர்வு நோக்கி வளர்ந்த வரலாற்றால் தமிழும் தமிழ்நாடும் இன்றுவரை வாழ்வு பெற்று வருகின்றன.

## இளம்பூரணர்

தொல்காப்பிய மெய்ப்பாட்டியலுக்கு உரையெழுதிய பேராசிரியர் 'நகைக்குப் பொருளாவன ஆரியர் கூறும் தமிழ்' என அந்நாளிலேயே அடையாளம் காட்டியுள்ளார். தொல்காப்பியத்திற்கு எழுந்த உரைகளுள் முதலாவது உரை இளம்பூரணர் உரை. உரையாசிரியர் என்பது அவரின் மற்றொரு பெயர்.

பாவேந்தர் பாரதிதாசன் கேட்ட அதே வினாவையும் விடையையும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார் என்பது வியப்பான செய்தி.

**'நும் நாடு யாது எனில்
தமிழ்நாடு எனல்'**

என உரை எழுதியுள்ளார் இளம்பூரணர்.

விடை கூறினாலும் வினா எழுப்பினாலும் குழப்பமின்றித் தெளிவாக இருக்க வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து. 'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' என்பது தொல்காப்பிய நூற்பா அதற்கு உரை எழுத வந்த இளம்பூரணர் '**நும்நாடு யாது**' என வினா



கேட்டால் ‘**தமிழ்நாடு**’ எனத் தெளிவாக விடையிருக்க வேண்டும் என எடுத்துக்காட்டுகிறார். கி.பி 11ஆம் நூற்றாண்டில் இப்படி வரைந்துள்ளார் இளம்பூரணர்.

## சிலப்பதிகாரம்

‘தமிழ்நாடு’ என்பதைச் சிலப்பதிகாரம் இரண்டு இடங்களில் குறிப்பிட்டுச் சொல்கிறது.

கண்ணகி சிலைக்குக் கல்லெடுக்கச் சென்ற சேரன் செங்குட்டுவன் வடக்கே உள்ள ஆரிய நாடுகளுக்குப் புறப்படுகிறான். அவர்களை எப்படி எதிர்கொள்வது என அமைச்சர்களுடன் கலந்துரையாடுகிறான். அப்போது வில்லவன் கோதைக் கூற்றில் தமிழ்நாடு வெளிப்படுகிறது.

கடல் சூழ்ந்த நாடுகளைத் தமிழ்நாடு ஆக்க நீ விரும்பினால் உன்னை எதிர்க்க வல்லவர் யார்? என்கிறான் வில்லவன் கோதை.

**‘இமிழ் கடல் வேலியைத்**
**தமிழ்நாடு ஆக்கிய**
**இது நீ கருதினை யாயின்!** (காட்சிக்காதை)
என்பன அந்த வரிகள்.

சிலப்பதிகார வாழ்த்துக்காதையிலும் தமிழ்நாடு பேசப்படுகிறது.

இமயமலையில் தமிழரின் வீரச் சின்னங்களைப் பொறிக்க வேண்டும் என அறிவுறுத்தும் பாடலில் தமிழ்நாடு வருகிறது.





**‘தென்தமிழ் நாடுஆளும் வேந்தர்**
**செருவேட்டுப் புகன்று எழுந்து**
**மின்தவழும் இமய நெற்றியில்**
**விளங்கு வில்புலிகயல் பொறித்தநாள்’**
(வாழ்த்துக்காதை)

## பரிபாடல்

தமிழ்நாடு என்றால் தமிழ் மொழி வழங்கும் இடங்களைக் குறிப்பிடுவது என வரையறை கூறுகிற நூல் பரிபாடல்.

**‘தண்டமிழ் வேலித் தமிழ்நாட்டு அகமெலாம்**

**நின்று நிலைஇப் புகழ்பூத்தல் அல்லது**

**குன்றுதல் உண்டோ’**

எனப் பரிபாடல் வினவும்.

## கம்பர்

கம்பரையும் இராமாயணத்தையும் அரசியல் வாகனமாக்க முயல்வோர் உள்ளனர். கம்பர்



பார்வையில் நாடு என்றால் தமிழ்நாடுதான்! நாடு, ஒன்றியம், துணைக்கண்டம் இவற்றுக்கான அரசியல் தெளிவை உருவாக்கத் துணைவருகிறார் கம்பர்.

தமிழர் வாழ்விடம் நாடு. நாடுகளின் ஒருங்கிணைப்பு ஒன்றியம், துணைக்கண்டம்.

**'உறக்கமுற்றார் என்னுற்றார்**
**எனும் உணர்வி னோடொதுங்கு**
**மணியால் ஓங்கல்**
**பிறக்குற்ற மலைநாடு**
**நாடிஅகல் தமிழ்நாட்டில்**
**பெயர்திர் மாதோ**

(கம்பராமாயணம், கிட்கிந்தா காண்டம், நாட விட்டபடலம் 30)

**'கம்பனார் பாடி வைத்த பாடலிலே'** எனப் பாவேந்தர் பாரதிதாசன் **'கம்பனார்'** எனப் போற்றுவதற்குரிய காரணங்களில் இதனையும் ஒன்றாக ஏற்கலாம்.

## விழிப்பும் விளைவும்

செய்திப் பரிமாற்ற வளர்ச்சியும் உலக விடுதலை இயக்கங்களின் அறிமுகமும் கல்விப்பெருக்கமும் இருபதாம் நூற்றாண்டில் ஏற்படுத்திய மொழி, இனம், நாடு குறித்த சிந்தனைக் கூர்மை இலக்கிய விழிப்பாகவும் மலர்ந்தது.

**'செந்தமிழ் நாடெனும் போதினிலே'**

எனப் பாரதியார் பாடல் வரிகளால் மணமேறிய இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றன.

'தமிழ்த் தேசியச் சிந்தனை' என வளர்ந்த கருத்தியல் முதிர்ச்சிக்குக் களம் அமைத்தன பாவேந்தர் பாரதிதாசன் படைப்புகள். அவர் நெறி போற்றும் பரம்பரையினர் தமிழ் இலக்கியப் பரப்பில் முழுமையும் நிரம்பியிருக்கின்றனர்.



இலக்கியம் சுமக்கும் '**தமிழ்நாடு**' எனும் பெயரை நிலத்திற்குப் பெயராக்கும் கோரிக்கையோடு உண்ணா நோன்பிருந்தார் சங்கரலிங்கனார்.

'தமிழ்நாடு எனும் பெயர் சூட்டப் பெறும்' எனும் நம்பிக்கைச் சொற்கள் விழாத நிலையில் 76 நாள்கள் உண்ணாநோன்பு இருந்த சங்கரலிங்கனார் 30.10.1956 அன்று உலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார்.

"நாங்கள் ஆட்சிக்கு வரும்போது நிறைவேற்றுவோம்" – என அறிஞர் அண்ணா சங்கரலிங்கனாருக்குக் கொடுத்த வாக்குறுதியை 18.07.1967 அன்று நிறைவேற்றினார்.

தமிழ்நாடு பெயர் மாற்றுத் தீர்மானம் ஒரு மனமாய் நிறைவேறிய மகிழ்ச்சியில் 'தமிழ்நாடு' என அறிஞர் அண்ணா மூன்று முறை முழங்கினார்.

தமிழ்நாட்டுச் சட்டமன்றம் 'வாழ்க' என மூன்று முறை வழி மொழிந்தார்.

இலக்கியங்களில் வாழ்ந்த '**தமிழ்நாடு**' மாநிலத்தின் பெயரான சூலை 18ஆம் நாளைத் '**தமிழ்நாடு நாள்**' என மகிழ்வோடு நினைவுகூர்வோம்.

**கட்டுரையாளர்:** தமிழ்நாட்டு அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருதாளர். அண்ணா அறிவுக்கொடை 123 தொகுதிகளின் தொகுப்பாசிரியர்.

# தமிழ்நாடு என்ற கருத்தாக்கம்





## ஆர்.பாலகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

**சிந்துவெளி, திராவிடவியல் ஆய்வாளர்**

ஒரு மொழியின் பெயர், அம்மொழியைப் பேசும் மக்களின் பெயர், அம்மக்கள் வசிக்கும் நிலப்பகுதியின் பெயர் ஆகிய முப்பரிமாண அடையாளங்கள் வெறும் குறியீடுகள் அல்ல. பண்பாட்டுப் புவியியல் மற்றும் சமூக உளவியல் சார்ந்த மிக ஆழமான கருத்தியல். பின்னிப்பிணைந்த இந்த முப்பரிமாண அடையாள முடிச்சில் எதிலிருந்து எது வந்தது என்று பிரித்துப் பார்ப்பது கூட கடினம். பெயர் ஆய்வியலில் மொழிகளின் பெயர்கள் 'கிளாஸோனிம்' (Glossonym) என்று அழைக்கப்படுகிறது. ஒரு மொழியின் பெயரே அம்மொழியைப் பேசும் மக்களையும், அவர்கள் வாழும் இடத்தையும் அடையாளப்படுத்துவதாகவும் அமைகிறது. 'டெமோனிம்' (Demonym) அல்லது 'ஜென்ட்லிக்' (Gentilic) போன்றவை அதன் தொடர்புடைய கலைச்சொற்கள்.

தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற நேர்கோட்டு உறவு மிகவும் தொன்மையானது. ஆனாலும் தமிழ் மக்கள் வாழும் நிலப்பகுதிக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டிய நாள் கொண்டாடப்படுவதற்குக் காரணம் இருக்கிறது. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் தமிழ் கடந்துவந்த பாதை அத்தகையது. சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டுவதற்கு சங்கரலிங்கனாரின் உயிர்த்தியாகம் தேவைப்பட்டது.

1967ஆம் ஆண்டு, ஜூலை 18ஆம் நாள் சென்னை மாநிலத்தை 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை அன்றைய தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா தமிழகச் சட்டப்பேரவையில் முன்வைத்தார். இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அது தமிழின் வெற்றி, தமிழரின் வெற்றி, தமிழ்நாட்டின் வெற்றி என்றே கருதப்படும் என்று அண்ணா குறிப்பிட்டார். இந்தத் தீர்மானத்திற்குச் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக ஆதரவு அளித்தனர்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அப்போதைய அவைத் தலைவர் சி.பா.ஆதித்தனார் அறிவித்தவுடன் முதல்வர் அண்ணா, 'தமிழ்நாடு, தமிழ்நாடு, தமிழ்நாடு' என மூன்று முறை அறிவிக்க, அதற்கு அனைத்து உறுப்பினர்களும் 'வாழ்க' என்று முழங்கினார்கள். சென்னை மாநிலத்திற்குத்



‘தமிழ்நாடு’ எனும் பெயர் சூட்டுவதற்கான சட்ட முன்வரைவு நவம்பர் 23, 1968 அன்று நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு பெயர் சூட்டு விழா டிசம்பர் 1, 1968இல் நடைபெற்றபோது, உடல் நலிவுற்ற நிலையிலும் பேரறிஞர் அண்ணா இந்த வரலாற்று நிகழ்வில் உரை நிகழ்த்தினார்.

‘தமிழ்நாடு’ என்ற சொல்லின் அடையாளக் கட்டமைப்பின் வேர்கள் மிகவும் தொன்மையானவை. ஆயினும் தமிழ்நாடு என்ற பெயரின் இன்றியமையாத தேவை பற்றிய புரிதலுக்கு விடுதலைக்கு முன், விடுதலைக்குப் பின் ஆகிய இரு காலகட்டங்களில் மொழிவாரி மாநிலங்கள் பற்றி நிலவிய தேசியக் கண்ணோட்டங்களைத் தொட்டுச் செல்வது பொருத்தம். அதுமட்டுமின்றி தமிழ்நாடு என்ற கருத்தாக்கத்தை இலக்கிய, பண்பாட்டு வரலாற்றுத்தரவுகளின் பின்னணியில் மீள்வாசிப்பு செய்யும் தேவையும் உள்ளது.

பிரிட்டிஷ் அரசு தனது ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளைச் சென்னை, பெங்கால், பம்பாய் மாகாணங்களாகப் பிரித்து ஆட்சி புரிந்தது. இறுதியில் 1947இல் இந்தியா விடுதலை பெற்றபோது இந்தியாவில் 17 மாகாணங்கள் இருந்தன. மேலும் 565 குறு மன்னராட்சிப் பகுதிகள் இருந்தன.

1936 ஏப்ரல் முதல் நாள் உருவான ஒடிசா மாநிலம் தான் இந்தியாவின் முதல் மொழிவாரி மாநிலமாகும். அப்போது சென்னை மாகாணத் திலிருந்த கன்ஜம், கோராபுட் ஆகிய இரு மாவட்டங்கள் புதிதாக உருவான ஒடிசா மாநிலத்தில் இணைந்தன.

ஆனால் இந்தியா விடுதலை பெற்று இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றப்பட்டபோது மொழிவாரி மாநிலங்கள்

சுதந்திர இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும் என்ற கருத்தே உயர்மட்டத்தில் மேலோங்கி இருந்தது. மொழிவாரி மாநிலம் என்ற கருத்தாக்கத்தை எஸ்.கே.தார் ஆணையம் (1949) ஒப்புக்கொள்ளவில்லை. ஆணையத்தின் இந்த நிலைப்பாட்டினை மேலும் ஆராய ஜவகர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், பட்டாபி சீதாராமையா ஆகியோர் அடங்கிய “ஜேவிபி” (JVP) குழு அமைக்கப்பட்டது. இந்த மூவர் குழுவும் மொழிவாரி மாநிலம் என்ற கருத்தை ஆதரிக்கவில்லை.

1950ஆம் ஆண்டு ஏற்கப்பட்ட இந்திய அரசியல் சாசனச் சட்டத்தில் இந்திய மாநிலங்கள் ‘ஏ’, ‘பி’, ‘சி’ என்ற மூன்று பிரிவுகளாகவும் ஒன்றிய அரசின் நேரடி ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் ‘டி’ பிரிவு என்றும் பிரிக்கப்பட்டன. சென்னை மாநிலம் ‘ஏ’ பிரிவு பகுதிகளில் ஒன்றாக இருந்தது. தெலுங்கு மொழிப் பகுதிகளை உள்ளடக்கிய ஆந்திர மாநிலத்திற்கான தொடர் போராட்டங்கள், பொட்டி ஸ்ரீராமுலுவின் உண்ணாவிரத மரணம் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து 1953இல் ஆந்திர மாநிலம் உருவானது. இறுதியில் 1956ஆம் ஆண்டு மாநிலங்கள் மறு உருவாக்கச் சட்டம் இயற்றப்பட்டு (ஆகஸ்ட் 31) அதே ஆண்டு நவம்பர் முதல் நாள் நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் சுதந்திர இந்தியாவின் முதல் மொழிவாரி மாநிலங்கள் உருவாகின. இதைத்தொடர்ந்து, 1960இல் குஜராத், மகாராஷ்டிரா; 1966இல் பஞ்சாப் ஆகிய மொழிவாரி மாநிலங்கள் உருவாகின. சத்திஸ்கர், ஜார்கண்ட், உத்தராகண்ட் போன்ற மாநிலங்களின் உருவாக்கத்திற்கு மொழிசாராத வேறு காரணங்கள் இருந்தன.

ஆனால் மொழியின் அடிப்படையிலான மாநில மறு உருவாக்கத்திற்கான போராட்டத்தின் முக்கிய காரணியான தெலுங்கு மொழி பேசும் ஆந்திர மாநிலத்திலிருந்து அதே தெலுங்கு மொழி பேசும் தெலுங்கானா மாநிலம் 2014இல் பிரிந்து தனிமாநிலமானது மிக முக்கியமான நிகழ்வாகும். ஒரு மாநிலத்தின்



கலித்தொகை-பரிபாடல்

நிலைப்பிற்கு மொழி ஒருமை மட்டும் போதாது; அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய சமூகப் பொருளாதார வளர்ச்சி மிகவும் முக்கியமானது என்பதை இது உணர்த்தியது.

பொதுவாக, தமிழ்நாடு என்ற அடையாளம் சார்ந்த கருத்தாக்கம், தமிழ் மக்களின் மொழிப்பற்று, சமூகநீதி சார்ந்த விழிப்புணர்வு ஆகிய கூறுபாடுகளை ஐரோப்பியர் வருகை என்ற வரலாற்று நிகழ்வின் ஊடாக மீள்கட்டமைப்புச் செய்யும் போக்கு ஆய்வாளர்களிடையே காணப்படுகிறது. மேற்கத்திய கோட்பாடுகளின் தாக்கம்; ஆங்கிலக் கல்வி; அச்சுக்கலையின் வரவால் பழந்தமிழ் இலக்கியங்கள் நூல்வடிவம் பெற்றுப் பரவலாக மக்களைச் சென்றடைந்ததன் விளைவு; திராவிட மொழிக்குடும்பம் வடமொழியிலிருந்து வேறுபட்டது என்ற உண்மை பரவலானதன் தாக்கம்; நடுத்தரவர்க்கத்தின் எழுச்சி, இதர பிரிவினரின் விழிப்புணர்வு, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (நீதிக்கட்சி); இந்தி எதிர்ப்பு போராட்டம், திராவிடக் கட்சிகளின் அரசியல் வெற்றி, நலத்திட்டங்கள், சமூக நீதி நோக்கிய முன்நகர்வு என்ற



பல்வேறு கோணங்களில் ஆய்வாளர்கள் அணுகியுள்ளார்கள்.

ஆனால் உண்மையில் தமிழ்நாடு என்ற கருத்தியலை ஐரோப்பியர் வருகை சார்ந்த நிகழ்வுகள் மற்றும் சமகால அரசியல் என்ற வரையறைக்குள் மட்டும் அணுகாமல் தமிழ் மொழியின் தரவு சார்ந்த பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியிலும் அணுகுவது பொருத்தமாக இருக்கும்.

சங்க காலம் தொடங்கி, சங்கம் மருவிய காலம், பல்லவர் ஆட்சிக்காலம், இடைக்கால பேரரசுகளின் காலம், பக்தி இலக்கியங்களின் எழுச்சி, சிற்றிலக்கிய காலம், வெளிப்படையெடுப்புகள், விஜயநகரப் பேரரசு, நாயக்கர் ஆட்சி, மராத்தியர் ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சி, தற்கால அரசியல் என்ற நீண்ட நெடும் வரலாற்றின் ஊடாகத் தமிழ், தமிழர், தமிழ் நிலம் என்ற தன்னுணர்வு எப்படித் தொடர்ந்து இயங்கி வந்திருக்கிறது என்பதைப் புலன்விசாரிக்க வேண்டும்.

நமக்கு கிடைத்துள்ள இலக்கண நூல்களில் தொன்மையானது தொல்காப்பியமே. இந்நூலில் எழுத்ததிகாரத்தில் புள்ளிமயங்கியல் என்ற இயலில் "தமிழ் என் கிளவியும் அதனோ ரற்றே" என்ற நூற்பாவில் ழகர ஈற்றுச் சொல்லான தமிழ் என்ற சொல்லும் அக்குச் சாரியை பெற்றும் புணரும் என்பதைத் தொல்காப்பியர் விளக்குகிறார். இதற்குத் தமிழ்க்கூத்து என்பதை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டாகக் கூறுகின்றனர். தமிழ் என்ற மொழியின் பெயரை அம்மொழி பேசுவோரின் பண்பாட்டு மரபுகளோடு இணைத்துச் சொல்லுருவாக்கம் செய்யும் இயல்பான சிந்தனை மரபின் தொடக்க ஆவணம் என்று இதைக்கூறலாம். "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" என்ற தமிழ் பேசப்பட்ட நில எல்லையைத் தொல்காப்பியப் பாயிரம் கூறுவதை நினைவில் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் தமிழ் என்ற சொல் 15 முறையும், 'தமிழ்நாட்டு அகம்' 'தமிழகம்' என்ற சொல்லாடல்கள் ஒருமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் புள்ளிவிவரத்தை விட முக்கியமானது இச்சொற் பயன்பாடுகள் நமக்களிக்கும் புரிதல்கள். இந்த இடத்திற்கும் அந்த இடத்திற்கும் தானே இடைப்பட்ட இடம் என்பதைவிட 'தண் தமிழ் வேலி தமிழ்நாடு' (பரிபாடல் 26) அதாவது தமிழை வேலியாகக் கொண்ட தமிழ் பேசப்படும் தமிழ்நாட்டு அகம் என்பது எவ்வளவு ஆழமான சிந்தனை. கூடல் எனப்படும் மதுரையை ஆளும் பாண்டியனைத் 'தமிழ் கெழு கூடல் தண் கோல் வேந்தே' (புறம் 58) என்று அழைப்பது எவ்வளவு பெரிய பெருமை. 'தமிழ் வையை தண்ணம் புனல்' (பரிபாடல் 6) என்று வைகை ஆறு அழைக்கப்பட்டது போல இந்தியத் துணைக் கண்டத்தில் இன்னொரு மொழியும் இன்னொரு ஆறும் இணைந்து ஓடியுள்ளனவா? தமிழ் மக்கள் மகரந்தத் தேன் போன்றவர்கள்; அம்மக்களிடம் பரிசுபெறும் பாணர்களும் புலவர்களும் தேனீக்கள் போன்றவர்கள் (பரி. 30) என்ற சித்தரிப்பே தாய்மொழியான தமிழ் மீது பற்றுக்கொண்ட தமிழ்க்குடிகளின் வாழ்வியல். இவ்வாறு மொழி, மொழி பேசும் மக்கள், மொழி பேசப்படும் நிலம் என்ற முப்பரிமாண உறவின் ஆழத்தையும் அற்புதமான உளவியலையும் புரிந்துகொள்ள சங்க இலக்கியம் மட்டுமே போதுமானது. 'தமிழ் நிலைபெற்ற தாங்கரும் மரபு' என்ற சிறுபாணாற்றுப்படை ஒரு முத்திரை மோதிரம்.

பல்வேறு மொழிகள் பேசப்படும் எல்லைப்பகுதிகளைச் சேரர் சோழர் பாண்டிய

தமிழ் மன்னர் மூவரும் கூட்டணியாய் காத்தார்கள் என்பதை அகநானூறு (31) தெரிவிக்கிறது. அரசியல் போட்டி, ஆட்சி எல்லைகளுக்கு அப்பால் உணர்ந்த தமிழ் மொழிசார்ந்த பொதுமை இதனால் புலப்படுகிறது (அகம் 31). தமிழ்நாடு என்ற கருத்தாக்கத்தின் மீட்டுருவாக்கத்தில் இது முக்கியமான அகச்சான்றாகும்.

இந்தியத் துணைக்கண்டப் பண்பாட்டுப் புவியியலில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ளத் தொடக்கம் முதலாகவே தமிழ் மொழி, தமிழ் இலக்கியங்கள், தமிழ் அறிவுப்புலம் முன்னிறுத்திய இருமை, ஒப்பீடு சார்ந்த தனித்துவ முன்மொழிவு பற்றிப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆரியம், தமிழ், வடமொழி, தென்மொழி, வடக்கு, தெற்கு என்பதே அந்த இருமையின் அடித்தளம். அதற்கான காரணிகளைப் புரிந்துகொள்ள வேண்டியது ஒரு நிகழ்காலத் தேவையும் ஆகும்.

பரிபாடலில் (9) தமிழின் சிறப்பிற்குத் தனித்துவத்திற்கு அதன் களவுக்காதல் அகமரபு தான் காரணம் என்று முன்னிறுத்தும் புலவன் தமிழ் மொழி இலக்கியங்களை முழுவதுமாக ஆராயாதவர்களுக்கு இந்தப் பெருமை புரியாது என்று அடித்துச் சொல்கிறார். இந்தப் பாடல்களில் மேற்சொன்ன கூற்று நான்கு வேதங்களையும் கற்றுத்தேறிய விற்பன்னர்களை நோக்கிக் கூறியதாகும். இவ்வாறு கூறியதற்குக் காரணம் என்ன? திருப்பரங்குன்றம் இமயமலைக்கு நிகரானது என்று சங்க இலக்கியம் ஐயத்திற்கு இடமில்லாமல் கூறுவது மிகைக்கூற்றுதான். ஆனால் அதற்கான கூட்டு உளவியலைப் புலன் விசாரிக்காமல் தமிழ், தமிழ்நாடு என்ற கருத்தாக்கத்தின் தோற்றம் தொடர்ச்சி மற்றும் எதிர்காலத்தை மதிப்பிடமுடியாது.

சங்க இலக்கிய காலத்திலேயே வடமொழி சார்ந்த சித்தாந்த மரபுகள் தமிழ்நாட்டிற்குள் தலைகாட்டத் தொடங்கிவிட்டன. இதற்கு எதிர்வினை ஆற்றுவதுபோல அமைந்துள்ளது ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எழுதிய



புறநானூற்றுப்பாடல் (புறம் 183). இதுதான் தமிழ் நாட்டின் ஆவணப்பதிவுடன் கூடிய முதல் கல்விக்கொள்கை.

**“அறிவுடை யோன்ஆறு அரசும் செல்லும்**
**வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால்**
**ஒருவனும் அவன்கண் படுமே”**

என்ற நெடுஞ்செழியன் தமிழ் வரிகள் ஒரு கருத்தியல் நிலைப்பாடு.

**இதைப்போலவே**

**“துடியன், பாணன், பறையன், கடம்பனென்று**
**இந்நான் கல்லது குடியும் இல்லை;**
**ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லே பரவின் அல்லது**
**நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே”**

(புறம் 335)

என்பதும் ஒரு சித்தாந்த முழக்கம்தான். மாங்குடி கிழார் என்ற புலவரின் பெயர் அவரது நிலவுடமைக்குச் சான்றென்றால் அவரது கவிதை அவர் விரும்பிய தமிழ் வாழ்வியலின் வெளிப்பாடு.

சிலப்பதிகார ஆசிரியர் தமிழ்நாட்டின் மூன்று பேரரசுகளின் தலைநகரங்களை நிகழ்களமாக்கி எழுதிய தமிழ் மொழியின் முதல் காப்பியத்தின் ஊடாகத் தமிழ் மொழி சார்ந்த அரசியல் முன்னுரிமை பெறுகிறது.

**வட ஆரியரொடு வண் தமிழ் மயக்கத்து உன்**
(வஞ்சி:25/158)

**தென் தமிழ் நல் நாட்டு செழு வில் கயல் புலி**
(வஞ்சி:25/171)

**தன் தமிழ் ஆற்றல் காண்குதும் யாம் என**
(வஞ்சி:26/185)

என்ற வஞ்சிக்காண்ட வரிகளில் இதன் தாக்கத்தை உணரலாம்.

இவ்வாறு மொழி பண்பாட்டு இருமைகளை ஒங்கி முன்னிறுத்திய காலகட்டத்திற்கும் இடைக்கால பக்தி இலக்கிய முன்னுரிமைகளுக்கும் பெருத்த இடைவெளி இருக்கிறது. மக்கள் மொழியான தமிழ் மொழியின் தோற்றத்தைச் சிவபெருமான், அகத்திய முனிவர் ஆகியோருடன் இணைக்கும் போக்கு இந்தக் காலகட்டத்தில் மேலோங்கியது.

“தழல் புரை சுடர் கடவுள் தந்த தமிழ்”; “தென் தமிழ்நாட்டு அகம் பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம்”; “தமிழ் முனிவன்” என்பது போன்ற சித்தரிப்புகளைக் கம்பராமாயணத்தில் காண்கிறோம். “கடவுள் ஆயினும் ஆகுக மடவை மன்ற வாழிய முருக என்று அறத்தொடு நின்ற நற்றிணை தோழிக்கும் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான் என்ற குறள் முழக்கத்திற்கும் இடைக்கால இலக்கியங்களுக்கும் எவ்வளவு இடைவெளி.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் உள்ளிட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெரும் காப்பியங்கள், தேவாரம், திருவாசகம் உள்ளிட்ட எந்தத் தமிழ் நூலிலும் இடம்பெறாத மனு/ மநு என்ற பெயர் கம்பராமாயணத்தில் 25 முறை; பெரியபுராணத்தில் 10 முறை; திருப்புகழில் 12 முறை; வில்லிபாரதத்தில் 28 முறை பயன்படுகிறது.

‘நல்ல அரு மறையான் நல் தமிழ் ஞானசம்பந்தன்; மறை வளரும் தமிழ் மாலை; நாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ் மாலை; நல் தமிழ் ஞானசம்பந்தன்



நான்மறை’ என்பது போன்ற சொல்லாடல்களால் நிரம்பியது சம்பந்தர் தேவாரம். ‘ஆரியம் கண்டாய் தமிழன் கண்டாய்’ என்கிறார் அப்பர். ‘பாட்டு என்னும் வேத பசும் தமிழ்’ என்கிறது நாலாயிரதிவ்விய பிரபந்தம்.

சிவன் எழுப்பிய உடுக்கை ஒலியிலிருந்து ஒரு புறம் வடமொழியும் மறுபுறம் தமிழ் மொழியும் வந்தன என்ற நம்பிக்கையும் மக்களிடையே பரப்பப்பட்டது.

இந்த நம்பிக்கை பாரதியாரின் பாடலில் கூட எதிரொலிக்கிறது.

**“ஆதி சிவன் பெற்றுவிட்டான் – என்னை**
**ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்**
**வேதியன் கண்டு மகிழ்ந்தே – நிறை**
**மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்**

**மூன்று குலத் தமிழ் மன்னர் என்னை**
**மூண்ட நல்லன்போடு நித்தம் வளர்த்தார்**
**ஆன்ற மொழிகளுனுள்ளே – உயர்**
**ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்”**

தமிழ்க் கல்வெட்டுகளைப் பொறுத்தவரையில் தீந்தமிழில் செவி கழுவியும் (கி.பி 815) அகத்தியனொடு தமிழாந்தும் (கி.பி. 915) என்ற பயன்பாடுகளைப் பார்க்க முடிகிறது. மேலும் தமிழ்க்கூடல் (கி.பி 833); தமிழ்க்கோன் (கி.பி 905); தமிழ்கள் மூன்று (கி.பி 966); தமிழ் நாடன் (கி.பி 1012); முத்தமிழ் நாவலர் (கி.பி 1012); தமிழ்ப்படுத்து (கி.பி 921) தமிழர் (கி.பி 1100); தமிழவேள் (கி.பி 871); தமிழ்ப்பேரரையன் (கி.பி 950); தமிழாபரணன் (கி.பி 905); தமிழோர் (கி.பி 1236) போன்ற பொறிப்புகள் குறிப்பிடத்தக்கவை.

தமிழ் மொழி உலகிற்களித்த ஆகச்சிறந்த கொடையான திருக்குறளை எழுதிய திருவள்ளுவரின் இயற்பெயர் மாதானு பங்கி, தொல்காப்பியரின் பெயர் திரண தூமாக்கினி என்றெல்லாம் எழுதப்பட்டதையும் படித்தே கடந்தது தமிழ்ச் சமூகம். 17ஆம் நூற்றாண்டில் இலக்கணக்கொத்து என்ற நூலை எழுதிய சுவாமிநாத தேசிகர் என்பவர் தமிழ் நூல்களில் ஒன்று கூட தனித்தமிழ் நூல் இல்லை; ஐந்தே எழுத்துக்களை தனக்கெனக் கொண்ட தமிழை ஒரு பாடை (அதாவது மொழி) என்று சொல்லக்கூட அறிவுடையோர் வெட்கப்படுவார்கள் என்று எழுதினார்.

அச்சுக்கலையின் வருகையும் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் மக்களைச் சென்று சேர்ந்ததும் பெரிய திருப்பமாகும்.

மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய, ‘நீராரும் கடலுடுத்த’ எனத்தொடங்கும் பாடல் 1970 ஆம் ஆண்டு மார்ச் 11ஆம் நாள் தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும் இந்தப்பாடல் ஒலிக்கப்படும் நிகழ்வுகளில் கட்டாயம் எழுந்து நிற்கவேண்டுமா என்பது ஒரு விவாதப்பொருள் ஆனதைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழக அரசு அரசாணை பிறப்பிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் தமிழ் என்னவாக இருக்கிறது? உண்மையில் அது கூட்டு உளவியலில் நீக்கமற நிறைந்த உணர்வாய் இருக்கிறது. தமிழ்நாட்டில் ஆண், பெண் குழந்தைகளுக்கு ‘தமிழ்’ என்ற சொல் அடங்கிய பெயர்கள் சூட்டப்படுவதைப் போல இந்தியாவின் பிறபகுதிகளில் நான் பார்த்ததில்லை. எனது வடமாநில நண்பர்கள் பலரும் தமிழரசன், தமிழ்ச்செல்வன், தமிழ்ச்செல்வி போன்ற பெயர்கள் பற்றி வியப்பு தெரிவித்துள்ளனர். தமிழ்நாட்டில் இன்றைய தேதியில் தமிழ் என்ற மொழி அடையாளத்துடன் கூடிய (தமிழ்ச்செல்வன், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்முல்லை, தமிழ்ப்பாவை, தமிழரசி, இளந்தமிழன், தமிழரசன், அருந்தமிழன் போன்ற பெயர்கள்) 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் குறைந்தபட்சம் 3.75 இலட்சம் பேர் இருக்கிறார்கள். குழந்தைகளின் புள்ளிவிவரத்தையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கும். தமிழ் என்ற பெயர் தாங்கியவர்களுக்கான தேடலின்போது தமிழ், தமிழ்மொழி போன்ற பெயர்களைக் கண்டு வியப்பில் உறைந்தேன்.

சங்க இலக்கியத் தரவுகளைக் கூர்ந்து கவனித்தால் தமிழ் சார்ந்த வாழ்வியல் ஒரு மொழி அடையாளம் மட்டுமல்ல; அது ஒரு கருத்தியல் என்பது புலப்படும். பிறப்பின் அடிப்படையில் கிடைத்த உயிலாக இல்லாமல் உரிமையாகக் கருதப்பட்ட கல்வி; பசிப்பிணி மருத்துவமாகிய பகிர்தல் அறம்; வேர்களைக் கொண்டாடும் விழுமியம், பாடறிந்து ஒழுகும் பண்பியல், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பரந்த கண்ணோட்டம், கலந்து இனிது உறையும் வாழ்வியல். இவைதான் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற முப்பரிமாண கட்டமைப்பின் அடித்தளங்கள்.

தமிழ்நாடு என்பது வெறும் பெயர்ப்பலகை அல்ல. தோற்றத் தொன்மையுடன் தொடரும் இளமையுடன் இயங்கும் தமிழின் இருப்பின் பெருமிதம்.

# தியாகிகளைப் போற்றும் திராவிட ஆட்சித்திறன்



வெள்ளையர் ஆதிக்கத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த நிலமான தமிழ்நாட்டிற்கு ஏறத்தாழ 250 ஆண்டுக்கால வீரம்செறிந்த விடுதலைப் போராட்ட வரலாறு உண்டு. இது பற்றி சிலம்புச் செல்வர் ம.பொ.சி., ஸ்டாலின் குணசேகரன் உள்ளிட்டோர் எழுதிய புத்தகங்கள் விரிவாக விளக்குகின்றன. அரசு ஆவணக் காப்பகங்களில் நிறைய ஆவணங்களும் இருக்கின்றன. பல ஊர்களிலும் நினைவுச் சின்னங்கள், மணிமண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டு விடுதலைப் பொன்விழா 1972ஆம் ஆண்டு கொண்டாடப்பட்ட போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அப்போது, இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கு ஒன்றிய அரசின் தாமிரப் பட்டயம் வழங்கப்பட்டது. அந்தப் பட்டயங்களைத் தந்தை



## கோவி.லெனின்

**பத்திரிகையாளர்**

பெரியார், மூதறிஞர் இராஜாஜி போன்ற மூத்த தலைவர்களிடம் நேரில் சென்று வழங்கியவர் அன்றைய முதல்வர் கலைஞர். அது மட்டுமல்ல, தமிழ்நாட்டைச் சேர்ந்த தியாகிகளுக்கு அரசு சார்பில் மாதந்தோறும் உதவித்தொகை வழங்கியதுடன், அந்தத் தொகையை உயர்த்தி வழங்கச் செய்ததும் கலைஞர் தலைமையிலான அரசுதான். தியாகிகளுக்குப் பலவற்றிலும் முன்னுரிமை வழங்கி வருவதுதான் இப்போதைய திராவிட மாடல் அரசு.

தாய்நாட்டின் சுதந்திரப் போராட்டம் போலவே தியாக வரலாற்றைக் கொண்டது தமிழ்நாட்டில் நடைபெற்ற தாய்மொழி காக்கும் போராட்டங்களாகும். 1938ஆம் ஆண்டில் தொடங்கி, 1965 வரையில் பல்வேறு கட்டங்களாக நடைபெற்ற போராட்டங்களில் நடராசன் தாளமுத்து, ஆகியோரில் தொடங்கி கீழப்பழுவூர் சின்னசாமி, அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் சிவகங்கை ராசேந்திரன் வரை சிறைக் கொடுமைக்கும் தீக்குளித்தும் துப்பாக்கித் தோட்டாக்களுக்கும் உயிர்ப்பலியான தியாக மறவர்களின் வரலாறு மறக்கவோ மறைக்கவோ முடியாதது. அத்தகைய மொழிப்போர் களத்தில் சிறைப்பட்ட தியாகிகளுக்கும், உயிரிழந்த தியாகிகளின் குடும்பத்தினருக்கும் மதிப்பும் அங்கீகாரமும் வழங்கியதும் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான ஆட்சிதான்.

சென்னை மாகாணம் என்ற பெயரை மாற்றி, தமிழ்நாடு எனப் பெயர் சூட்டக் கோரி உண்ணாநோண்பு மேற்கொண்டு உயிர்த் தியாகம் செய்தவர் சங்கரலிங்கனார். 1950களில் அவர் முன்வைத்த கோரிக்கையை 1967இல் முதல்வரான திராவிட மாடல் ஆட்சித் திறனின் முதல் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்றினார். சென்னை மாகாணம், தமிழ்நாடு ஆனது. அந்தத் தியாகி சங்கரலிங்கனாருக்கு சிலை அமைத்து பெருமை சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

வெள்ளைக்காரர்களை எதிர்த்து வீரப் போர் புரிந்த பாளையக்காரரான வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவைப் போற்றும் வகையில், பிரிட்டிஷார் பீரங்கியால் தகர்க்கப்பட்ட அவரது பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை மறுகட்டமைப்பு செய்து, நினைவுச் சின்னமாக்கினார். மாவீரர்கள் மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை, பூலித்தேவன் என வெள்ளையரை வீரத்துடன் எதிர்த்து நின்றவர்களின் புகழ் போற்றும் நிகழ்வுகள் நடைபெற்றன.

முதல் இந்திய சுதந்திரப் போர் எனச் சொல்லப்படும் சிப்பாய்க் கலகத்திற்கு அரை நூற்றாண்டுக்கு முன் நடைபெற்ற வேலூர் கோட்டைப் புரட்சியின் 200ஆம் ஆண்டினை முதல்வர் கலைஞர் தலைமை யிலான தமிழ்நாடு அரசு 2006ஆம் ஆண்டில் விழா எடுத்துச் சிறப்பித்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவிடம், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நினைவிடம், விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கான மணிமண்டபம்





எனச் சுதந்திர வேள்வியில் பங்கெடுத்த தமிழ்நாட்டின் தியாகிகளுக்குப் பெருமை சேர்த்து அவர்தம் வரலாற்றை அடுத்த தலைமுறைகளின் நினைவில் நிறுத்தினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

1956இல் இந்தியாவின் பல பகுதிகளும் மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட நிலையில், அன்றைய சென்னை மாகாணமான தமிழ்நாட்டுடன் இணைந்திருந்த எல்லைப் பகுதிகள் சில, பிற மாநில எல்லைகளுடன் இணைக்கப்பட்டன. ஆந்திரப்பிரதேசத்தின் சித்தூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட தமிழ்நாட்டின் பகுதிகளை மீட்கச் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. போன்றவர்களின் முன்னெடுப்பில் வடக்கு எல்லைப் போராட்டம் நடைபெற்றது. கேரளாவின் இடுக்கி மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை மீட்பதற்காகவும், திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கன்னியாகுமரி பகுதி கேரளாவுக்குப் போகாமல் தமிழ்நாட்டில் இணைப்பதற்காக மார்ஷல் நேசமணி போன்றோரின் முன்னெடுப்பில் தெற்கு எல்லைப் போராட்டம் நடைபெற்றது. சிறைக் கொடுமைகள், உயிர்த் தியாகங்கள் கொண்ட அந்தப் போராட்டத்தின் பொன்விழா நினைவினை 2006ஆம் ஆண்டில் அரசு நிகழ்வாக நடத்தி, எல்லைப் போராட்டத் தியாகிகளுக்கும் அவர் தம் குடும்பத்தாருக்கும் சிறப்புச் செய்தார் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள். அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்து அந்த நிகழ்வில் பங்கேற்றவர்தான் இன்றைய முதல்வர் அவர்கள்.

2021 மே 7ஆம் நாள் முதலமைச்சராகப் பதவிப் பொறுப்பினை ஏற்கும்போதே, ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று கலைஞர் பெயரையும் சேர்த்தே உச்சரித்து, இது கலைஞர் அவர்களின் ஆட்சியின் தொடர்ச்சிதான் என்பதை எடுத்துரைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தந்தை வழியிலேயே தியாகிகளைப் போற்றும் அரசாகத் திகழ்கிறது.

இந்தியச் சுதந்திரத்தின் 75ஆம் ஆண்டு விழாவினையொட்டி, கடந்த 2021 நவம்பர் 1ஆம் நாள் கோயம்பேடு பேருந்து நிலைய வளாகத்தில் தமிழ்நாடு அரசின் செய்தித்துறை சார்பில் ‘விடுதலைப் போரில் தமிழகம்’ என்ற கண்காட்சியை மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

1751 முதல் 1947 வரையிலான காலகட்டத்தில் நடந்த பல்வேறு போராட்டங்கள் பற்றிய கண்காட்சி அது. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டபோது அதனை அவர் எதிர்கொண்ட துணிவு குறித்து ஆங்கிலேயர் எழுதியுள்ள ஆவணம், பிரிட்டிஷாருக்கு எதிராகத் தமிழ்நாட்டு மன்னர்கள் பயன்படுத்திய போர்க்கருவிகள், பீரங்கிக் குண்டு, சென்னை சிறையில் நேதாஜி இருந்தபோது பயன்படுத்திய சாய்வு நாற்காலி, கப்பலோட்டிய தமிழன்







வ.உ.சி.யின் தியாகம், மகாகவி பாரதியார் உள்ளிட்டோரின் விடுதலை வேள்வி, மருது சகோதரர்கள், வீரன் அழகுமுத்துக்கோன், பூலித்தேவன், தீரன் சின்னமலை ஆகியோரின் வீரமும் தியாகமும் நிறைந்த போராட்டம் பற்றிய குறிப்புகள், வேலூர் புரட்சி வரலாறு, வீரமங்கை வேலுநாச்சியார், குயிலி, அஞ்சுகம் அம்மாள், நாகம்மையார் ஈ.வெ.ரா எனப் போர்க்களத்திலும் சத்தியாகிரகத்திலும் முன்னின்ற தமிழ்நாட்டுப் பெண்கள், தமிழ்நாட்டில் காந்தி, நேரு உள்ளிட்ட தலைவர்களின் பங்களிப்பு என அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய 250 ஆண்டுக்கால விடுதலைப் போராட்ட வரலாற்றைக் கொண்ட இந்தக் கண்காட்சியை, தீபாவளி நேரத்தில் ஊர்ப் பயணம் செல்வதற்காக கோயம்பேடு வந்த பலரும் பார்வையிட்டனர்.

வ.உ.சி.யின் 150வது பிறந்தநாள், பாரதியாரின் நினைவு நூற்றாண்டு இவற்றைப் போற்றும் வகையில் நடமாடும் கண்காட்சி வாகனமும் சென்னைப் பள்ளிகள் நோக்கி வலம் வந்தன. ஒரு வாரக் காலத்திற்குப் பொதுமக்கள் இலவசமாகப் பார்வையிடும் வகையில் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் நடைபெற்ற கண்காட்சியை நீட்டிக்கும் எண்ணமும், தமிழ்நாட்டின் மற்ற நகரங்களிலும் இந்தக் கண்காட்சியை நடத்தும் திட்டமும் அரசிடம் இருந்தது. தொடர்ச்சியான மழை காரணமாக அதனைச் செயல்படுத்த முடியாமல் போன நிலையில், மீண்டும் அந்த வரலாற்றைத் தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்வதற்கான வாய்ப்பு 2022ஆம் ஆண்டு குடியரசு நாள் விழாவையொட்டி அமைந்தது.

குடியரசு நாளில் டெல்லியில் நடைபெறும் அணிவகுப்பில், தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்டத்தை விளக்கும் வாகனத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி மறுத்த நிலையில், அந்த அலங்கார ஊர்தி சென்னையில் மாநில அரசு நடத்தும் குடியரசு நாள் அணிவகுப்பில் பங்கேற்கும் என்றும், அதன்பின் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கும் அலங்கார ஊர்தி கொண்டு செல்லப்படும் என்றும் முதல்வர் அறிவித்தார்.

வீரமங்கை வேலுநாச்சியார், அவர் படையில் இருந்த குயிலி, மாவீரர் மருது சகோதரர்கள், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார், மகாகவி பாரதியார் உள்ளிட்டோரைக் கொண்ட ஊர்தியும், அந்தத் தியாகத் தலைவர்களின் வரலாறும் ஒன்றிய அரசின் அதிகாரிகளுக்குத் தெரியவில்லையாம். ஜான்சிராணி லட்சுமிபாய், பாலகங்காதர திலகர், கோபாலகிருஷ்ண கோகலே, மகாத்மா காந்தி என்ற வரிசையில்தான் இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அவர்களைப் பற்றித் தமிழ்நாடு அறியும். ஆனால், தமிழ்நாட்டில் இருந்து இந்திய விடுதலைக்காகப் போராடிய தலைவர்களை, தியாகிகளை வடஇந்திய மாநிலங்கள் அறிவதில்லை. விடுதலைப் போராட்ட வரலாற்றில் மட்டுமல்ல, இந்தியாவின் பண்பாடு,



மன்னராட்சி காலம், கடல் வாணிகம் உள்ளிட்ட எந்தவொரு வரலாறாக இருந்தாலும் அதில் தென்மாநிலங்கள், அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டின் பக்கங்களை மறைத்தே வரலாற்றுப் பாடத்தைச் சொல்லிக்கொடுக்கும் வழக்கம் காலங்காலமாக நீடித்து வருகிறது என்பதைக் கல்விப்புலத்தில் உள்ள அறிஞர்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறார்கள்.

தமிழ்நாட்டின் தியாக வரலாற்றைத் தமிழக மாணவர்களின் நெஞ்சில் முதலில் நிறுத்துவோம். படித்து முடித்தபிறகு உலகம் முழுவதும் செல்லும் வாய்ப்பு கொண்ட நம் மாணவச் செல்வங்கள் அந்த வரலாற்றை எல்லாத் திசைகளிலும் பதிவு செய்யட்டும் என்ற நோக்கத்துடன், சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் அணிவகுப்பில் அந்த ஊர்திகளை இடம்பெறச் செய்ததுடன், அதன்பின்னர் அவற்றைத் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்குப் பயணிக்கச் செய்தார் முதல்வர். 3 ஊர்திகளில் 360 டிகிரியில் விடுதலைப் போரில் பங்கெடுத்த தமிழ்நாட்டுத் தியாகிகளை இன்றைய தலைமுறை தெரிந்துகொள்ளும் வகையில் செய்து, புதிய வரலாற்றைப் படைத்தார் மாண்புமிகு முதல்வர்.

முக்கிய நகரங்களுக்குப் பயணித்த அந்த ஊர்திகள், சென்னை கடற்கரையிலும் 3 நாட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டபோது, ஏராளமான மாணவ, மாணவியரும் பொதுமக்களும் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் அதனைப் பார்வையிட்டனர். தலைமைச் செயலகம் செல்லும் வழியில் அதனைக் கண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மாணவமணிகளின் ஆர்வத்தைப் பாராட்டியதுடன், அவர்களுடன் 'செல்ஃபி' எடுத்து மகிழ்ந்தார்.

நாடு, மொழி, இனம், பண்பாடு காக்கும் பணியில் தமிழ்நாடு பல தியாகங்களைச் செய்து கொண்டே இருக்கிறது. காலந்தோறும் அதனை நினைவுபடுத்திட வேண்டும். அந்த வகையில், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் 150வது பிறந்தநாள் விழாவையொட்டி அவருடைய நூல்களைச் செம்பதிப்பாக




வெளியிடும் முயற்சிகள் தொடங்கின. மகாகவி பாரதியாரின் 100ஆவது நினைவு ஆண்டினையொட்டி அவர் குறித்த நிகழ்வுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. தீரன் சின்னமலையின் படையில் இருந்த பொல்லான் அவர்களின் தியாகத்தை மதித்து அவருக்கும் பெருமை சேர்க்கும் நிகழ்வினை மேற்கொண்டிருக்கிறது திராவிட ஆட்சி முறையிலான தமிழ்நாடு அரசு. இன்னும் எண்ணற்ற தியாகிகளைத் தேடித் தேடி அவர்களைச் சிறப்பிப்பதில் முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்காகப் பொதுத் தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றிய பெருமக்களைச் சிறப்பிக்கும் வகையில் தகைசால் தமிழர் விருதினை அறிவித்து, முதல் விருதினை பொதுவுடைமை இயக்கத் தலைவரும், விடுதலைப் போராட்டத் தியாகியுமான மூத்த தோழர் என்.சங்கரய்யா அவர்களுக்கு வழங்கி, 100 வயதினைத் தொட்டு வாழும் அவரின் தியாக வாழ்வுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

தென் எல்லைத் தியாகிகளைப் போற்றி அவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயைக் கடந்த 01.11.2021 அன்று கோட்டையில் வழங்கியதும் தமிழக முதல்வரே!

இந்தியாவின் வரலாறு, வடக்கிலிருந்தே எழுதப்பட்டு வருகிறது. இது குறித்து வரலாற்று ஆய்வாளர்கள் பலர் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தி, இந்தியாவின் தென்பகுதி மறைக்கப்படுவதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால், தொடர்ச்சியான வடதிசைப் பார்வையால் தெற்குப் பகுதியின் தியாக வரலாறு மறைக்கப்பட்டே வந்துள்ளது. அந்த நிலையை மாற்றி, இந்தியாவின் வரலாற்றைத் தெற்கிலிருந்து நோக்குகின்ற புதிய பார்வையின் வாயிலாக, உண்மையை ஊடுருவிப் பார்க்கும் ஆய்வுப் பார்வைக்கு வழியமைத்திருக்கிறது தியாகிகளைப் போற்றும் திராவிட ஆட்சிமுறை.

# திராவிடத் தமிழ் மொழியுணர்ச்சியும் தேசியவாதமும்





# வீ.எம்.எஸ்.சுபகுணராஜன்

இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் பி.வி.ரமணா, ஆந்திராவில் நிகழ்த்திய தனது சமீபத்திய உரையில், "மொழியுணர்ச்சியை நாம் தமிழர்களிடமிருந்து கற்றுக் கொண்டு, அது போலச் செயல்பட வேண்டும்" எனப் பெருமைப்படப் பேசினார்.

அவர் குறிப்பிட்ட "மொழியுணர்ச்சி" என்பது வெறும் தமிழ் மொழி குறித்த பெருமிதம் அல்ல. மொழியுணர்ச்சி என்பது ஒரு குறியீடு மட்டுமே. அதன் உட்கிடையாக இன உணர்ச்சி, சமூகநீதி உணர்ச்சி, மதநம்பிக்கைகளின் வேறுபாட்டை மொழியுணர்ச்சியால் நிரவும் பாங்கு எனப் பல உள்ளன.

இவை அனைத்தையும்விட மொழி என்ற தளத்திலேயே தமிழை, அந்த நிலப்பகுதியின் மேலாதிக்க மொழியாகத் திணிக்காமல், இயல்பாக அனைத்து மொழிக்குழுமத்தினரும் அதில் தங்களை உணர்வுப்பூர்வமாக இணைத்துக்கொள்ளும் வகையிலான அரசியல் கட்டமைப்பு சிந்தனையும் இருக்கிறது. இதுதான் திராவிடத் தமிழ் மொழியுணர்ச்சி.

தமிழ் மொழியுணர்ச்சி மற்றும் இன உணர்ச்சி தோற்றுவாய்க் காலத்தை ஆராயப் புகுந்தால், அதன் விரிவு இந்தக் கட்டுரையை நூலாக்கித் திசை மாற்றி விடும். தமிழ் இன/மொழி வரலாற்றுக் காலம் முழுதும், மொழி ஆதிக்கத்தை, அந்நியரின் கலாச்சார, பண்பாட்டு ஆதிக்கத்தை எதிர்த்த வரலாற்றுத் தடங்கள் விரவிக் கிடப்பதை மொழியியல் அறிஞர்கள் பதிவு செய்துள்ளனர்.

சேர சோழ பாண்டிய பேரரசுகளின் காலந்தொட்டும், அவை தம் வீழ்ந்துபட்ட கால அரியணைப் போட்டிகளால், அண்டை/அயல் போர்ப்படை உதவி நாடி, அவர்தம் ஆட்சிகளுக்கு அடிகோலிய காலத்தும், மொழியுணர்ச்சி 'வடிவம்' (பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம் எனப் பல வகைமைகள்) மாறியேனும் தொடரவே செய்தது. அனைத்துக் காலங்களிலும் மொழியின் பண்பை முற்றிலும் சிதைவுறாமல் காக்கும் மரபு தொடர்ந்தபடியே இருந்ததற்கான ஆதாரங்கள் ஏராளம். என்னதான் தடை செய்யும் நோக்கம்



கொண்ட முனைப்புகள் இருந்த போதும், தமிழ் இனத்தின் சமூகப் பண்பாட்டுத் தளங்களில் பாரிய மாற்றங்கள் நிகழாமல் இல்லை. தமிழ் இனத்தின் சமூக ஒழுங்குகள் (பிரிவுகள் அல்ல) ஜாதியமாக மாறிய அவலம் அரங்கேறியது. மொழித்தளத்திலும் இந்த புதிய 'வர்ண' ஆதிக்கக் கருத்தாக்கம் ஊடுருவுவது நிகழவே செய்தது.

பதினேழாம் நூற்றாண்டு தொடங்கி, இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை நீண்ட ஐரோப்பிய அந்நியர்களின் மேலாதிக்கம், குறிப்பாக ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கை மேலோங்கி, அதுவரையான சமூக உறவுகளில், அதைவிட முக்கியமாக ஆட்சி வடிவங்களில் நவீனத்துவத்தைப் புகுத்தி தங்களது பிடியை வலுப்படுத்தின.

அடிப்படையில் கிழக்கிந்தியக் கம்பெனி ஒரு பிரிட்டீஷ் கூட்டுத் தொழில் நிறுவனம் மட்டுமே (A Registered JOINT STOCK COMPANY). அந்த நிறுவனத்திற்கு அதுவரை இங்கு வழக்கில் இருந்து வந்த (நசிந்த நிலையில்) ஆட்சி வடிவத்தைக் கையாளும் உரிமையோ அல்லது மேற்கில் உதயமாகி விட்டிருந்த நவீனத்துவ அரசு வடிவமாகவோ இயங்கும் தகுதிப்பாடு அறவே இல்லை. அது வரை ஆண்ட அரச/ஆட்சியதிகாரம் பெற்றவர்களின் உள்முரண்களால்/துரோகங்களால் பலவிதமான குழப்பமான ஆட்சிவடிவங்கள் தோன்றியிருந்த போதும், முற்றிலும் புதிதான 'கும்பினி ஆட்சி' என்ற வடிவம் ஆட்சி என்ற வடிவிற்குப் புறம்பானதாகவே இருந்தது.

அதுவரை ஆட்சியருக்கு/மன்னருக்கு அதிகாரம் வழங்கிய 'தெய்வீக உரிமை' (DIVINE RIGHT) இந்தக் கும்பினி ஆட்சிக்கு அறவே இல்லை. ஆனால் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளாக இந்த 'தெய்வீக உரிமை'யை அங்கீகரிக்கும் 'சட்ட விதிகளை' உருவாக்குபவர்களாக தங்களை நிறுவிக் கொண்ட சிலர், இந்த விதிக்குப் புறம்பான ஆட்சியையும் (ILLEGAL RULE), முறைப்படுத்தும் (LEGALISE) சட்ட ஆலோசகர்களாக, ஆட்சி நடத்தும் அதிகார வர்க்கமாக மாறினர்.

இவர்கள் ஏனைய சமூகங்களிற்கு கற்கும்



உரிமையை ஏற்கனவே தடை செய்துவிட்டவர்கள், இந்த 'சட்டத்திற்குப் புறம்பான' ஆட்சிக்கான ஆலோசனை வழங்க ஆங்கிலக் கல்வியில் புலமை பெற்றனர். இதன் மிக மோசமான விளைவு இந்த மண்ணின் சமூக ஒழுங்கு, ஜாதியமைப்பு, வழிபாட்டு உரிமை, பொதுவெளி உரிமை, நில உடைமை ஆகியவை குறித்த தங்கள் புனைவான 'வேதச் சட்டங்களை' புதிய ஆட்சிக்கான வழிகாட்டுதலாக மாற்றியதுதான். நிற்க.

எத்தனை விதமான சாமர்த்தியங்களும் எதிர்வினைகளின்றி இயங்கிவிடுவதில்லை. ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பினி ஆட்சி, தனது இறக்குமதி/ஏற்றுமதி வியாபாரத்திலிருந்து 'நிலவரி' வசூலிப்பவர்களாக ஆன போதுதான் இந்த முறையற்ற ஆட்சி இங்கு வலுவாகக் காலூன்றியது.

அதற்கான ஆட்சியாளர்கள் உள்ளூர் பண்பாடுகளை, கலாச்சாரங்களை, ஜாதி அமைப்புகளை 'அறிந்துகொள்ள' முனைந்தனர். இதன் மிக முக்கியமான கூறு உள்ளூர் மொழியறிவு பெறுதல் என்பதானது. இதற்காகக் கல்கத்தாவிலும், மெட்ராஸிலும் 'பள்ளிகள்' உருவாகின.

வெகு நீண்ட வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமாயின், கல்கத்தா பள்ளி கட்டமைத்த 'வேத இந்தியா' என்ற கருத்தாக்கம், தன்னியல்பான போக்கில், மெட்ராஸ் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் வெள்ளை அதிகாரிகளின் ஆர்வத்தால், அதற்கு மாற்றான/எதிரான 'திராவிட மொழிக்குடும்ப'த்தையும் அதன் பண்பாட்டு மாற்றுகளையும் கண்டடைந்தது.

'திராவிடம்' என்ற கருத்தாக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டு சிந்தனைத் தளத்தில் பலவிதமான முன்னெடுப்புகளிற்கு ஆதாரமானது. ஆரியம் எதிர் திராவிடம் என்ற முரணை வலுவாக நிறுவியது.

எல்லிஸ், கால்டுவெல் போன்றோரின் மொழி ஆய்வு இதன் ஆதாரத் தளமாக அமைந்தது. இந்தக் கருத்தாக்க முரண் தீவிரமடைந்தது.

மதச் சடங்கு சார்ந்த சமூக மேலாண்மை, தங்களது வேத சாஸ்திரங்கள் சட்டங்களாக



டாக்டர் நடேசனார்



சர்.பிட்டி.தியாகராயர்



டி.எம்.நாயர்



பனகல் அரசர்

வழங்கிய அதிகாரத்தை எப்படிக் கைவிட முடியும். அதே போல, மற்ற ஜாதிகள் தங்களது 'திராவிடர்' அடையாளத்தைக் கோர, பேணத் துவங்கினர்.

அத்திப்பாக்கம் வெங்கடாசலனார், கிறித்தவம் தழுவி பாதிரியாரும் ஆகிவிட்ட வின்பிரட் அவர்கள், சென்னை முனுசாமி நாயகர் ஆகியோர் பங்களிப்பு இதில் முதன்மையானது.

இந்த நூற்றாண்டின் மிக முக்கியமான ஆளுமைகளில் மனோன்மணியம் சுந்தரனார் இடம் தனித்துவமானது. அந்த நாட்களில் முறையான ஆங்கிலக் கல்விப்புலம் சார்ந்து இயங்கிய ஆளுமை அவர்தான். திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் தத்துவத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர் அவர்.

அவரது 'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடல் அன்றைய சமூகக் கருத்தியல் விவாதப் புள்ளிகளான ஆரியம் X திராவிடம் என்ற முரணைப் பேசியதோடு (பாடியதோடு) 'திராவிட நல் திருநாட்டையும்' 'சீரிளமைத் தமிழ்த் தாயை'யும் கண்டடைந்து அறிவித்தது. 1898ஆம் ஆண்டின் மனோன்மணியம் நாடக நூலின் பாயிரமாக எழுதப்பட்ட இந்தப் பாடல் இருபதாம் நூற்றாண்டின் இன/மொழி அரசியலிற்கு வித்திட்டது என்றே கருதலாம்.

அதுவரையான சமஸ்கிருதம் X தமிழ் முரணோடு நாடு என்ற சிந்தனையையும், மொழியுணர்ச்சிக்கான அடிப்படையையும் உருவாக்கியது. இந்த 'மொழியுணர்ச்சி' இருபதாம் நூற்றாண்டின் திராவிட இயக்க அரசியலில் ஆற்றிய பங்கினை இனி பார்க்கலாம்.

## திராவிட இயக்கத்தின் தமிழ் அடையாள உருவாக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மைய ஆண்டுகள் துவங்கியே, கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியினை முற்றிலுமாக குறிப்பிட்டவர்களே நிறைத்துக் கொண்டிருந்த போக்கு பற்றிய கவனம் உருவாகத் தொடங்கியிருந்தது. நேரடி பிரிட்டீஷ் அரசாங்கம் அமைந்த பிறகு, அனந்தப்பூர், சித்தூர் மாவட்டங்களின் அதிகார வர்க்கத்தின் அத்தனை மட்டங்களிலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பது குறித்த தரவுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

சமூகத்தின் பிற தரப்பினருக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென்ற அறிவுறுத்தல்கள் ஆங்கில அரசிடமிருந்து வந்த வண்ணம் இருந்தன. ஆனாலும் மெட்ராஸ் ராஜதானியின் அனைத்து மாவட்டங்களிலும் கலெக்டர் முதல் தாசில்தார், சிரஸ்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தலைமை எழுத்தர், எழுத்தர்,

கிராமக் கணக்கப்பிள்ளை, மணியம் என அனைத்திலும் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரே நீக்கமற நிறைந்திருந்தனர். கல்வியிலும் இதே நிலையே. துவக்கக் கல்வி தவிர்த்து இடைநிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி என அனைத்திலும் 90% குறிப்பிட்டவர்களே இருந்தனர்.

1901ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு வெளியானபோது பெரும் அதிர்வினை ஏற்படுத்தியது.

ஏற்கனவே பெரும் ஏற்பின்மை நிலவிய நிலையில், இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது.

பலவிதமாக உருவான அமைப்புகள், 1917இல் SOUTH INDIAN LIBERAL FEDERATION என்ற அமைப்பாக உருவெடுத்தது. அவர்கள் ஆங்கிலத்தில் நடத்திய 'ஜஸ்டிஸ்' என்ற பெயரால் அறியப்பட்டது. டி.எம். நாயர், பிட்டி தியாகராய செட்டி, நடேசனார் போன்றோர் தலைமை ஏற்றனர். இதன் தொடர்ச்சியான நடவடிக்கைகள், இரட்டையாட்சி முறைக்கான ஒப்பந்தத்தின்படி நடந்த 1920ஆம் ஆண்டின் தேர்தல் வெற்றியை வழங்கியது.

நீதிக்கட்சி ஆட்சியின் முதல் நடவடிக்கையாக கம்யூனல் ஜீ.ஒ. என அழைக்கப்பட்ட, வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகத்தினருக்குப் பிரதிநிதித்துவம் வழங்கும் ஆணை 1921ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்டது.

கோவில் நிலங்களைச் சொத்துக்களைப் பாதுகாக்க இந்து அறநிலையத் துறை, அனைத்துத் தரப்பு மக்களும் கற்கப் பள்ளிகள் எனத் தொடர்ந்த ஆட்சி 1928இல் முத்தையா முதலியார் கல்வி வேலைவாய்ப்பு அமைச்சராக இருந்த போது, அனைத்துத் தரப்பிற்குமான விகிதாச்சார ஒதுக்கீடு ஆணை போடப்பட்டது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஆணையே பின்னர் உருவான இட ஒதுக்கீடு கொள்கைக்கான தொடக்கப்புள்ளி. திராவிட இயக்கவியல் சிந்தனைகள் உருவாகக் காரணமான சமூகநிலை பொதுச் சமூகத்தின் அதிருப்தியின் வெளிப்பாடே.

தேசியம் என்ற கோட்பாட்டு நிராகரிப்பு மற்றும் தேர்தல் அரசியல் பங்கேற்பு குறித்த நம்பிக்கையின்மையும் பெரியாரைச் சுயமரியாதை இயக்கம் வழியான பண்பாட்டுத்தள வேலைகளில் மட்டுமே விருப்பம் கொண்டவர் ஆக்கியது.

தீவிரமான பண்பாட்டுத் தளச் செயல்பாடே வழி என்ற நிலைப்பாட்டில் அவர் இறுதி வரை உறுதியாக இருந்தார். ஆனாலும் நீதிக்கட்சியினர் தொடர் தோல்விகளில் துவண்டு


மனோன்மணியம் சுந்தரனார்


பண்டித அயோத்திதாசர்


ராபர்ட் கால்டுவெல்


டாக்டர் அம்பேத்கர்



போய், கட்சியை அவரிடம் ஒப்படைத்த விபரீதமும் நிகழவே செய்தது.

அதேபோல மொழி போன்ற ஓர்மைகளைப் பெரிதும் கருதாத பெரியார், தேசியவாதம் திணிக்க முனைந்த மொழி ஆதிக்கத்தை எதிர்க்கும் படையின் தலைமை ஏற்றதும் நிகழ்ந்தது. 1938ஆம் ஆண்டில் ராஜகோபாலாச்சாரியர் தலைமையிலான மெட்ராஸ் ராஜதானி அரசு 'கட்டாய இந்தி' மொழிப்பாடத்தைத் திணிக்க முனைந்தது. 'இந்தி எதிர்ப்பு' என்ற தளத்தில் சமூகத்தின் பல்வேறு கொள்கைத் தரத்தவரையும், கோட்பாட்டுத் தரத்தவரையும், மொழியுணர்வு என்ற புள்ளியில் இணையச் செய்தது.

தன்னியல்பாக நடந்த இணைவு, அது வரையான பலவேறு அரசியல், கலாச்சார, மதநம்பிக்கைவாத அமைப்புகளையும், சமூகத்தின் அனைத்துத் தரப்பு இன, மொழி, மத, ஜாதியக் குழுக்களையும், தமிழ் மொழியுணர்வு என்ற தளத்தில் இணைத்த பாங்கு மிகப் பெரிய ஆய்வுப் பொருள். இயல்பாக நிகழ்ந்த போதும், அதைச் சாத்தியமாக்கிய பெரியார், அண்ணா ஆகியோரின் பங்களிப்பு வெகு நிதானமானதும், தீர்க்கமானதுமாகும்.

இந்த இணைவைச் சாத்தியமாக்கியது திராவிட இயக்கம். குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அண்ணா அவர்களும் அவர்தம் தம்பிகளும் கட்டமைத்த 'திராவிடத்



தமிழர்’ என்ற இரட்டை அடையாளம் எனக் குறித்துக்கொள்ள வேண்டும்.

1938ஆம் ஆண்டு முதல் திராவிடத் தமிழ் மொழியுணர்ச்சியும் இன தேசியவாதமும் முளைத்து விளைந்து செழித்தது.

**கட்டுரையாளர் குறிப்பு:**
**வீ.மா.ச.சுபகுணராஜன்,**

திராவிட இயக்க ஆய்வாளர். தமிழிலும் ஆங்கிலத்திலும் திராவிட இயக்கம் , திராவிட முன்னேற்றக் கழகம் பற்றிய பல ஆய்வுக் கட்டுரைகளை/நூல்களை எழுதியுள்ளார். சமீபத்தில் கேம்ரிஜ் பல்கலைக் கழக வெளியீடாக வந்துள்ள, ‘Rule of the Commoner : DMK and Formation of the Political in Tamilnadu, 1949-1967 என்ற நூலைப் பேரா. ராஜன் குறை கிருஷ்ணன் மற்றும் பேரா. ரவீந்திரன் ஸ்ரீராமச்சந்திரன் ஆகியோரோடு இணைந்து எழுதியுள்ளார்.

# சென்னை மாகாணம் முதல் ‘திராவிட மாடல்’ தமிழ்நாடு வரை



இன்று இந்தியாவே வியக்கும் திராவிட மாடல் ஆட்சி என்கிற கோட்பாட்டுக்குப் பின்னால் ஒரு நூற்றாண்டு கால வரலாறு இருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரையறுக்கும் உத்திகளுக்குப் பின்னால் மாபெரும் தலைவர்கள் பலரின் அணிவகுப்புத் தென்படுகிறது. ஆங்கிலேயரிடம் வெறும் நிர்வாக நிலப்பரப்பாக இருந்த சென்னை மாகாணம், இன்று பொருளாதார நிபுணர்களால் பெரிதும் போற்றப்படும் நிலமாக மாறியதற்குப் பின்னால் உள்ள அரசியலை நன்கு அறிந்தவர் நமது முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்.

உரிமைகள் மறந்து உணர்வுகள் இழந்து, பின் மண்ணோடு மண்ணாய் வீழ்ந்துகிடந்த தமிழ்ச் சமூகம் உலகின் பிற சமூகங்களின் மத்தியில் தலை நிமிர்ந்து நிற்கத்தொடங்கிய வரலாற்றின் கதை இது. இது தலைநிமிர்ந்த தமிழர்கள் மீண்டும் தலைகுனிந்துவிடக்கூடாது என்பதற்கான எச்சரிக்கை மணியும்கூட.




# உரிமைப் பாதை ஆழி செந்தில்நாதன்

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்நாட்டின் வரலாறு என்பது அதற்கு முந்தைய இருபது நூற்றாண்டுகளின் வரலாறுகளிலிருந்து ஒரு வகையில் வேறுபட்டது.

இருபதாம் நூற்றாண்டில்தான் நாம் தமிழ்நாடு என்கிற ஒரு மொழிவழித் தாயகத்தை ஒரு நவீன தேசிய இனத்தின் ஆட்சிப்பரப்பாகப் பெற்றோம். நமக்கென்று ஒரு சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட ஓர் அரசாங்கத்தையும் பெற்றோம். எதிர்பார்ப்புகள் ஆயிரம் இருந்தாலும், தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் நவீன தமிழ்நாட்டை எப்படி உருவாக்க முயன்றன என்பது நாம் தெரிந்துகொள்ளவேண்டிய ஒன்று.

பேரரசுகளின் காலத்தில் ஒன்றுபட்டும் சிற்றரசுகள் அல்லது அந்நிய அரசுகளின் காலங்களில் துண்டுதுண்டாகச் சிதறியும் கிடந்த தமிழ்கூறு நல்லுலகம், மொழியால் அன்றி வேறு எதனாலும் ஒன்றிணைக்கப்படாத நிலையில்தான் நெடுங்காலமாக இருந்துவந்தது. ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாணத்தில் தமிழ்ப் பரப்புகள் பெரிதும் ஒன்றுபட்டிருந்தாலும் (குமரி பிறகு சேர்ந்தது), தமிழர்களுக்கு என்றொரு மாநிலம் உருவானதும் அது தமிழ்நாடு என்று பெயர் பெற்றதும் இருபதாம் நூற்றாண்டின் இரு முக்கிய நிகழ்வுகள் ஆகும்.

ஆனால் இந்த "தமிழ்நாடு" என்பது தேசப்படத்தில் மட்டும் உருவான நிர்வாகம் சார்ந்த புவியியல் வடிவம் மட்டுமல்ல. தமிழின ஓர்மையும் திராவிட அரசியலும் இணைந்து உருவாக்கிய ஓர் அரசியல் வடிவமும் ஆகும். அதுவும் முற்போக்கான அரசியல் வடிவம்.

## சென்னை மாகாணத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு: சமூகப் புரட்சியின் அரசியல் பாதை

1639 இல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியால் உருவாக்கப்பட்ட மதராசப்பட்டினம் என்கிற முகவாண்மை ஆட்சி, 1652 இல் மெட்ராஸ் பிரசிடென்சி எனப்படும் சென்னை தலைமாகாணமாக உயர்த்தப்பட்டது. இந்தக் காலகட்டம் முதல், 1800களின் தொடக்க ஆண்டுகள்

வரை, பல்வேறு வகைகளில் கம்பெனியார் தமிழ்பேசும் நிலங்களை தம்வசப்படுத்தினர். இந்தியா முழுவதிலும்கூட இதுவே நடந்தது. தமிழ்நாட்டில் பூலித்தேவன், மருதுபாண்டியர், கட்டபொம்மன், வேலுநாச்சியார், தீரன் சின்னமலை எனத் தொடங்கிப் பல தீரர்களும் தியாகிகளும் தங்கள் அரசுரிமைக்காக நடத்திய போராட்டங்களினூடாகத்தான் சென்னை மாகாணத்தில் நவீன அரசியல் கருத்துருக்கள் உருவாயின. மருது பாண்டியரின் ஜம்புத் தீவு பிரகடனமும் 1806 வேலூர் புரட்சியும் நவீன தமிழக அரசியலின் தொடக்கங்களே.

1857 தில்லி சிப்பாய் கலகத்துக்குப் பின் இங்கிலாந்து மகாராணியாரின் நேரடி ஆட்சியில் இந்தியா வந்த பிறகு. காலனியாதிக்கவாதிகளின் வசதிக்காகவும் உள்ளூர் பொருளாதாரத்தின் தவிர்க்கமுடியாத வளர்ச்சிக்காகவும் பல்வேறு பொருளாதாரத் திட்டங்களும் நிர்வாகத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன. அத்தகைய பல மாற்றங்கள் நிகழ்ந்த பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் சென்னை மிக முக்கியமானது. 1861 இல் தொடங்கப்பட்ட மெட்ராஸ் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் முதலில் ஆங்கிலேயர்களால் மட்டுமே நிரம்பியிருந்தாலும் பிறகு உள்ளூர் உயர்சாதியினரும் இடம்பெறக்கூடிய அவையாக மாறிக்கொண்டிருந்தது. இந்தக் காலத்தில் பல சிவில் சர்வீஸ், நீதித்துறை மாற்றங்களினூடாக சட்டத்தின் ஆட்சி என்றால் என்ன என்பது மக்களுக்குத் தெரியவும் வந்தது.

இதுவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ்நாட்டில் நவீன அரசியலுக்கான புறக்காரணிகளையும் உருவாக்கின. இராமலிங்க அடிகளார் தொடங்கிப் பல சமூகச் சீர்திருத்தவாதிகள் உருவானதும் கிறித்துவ ஊழியங்களின் பள்ளிகளின் வழியாகக் கல்வி மக்களிடையே பரவலானதும் உள்ளூர் நிர்வாகத்துக்காகப் பல ஆட்சி மன்றங்களும் நீதிமன்றங்களும் உருவாக்கப்பட்டதும் தமிழ்நாட்டின் முகத்தை மாற்றலாயின. புதிதாக உருவான அதிகார பீடங்களில், ஆங்கிலேயர்களுக்கு அடுத்த நிலையில் உயர் வகுப்பினர் இடம்பெற்றிருந்தனர்; ஆனால் இதர வகுப்பினருக்கு புதிய நிர்வாக அமைப்புகளிலும் கல்வி அமைப்புகளிலும் பெருமளவு இடம்பெறமுடியாத நிலை ஏற்பட்டது. இது சமூகத்தில் நெடுங்காலமாக நிலவி வந்த சாதிய அடுக்குகளில் முரண் அலைகளை உருவாக்கின.

காலனியப் பொருளாதாரம், காலனிய ஆட்சி நிர்வாகம் ஆகிய இரண்டிலும் தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறித்தும் அதிகார வாய்ப்புகள் அனைத்துப் பிரிவு தமிழர்களுக்கும் நியாயமான முறையில் பிரித்து வழங்கப்படவேண்டும் என்பது குறித்தும் உருவான கோரிக்கைகளே, தமிழ்நாட்டில் பிற்காலத்தில் திராவிட இயக்கத்தின் பெருவளர்ச்சிக்குக் காரணமாயின. அதாவது ஜனநாயக உரிமைகளுக்கான குரல்கள் எழாமல், இயக்கங்கள் இல்லாமல் ஜனநாயக அரசியலும் ஜனநாயக ஆட்சியும் உருவாக முடியாது.

அயோத்திதாச பண்டிதரின் வைதீக எதிர்ப்பு அரசியலும் மூலாதார சமூக நீதி அரசியலும், தமிழன், திராவிடன் போன்ற அடையாளங்களை அவர் மீட்டளித்ததும் கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மிகமுக்கியமானதொரு நிகழ்பாடாகும். பிறகு உருவான தனித்தமிழ் இயக்கமும் பொதுவுடைமை இயக்கத்தின் தோற்றமும் இருபதாம் நூற்றாண்டின் முதற்பாதியில் தமிழ்நாட்டின் ஜனநாயக அரசியலை உருவாக்கின. மறைமலை அடிகள், சி.நடேசனார், பிட்டி தியாகராயர், டி.எம்.நாயர், சிங்காரவேலர், எம்.சி.ராஜா, ரெட்டமலை சீனிவாசன் போன்றோரின் சிந்தனைகளாலும் செயல்பாடுகளாலும் தமிழ்ப்பரப்பில் உரிமை அரசியல் வளர்ந்தது, இந்தியத் தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய பாரதியார் போன்றோரின் எழுச்சியும் நவீனத் தமிழ் மனத்தை உருவாக்கியதில் பெரும்பங்கு செலுத்தின. அரசியல் இலக்குகள் பலவாகத் தோன்றியபோதும் நவீனத் தமிழ் மனத்தை உருவாக்கியதில் இவர்கள் ஒரே

அணியில்தான் இருந்தார்கள். இந்த இயக்கப்போக்கை உருவாக்குவதில் தீவிரமாகப் பங்களித்து, பிறகு அதன் சிகரமாக உருவானவர்தான் தந்தை பெரியார். இந்த இயக்கப்போக்கை பிறகு வளர்த்தெடுத்தவர்கள் பேரறிஞர் அண்ணாவும் அவரது உடன்பிறப்புகளான கலைஞர் மு.கருணாநிதி போன்றோரும்.

காலனிய ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியாவில் நடந்த பல சுதேசியப் போராட்டங்களின் விளைவாக உள்ளூர் மக்களுக்கு ஆட்சி அதிகாரத்தைப் பிரித்துக்கொடுக்கும் நிலைக்குப் பிரிட்டிஷ் அரசு வந்தது. 1919 மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் மூலமாக உருவான ஓர் இரட்டையாட்சியில், மக்கள் நலம் சார்ந்த அதிகாரங்களான கல்வி, உடல்நலம், தொழில் போன்ற துறைகளில் சட்டமியற்றும் அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவையினரின் கைகளுக்குக் குறைந்தபட்சமாவது கைமாறியது.

1916லிருந்து நீதிக்கட்சி என்றழைக்கப்பட்ட தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தினரின் தலைவர்கள் முன்னெடுத்த அரசியல் அதிகாரம் அனைவருக்குமானதாக அமைந்திருந்தது.

1920 இல் நீதிக்கட்சி ஆட்சி அமைத்தது. 1921 செப்டம்பர் 16இல் அக்கட்சியின் ஆட்சி கொண்டுவந்த வகுப்புவாரி பிரதி நிதித்துவ ஆணை மிக முக்கியமானது, இது ஆட்சி அதிகாரத்திலும் கல்வி உள்ளிட்ட துறைகளிலும் அனைத்து சமூகத்தவர்களுக்கு நியாயமான இடத்தை உறுதிசெய்யும் ஒரு பெரிய மாற்றத்துக்குத் தொடக்கமாக இருந்தது. மறு ஆண்டு அக்கட்சியால் கொண்டுவரப்பட்ட சென்னை இந்து சமய அறநிலையச் சட்டம் சமூக மாற்றத்தை நோக்கிய மாபெரும் பாய்ச்சலாகும்.

1920 சென்னை தொடக்கக் கல்வி சட்டம் இளம் குழந்தைகளுக்கான கல்வியை கட்டாயபூர்வமாக்கியது. பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப மறுக்கும் பெற்றோர்களைத் தண்டிக்கும் அளவுக்கு அந்தச் சட்டம் கல்வியை அடிப்படையானதாக ஆக்கியது. அதே 1920இல் சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் நண்பகல் உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது, அது இன்றைய சத்துணவுத் திட்டங்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது. 1923இல் மேட்டுக்குடியினருக்கு மட்டுமே என இருந்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் கதவுகள்


பாரதியார்


வ.உ.சிதம்பரனார்


ம.வெ.சிங்காரவேலர்


டாக்டர் முத்துலட்சுமி


ஜீவா


ம.பொ.சி.

அனைத்துப் பிரிவினருக்குமாக திறந்துவிடப்பட்டன.

1919 இந்திய அரசுச் சட்டம் ஆண்களுக்கு மட்டுமே சட்டமன்ற உறுப்பினராகும் உரிமையை அளித்திருந்தது. நீதிக்கட்சி ஆட்சி 1921இல் அதில் திருத்தம் செய்து பெண்களும் உறுப்பினராக வழிவகுத்தது. இதுவே ஆட்சிமன்றத்தில் 1926இல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி உள்ளே நுழையவும் அவர் மூலமாகத் தேவதாசி முறை ஒழிப்பு போன்ற புரட்சிகரமான சட்டங்கள் உருவாகவும் காரணமாக இருந்தது.

ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவினர் முன்வைத்த கருத்துகளின்படி, பஞ்சமர், பறையர் போன்ற பெயர்களால் அல்லாமல் ஆதிதிராவிடர் என்கிற பெயரால் அச்சமூகத்தினர் அழைக்கப்படும் கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக 1931இல் கொண்டுவரப்பட்ட மலபார் குத்தகைச் சட்டம் விவசாயக் குத்தகைக்காரர்களுக்கு விவசாய நிலத்தின் மீதான உரிமையைச் சட்டமாக்கியது. இப்படியாகச் அனைத்து நிலைகளிலும் சமூகநீதி குண்டுகள் எறியப்பட்டன. மக்கள் பிரதிநிதித்துவமும் ஜனநாயக ஆட்சிமுறையுமே சமூகத்தை உயர்த்தும் என்கிற எண்ணமும் தமிழ் சமூகத்தின் அன்றைய அறிவுஜீவிகளிடம் உருவானது.

நீதிக்கட்சி ஆட்சி ஒரு புறமிருக்க. தந்தை பெரியார் தலைமையிலான சுயமரியாதை இயக்கம் இணைப்போக்கில் உருவாக்கிய புதிய அரசியல் அத்தகைய அறிவுஜீவிகள் செயல்வீரர்களை ஒருங்கிணைத்தது. சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் இணைந்து நாற்பதுகளில் திராவிடர் கழகம் உருவானபோது, அது உடனடியாக ஆட்சி அதிகாரத்துக்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. மாறாக இந்தியாவே 1947 ஆகஸ்ட் 15ஐ எதிர்நோக்கியிருந்தது.

பெருமாற்றத்தின் இடைக்கட்டத்தில், தந்தை பெரியாரின் சூறாவளி அரசியல் தமிழ்ச்சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் மிகப்பெரியவை. அனைத்துவகை ஆதிக்கத்தையும் தகர்த்தல், சாதிய ஆதிக்கத்தை உடைத்தல், ஆணாதிக்கத்தை நொறுக்குதல் போன்ற தீவிரமான நோக்கங்கள் ஒருபுறமிருக்க, வகுப்புவாரி பிரதிநிதித்துவம், கல்வி, அனைத்து மக்களுக்குமான ஆட்சி அதிகாரம், பகுத்தறிவு சார்ந்த வாழ்முறை, அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி, உலகப் போக்கை

அறிந்து வளர்தல் போன்றவை இளைஞர்களின் தாகமாக ஆயின. அந்தத் தாகமே புதிய அரசியலாக, திராவிட அரசியலாக உருவானது. அத்தகைய இலட்சியத்துக்கான அரசியல் இயக்கமே திராவிட நாட்டுத் தேசிய இயக்கமாக, தமிழின உரிமை இயக்கமாக வளர்ந்தது. மொழியும் பண்பாடும் முன்னிறுத்தப்பட்டு ஒரு பொன்னுலகைப் படைக்கும் கனவு பரவலானது. தந்தைப் பெரியாரின் தலைமை யிலான சுயமரியாதை இயக்கமும் 1938–1939 முதல் மொழிப்போரும் பிறகு திராவிடர் கழகத்தின் உருவாக்கமும் இவற்றினூடாக பேரறிஞர் அண்ணாவின் அரசியல் வருகையும் அடுத்த தலைமுறைக்கான அரசியலை உருவாக்கின.

ஆனால் அதற்கு முன்பு பல புறநிலை மாற்றங்கள் ஏற்படவேண்டியிருந்தன: 1947 ஆகஸ்ட் 15இல் யூனியன் ஜாக் கொடி இறங்கவேண்டியிருந்தது, மூவர்ணக்கொடி பறக்க வேண்டியிருந்தது, அண்ணல் அம்பேத்கரின் தலைமையில் கூடி வரையறுக்கப்பட்ட இந்திய அரசியல் சாசனம் ஒரு குடியாட்சி சாசனமாக மலரவேண்டியிருந்தது. நேருவின் தலைமையில் ஒரு ஜனநாயக ஆட்சிமுறை ஏற்படவேண்டி யிருந்தது. காலனிய நாடுகளில் எல்லாம் உள்ளூர் மக்களின் கனவுகள் மெய்ப்படவேண்டி யிருந்தது. சென்னை மாகாணமும் சென்னை மாநிலமாக மாறவேண்டியிருந்தது. சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியில் காமராசர் மேலெழ வேண்டியிருந்து. கம்யூனிஸ்ட் இயக்கமும் தேர்தலுக்கு வரவேண்டியிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, அண்ணாவின் முயற்சியில், இந்தியாவில் தேசிய இனம் சார்ந்த அரசியல் கட்சிகளின் முன்னோடியாக, தமிழர்களின் பெருங்கட்சியாக, 1949இல் திராவிட முன்னேற்றக்கழகம் உருவாகவேண்டி யிருந்தது.

பிரிட்டிஷ் இந்தியாவின் நிர்வாக ஆட்சிமுறைகளும் நீதிக்கட்சியின் சமூகநீதி ஆட்சி முறைகளும் திராவிட இயக்கமும் இணைந்து உருவாக்கிய சூழலில், சென்னை மாகாணம் ஏற்கனவே இந்தியாவில் முற்போக்கான, வளர்ச்சி சார்ந்த இடமாக ஆகியிருந்தது. இந்தியாவின் பிற பகுதிகளில் பின்தங்கிய ஆட்சி நிலைமையைச் சமஸ்தானங்களில் மன்னராட்சி முறையும் இருந்த அதே காலத்தில், சென்னை மாகாணம் சட்டத்தின் ஆட்சியையும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தையும் முற்போக்கு அரசியலையும் கைக்கொள்ளத் தொடங்கியிருந்தது. இது தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிலைமாற்றமாகும்.

## தமிழர்களுக்கான மாநிலம்

சுதந்திரத்துக்குப் பிந்தைய இந்தியாவின் ஆட்சியாளர்களுக்குப் பெரிய சவாலாக இருந்தது மொழிவாரி மாநிலங்களின் உருவாக்கம் தொடர்பான கோரிக்கைகளே. இந்திய ஒன்றியம் அடிப்படையில் பல்வேறு மொழிவழித் தேசிய இனங்களின் கூட்டமைப்பே என்கிற வரலாற்று உண்மையை இது சுட்டிக்காட்டுகிறது. தென்னிந்தியாவில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு பெரிய மொழியினருக்கும் தனித்தனி மாநிலங்கள் அமைப்பதற்கான சூழலும் போராட்டமும் 50களில் உருவானது. சென்னை மாநிலம் மொழிவழி பிரிக்கப்படுவதும், ஹைதராபாத், மைசூர், கொச்சி, திருவனந்தபுரம் போன்ற பெரிய சமஸ்தானங்களும் பல சிறிய சமஸ்தானங்களும் புதிய மொழிவழி மாநிலங்களோடு இணைக்கப்படுவதும் அந்தப் பதிற்றாண்டின் மிகமுக்கியமான நிகழ்வுகள்.

சுதந்திரத்துக்கு முன்பு ஒடிய மொழி பேசுபவர்களாலும் சுதந்திரத்துக்குப் பின்பு தெலுங்கு மொழியினராலும் முன்வைக்கப்பட்ட மொழிவழி மாநிலக் கோரிக்கைகள், பிறகு கன்னட, மலையாள, மராத்திய, குஜராத்திய மொழியினராலும் அவரவர் பகுதியில் பரவின. இதைப் போலவே தமிழ்நாட்டிலும் தொடக்கத்திலிருந்தே இதற்கான குரல்கள் எழுந்தன. ஆந்திரர்களின் கோரிக்கைகளாலும் பொட்டிஸ்ரீராமுலுவின் தியாகத்தாலும் 1953இல் ஆந்திரப் பிரதேசம் தோன்றியது. பிறகு தொடர்ச்சியான போராட்டங்கள் காரணமாக,



1956 மொழிவழி மாநிலப் பகுப்புகளுக்கான சட்டத்தின் மூலம் பிற மாநிலங்கள் உருவாயின.

இந்த நிகழ்வுப்போக்குத் தவிர்க்கமுடியாததாக இருந்தாலும், பிரிந்துபோகும் மாநிலங்களின் கோரிக்கைகளால் மூல மாநிலங்களுக்குச் சிக்கல்கள் தோன்றின. சென்னை மாநிலம் பிரிந்தபோது, முதலில் சென்னை நகரத்தையே ஆந்திரர்கள் தங்கள் மாநிலத்துடன் சேர்க்கவேண்டும் என்று கோரினர். பிறகு தமிழ்பேசும் நிலப்பகுதிகள் தமிழ்நாட்டின் மூன்று புதிய எல்லையோர மாநிலங்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டு இணைக்கப்பட்டன. இன்னொரு புறம் தமிழ், கன்னட, மலையாள, தெலுங்குப் பகுதிகளின் தனித்தன்மைகளைப் புறக்கணித்து தட்சிணப் பிரதேசம் என ஒரே மாநிலமாகத் தென்னிந்தியாவை ஆக்கிவிடலாம் என்றொரு முயற்சியும் அன்றைய ஒன்றிய அரசால் முன்வைக்கப்பட்டது.

தலைநகரத்தை மீட்டல், எல்லையைக் காத்தல், பிற மாநிலங்களில் ஏற்கனவே இருக்கும் குமரி போன்ற தமிழ்ப் பகுதிகளை இணைத்தல், தனித்தன்மை கொண்ட ஐக்கியத் தமிழகத்தை உருவாக்குதல் ஆகியவை தமிழ்நாட்டின் பிரதான கோரிக்கைகளாக மாறின. எல்லைக் காப்புப் போராட்டங்கள் வெடித்தன. இப்போராட்டங்களில் நாம் பல இன்னுயிர்களைத் தெற்கெல்லையிலும் வடக்கெல்லையிலும் இழந்தோம்.

தமிழ்நாட்டின் திராவிட இயக்கத் தலைவர்கள் திராவிட இனத்தின் சகோதர தேசிய இனங்களின் ஒற்றுமையை வலியுறுத்திய அதே காலத்தில், தமிழ்நாட்டின் உரிமைகளை எங்கும் விட்டுக்கொடுத்துவிடவில்லை. மாறாகப் பெரியார், அண்ணா போன்றோரும் எல்லைக் காப்பு போராட்டத்தில் ஈடுபட்ட தமிழரசுக் கட்சித் தலைவர் ம.பொ.சிவஞானம், ஐக்கியத் தமிழகத்துக்ககாக களம் கண்ட கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவானந்தம் போன்றோரும் இந்தக் களத்தில் ஒருமித்தக் கருத்துகளைக் கொண்டவர்களாகவே இருந்தார்கள்.

1954 தேசிய எல்லைக் குழுவுக்கு அளித்த விண்ணப்பத்தில் அன்றைய திமுக செயலர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் இப்போக்கை மிகத்துல்லியமாக வரையறுக்கிறார்: “இந்திய உபகண்டமானது பல்வேறு தேசியப் பிரிவுகளை ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாவிட்டாலும்,

ஒன்றுடன் ஒன்று ஒரே வார்ப்பில் சேர்க்கப்பட விரும்பாத பல்வேறு தேசியப் பிரிவுகளைக் கொண்டது என்பதை எவரும் புறக்கணித்து விட முடியாது.''

அவர் மேலும்கூறியது: ''மொழிவழிப் பிரிவினையைத் திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டுகிறது; அதற்காகப் போராடுகிறது; மொழிவழிப் பிரிவினை தனது நீண்ட பயணத்தின் முதற்படி என்று கருதுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில், சென்னை இராஜ்யம் (ஏற்கெனவே இருந்தபடி) தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிவழிப் பிரிவுகளை உடையது ஆகவே, இந்த நான்கு மொழி வழிப் பிரிவுகளை அமைப்பதுதான் உடனடித் தேவை என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக் காட்ட விரும்புகிறது.

இதைச் செய்யும்பொழுது எந்த ஒரு மொழிப்பிரிவும், மற்றொரு மொழிப் பிரிவின் நிலப்பரப்பை அபகரித்துக் கொள்ளாதவாறு அதிகாரத்திலுள்ளோர் முழுக் கவனம் செலுத்த வேண்டும். தொல்லையும், நெருக்கடியும் நிறைந்த நேரத்தில் மத்திய சர்க்கார் ஆந்திர இராஜ்ய அமைப்புக்கு அனுமதி அளித்த போதிலும், மொழிவழிப் பிரிவினையின் அடிப்படைக் கொள்கைகள் காற்றில் பறக்கவிடப்பட்டதுடன், தமிழகத்துக்கு உரிமைப்படி சேர வேண்டிய நிலப்பகுதிகளை ஆந்திரத்துடன் இணைந்திருப்பது காணத் திராவிட முன்னேற்றக் கழகம் வருந்துகிறது.

சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ் பேசும் பகுதிகள், எந்த நியாயப்படி பார்த்தாலும், ஆந்திர இராஜ்யத்திலிருந்து பிரிக்கப் பட்டுத் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட வேண்டியதாகும். அதுபோலவே, இன்றைய தினம் திருவிதாங்கூர் கொச்சி இராஜ்யத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் தமிழ் பேசும் பகுதியாகிய நாஞ்சில் நாடு பிரிக்கப்பட்டுத் தமிழ்நாட்டுடன் இணைக்கப்படுதல் வேண்டும். அத்துடன்கூட சென்னை இராஜ்யத்தில் உள்ள பெரும்பான்மையாக மலையாள மொழி பேசும் பகுதிகளைக் கேரள நாட்டுடன் சேர அனுமதிக்கப்படுதல் வேண்டும்.''

இத்தகையப் போராட்டங்களினூடாக, பிற மொழியினர் பேசும் பகுதிகள் நீங்கி, சில இழப்புகளோடுதான் என்றாலும், தமிழ்நாடு என்கிற தமிழ் ஓர்மைகொண்ட நிலப்பரப்பு ஓர் அரசியல் நிலமாக, நவம்பர் 1, 1957இல் உருவானது. இந்திய அரசியல் சாசனத்தின்படி அது ஒரு ராஜ்யம் அதாவது அரசு ஆகும். தனக்கென்று சட்ட இறையாண்மை கொண்ட ஓர் அரசியல் அலகு ஆகும்.

அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வை அறிஞர் அண்ணா வரவேற்றதுடன் பெருமகிழ்வுடன் கொண்டாடினார்: ''நவம்பர் திங்கள் முதல் நாள், புதிய தமிழகம் உருவாகிறது. ஓர் அரை நூற்றாண்டுக் காலமாக, அரசியல் தெளிவும் நாட்டுப் பற்றும் கொண்டோரனைவரும், நடத்தி வந்த இலட்சியப் பயணம், தடைபல கடந்து படை பல வென்று ஆயாச அடவிகளையும், சஞ்சலச் சரிவுகளையும் கடந்து வெற்றிக் கதிரொளி காணும் இடம் கொண்டுவந்து சேர்ந்திருக்கிறது'' என்று எழுதினார் அண்ணா.

ஆனால் அந்தத் தமிழ்நாடு, தமிழ்நாடு என்று அழைக்கப்படாமல் சென்னை மாநிலம் என்றே தொடர்ந்து அழைக்கப்பட்டது. அதுவே அடுத்த போராட்டத்துக்கு அடிப்படையாக ஆயிற்று.

## பெயர்மாற்றப் போராட்டம்

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்படும்போதே சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர்சூட்டவேண்டும் என்கிற கோரிக்கை எழுந்தது. 1956இல் இதற்காகவே உண்ணாநிலைப் போராட்டம் நடத்தி, 76 நாட்கள் பட்டினி கிடந்து, உயிர்துறந்தார் காங்கிரஸ் தியாகி சங்கரலிங்கனார். ஆனால் அவரது நோக்கம் உடனடியாக நிறைவேறவில்லை, அதன் பிறகு, 1957இல் திமுக சட்டப்பேரவையில் நுழைந்த பிறகு, 1957இல் ஒருமுறையும் 1963இல் ஒரு முறையும் மாநிலப் பெயர் மாற்றம்



மறைமலையடிகள்



இரட்டைமலை சீனிவாசன்



எம்.சி.ராஜா

தொடர்பாக தி.மு.க. கொண்டுவந்த தீர்மானங்கள் தோற்கடிக்கப்பட்டன.

1961இல் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி கொண்டுவந்த தீர்மானமும் தோற்றுப்போனது. 1963இல் பாராளுமன்றத்தில் தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதாவை முன்வைத்து வாதாடினார் அன்றைய கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற தலைவர் பூபேஷ் குப்தா, மாநிலங்களவையில் இருந்த அண்ணாவும் அதை அங்கீகரித்து வாதாடினார். தமிழ்நாடு என்கிற பெயரை ஏற்காத பலரும் நாடாளுமன்றத்திலோ சட்டப் பேரவையிலோ தமிழர்களாகவே இருந்தார்கள் என்பதுதான் முரண்! நாடாளுமன்றத்திலும் தீர்வு ஏற்படவில்லை. அதற்கு நாம் 1967 வரை காத்திருக்கவேண்டியிருந்தது.

1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, அதே ஆண்டு ஜூலை 18ஆம் நாள், சென்னை மாநிலத்தின் பெயரை, தமிழிலும் ஆங்கிலத்திலும், தமிழ்நாடு என்று அதிகாரப்பூர்வமாக மாற்றும் தீர்மானத்தை முதல்வர் அண்ணா முன்மொழிந்தார். 1969 ஜனவரி 14ஆம் நாள் அந்த அதிகாரப்பூர்வ பெயர்மாற்றம் நடைமுறைக்கு வந்தது. பேரறிஞரின் வாழ்நாள் வெற்றியாக, தமிழ்த்தேசிய இனத்தின் மாபெரும் வெற்றியாக அது இருந்தது.

மாநிலம் பெயர் மாற்றப்பட்டாலும், மாநிலத்தின் தலைநகரம் ஆங்கிலத்திலேயே தொடர்ந்தது. இறுதியாக, தலைநகரத்தின் பெயரான சென்னையை ஆங்கிலத்திலும் Chennai என்று அழைக்கவேண்டும் என்று 1996இல் ஆணையிட்டார் அன்றைய முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி. அடையாள மீட்பின் பெரும்பணி ஒரு செந்நிறைவை அடைந்தது.

## தமிழ்நாட்டின் திராவிட மாடல்

நீதிக்கட்சியின் காலத்திலும் காமராசர் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும் எடுக்கப்பட்ட சில முக்கிய நடவடிக்கைகள் இன்றைய தமிழ்நாட்டின் உயர்வுக்கு அஸ்திவாரங்களாக அமைந்தன; அந்த அஸ்திவாரத்தின் மீது மாபெரும் கட்டிடத்தை நிறுவி வலுப்படுத்தும் ஆட்சிகள் திராவிட ஆட்சிகளாகவே இருந்துவருகின்றன. குறிப்பாக, 1967இல் பேரறிஞர் அண்ணா தலைமையிலும் அவரது குறுகிய ஆட்சிக்காலத்துக்குப் பின் கலைஞர் மு. கருணாநிதியின் தலைமையிலான 1969 – 1971, 1971 – 1976 ஆட்சிக் காலங்களிலும் தமிழ்நாடு அடைந்த



முன்னேற்றம் ஒரு ஜனநாயகப் புரட்சியின் தொடக்கமாக இருந்தது. அதன் பிறகு கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தொடர்ச்சியான வளர்ச்சி அரசியலும் இங்கே ஏற்பட்டன. நாம் அடையவேண்டிய இலக்கு வெகுதொலைவில் இருந்தாலும் செல்லும் பாதையில் பல குழிகள் வெட்டப்பட்டிருந்தாலும், தொடர்ச்சியை நாம் பேணிவந்தோம்.

இன்று அனைவரும் வியக்கும், விவாதிக்கும் திராவிட மாடல் ஆட்சிமுறை உருவானது இக்காலத்தில்தான். இந்திய அளவிலும், உலக அளவிலும்கூட, பலதுறைகளில் தமிழ்நாடு பெற்றிருக்கும் ஏற்றம் இக்காலகட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளால்தான் சாத்தியமானது. அது இயல்பான போக்கில் உருவானது அல்ல. மாறாகத் திட்டமிடப்பட்ட கொள்கைகளாலும் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்களாலும் வகுக்கப்பட்ட திட்டங்களாலும் முறையான அமல்படுத்தங்களாலுமே அந்த ஏற்றம் உருவானது.

இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரியப் பொருளாதாரம் தமிழ்நாடு, அதன் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி அளவு ரூ. 24.85 இலட்சம் கோடி (US$330 billion).

இந்திய மாநிலங்களிலேயே அதிகளவு தொழிலுற்பத்தித் துறை நிலவுவதும் தமிழ்நாட்டில்தான். வேறு எந்த மாநிலத்தையும்விட தமிழ்நாடு 60% நகர்மயமாகியிருக்கிறது. நவீன பொருளாதாரத்தின் அடையாளமாகத் திகழும் சேவைத்துறை தமிழகத்தின் உற்பத்தியில் 55% எடுத்துக்கொள்கிறது. வேளாண்மை (11%), தொழிலுற்பத்தி (34%), சேவைத்துறை ஆகிய மூன்று துறைகளும் வலுவாகவும் போதுமான அளவுக்கும் இருக்கும் மாநிலம் இந்தியாவில் வேறொன்று இல்லை.

கல்வியிலும் உள்கட்டமைப்பிலும் எழுபதுகளிலிருந்து போடப்பட்ட முதலீடுகளே, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் தொழிலுற்பத்திக்கும் சேவைத்துறைக்கும் இவ்வளவு பங்கு உருவானதற்குக் காரணம். இதுவே தமிழ்நாட்டைப் பிற இந்திய மாநிலங்களோடு ஒப்பிடுவதைவிடப் பல



பி.டி.ராஜன் - முதலமைச்சர் அண்ணா

வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்படி பொருளாதார நிபுணர்களைத் தூண்டுகிறது. மாநிலத்தின் ஆட்சியாளர்கள் திட்டமிட்டு உருவாக்கிய தொழிற்சூழல் எதேச்சையானது அல்ல என்றும் சமூக நீதிக் கண்ணோட்டத்தோடு கூடிய பொருளாதார இலக்குகளை அந்த ஆட்சியாளர்கள் தங்கள் மனங்களில் கொண்டிருந்ததே காரணம் என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டத் தயங்குவதில்லை.

இத்தகைய பொருளாதார இலக்குகள் எங்கிருந்து வருகின்றன? இவை பொருளாதார மேதைகளின் பரிந்துரைகளிலிருந்து மட்டும் வருவதில்லை. மாறாக சமூகப் பொருளாதாரத்தையே அரசியலாக முன்வைக்கும் தலைவர்களிடமிருந்து வருகின்றன. ஏனென்றால் அவர்களால்தான் மக்களின் வலியையும் அவர்களின் விழைவுகளையும் புரிந்துகொள்ளமுடியும். அதன் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைப்படுத்தும் வைராக்கியமும் அவர்களிடம்தான் இருக்கும்.

தமிழ்நாட்டின் மிகப்பெரிய மூலதனம் மனித மூலதனம்தான். கனிம வளமோ பெட்ரோலியமோ இயற்கை வளமோ அல்ல. எனவே வலுவான கல்விமுறையும் கல்வி வசதிகளும் இருந்தாலொழிய, மனித மூலதனத்தைப் பெருக்கமுடியாது. நீதிக்கட்சி காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் முதல் இன்றைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சிக்காலம் வரை, திராவிட ஆட்சியாளர்களின் முதல் முன்னுரிமை எப்போதுமே கல்வியாகத்தான் இருந்துவருகிறது.

இந்தக் கல்வியே தொழிலுற்பத்தித் துறையிலும் சேவைத்துறையிலும் தேவைப்படும் லட்சோப லட்ச தொழிலாளர்களையும் திறனாளர்களையும் நமக்கு அளிக்கிறது. அவர்களை உருவாக்குவதற்கு தமிழ்நாடு கண்டடைந்த மாபெரும் மனிதவள மேம்பாட்டு உத்திதான் இட ஒதுக்கீடு. அது சாதிய சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை நீக்கவந்த



அருமருந்து மட்டுமல்ல. அது பெருமளவிலான திறனாளர்களை உருவாக்கும் வியூகமும்கூட. அது சமூகத்தின் எல்லா மட்டங்களிலிருந்தும் அத்தகைய திறனாளர்கள் உருவாவதை உறுதிசெய்கிறது.

இது கல்வியை அனைத்து மக்களும் அவரவர் சொந்த முன்னுரிமையாக மாற்றிக்கொள்ள வழிவகுத்தது, அதற்கான சூழலமைப்பை உருவாக்குகிறது. அரசும் தனியாரும் தனிநபர்களும் போட்டிப்போட்டுக்கொண்டு இந்தக் களத்தில் இறங்குகிறார்கள். அதன் மூலமாக உருவாகும் மனநிலை அனைத்துப் பெற்றோர்களையும் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்துக்கேற்ப சிந்திக்கவைக்கிறது.

தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் உருவாக்கிய சமூக நீதிக் கோட்பாட்டு அரசியலானது, இந்த அரசுகளை வழிநடத்த பேருதவியாக இருந்தது. சமூகநீதி, மாநில உரிமை, பொதுநல அரசு, சோசலிசம், ஜனநாயகம் போன்ற அடிப்படையான கோட்பாடுகளில் அண்ணாவும் கலைஞரும் கொண்டிருந்த ஆழமான பற்றுதலும் இலட்சிய உறுதியுமே இந்த அரசுகளை வழிநடத்தும் வழிகாட்டிகளாக மாறியிருந்தன. எனவே பெரிய அளவுக்கு அதிகாரமோ நிதி பலமோ இல்லாத, ஆட்சியதிகாரங்களே நமது மாநில ஆட்சியாளர்களிடமிருந்தது என்றாலும், அந்த சொற்ப அதிகாரங்களையும் அவர்கள் சிறப்பாக பயன்படுத்தினார்கள். ஏனென்றால், திராவிடக் கனவு நனவாகவேண்டும் என்றால் கடந்த காலத்திலிருந்து விடுபடுவது மட்டும் நோக்கமல்ல. வளமான எதிர்காலத்துக்கு வழிகோலுவதும் மிக முக்கியமானது.

## திராவிட மாடலுக்கான ஒரு சிறந்த உதாரணம் – தமிழ்நாட்டின் டிஜிட்டல் புரட்சி

திராவிட ஆட்சிமுறையின் தீர்க்கதரிசனம் மிக்க கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் புரிந்துகொள்ள தகவல் தொழில்நுட்பத்துறையில் நாம் அடைந்த முன்னேற்றத்தை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்ளமுடியும்.

உலகளாவிய அரசியல், பொருளாதார மாற்றங்களின் காரணமாக தொண்ணூறுகளின் தொடக்கத்தில் பொருளாதார உலகமயமாதல் தொடங்கியது. அதன் ஓர் விளைவாக அமெரிக்கா போன்ற மேலைநாடுகளுக்கு மென்பொருள்களை உருவாக்கவும் நிர்வகிக்கவும் இலட்சக்கணக்கான பணியாளர்கள் தேவைப்பட்டனர். அறிவியல் பொறியியல் படிப்புகளை முடித்த, ஓரளவேனும் ஆங்கிலம் நன்கு தெரிந்த, அமெரிக்க நாட்டோடு ஒப்பிடுகையில் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்யத்தயாராக இருக்கிற ஊழியர்கள் தேவைப்பட்டனர். அவர்கள் பெரிய எண்ணிக்கையில் தேவைப்பட்டதுடன், தொடர்ச்சியாகவும் தேவைப்பட்டனர். இத்தகைய தேவையை நிறைவேற்றும் தயார்நிலை அன்று எந்த நாடுகளுக்கு இருந்தது? யோசித்துப்பாருங்கள்.

சீனாவுக்கு இருந்ததா? குறைந்த சம்பளத்தில் வேலைக்கு ஆள்கிடைத்தது என்றாலும் சீனாவிடம் ஆங்கிலமும் மென்பொருள் கல்வியும் அவர்களிடம் அப்போது பெரிதாக இல்லை. ரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் மென்பொருள் கல்வி இருந்தது, ஆனால் ஆங்கிலமோ அதிக எண்ணிக்கையில் ஊழியர்களை உருவாக்கும் நிலையோ இல்லை. பிலிப்பைன்சில் ஆங்கிலம் இருந்தது, ஆனால் அறிவியல் இல்லை. கடைசியில் இந்தியாவில்தான் அதற்கான சூழல் இருந்தது. அதுவும் தென்னிந்தியாவில், அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டு இளைஞர்களிடம். பிறகு தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்ட்டிரம் என இந்தத் துறை பரவினாலும் ஊழியர்கள் என்று கூறும்போது தமிழ்நாட்டுப் பொறியியல் கல்லூரிகளில் படித்தவர்களே தொடக்கத்தில் இந்த தொழில்நுட்பப் புரட்சிக்கான படையினராக இருந்தார்கள்.

இது எப்படி நடந்தது? காமராசர் காலத்தில் போட்ட தொடக்கக் கல்வி விதைகள், அண்ணா–கலைஞர் காலத்தில் உயர்கல்வியாக உயர்ந்தன. அறிவியல் தொழில்நுட்பக் கல்விக்கான பெரும் விதை கலைஞர் காலத்திலும் பிறகு எண்பதுகளில் எம்.ஜி.ஆர். காலத்திலும் போடப்பட்டன. கலைஞர் முதல்வராக இருந்தபோது உருவாக்கப்பட்ட தொழிற்வளர்ச்சிக் கொள்கைகளே பிற்காலத்தில் தமிழ்நாடு ஐடி நிறுவனங்களை ஈர்ப்பதற்கான காரணங்களாக இருந்தன. கலைஞர் காலத்தில் பெருகிய பள்ளிக்கல்வித்துறை பிறகு எண்பதுகளில் பிளஸ் டூ முறைக்கு மாற்றப்பட்டதும் அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள் திறக்கப்பட்டதும் லட்சக்கணக்கான பொறியாளர்கள் தமிழ்நாட்டில் உருவாகக் காரணங்களாக இருந்தன. ஐஐடி போன்ற நிறுவனங்களிலிருந்து உயர்நிலைப் பொறுப்புகளுக்குப் பலர் வந்திருந்தாலும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாலத்தை அவர்கள் கட்டிவைத்திருந்தாலும், அண்ணா பல்கலைக்கழகமும் பிற தொழில்நுட்பக் கல்லூரிகளும் உருவாக்கிய ஆயிரக்கணக்கான பொறியாளர்களால்தான் இந்த பெருமாற்றம் நிகழ்ந்தது.

இந்தக் கல்விநிறுவனங்களிருந்தே உலகளாவிய மென்பொருள் பெரும்பசிக்கு தீனிபோடப்பட்டது. இது தற்செயலாக நடந்த நிகழ்வு அல்ல, பிற்காலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை பெரிய துறையாக வரும், நாம் அதில் இடம்பிடிப்போம் என்றெல்லாம் யாரும் கணக்குப்போட்டு வைத்திருக்கவில்லை. நாம் என்ன செய்தோம்? முதலில் தொடக்கக் கல்வியை உறுதிசெய்தோம், பிறகு இடைநிலைக் கல்வியைப் பரப்பினோம், பள்ளி முடித்துவந்தவர்களுக்கு உயர்கல்வி, பல்கலைக்கழகத்தை உறுதிசெய்தோம். கால ஓட்டத்துக்கேற்ப படிப்புகளை அறிமுகப்படுத்தினோம், கல்வி அமைப்புகளை நெகிழ்வாக்கினோம் அதன் விளைவாக இன்று உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை எனப்படும் ஐஇஆர் விகிதத்தில் இந்தியாவிலேயே மிக அதிகமாக 51% ஐ நாம் எட்டினோம்.

எனவே எதிர்காலத்துக்கானத் திட்டமிடல் என்பது ஒரு ஜோதிடம் அல்ல. மாறாக







டைடல் பார்க் திறப்பு விழா



GOVERNMENT OF TAMIL NADU
1996

Registered No M 1
(Price 0.15 Paise

TAMIL NADU GOVERNMENT GAZETTE EXTRAORDINARY
PUBLISHED BY AUTHORITY

No. 445] MADRAS, SATURDAY, AUGUST 31, 1996
Aavani 16, Thadhu, Thiruvalluvar Aandu—2027

Part IV — Section 1

Tamil Nadu Bills.

BILL INTRODUCED IN THE LEGISLATIVE ASSEMBLY OF THE STATE OF TAMIL NADU.

Under rule 130 of the Tamil Nadu Legislative Assembly Rules, the following Bill which was introduced in the Legislative Assembly of the State of Tamil Nadu on the 3rd November 1995 is published together with Statement of Objects and Reasons for general information.

L. A. BILL No. 39 OF 1996.

A BILL TO ALTER THE NAME OF THE CITY OF MADRAS.

BE it enacted by the Legislative Assembly of the State of Tamil Nadu in the Forty-seventh Year of the Republic of India as follows :—

1. (1) This Act may be called the City of Madras (Alteration of Name) Act, 1996. — Short title and Commencement.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. In this Act, unless the context otherwise requires, "Law" includes any enactment, Ordinance, regulation, order, bye-law, rule, scheme, notification or other instrument having the force of law in the whole or any part of the State of Tamil Nadu with respect to which the State Legislature has competence to make law. — Definitions.

3. On and from the date appointed under sub-section (2) of section 1, for the word "Madras", occurring in any law in force in this State, the word "Chennai" shall be substituted. — Alteration of name of City of Madras.

(A Group) IV-1 Ex. (445)—1 ( 219 )



220 TAMIL NADU GOVERNMENT GAZETTE EXTRAORDINARY

STATEMENT OF OBJECTS AND REASONS.

The area comprising the City of Madras has been called as "Chennai" in Tamil from ancient days. This name has been employed by the people in different walks of life and it has thus been universally accepted. Keeping the universal acceptance of the name "Chennai" in view and keeping also the historical, social, cultural and other details of the City of Madras in view, the Government have taken a policy decision that Madras would be hereafter called "Chennai" in all languages, as against "Madras" and "Madharas" now being called in other languages.

2. The Bill seeks to give effect to the above decision.

K. MANOHARAN,
Minister for Revenue.

C. S. JANAKIRAMAN,
Secretary.

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, MADRAS ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU.

மனந்திறந்த பார்வையும் அடித்தளத்தையும் அடிப்படைகளையும் நம்புவது என்பதும்தான். பள்ளிக்குழந்தைகளுக்கு சத்துணவு முதல் மாவட்டம் தோறும் பல்கலைக்கழகங்கள்வரை எனத் திராவிட ஆட்சியாளர்கள் உருவாக்கிய பலமான அடித்தளமே ஒரு புதிய வாய்ப்பு வந்தபோது அதைப் பயன்படுத்திக்கொள்வதற்கான சூழலை உருவாக்கித் தந்தது. இதைத்தானே தீர்க்கதரிசனமான அரசியல் என்று கூறமுடியும்!

கல்வி மட்டுமின்றி, இத்துறையின் வளர்ச்சிக்காக மேலும் பல தேவைகள் நிறைவேற்றப்படவேண்டியிருந்தன. குறிப்பாக மாநகர உள்கட்டமைப்பு வசதிகள் வேண்டும், பெரிய தொழிற்பூங்காக்களைக் கட்ட இடம் வேண்டும், மின்வசதி வேண்டும், சாலை போக்குவரத்து முதல் விமானப் போக்குவரத்து வரை சுலபமாக இருக்கவேண்டும், இதையெல்லாம் நாம் சாத்தியப்படுத்தினோம்.

எழுபதுகளில் கலைஞர் ஆட்சிக்காலத்தில் போடப்பட்ட ஒவ்வொரு தொழிற்வளர்ச்சித் திட்டமும் இருபதாண்டுகள் கழித்து தொழில்நுட்ப விளைச்சலாக விளைந்ததை நாம் பார்த்தோம். அத்துடன் இல்லாமல் 1996–2001 ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அன்றைய கலைஞர் அரசுதான் வெளியிட்டது. டைடல் பார்க்குகளும் கணினித்தமிழ் மாநாடுகளுமாக நாம் வளர்ந்தோம்.

இதைப் போல ஒவ்வொரு துறையிலும் நாம் திட்டமிட்டு வளர்ந்திருக்கிறோம். சுகாதாரத் துறை, இயந்திரப் பொறியியல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல்துறை என நாம் வரிசையாகச் சொல்லமுடியும். எல்லாத்துறைகளிலும் இந்த வெற்றிகளுக்குப் பின்னால் வியூகங்களை அமைத்து தந்த தலைவர்கள் இருந்தார்கள்.

ஆனால் இந்த துறைகளின் வளர்ச்சிகள்

அனைத்தும் ஏதோ சில நிறுவனங்களுக்காகவும் சில இலட்சம் பொறியாளர்களுக்கு மட்டுமே அல்ல. எனவேதான் தொழில் வளர்ச்சிக்கான செயல்பாடுகளின்போதே சமூக மேம்பாட்டு, மக்கள் நலச் செயல்பாடுகளையும் திராவிட ஆட்சியாளர்கள் செய்துகொண்டே வந்தார்கள்.

தமிழ்நாட்டில் தொழிலுற்பத்தி, சேவைத்துறையின் வளர்ச்சி அதிகரிக்கையில், வேளாண்மையின் பங்கு குறைந்தது என்பது உண்மைதான். ஆனால் சிறந்த வேளாண் திட்டங்கள் மூலமாக விவசாயிகளுக்கும் சிறந்த பொதுவிநியோக முறைகள் மூலமாக மக்களுக்கும் வாழ்வாதாரத்தை நிலைநாட்ட நாம் தவறவில்லை. பாரம்பரிய உற்பத்தியை நாம் எப்போதும் விட்டுக்கொடுக்கவில்லை. ஆனால் பின்தங்கிய உற்பத்தி முறையை நாம் பாரம்பரியம் என்று சொல்லித் தூக்கிக்கொண்டாடவும் இல்லை. நவீனக் காலத்தின் வளர்ச்சியைத் தமிழகத்துக்குக் கொண்டுவந்த அறிவியல் மனப்பான்மை திராவிட ஆட்சிக்காலங்களின் மிகப்பெரிய பங்களிப்பாகும். அது இயற்கை வேளாண்மையையும் சித்த மருத்துவத்தையும் புறக்கணிப்பதில்லை, ஆனால் செயற்கை நுண்ணறிவையும் நிதிநுட்பத்தையும் கண்டு அஞ்சுவதுமில்லை.

## வளர்ச்சிக்குத் தேவை உரிமை





இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் பல திட்டங்களும் முன்னுரிமைகளும் இந்த திராவிட ஆட்சிமுறையை புத்துலகச் சூழல்களுக்கு ஏற்ப புத்துயிர் பெறுகின்றன. அதைத்தான் அவர் திராவிட மாடல் ஆட்சி என்றும் கூறிவருகிறார். தமிழ்நாட்டில் இடையில் ஏற்பட்ட தளர்ச்சி, வீழ்ச்சிகளைத் தாண்டிச் செல்லவும் ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்பால் ஏற்படும் எதிர்மறை விளைவுகளை எதிர்கொள்ளவும் பெரும்முயற்சிகளை அவர் எடுத்துவருகிறார். மாபெரும் பொருளாதார நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்களை அமைத்து அவர் மேற்கொண்டுவரும் முயற்சிகள் இன்னுமொரு தலைமுறையைத் தலைநிமிரச் செய்யக்கூடியவை. அவரது Made in Tamilnadu முழக்கம் உலக அரங்கில் தமிழர்களின் பொருளாதாரத்தை உச்சத்துக்குக் கொண்டுசெல்லக்கூடிய ஒன்று. சென்னை, மதுரை, கோவை என விரிந்து, பல சிறுநகரங்களில் விரவிச்செல்லும் உள்கட்டமைப்பு வசதிகளால் தமிழ்நாடு முதல் உலகச் சூழலைப் பெறும் நிலை வெகுதொலைவில் இல்லை என்று கூறிவிடலாம். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியும் புதுயுக சவால்களை எதிர்கொள்ளும் வியூகமுமே தமிழ்நாட்டு முதல்வரின் திராவிட மாடல் ஆட்சிமுறையின் அடிப்படைகள் என்று கூறலாம்.

சென்னை மாகாணம் முதல் தமிழ்நாடுவரை, நீதிக்கட்சி முதல் திராவிட மாடல் ஆட்சிவரை, நாம் கடந்துவந்த சமூகப் பொருளாதார

முன்னேற்றப்பாதை பெருமிதங்களையும் அளிக்கிறது; அதே சமயம் எச்சரிக்கை மணிகள் ஒலிக்கும் பாதையாகவும் அது இருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்த அபாரமான புதுமுயற்சிக்கு முன்னோடிகளான பேரறிஞரும் முத்தமிழறிஞரும் வழிகாட்டுகிறார்கள், அவர்களுடைய அரசியல் வியூகங்களும் வழிகாட்டக்கூடியவை. மிகவும் குறிப்பாக, தமிழ்நாட்டின் இந்தச் சாதனைகள் தொடரவேண்டும் என்றால் நாம் செய்துமுடித்தாகவேண்டிய ஒரு பெருங்கடமை ஒன்று இருக்கிறது என்பதையும் முதல்வர் அறிவார். நாமும் அறிவோம். அது நிதி உள்பட அனைத்துத் துறைகளிலும் மாநிலத்தின் உரிமைகளை மீட்பதற்கான முயற்சி ஆகும். அந்த முயற்சி மாநில உரிமைக் கோட்பாடாக வெளிப்படுகிறது.

இந்தியாவுக்கே கூட்டாட்சியை ஓர் அற்புதமான ஆட்சிமுறையாக முன்வைத்தவர் அண்ணா. அந்தக் கூட்டாட்சிக் கோட்பாட்டுக்கு இசைய, மாநில சுயாட்சிக்கான மாபெரும் தீர்மானத்தை 1974இல் இயற்றினார் கலைஞர். அரசியல் உரிமைகள் வெல்லப்படாமல் சமூகப் பொருளாதார விடுதலைச் சாத்தியமில்லை என்பதைத் திராவிடம் எப்போதும் வலியுறுத்திவந்திருக்கிறது. அந்த உரிமைப் போராட்டத்தையே தன் சட்டமன்ற பெரும்பணியாக இன்றைய அரசும் கருதுகிறது என்பதை நீட் உள்படப் பல களங்களில் பார்க்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் மாநில சுயாட்சி உரிமைகள் தொடர்பான முன்னெடுப்புகள் நமது பொருளாதாரத்தின் மீது அவர் கொண்டிருக்கும் உறுதியான பற்றினை வெளிக்காட்டுகிறது. அனைவருக்குமான சமூக நீதி வளர்ச்சி என்பது மாநிலத்தின் நிதி, பொருளாதார, சட்ட, திட்டமிடல் பலத்தைச் சார்ந்திருக்கிறது என்பதை அறிந்தவர்கள் யாரும் முதல்வரின் முனைப்பைப் புரிந்துகொள்ளத் தவறமாட்டார்கள்.

**கட்டுரையாளர் பற்றி**

ஆழி செந்தில்நாதன் ஓர் எழுத்தாளர், பத்திரிகையாளர், பதிப்பாளர் மற்றும் அரசியல் விமர்சகர். மொழி உரிமை, தன்னாட்சி, அறிஞர் அண்ணா தொடர்பான ஆய்வுகள் மூலம் நன்கு அறியப்படும் ஆழி செந்தில்நாதன், இந்தியாவெங்கும் உள்ள மொழி உரிமை அமைப்புகளின் கூட்டியக்கமான Campaign for Language Equality and Rights (CLEAR) என்கிற அமைப்பின் அனைத்திந்திய செயலாளர். தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றையும் ஆழி பதிப்பகத்தையும் நடத்திவரும் அவர், தற்போது மாநில சுயாட்சி குறித்து அதிகம் பேசியும் எழுதியும் வருகிறார். தொலைக்காட்சி உள்படப் பல ஊடகங்களின் வாயிலாகத் தனதுக் கருத்துகளைத் தெரிவித்து வருகிறார்.

# DOCUMENTS



# ஆவணங்கள்

REG. NO. M. 97.

The Hindu.

VOL. LXXIV. NO. 22. MADRAS, THURSDAY, JANUARY 26, 1950. 8 ANNAS 92 PAGES

27.9.1956

## CONGRESSMAN'S FAST IN VIRUDHUNAGAR

VIRUDHUNAGAR, Sept. 22.

Stating that the defects in the administration of the State and Central Governments should be set right", that the Congress Ministers should lead a life according to the Gandhian principles and all unnecessary and abnormal expenditure should be avoided and mentioning some other conditions. Mr. K. P. Sankaralinga Nadar, a local Congressman, has been on fast for the past 56 days, beginning from July 27 last. His health is becoming worse day by day.

Mr. A. S. P. Ayyamperumal Nadar, Municipal Chairman, and some other prominent persons of the town met Mr. Sankaralinga Nadar and requested him to give up his fast, but he has refused to do so. They have, therefore, sent telegrams to Mr. Kamaraj and Rajaji urging them to intervene to get Mr. Sankaralinga Nadar to give up the fast.—FOC.

10.11.1956

## POLITICAL SUFFERER'S FAST

VIRUDHUNAGAR, Oct. 10.

Mr. K. P. Sankaralinga Nadar, a local Congressman and a political sufferer, who has been on fast from July 27, was removed this morning to the Madurai Hospital, as his condition is causing anxiety.

Mr. Nadar went on fast demanding that Congress Ministers should minimise unnecessary expenses, the problem of the political sufferers should be settled favourably and Madras State should be named as Tamil Nad.

Though many prominent leaders like Mr. K. Kamaraj, Chief Minister, Mr. P. Kakkan, President, Tamil Nad Congress Committee, Mr. P. Ramamurthi, Communist Leader, Mr. C. N. Annathurai, leader of the DMK and Mr. M. P. Sivagnana Gramani, leader of Tamil Arasu Kazhagam have requested Mr. Nadar to end his fast, he has refused to do so.

Mr. Sivagnana Gramani, who came to Virudhunagar, yesterday tried to meet Mr. Nadar but the latter was unconscious. Therefore Mr. Gramani merely garlanded Mr. Nadar.

This morning—the 76th day of his fast—the local police authorities removed Mr. Nadar to the Madurai Hospital on the request of his relatives.

## CONGRESSMAN ON FAST DEAD

### 75 DAYS' ORDEAL

(FROM OUR CORRESPONDENTS.)

MADURAI, Oct. 13.

Mr. K. P. Sankaralinga Nadar, veteran Congressman of Virudhunagar, who was admitted into the Madurai Government hospital a couple of days ago in a precarious condition following 75 days' fasting, passed away this morning.

Mr. Nadar was brought to Madurai hospital by the police at the request of his relatives as he refused to break his fast indefinitely, which had resulted in deterioration of his health.

It is reported that Mr. Nadar undertook this fast unto death as a protest against what he termed the Congress Ministers' and Governors' extravagant living and ostentation, and to urge that Madras State should be named Tamil Nad and that the case of political sufferers should be considered sympathetically. The leaders of various political parties in the State including the Chief Minister, had requested Mr. Nadar in vain to break his fast.

It is reported Mr. Nadar had expressed a desire that his body be handed over to the Communists. It is further stated when Mr. Nadar's body was being removed to the cremation ground by his relatives, some persons caused obstruction, but they were removed by the Police.

Our Virudhunagar Correspondent adds that a silent procession as a mark of respect to the late Mr. Nadar was taken round the town on October 13 by the Town Congress Committee and other bodies.

15.10.1956

# New Name of "Tamil Nadu"

## Unanimous Support in Madras Assembly

MADRAS, July 18.

The Chief Minister, Mr. C. N. Annadurai, said in the State Assembly to-day that he was happy to note that the resolution declaring the Assembly's "firm opinion" that the name of the State as mentioned in the Constitution of India should be changed as "Tamil Nadu" was supported by all sections of the House.

The Chief Minister, who was replying to the debate on the resolution, stated that the leader of the Opposition, Mr. P. G. Karuthiruman, also supported it. (The Assembly later unanimously adopted the resolution).

Mr. Annadurai said that the resolution had to be forwarded, to the Central Government now. Recently, when he had been to Delhi he had informal discussions with the leaders in the Centre and the impression gathered by him was that if a resolution was sent to the Centre after a debate in the Assembly, the Centre would have no hesitation in amending the Constitution accordingly. He assured the House that there would be no international complication if the name was changed to "Tamil Nadu."

During the debate, Mr. Karuthiruman (Cong.), said he had no objection to supporting the resolution. But he would only offer his suggestion that "Madras State" could continue to be used in English as it was well-known. He cited in this connection the name "Deutschland" which was used by the German people within their own country and the word 'Germany' used outside the world.

Mr. D. S. Authimoolam (Swat.) said he was glad that the cause for which Mr. Sankaralingam of Virudhunagar had laid down his life came to be realised now.

Mr. A. R. Marimuthu (P.S.P.) said that the adoption of the resolution was a matter for rejoicing and he was sure the Central Government would accept the name and incorporate it in the Constitution. Mr. Peer Mohamed (M.L.) said that "Tamil Nadu" was a more appropriate name than "Madras State." Mr. K. R. Nallasivam (S.S.P.) said it was a red letter day in the history of the Tamil-speaking people.

Mr. M. P. Sivagnanam (T.A.K.) said what should have been accomplished ten years ago was being done by the D. M. K. Party after assuming power. While the people in charge of the Congress organisation had not named the regional unit of the party as "Madras State Congress Committee" but only called it "Tamil Nad Congress Committee" in English also, he was unable to understand Mr. Karuthiruman's suggestion to retain the name "Madras State" in English.

Mr. Karuthiruman, by way of explanation, said he only offered his suggestion while supporting the resolution. His love of Tamil language should not be considered less than that of anybody else.

Mr. A. K. Subbiah (Com.) and Mr. A. Balasubramaniam (C.P.I.-M.) also took part in the debate.

19.7.1967

# Madras as Tamil Nadu: Assembly Resolution

MADRAS, July 18.

The Madras Legislative Assembly to-day unanimously passed a resolution declaring "its firm opinion" that the name of the State as mentioned in the Constitution of India should be changed as "Tamil Nadu."

The resolution, moved by the Chief Minister, Mr. C. N. Annadurai, and supported by all sections of the House, recommended to the State Government to take steps to secure necessary amendment to the Constitution.

After the resolution was adopted, Mr. Annadurai, with the permission of the Speaker, uttered the name of "Tamil Nadu" and the members in their full-throated voice hailed "Vazhga", and this was repeated thrice.

See also page 8

16.10.1956

## PROCESSION IN MADURAI

(FROM OUR CORRESPONDENT.)

MADURAI, Oct. 15.

Stray cases of stone throwing on city transport buses and one case of stabbing were reported to have taken place in Madurai city in the course of to-day. Rowdy elements in the city rallied up to make capital out of a tense situation arising from the call of the local Praja Socialist and Dravida Munnetra Kazhagam parties to observe hartal to mourn the death of Mr. K. P. Sankaralinga Nadar, Congressman of Virudhunagar, who died at the hospital here as result of his 79-day fast.

In response to the call, some shops in the city remained closed in the afternoon. The city was quite till 2 p.m. when some persons marched out in the streets in groups. Four cases of stone throwing on the city transport buses in various places were reported to the police. It is stated a few persons sustained injuries as a result of stone-throwing. In an attempt to urge the shop-keepers to close it is stated a group of persons entered a workshop near Tilak Square and two inmates there were inflicted knife injuries. No arrests have been made and police are on the look out for the culprits.

Despite a heavy downpour a procession of about 100 men was taken out through the mail streets of the city which terminated at Tilak Square where a public meeting was held under the joint auspices of the PSP and the DMK, Mr. N. K. Bahulayan, local PSP leader presiding. The meeting adopted a resolution conveying their sorrow at the demise of Mr. Sankaralinga Nadar and expressing sympathy to the members of the bereaved family.

A Congress resolution of condolence on the demise of Mr. Sankaralinga Nadar at Madurai Municipal Council to-day was the subject of a heated discussion. Opposition members demanded the adjournment of the council till to-morrow. Mr. R. A. Subbaram, Chairman, who presided, moved the resolution expressing sympathy to the members of Mr. Sankaralinga Nadar's family and requested all members to observe silence for five minutes. Mr. S. Muthu (DMK) brought an amendment to this resolution urging the adjournment of the meeting till to-morrow. There was a heated discussion on this amendment for 90 minutes. A large gathering had assembled in front of the Council Hall and policemen were on the scene to maintain order. When an opposition member pointed out the possibility of the large crowd outside interfering with the Council proceedings, the Chairman adjourned the meeting. Earlier two members of the Opposition staged a walk-out on this issue.

20.7.1967

## *Re-Naming of Madras: Council Resolution*

MADRAS, July 19.

The Madras Legislative Council to-day unanimously adopted a Government resolution stating that it was of the opinion that the name of this State as mentioned in the Constitution of India be changed as "Tamil Nadu" and recommending that steps be taken by the State Government for securing necessary amendments to the Constitution.

Moving the resolution, Mr. C. N. Annadurai, Chief Minister, said the resolution was simple and timely and logical.

Mr. R. Venkataraman, Leader of the Opposition, said that the Congress Party had absolutely no objection to the resolution as tabled by the *Chief Minister*. According to the decision taken by the previous Government they had accepted the principle that in all publications relating to legislation of the Government of Madras in Tamil they would use the expression "Tamil Nad" and only in respect of the name of the State in English publication would they use the term "Madras State." The arguments for the retention of that term in English was that Madras had a reputation for a number of things, industrial progress and good administration. In foreign countries the name, Madras State, immediately brought to one's mind the picture of a well-administered or well-advanced State. So, the previous Government thought that there was no harm in having two names.

Mr. G. Krishnamurthi expressed the hope that the renaming of the State would be the first step in reviving Tamil culture which could be done only through the schools.

Replying to the debate, Mr. Annadurai said he was glad that the Leader of the Opposition in this House, has supported the resolution.

Mr. K. Balasubramanya Aiyar, with the permission of the Chairman, rendiered Bharathi's song, "Sen Tamizh Nadennum Podinile."

The Council adjourned *sine die*.

# Renaming Madras as Tamil Nadu

## Constitution to be Amended

NEW DELHI, Feb. 23.

The Prime Minister, Mrs. Indira Gandhi, is understood to have told Mr. V. V. Ramaswamy, D.M.K. member of Rajya Sabha, to-day that Government would bring an amendment to the Constitution to rename Madras as "Tamil Nadu" as desired by the State Assembly. The Bill is likely to be introduced in the Rajya Sabha.

Mr. Ramaswamy met the Prime Minister this morning to invite her attention to the non-official Bill on the subject which the member introduced in the Rajya Sabha later to-day.

24.2.1968

# Bill to Rename Madras as Tamil Nadu

NEW DELHI, April 11.

Mr. Era Sezhiyan (D.M.K.) introduced in the Lok Sabha to-day a Bill to amend the Constitution to change the name of Madras to Tamil Nadu after overcoming an objection raised by a Congress member against it.

Mr. Bhola Nath Master (Cong.), objecting to the Bill, said that members of the Rajasthan Assembly had also suggested changing the name of their State to Aravali Pradesh. A Parliamentary Committee could go into entire question and recommend suitable changes in the names of States, considering their geographical background and cultural affinities.

Mr. Sezhiyan, stating that he would support the Rajasthan M.L.As' case, said his State had been referred to as Tamil Nadu in all the ancient Tamil literature and the popular Government in Madras wanted to restore this old name. The name of Madras had been given to the State by the British.

After the D.M.K. member's statement, the House gave him leave to introduce the Bill.

Two more non-official Bills were introduced.

One of them, standing in the name of Mr. O. P. Tyagi (J.S.) seeks to amend the Constitution to prohibit Judges and Additional Judges of High Courts from practising in courts after their retirement.

The other Bill, by Mr. Nitiraj Singh (Cong.), seeks to amend the Indian Pension Act, to provide for payment of adequate Dearness Allowance to pensioners taking into account the sharp rise in the cost of living.—UNI.

12.4.1968

23.11.1968

# Lok Sabha Passes Tamil Nadu Bill

**From Our Special Correspondent**

NEW DELHI, Nov. 22.

The Lok Sabha to-day passed the Bill to rename Madras State as "Tamil Nadu". The Bill will now go to Rajya Sabha for approval.

There were cheers from all sides when the Chair announced that the Bill was passed. The Bill was welcomed by all sections, irrespective of party affiliations. New ground was broken when a Union Minister, Dr V. K. R. V. Rao, also participated in the debate, supporting the measure. He appealed to the ruling party in Madras to see that Hindi acquired an honoured place in Tamil Nadu.

Mr. Y. B. Chavan, Home Minister, apologised to the House for his absence yesterday. He joined the rest of the House in describing the measure as a general expression of national pride. Incidentally, he disclosed that when he had a discussion on the subject, the Chief Minister of Madras, Mr. C. N. Annadurai had thought of some other "musical name". But Mr. Annadurai was prevailed upon by Mr. Chavan to have a name which would be understood by all.

Mr. Chavan hoped the new name would bring the State one step nearer to integration of the country. He also hoped a new chapter in history would start for the people of Tamil Nadu and he also appealed to them to strive for the progress of the State and carve out a glorious future.

The D.M.K. members who participated in the discussion praised the gesture of the Government in bringing forward this Bill and said this was an example of how Centre-State relations could be strengthened.

Several members from other States utilised the occasion to plead for changing British names still in vogue in the country into true Indian names.

UNI reports: Mr. N. P. C. Naidu (Cong.) demanded that areas contiguous to Andhra, and where people speaking Telugu were predominant, should be merged with Andhra. He wanted the Centre to appoint a commission for the purpose.

Mr. Naidu's complaint that Telugu schools had not been opened in areas having a large number of Telugu-speaking people provoked D.M.K. members.

The Speaker, Mr. Sanjiva Reddi got up to "give some facts" to the House. He said the creation of Andhra Pradesh and Madras States out of the previous composite State of Madras was based on principles which had been unanimously accepted by the two legislatures.

When Mr. N. K. Salve (Cong.) referred to the fear among South Indians living in Bombay and the opposition to Hindi in Madras, the Chair said they were "irrelevant" to the subject under debate.

6.12.1968

# Renaming Madras State: Bill Passed

**NEW DELHI, Dec. 5.**

**Parliament to-day set its seal of approval on the Bill to rename Madras State as Tamil Nadu.**

The Rajya Sabha unanimously passed the Madras State (Alteration of Name) Bill after an extended two-hour debate which was marked by two speeches in Tamil—by Mr. G. Murahari (SSP) and Mr. G. Appan (DMK).

The Bill had already been unanimously passed by the Lok Sabha.

The Bill's passage was a matter of personal satisfaction for Mr. Bhupesh Gupta (CPI), who had eight years ago introduced a Constitution Amendment Bill, which was rejected in 1963 by the Rajya Sabha. Another private member's Bill to rename the State had been introduced in February this year by Mr. V. V. Ramaswamy (DMK). It was not considered because his term ended soon after.

Moving the Bill, Mr. Vidya Charan Shukla, Minister of State for Home Affairs, said the Government formulated its policy towards renaming the State of Madras after it had been informed of the State legislature's decision.

While giving support to the measure, members sought to ventilate their demand to rename the States of Orissa, Nagaland and North-East Frontier Agency and a number of cities and streets. Mr. Bhupesh Gupta suggested that a high-power committee should be set up by the Centre for this purpose.

In response to another suggestion by a Congress member, Mr. T. Chengalvarayan, that the Gazette notification of the new name of Madras State should be made on the Tamil New Year's Day on April 13, Mr. Shukla said this suggestion would be put forward to the State Government for appropriate action.

Mr. Thillai Villalan (D.M.K.) opened the debate with a poem of the Tamil poet Bharati and described how the change in name would bring sentimental and emotional satisfaction to the people of his State.

Other members who took part in the discussion were: Mr. Henry Samuel (Nom.), Prof. M. Ruthnaswamy (Swat.), Mrs. Lalitha Rajagopalan (Cong.), Mr. A. D. Mani (Ind.), Mr. T. Kesavan (C.P.I.), Mr. M. P. Bhargava (Cong.) and Mr. S. S. Bhandari (J.S.).

An amendment had been tabled to make a phonetic change in the name, but it was not pressed as the member was absent.—UNI & PTI

2.12.1968

## Madras State as 'Tamil Nadu': City Celebration

MADRAS, Dec. 1.

The renaming of Madras State as Tamil Nadu was celebrated amidst joy at a function held in Children's Theatre this evening.

Mr. C. N. Annadurai, Chief Minister, called for steps to facilitate "Tamilians to live as Tamilians" and to secure the much needed changes in the political sphere for the State within the framework of the Republic. He appealed to the people to mould their lives in such a way as to impress others towards the goal of national integration.

The Chief Minister said the achievement of changing the name of the State was a landmark in the history of Tamil Nad. The name, 'Tamil Nadu', would ever remain even if governments changed. To the D.M.K. this was one of its three great achievements—the other two being the exclusion of Hindi from the State and paving the way for self-respect marriages replacing the age-old religious-ridden customs.

Mr. Annadurai who was making his first public appearance after his recent illness, was given a thunderous ovation. Full throated cries of "Anna Vazhga" and "Tamil Nadu Vazhga" rent the air as he rose to speak.

Mr. M. Karunanidhi, Minister for Public Works, traced the history of the struggle undertaken by the D.M.K. to seek the change in the name of the State. He paid tributes to Mr. Sankaralinga Nadar who died for this cause.

Mr. M. P. Sivagnana Gramani, who presided, wanted the term 'regional bulletin' to be changed to 'Tamil Nadu bulletin' in A.I.R.'s broadcasts.

Mr. Neela Narayanan, Secretary, Madras District D.M.K., welcomed the gathering.

31.12.1968

## Tamil Nadu Name from Pongal Day

NEW DELHI, Dec. 30.

Madras State will be renamed Tamil Nadu on Pongal Day.

The change in name was approved by Parliament in its last session.

It was officially announced to-day that the Madras State (alteration of name) Act would come into force on January 14.—UNI.

11.1.1969

The Madras State (Alteration of Name) Act, 1968, changing the name of the State as "Tamil Nadu", has been published in an extraordinary issue of the Fort St. George Gazette.

The Act will come into force from January 14 (Pongal Day).

13.1.1969

## "Tamil Nadu": Govt.'s Directive

MADRAS, Jan. 12.

The Madras Government has directed that the name of the State should be indicated as "Tamil Nadu" instead of as "Madras" in all Government communications from January 14 (Pongal Day), the date on which the Madras State (Alteration of Name) Act, 1968, comes into force.


சங்கு மார்க்கு
கைத்தறி கைலிகள்
REGD. TRADE MARK
முகம்மது அபுபக்கர் & கோ.
95, தம்பு செட்டி தெரு, சென்னை-1
நிறுவனர்: மு. கருணாநிதி
"தமிழ்நாடு வாழ்க!" என ஒரு சே
தமிழ்நாடு பெயர்வைப்புத் தீர்மான
தமிழ் - தமிழர் -
தமிழ் வரலாறு பெ
தீர்மானத்தின்மீது அறிஞர் அ
சென்னை, ஜூலை 18—
தமிழ் நாட்டுக்குத் தமிழ் நாடு என அரசியற் சட்ட ரீதியாகப் பெயர் வைக்கக் கோரும் தீர்மானம் ஒன்று, இன்று தமிழகச் சட்டமன்றத்தில், அறிஞர் அண்ணா அவர்களால் முன்மொழியப்பட்டு, "தமிழ்நாடு வாழ்க." என உறுப்பினர்களின் ஒருமனதான முழக்கத்தோடு நிறைவேறியது.
தமிழ் நாடெனப் பெயர் அமைவது தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ் வரலாற்றுக்கும் கிடைக்கும் வெற்றி என்றார் அண்ணா.
அறிஞர் அண்ணா அவர்களது உரை வருமாறு:
இது தமிழுக்கு வெற்றி. தமிழருக்கு வெற்றி. தமிழ் வரலாற்றுக்கு வெற்றி; தமிழ் நாட்டுக்கு வெற்றி என்ற விதத்தில் அனைவரும் இந்த வெற்றியிலே பங்கு கொள்ளவேண்டும்.
வெங்கட்ராமன் வாதமும் "கன" நாடும்!
கடமை என்ற முறையில்

சொலி

*ஆசிரியர்: **மாறன்,** எம்.ஏ.

—[ முரசொலி ]—

புதிய சந்தா விவரம்

மூன்று மாதம் 12:00

ஆறு மாதம்: 28:00

ஓராண்டு: 44:00

மூன்று மாதத்திற்குக்குறைந்த சந்தா

ஏற்கப்படமாட்டாது

12 காசு சென்னை 19—7—67 வெளியீடு 20—7—67 [ஒலி 248

## த முழங்க

## னம் நிறைவேறியது!

# தமிழ்நாடு

# றும் வெற்றி!

## ண்ணு முழக்கம்!

## தமிழ்நாடு வாழ்க: சட்டமன்றத்தில் முழக்கம்!

சென்னை, ஜூலை 18—

இன்று தமிழகச் சட்டமன்றத்தில், "தமிழ்நாடு" என அரசியற் சட்டத்தில் பெயர் பொறிக்கக் கோரும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் அறிஞர் அண்ணா அவர்கள் எழுந்து "சட்டமன்றத் தலைவர் அவர்களே! வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கின்ற இந்த நன்னாளில் நான் 'தமிழ்நாடு' என்று சொல்லுவதற்கும், 'வாழ்க' என்று அவை உறுப்பினர்கள் சொல்லுவதற்கும் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்!" என வேண்டினார்.

அதன் பின்னர் "தமிழ் நாடு!" என அண்ணா அவர்கள் சொல்லவும் எல்லா உறுப்பினர்களும் "வாழ்க!" என்றனர். இவ்வாறு மூன்று முறை முழங்கப்பட்டது!



## தீர்மானமே முன்னுரை!

சென்னை, ஜூலை, 18—

"தமிழ்நாடு" என அரசியல் சட்டப்பூர்வப் பெயர் மாற்றம் கோரும் தீர்மானத்தை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் இன்று தமிழகச் சட்டமன்றத்தில் முன்மொழிந்தார்கள்.

அவர் தீர்மானத்தைப் படித்து முன்மொழிந்ததும் அவைத்தலைவர் ஆதித்தனார் அவர்கள் "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது குறிப்பிட விரும்புகிறாரா?" என்று கேட்டார்.

அதற்கு அறிஞர் அண்ணா அவர்கள், **"இத்தீர்மானமே என்னுடைய முன்னுரையாக அமையும்"** என்று கூறினார்.

**சுயமரியாதைத் திருமண மசோதா மீது அண்ணா உரை**

(4-ம் பக்கம்)


முரசொலி
பதிவு எண் 7436
அரசியற் சட்டத்தில் "தமிழ்நாடு" எனப் பெயர் மாற வேண்டும்!
அறிஞர் அண்ணா கொணர்ந்த தீர்மானம்!
இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இம் மாநிலத்தைக் குறிப்பிடும் பெயர் 'தமிழ்நாடு' என மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை உறுதியாகக் கருதுவதுடன், இது குறித்து அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் அமையும் வண்ணம் மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இப்பேரவை பரிந்துரைக்கின்றது.
—தமிழகச் சட்டமன்றத்தில் முதலமைச்சர்
அறிஞர் அண்ணா
கொணர்ந்த தீர்மானம்
(18—7—67)
மற்ற திருமண முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அல்ல!
அண்ணா பேச்சு
முதற்பக்கத் தொடர்ச்சி
வெங்கடராமன் அறியாரா?
பொறுப்போடு நடப்பேன்; மக்கள் தேவையையும் உணர்ந்து செயல்படுவேன்!
மாநிலத் திட்டக்குழு
சட்ட வடிவம் தருகிறோம்!
எங்களது பலநாள் கனவு நிறைவேறுகிறது!
நாளை முதல் மாறன் எழுதும்
எழுச்சிநாள் எதற்காக?
தொழில் அமைதி கெட்டா விட்டது?

4 முரசொலி பதிவு எண் 7438

# தமிழ் ஒரு உயிருள்ள மொழி; அதைப் பொருளறிந்து பயன்படுத்தவேண்டும்!

## தமிழகச் சட்டமன்றத்தில் உரிமைப் பிரச்சினைகள்மீது முதலமைச்சர் அண்ணா பேச்சு!

சென்னை, ஜூலை 13—

தமிழ் ஒரு உயிருள்ள மொழி; தமிழ் மொழியைப் பயன்படுத்துகிற போது பொருள் அறிந்து பயன்படுத்தவேண்டும் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது—என இன்று தமிழகச் சட்டமன்றத்தில்காங்கிரஸ் உறுப்பினர் திரு. மார்டின் முரசொலி மீது கொண்டுவந்த உரிமைப் பிரச்சினை மீதும்—மார்ட்டின்மீது அவைத்தலைவர் எழுப்பிய உரிமைப் பிரச்சினைமீதும் நடந்த விவாதத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் கூறினர்



### முரசொலியில் வந்திருப்பது என்ன?

### மேற்கோள் காட்டுவதிலே தவறில்லை!



அண்ணா பேச்சு...


லூகாஸ் - டி.வி.எஸ். லிமிடெட்.
1967 ஜூலை 17உ முதல் கதவடைப்பு ரத்து
நிர்வாகத்தினர் அறிக்கை


---






நிறுவனர்: மு. கருணாநிதி ✳ ஆசிரியர்: மாறன், எம்.ஏ.


## வெங்கட்ராமன் காலத்தில் வைக்கப்பட்டு அமைச்சர் கருணாநிதியின் அறையிலிருக்கும்

# சேலம் இரும்புத் துண்டை டில்லி செல்லும் வெங்கட்ராமனிடம் கொடுத்தனுப்ப வேண்டும்!

## எந்நேரமும் சேலம் திட்டம் அவர் நினைவிலிருக்க வேண்டும்!

## தமிழக மேலவையில் முதலமைச்சர் அண்ணா!

சென்னை, ஜூலை, 19—

வெங்கட்ராமன் காலத்தில் வைக்கப்பட்டு இப்போது அமைச்சர் கருணாநிதியின் அறையில் இருக்கும் சேலம் இரும்புத் துண்டைச் சர்க்கார் விதிமுறைகள் இடந்தருமானல் வெங்கட்ராமனிடம் கொடுத்தனுப்பி டில்லியில் எந்நேரமும் அவர் நினைவில் இருக்கும்படி மாட்டி வைத்துக் கொள்ளச் சொல்லலாம் என்று மேலவையில் வெங்கட்ராமனைப்பாராட்டிப் பேசுகையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா கூறினர்.

### பாலசுப்பிரமணிய ஐயர்

### என்.வி.நடராசன்

வதற்கும் வந்தால் தான் ஜனநாயகம் பக்குவம் பெற்று கனிய முடியும்.





## "தொழிற்துறை ஒரு சிலருக்கு பயன்பட்டது எனும் தத்துவத்தை மாற்றுவோம்"

## மேலவையில் மகிழ்ச்சிப் பாட்டு!

தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம் தமிழக மேலவையில் வந்தபோது முதியவர் பாலசுப்ரமணிய ஐயர் உணர்ச்சிமயத்துடன்—

"செந்தமிழ் நாடெனும் போதினிலே —இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே! —எங்கள் தந்தையர் நாடெனும் பேச்சினிலே —ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே!

—என்று பாரதியின் பாட்டைப் பாடினர். சபைஉணர்ச்சிப்பெருக்குடன் கையொலி எழுப்பியது.

### நியாயமானதை எதிர்பார்ப்பது எமது உரிமை


2
முரசொலி
தமிழ்நாடு பெயர் வைப்புத் தீர்மானத்தை
மனப்பூர்வமாக மட்டுமல்ல
உணர்ச்சி பூர்வமாக
உயிர்பூர்வமாக ஆதரிக்கிறேன்
தமிழகச் சட்டமன்றத்தில்
சிலம்புச் செல்வர் ம. பொ. சி.
உருக்கமான பேச்சு!
முரசொலி
அண்ணன் எழுதிய சிறப்புப் பாயிரம்!
சென்னையில் மூன்று புதிய பேருந்து மார்க்கங்கள்!
மெட்ராஸை மறைக்கும் திரையல்ல தமிழ்நாடு
தமிழ்ப் பற்றில் தான்....
ஆண்டவன் உலகத்திலேயும் தமிழ்நாடு ஆகவேண்டும்!
மகாராஷ்டிரம் எப்படியோ அதுபோல் தமிழ்நாடு
காங்கிரஸ் கமிட்டி பெயரின் முரண்பாடு
அன்று எங்களுடைய போராட்டத்திற்கு இன்று பலன்!
தமிழகத்தில்
தமிழ் மொழியே கற்றுத்தராத ஒன்பது பள்ளிகள் உண்டு
சட்டமன்ற மேலவையில் கல்வியமைச்சர் தகவல்!
அய்யோ இதையும் விடவில்லை!
வெள்ளாற்று வெள்ளத் தடுப்பு!


முரசொலி

# ஈராயிரம் ஆண்டு எழிலோடிருந்த தமிழ் மரபை உலகறிந்திடவே பெயர் மாற்றத் தீர்மானம்!

## 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டுவந்து மேலவையில் அறிஞர் அண்ணா பேச்சு !

சென்னை ஜூலை, 19—

"ஈராயிரம் ஆண்டுகள் எழிலோடு இருந்த தமிழ் மரபை உலகு தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது" என்று தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை சட்ட மன்ற மேலவையில் கொண்டு வந்து பேசிய முதலமைச்சர் அறிஞர் அண்ணா கூறினார்.

## பாராளுமன்றத்திற்கு இந்திராகாந்தி சரியாக வருவ

எதிர்க்கட்சி

## காங்கிரஸ் அரசு போட்ட தீர்மானத்தை கழக அரசு புறக்கணித்தது!

சட்டமன்றத்தில் பொதுப்பணி அமைச்சர் தகவல்!

சொந்த வீடு இருந்தும் காங்கிரஸ் மந்திரிகட்கு வீட்டு அலவன்ஸ் தரப்பட்டது!

பழைய மந்திரிகள் வீட்டில் செய்யப்பட்ட வசதிகள்!

கழக அரசு காக்கும் ஜனநாயகப் பண்பு!

ஜோதி அம்மாள் திரும்பத் தராத வாட்டர் கூலர்!

முதலமைச்சர் அண்ணா!



REGISTERED No. D. 221

रजिस्ट्री सं० डी० 221

# भारत का राजपत्र
# The Gazette of India

असाधारण

EXTRAORDINARY

भाग II—खण्ड 3—उपखण्ड (ii)

PART II—Section 3—Sub-section (ii)

प्राधिकार से प्रकाशित

PUBLISHED BY AUTHORITY

सं० 492] नई दिल्ली, सोमवार, दिसम्बर 30, 1968/पौष 9, 1890

No. 492] NEW DELHI, MONDAY, DECEMBER 30, 1968/PAUSA 9, 1890

इस भाग में भिन्न पृष्ठ संख्या दी जाती है जिससे कि यह अलग संकलन के रूप में रखा जा सके।

Separate paging is given to this Part in order that it may be filed as a separate compilation.

MINISTRY OF HOME AFFAIRS

NOTIFICATION

*New Delhi, the 30th December*, 1968

**S.O. 4653.**—In exercise of the powers conferred by sub-section (2) of section 1 of the Madras State (Alteration of Name) Act, 1968 (53 of 1968), the Central Government hereby appoints the 14th day of January, 1969, as the date on which the said Act shall come into force.

[F. No. 3/1/67-SR Vol. II.]

K. R. PRABHU, Jt. Secy.

PRINTED BY THE

NEW DELHI AND



1923 *Constitution* [3 MAY 1965] *(Amendment) Bill*, 1961 1924

"That the Bill further to amend the Constitution of India be taken into consideration."

Sir, this is a very simple proposal for amending the Constitution. I have got only a three-line statement under the Statement of Objects and Reasons. May I, with your permission, Sir, read this, because many hon. Members may not have got a copy of this Bill? Sir, it reads thus:

"Public opinion in the State of Madras, as well as in other parts of the country, is strongly in favour of changing the name of the State to Tamilnad' in conformity with the historical, linguistic and cultural considerations."

This is a very simple suggestion— change of name—but it is important from the cultural and other points of view. As you know, Sir, in the First Schedule of our Constitution the States are specified; a list of the States of the Union has been given in the First Schedule. Now, Sir, entry No. 7 says "Madras'. This is what had been stated while explaining what Madras meant at that time:

"The territories which immediately bef ere the commencement of this Constitution were either comprised in the Province of Madras or were being administered as if they formed part of that Province and the territories specified in section 4 of the States Reorganisation Act, 1956, and the Second Schedule to the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959, but excluding the territories specified in subsection (1) of section 3 and sub-section (1) of section 4 of the Andhra State Act, 1953, the territories specified in clause (b) of sub-ee'ition (1) af section 5, section 6 and clause (d) of sub-secti
7 of the S

That is the latest portion. Now, Sir, as
know, when the Constitution was pa
Madras was a composite State comprise
Andhra excluding Telangana or the Hyder
part of it—I do not want to go into any
tails—and also the Malabar part of K
Tamil Nad, of course, was there. Mainly,
three main parts comprised what was call
that time the Province of Madras under
British regime and then it came to be know
'Madras' under the Constitution when it
passed. The same name remains even to
although there has been, in the meanwhi
reorganisation of the States on the basis
of language, and Madras is now reconsti
shorn of the other linguistic areas of the p
who do not speak Tamil. This is the Sta
the Tamil-speaking people in our country
the time of the enactment of the Constituti
when the matter was being discussed in
Constituent Assembly, obviously, this que
could not come up for discussion for the si
reason that at that time there was no lingu
reorganisation of the States in the south a
have today. Madras, as it was, was a comp
State and it was taken as such for the
being, although many Members speaking i
Constituent Assembly spoke of the need
linguistic reorganisation of the State acco
to the demands made in the freedom stru
more especially in the Resolutions of
Congress Party but then it did not beco
practical question at 'that time becaus
Constituent Assembly was not discussing
re-organisation of the State or providing
The Constituent Assembly was drawing u
Constitution of the country, taking more o
the situation as it obtained at that time. In
we had a different arrangement altogether
had Part A States. Part B States and P
Sta+es. Now, this arrangement has
completely altered not
linguistic

# THE MADRAS STATE (ALTERATION OF NAME) ACT, 1968

## No. 53 OF 1968

[20th December, 1968]

An Act to alter the name of the State of Madras.

BE it enacted by Parliament in the Nineteenth Year of the Republic of India as follows:—

1. (1) This Act may be called the Madras State (Alteration of Name) Act, 1968. *Short title and commencement.*

(2) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

2. In this Act, unless the context otherwise requires,— *Definitions.*

(a) "appointed day" means the date appointed under sub-section (2) of section 1 for the coming into force of this Act;

(b) "appropriate Government" means, as respects a law relating to a matter enumerated in List I in the Seventh Schedule to the Constitution, the Central Government, and as respects any other law, the State Government;

(c) "law" includes any enactment, Ordinance, regulation, order, bye-law, rule, scheme, notification or other instrument having the force of law in the whole or any part of the State of Madras.

3. As from the appointed day, the State of Madras shall be known as the State of Tamil Nadu. *Alteration of name of State of Madras.*

[1] 14-1-1969; *vide* S.O. 4653, ... December, 1968, Gazette of India, 1968, Extraordinary, Pt. II, Sec. 3 ...



4. In sub-clause (a) of clause (2) of article 31A, in sub-clause (a) of clause (1) of article 168 and in article 290A of the Constitution, for the word "Madras", the words "Tamil Nadu" shall be substituted. *Amendment of article 31A, article 168 and article 290A of the Constitution.*

5. (1) In the First Schedule to the Constitution, under the heading "I. THE STATES", for the figure and word "7. Madras", the figure and words "7. Tamil Nadu" shall be substituted. *Amendment of First and Fourth Schedules to the Constitution.*

(2) In the Fourth Schedule to the Constitution, for the figure and word "8. Madras", the figure and words "8. Tamil Nadu" shall be substituted.

6. (1) For the purpose of giving effect to the alteration of the name of the State of Madras by section 3, the appropriate Government may, before the expiration of one year from the appointed day, by order, make such adaptations and modifications of any law made before the appointed day, whether by way of repeal or amendment as may be necessary or expedient, and thereupon every such law shall have effect subject to the adaptations and modifications so made. *Power to adapt laws.*

(2) Nothing in sub-section (1) shall be deemed to prevent a competent Legislature or other competent authority from repealing or amending any law adapted or modified by the appropriate Government under the said sub-section.

7. Notwithstanding that no provision or insufficient provision has been made under section 6 for the adaptation of a law made before the appointed day, any court, tribunal or authority required or empowered to enforce such law may construe the law in such manner, without affecting the substance, as may be necessary or proper in regard to the matter before the court, tribunal or authority. *Power to construe laws.*

8. Where immediately before the appointed day any legal proceedings are pending to which the State of Madras is a party, the State of Tamil Nadu shall be deemed to be substituted for the State of Madras in those proceedings. *Legal proceedings.*

# Call My state
# 'Tamil Nadu'
## 24.9.1963

Mr. Vice-Chairman, I am rarely in full agreement with my Hon. Friend, Mr. Bhupesh Gupta, but today I rise to support him wholeheartedly, fully and sincerely. The only weakness of the Bill is that it is a non-official one. I would have liked an official Bill to have been brought forward for this very necessary and very simple thing that would have satisfied millions of Tamilians in Tamil Nadu.

Many arguments that were advanced against the Bill brought forward are perhaps more due to the colour of the mover rather than the arguments advanced for its support. One Hon. Member was saying that he was not moving a bill which the Madras State has asked him to move. I regret very much that sometimes it becomes necessary to explain some rudimentary principles. The Madras Government will never ask a non-official bill to be brought forward on its behalf. If the State Government wants the Bill to be brought forward, there are the State representatives in this assembly and they would have brought it forward; and therefore, to say that the Bill cannot be supported just because the Madras Government has not asked. Mr Gupta to bring this Bill, shows that their only argument to fight against the Bill is that their party or their State Government has not instructed them to act in this way. I can well understand the political tremor in their hearts, but that is no argument against the Bill. The arguments advanced by the sponsors of the Bill for renaming Madras Tamil Nadu have not been answered by any one of the speakers who spoke about it.

Sheel Bhadra Yajee: I have answered it.

I cannot understand – I very rarely understand – your language and,

therefore, I do not know whether there is logic or not but I would say that some of the arguments advanced were not proper. One Hon. Member was saying that there are Telugu – knowing people in Tamilnad, Malayalam and Kanarese- speaking people and, therefore, to name Madras Tamil Nad will create a sort of tremor in their hearts. May I inform this House through you, Sir, that all these arguments were advanced and shattered in my part of the country? All these arguments did not stand the onslaught of reason and logic.

For the sake of informing this House, I may inform you, Sir, that on the 24th February, 1961 the Leader of the House in the State Assembly stood up to say that he was accepting part of the non-official resolution brought forward not by the DMK or any other political party which is considered to be inimical to the Congress, but by a PSP Member. That PSP Member brought forward a non-official resolution for renaming Madras as Tamil Nad and it was discussed for many days and finally the then Finance Minister and Leader of the House, Mr.C. Subramaniam, stood up to say that he was accepting a part, or the spirit, of the resolution and added that thereafter all publications of the Madras Government would appear in the name of the Tamil Nad Government. It is in such a way that all the publications in Tamil in the Tamil Nadu Government are being printed and published.

As a matter of fact, after making that historic declaration on the floor of the Madras Assembly on 24th February, the very next day the Finance Minister had to present his Budget and in presenting the Budget, the opening words of the Finance Minister were, "In consonance with the declaration made yesterday, I am now presenting to you the Budget of Tamil Nad." Therefore, all the arguments that the Telugu – speaking people, the Malayalam – Speaking people, and the Kanarese – speaking people have will be up against" this change in name, fall to the ground because part of this has been accepted by the Government. The part relating to the amendment of the Constitution: the word 'Madras' to be delected and the word "Tamil Nad" to be inserted: was not accepted. Therefore, the sentimental arguments advanced cannot be accommodated even by the Government much less by the Madras Congress leaders.

Sir, I am really surprised to see how ill-informed my hon. friends are,

those who advanced arguments against the Bill. One Hon. Member stated here that Kollegal is in Tamil Nad. That Hon. Member, unfortunately, is not present in the House at present. I may tell him, and his friends may tell him, that Kollegal today is part of Mysore. It has been taken away from the composite State of Madras and, after the formation of linguistic State, has gone to Mysore. If my Hon. friend is so ill-informed about Kollegal, I am not surprised at his arguments that nowhere in Tamil literature does the word 'Tamil Nad' occur. A politician who cannot understand the Kollegal today does not form part of Tamil Nad cannot be expected to be conversant with Tamil literature. For the edification of the House and for his own edification, I will point out the names of certain books wherein the word "Tamil Nad" is to be found. These are books written 1,800 or 2,000 years ago. I am reading the name in Tamil but the Hon. Member who made that allegation is a Tamilian Congressman and he can understand and the Hon. Deputy Minister who will perhaps be making the reply. She being also a Tamilian, may tell him. The names of Paripadal, Pathitrupathu and the more popular names of Silappathikaram and Manimekalai. These are all Tamil classics written more than a thousand years ago and in Paripadal it is stated "Thandamizh veli Thamizh Nattu akamellam' which means 'Tamil Nad which is surrounded by sweet Tamil on all the three sides." In Pathitrupathu, a classic written about 1,800 years ago it is stated "Imizh kadal veli Thamizhagama" meaning "Tamil Nad which has got the sea as its boundary". In Silappathikaram it is stated "Then Tamizh naannadu" meaning "good Tamil Nadu" and in Manimekalai it is stated "Sambuth-theevinul Tamizhaga marungil": Tamil Nad which is called "Sambuththeevu". If my Hon. friends would like to have more popular illustrations. I would like to refer them to the poems of the poet Kamban and Sekkilar both of whom have definitely used the word Tamil Nad. It was only afterwards that there were three kingdoms, the Cheranadu, the Cholanadu and the Pandyanadu. Tamil Nad is to be found in the classic of Tamil. It is not that there is poverty of ideas in the classics.

It only shows that my Hon. friend does not spend much thought or time over the Tamil classics, I may point out for the edification of the House, that when the Congress Government in Tamil Nad purchased the Jaipur palace at Ooty known as Aranmore Palace, they immediately renamed that

palace, 'Tamizhagam.' I am pointing this out to say that the Congress there is trying to assuage our feelings, is trying to carry the Tamil Nad people along with them by saying that they have renamed the Aranmore palace Tamizhagam, that they are publishing all the Tamil manifestos as Tamil Nad Government publications; that only for international correspondence, they want the name 'Madras'. They are not prepared to amend the Constitution. If the arguments, advanced by some of the Tamil Nad Congress people were to be read by the Chief Minister of Madras, he would turn round and say "You too, Brutus." All the arguments advanced for not renaming it fall flat on the ground because even the Congress Government there does not approve of these arguments.

Another peculiar issue was raised here that the Bill is brought forward only as a publicity stunt of the Communist Party. Why don't we appreciate the Communist Party for its sense of political expediency? Are not all political parties interested in getting political publicity? Is publicity a heinous crime? Why do you publish reports and books on the Five-Year Plans? Is that not publicity, done at public cost? Yet you accuse other political parties, saying that this is publicity. But let me tell this House through you, that even though you defeat the Bill, he has gained that publicity. You are not going to rob him any more of that publicity. When he comes to Tamil Nad he can conveniently face the Tamilians and say, "I pleaded for you but it was the ruling Party that let you down." Therefore you have unawares walked into Mr. Gupta's snare. I would have appreciated it if the ruling party had approached Mr. Bhupesh Gupta, and stated, "Do not bring in this non-official Bill; we ourselves are interested in it. We will bring it forward."

Then Mr. Santhanam pointed out that we had an uphill task in retaining Madras; we had to fight with so many people and we retained Madras. I can claim some amount of credit in that fight and when I was in the thick of the fight, I did not find Mr. Santhanam by my side.

Akbar Ali Khan: At the cost of Andhra.

With the consent of the Andhras. I can say that. That is because the present Government there is providing even today, in the border areas, measures for safeguarding Telugu culture and for imparting the Telugu

language. Therefore though Madras has been taken by Tamilians, we have no enmity with the Andhras. But my friend Mr. Santhanam was saying that it was such an uphill task, retaining Madras, that we would like to keep Madras. This is not a question of keeping Madras or giving it up; this is the question of keeping Madras in Tamil Nad and renaming the state as Tamil Nad. Madras after all, is the capital city of Tamil Nad, just as Ahmedabad happens to be the capital city of Gujarat, as Chandigarh happens to be capital city of Punjab. If this logic of naming the State after the name of the capital city, is to be followed, Kerala should be renamed Trivandrum, Andhra is to be renamed Hyderabad, Punjab is to be renamed Chandigarh and Gujarat should be renamed Ahmedabad.

Bhupesh Gupta: And Bengal should be renamed Calcutta.

My Government, my Congress Government in Madras, is interested in bilingualism. That is because its head Government is interested in having two names for everything; India that is Bharat, Jana Gana mana and Vande Matharam. They always want to keep two blocks. Take something from here and take something from there. So the Madras Government is having Tamil Nad for the consumption of the Tamilians and Madras for all – India consumption.

It is a very awkward word 'duplicity'. And that is why my friend, Mr. Bhupesh Gupta was saying that some of the Congress people talk in one way there, and talk in another way here. No Congress member can face a Tamilian audience and say that the name 'Madras' should be retained. I challenge it.

T.S. Pattabiraman (Madras): We have faced it during the agitation of the Tamil Arasu Khazagam and my friend knows it. What he is saying is a complete travesty of facts.

I know how Mr. Pattabiraman faces agitation: I won't say it. Let us not face each other as Congress and DMK. Let us face the Tamilian public on this single sanctified issue of renaming the State and if you carry along with you 51 percent of the people, I am prepared to bow my head before you. This is not a party issue at all. The renaming of Madras as Tamil Nad has been accepted by the Communist Party, by the DMK, by the PSP and

you will be surprised, by the Madras Branch of the Swatantra Party too. Therefore all parties are one of this issue of renaming Madras as Tamil Nadu.

T.S. Pattabiraman: None of them put it in their election manifesto.

I would present a copy of the DMK election manifesto to him tomorrow. I am sure Mr. Pattabiraman knows Tamil. This has been an issue in the Tamil Nad for more than 10 to 15 years. He was saying that only he Tamil Arasu Khazagam was fighting for it. It is true partially because it was only the Tamil Arasu Khazagam that started an agitation for it, but all other political parties were immensely, intimately interested in this issue. They have printed it in their manifestos, in their political speeches and no district conference of the DMK took place without passing this Resolution for renaming Madras as Tamil Nad. Therefore it is not simply on the spur of the moment that I am pleading for it. My sorrow is that my friend Mr. Bhupesh Gupta, has stolen the thunder from me by sponsoring this Bill. But for that, I would like to present before this House that this has been the issue all along in Tamil Nad. And they have not answered Mr. Bhupesh Gupta: What do you lose by renaming Madras Tamil Nad? Nobody has answered that.

N.M. Lingam (Madras): Anyway what do you gain by renaming it as Tamil Nad?

What do I gain? What have you gained by renaming Parliament Lok Sabha? What have you gained by renaming the Council of States Rajya Sabha? What have you gained by renaming the President Rashtrapati?

Therefore I say, "What do you lose?". That is important, because if you were to lose something precious, we would not press for it. If you do not lose something fundamental, we will press for it. That other point that was raised was, what do you gain? We gain satisfaction, sentimentally; we gain the satisfaction that an ancient name is inculcated in the hearts of millions and scores of millions of people. Is that not enough compensation for the small trouble of changing the name? Therefore all the arguments that have been advanced have been shattered.

They have advanced an apologetic argument saying that if the State

Government had come forward with this, we would have accepted it.

And they are perfectly aware of the composition of the State Legislature where the Congress Party is in a majority. Would you ask the Congress Member in the Madras State Legislature to vote for such a Bill if it were to come there, without the Party whip? No.

T.S. Pattabiraman: Your party members could have brought forward a resolution in the House and changed the name. Why have you not done it for the past seven or eight years?

I am coming to that. When we present such a Bill to the Madras Legislature, they say that if you want to rename, an amendment of the Constitution is necessary and an amendment of the Constitution is possible only when you go to Parliament.

T.S. Pattabiraman: I am saying a resolution, not a Bill. A resolution can be made.

I may say for the information of the Hon. Member that we pressed this point during the discussion on a non-official Bill of the PSP. In fact we even staged a walk-out. The DMK and the Communist Party joined together in the walk-out. That is our numerical position there.

When the non-official resolution was discussed in the Madras Assembly, we pressed for the constitutional amendment, and the only explanation offered to us was that it is possible only at the level of Parliament. And when we come to Parliament, we are asked to go back to the State Legislature. We are asked to go to Parliament because you are entrenched in both places, not because your logic is sound, not because your justice is sound, but simply because you are entrenched in both places.

G. Rajagopalan (Madras): We are entrenched because the people vote for us. It has been discussed even during the elections. There had been fasts by certain members and one person even lost his life after fasting. Even after that, we won the election. That shows that the people still want it as it is – not for the satisfaction of some politicians who want a slogan.

Madam Deputy Chairman, I am very glad that the discussion is becoming

very interesting. But I may say, for the information of the House that the DMK has got nothing to do with fasting. The fasting was undertaken by a non-party man, in fact a relative of the Chief Minister of Madras, Mr. Sankaralinga Nadar.

And to say that in spite of the fasting you have not changed shows how human you are. Therefore, the question was discussed there. We were asked to go to Parliament. When we come to Parliament, we are again sent back to the Legislature. In both places, the answer is as my Hon. friend has stated, "The people have voted for us." Well, that is a fact, a tragic fact, a black fact which ought to be seen.

G. Rajagopalan: In spite of you, the tragedy is still there.

T.S. Pattabiraman: He says that the tragedy will be permanent. The Tragedy of the Congress getting a majority at every election will be a permanent feature and we are prepared to accommodate you.

Madam Deputy Chairman, my friend was saying that this tragedy is going to be permanent. Woe to the country and to the people. That is all what I can say. But I would like to press this point that a Constitution amendment can be thought of and made only through Parliament. That is why we have approached Parliament, if any amendment is brought forward on this, or any suggestion is given that it should be circulate to gather public opinion, we take up the challenge.

I do not ask you to take this as an election issue. Do not be afraid of that.

(Interruptions)

We are not making it an election issue. This is an issue to be taken to the people for getting their consent or otherwise. That is not going to affect your offices. Nobody thinks about that. You may remain there.

This is not a question of an analysis of our different parties. This is a question wherein a particular issue has to be referred to the public. Are you prepared for that? That is what we ask. You are not prepared for that and that is why I say –

N.M. Anwar (Madras): Madam, on a point of information. I have got the highest respect and regard for my good friend, Mr. Annadurai. But will he kindly explain what there is in retaining this name 'Madras' which has got such worldwide publicity? How is he going to meet that point of view? Where is the difficulty in restaining this world-wide name of Madras?

(Interruptions)

The only point in answer to the Hon. Member, Mr. Anwar, is this. What we gain is, we gain sentimental satisfaction and status for our ancient land. If in Madras we change the name of China Bazaar into Netaji Subas Chandra Bose Road, nothing is changed in the street but something is changed in our thinking, in our soul, in our fibre. That is why we are pressing for it, not because we think that keeping Madras there will be wrong.

N.M. Anwar: My question is not that. We agree that there is something good in calling it Tamil Nad. But what is your allergy to Madras which has got a worldwide publicity?

My allergy is, if Madras is used as the name of the State, you confuse the capital with the State. Madras is the name of the capital city, Tamil Nad is the name that ought to be given to the State. There ought to be a distinction between the name of the State and its capital, and therefore I wholeheartedly support the Bill brought forward and I would commend it to the House.

# தமிழ்நாடு என்று பெயர் மாற்றுங்கள்

**துணைத் தலைவர் அவர்களே!**

என் நண்பர் திருமிகு புபேஷ்குப்தா அவர்களுடன் நான் உடன்பட்டு விளங்குவது மிகவும் அரிதாக இருந்தாலும் – இன்று உள்ளார்ந்த உணர்வுடன், உண்மையாக, முழுமையாகத் துணை புரிய விரும்புகிறேன்.

அரசுச் சார்பற்றதாக இவ்வரைவு (மசோதா) விளங்குவதுதான் குறை! அரசுச் சார்பாக – இவ்வரைவு இவ்வவையில் அறிமுகப்படுத்தியிருந்தால் – மிகவும் இன்றியமையாததான, எளிதான இவ்வரைவு அரசின் சார்பாக அவையில் வைக்கப்பட்டிருந்தால் – தமிழ்நாட்டில் உள்ள இலட்சக்கணக்கான தமிழர்கள் மனநிறைவு அடைந்திருப்பார்கள்.

முன்மொழிபவரின் அரசியல் சாயல் காரணமாக இவ்வரைவினை வரவேற்பதற்கு மாறாக, எதிர்த்துப் பலவாதங்கள் வைக்கப்பட்டன. சென்னை அரசு நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொண்டதால் இவ்வரைவினை அவர் கொண்டு வரவில்லை என்று மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் கூறினார்.

அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். சிலவேளைகளில் அடிப்படைக் குறிக்கோள்களை விளக்க வேண்டிய இன்றியமையாமை நேரிட்டு விடுகிறது.

அரசுச் சார்பற்ற வரைவு ஒன்றைக் கொண்டு வருமாறு சென்னை அரசு கோரவில்லை.

அரசு அத்தகைய வரைவினைக் கொண்டு வர விரும்பினால், சட்டமன்றத்தில் அந்த அரசின் உறுப்பினர்கள் அவைமுன் கொண்டு வந்திருப்பார்கள். ஆகையால் சென்னை அரசு கேட்டுக் கொள்ளாததால், இவ்வரைவு இங்கு ஏற்றுக் கொள்ளப்படாது.

அரசோ, அரசைச் சார்ந்த கட்சியோ, செயற்படுவதைக் குறித்து எந்த வழிமுறையும் கூறாததால் – திரு. குப்தா அவர்கள் கொண்டு வந்த வரைவை எதிர்த்து, அவர்கள் பேசுகிறார்கள்.

அவர்கள் உள்ளத்தில் விளங்கும் அரசியல் நடுக்கத்தை நான் நன்கு அறிகிறேன். இந்த வரைவினை எதிர்த்த வாதமாக அது விளங்காது.

சென்னையைத் தமிழ்நாடாகப் பெயர் சூட்ட வேண்டி வரைவினைக் கொண்டு வந்த ஆதரவாளர்கள், அவைமுன் வைத்த கருத்துகளாக – மறுப்பாக – எதிர்த்துப் பேசிய எவரும் பதில் கூறவில்லை.

சீல் பத்ரா யாஜி: நான் கூறியிருக்கிறேன்.

நீங்கள் பேசிய மொழி என்னால் விளங்கிக் கொள்ள முடியாததாய் இருந்தது. ஆதலால், வாதமுறைக்கு உட்பட்டோ, மாறாகவோ – விளங்கியதாக – என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. சிலர் வாதங்களில் வெளிப்படுத்திய கருத்துகள் ஒத்துக்கொள்ளத் தக்கதாக இல்லை என்று நான் சொல்வேன்.

தமிழ்நாட்டில் தெலுங்கு மொழி பேசுவோரும், மலையாளம், கன்னடம் பேசுவோரும் வாழ்வதால் – மெட்ராஸ் என்பதனை, தமிழ்நாடு என்று பெயர் மாற்றினால் அவர்களின் உள்ளங்களில் நடுக்கத்தை அச்சத்தை உண்டாக்கும் என்று ஓர் உறுப்பினர் பேசும்பொழுது கூறினார்.

தலைவர் அவர்களே! தங்கள் வழியாக அவர்களுக்கு அறிவிக்க விரும்புவது, இத்தகைய தவறான வாதங்கள் எல்லாம் தவிடுபொடியாக்கப்பட்டது எங்கள் தமிழ்நாட்டில் என்று தங்கள் வழியாக அவர்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

ஆய்வறிவின் வாதமுறையின் முன்னே அந்த எதிர்ப்புகள் வலுவிழந்தவையாகும்; நிலைப்பனவாகா ஐயா, அவையின் நலங்கருதி, 1961 பிப்ரவரி 24ஆம் நாளன்று, சட்டப்பேரவையின் முன்னவர் எழுந்து சொன்னார். அரசுச் சார்பற்ற இத்தீர்மானத்தின் ஒரு பகுதியை ஏற்பதாகச் சொன்னார். அத்தீர்மானம் தங்கட்குத் தீமை உண்டாக்குகின்ற தி.மு.க.வாலோ, பிற அரசியல் கட்சியினராலோ கொண்டுவரப்பட்டதன்று; பி.எஸ்.பி. கட்சியினரால் அத்தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

சென்னையைத் தமிழ்நாடாக மாற்றக் கோரி, பி.எஸ்.பி. உறுப்பினர் கொண்டு வந்த அந்தத் தீர்மானம் பலநாள் வாதிடப்பட்டது.

இறுதியில் நிதி அமைச்சரும் அவையில் முன்னவரும் ஆன மாண்புமிகு சி.சுப்பிரமணியம் அவர்கள் அத்தீர்மானத்தின் உணர்ச்சியை, ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதாகவும், சென்னை அரசாங்கத்தின் அனைத்து வெளியீடுகளிலும் தமிழ்நாடு என்னும் பெயர் விளங்கும் என்று எழுந்து சொன்னார்.

அதற்கேற்பத் தமிழ்நாடு அரசாங்கத்தின் தமிழ் வெளியீடுகள் அனைத்திலும் அவ்வாறே அச்சிட்டு வெளியிட்டனர்.

உண்மையில் சொல்ல வேண்டுமென்றால் சென்னைச் சட்டப்பேரவையில் பிப்ரவரி 24இல் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அறிவிப்பை வெளியிட்ட அடுத்த நாளில், நிதி அமைச்சர் நிதிநிலை அறிக்கையை வெளியிட்டுப் பேசியபொழுது – நிதி அமைச்சரின் முதல் வாக்கியமே நேற்றுப் பேரவையில் கூறிய உறுதி மொழிக்கேற்ப, நான் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை உங்கள் முன் வைக்கிறேன் என்பதாகும்.

ஆதலால் தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசும் மக்கள், பெயர் மாற்றத்தை ஏற்க மாட்டார்கள் என்ற வாதம் உறுப்பினரின் ஒரு பகுதியை ஏற்றுக் கொண்டதால் பயனற்றுப் போய்விட்டது.

மெட்ராஸ் என்பதற்குப் பதிலாகத் தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம் விளங்கும் அரசியல் சட்டத்திருத்தம் வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

அரசினராலும், சென்னை மாநிலக் காங்கிரசுத் தலைவர்களாலும், உணர்வை விளக்கும் வாதங்களை ஏற்று உதவுகின்ற, ஒத்துப் போகின்ற போக்கு அரசினரிடமும், சென்னைக் காங்கிரசுத் தலைவர்களிடமும் விளங்கவில்லை.

இந்த வரைவைக் குறித்த விவாதங்கள் எழுகின்றபொழுது, இங்குள்ள உறுப்பினர்களுக்குத் தவறாக அறிவிக்கப்பட்டிருப்பதை எண்ணி, உண்மையிலேயே நான் வியக்கிறேன்.

கொள்ளேகாலம் தமிழ்நாட்டில் விளங்குகின்றது என்று மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் கூறினார். நல்வாய்ப்பின்மை காரணமாக அவையில் அந்த உறுப்பினர் தற்பொழுது இல்லை.

அவர் நண்பர்கள் வழியாக அவருக்குச் சொல்வதெல்லாம், மைசூரின் ஒரு பகுதியாகக் கொள்ளேகாலம் விளங்குகிறது என்பதுதான்! இணைந்த சென்னை மாகாணமாக இருந்தபொழுது விளங்கிய கொள்ளேகாலம், மொழிவாரி மாநிலமாகப் பிரிக்கப்பட்டபொழுது, மைசூரில் சேர்க்கப்பட்டது.

கொள்ளேகாலம் குறித்து என் நண்பருக்குத் தவறாக அறிவித்திருக்கலாம். தமிழ் இலக்கியத்தில் எங்கும் தமிழ்நாடு என்னும் சொல் காணவில்லை என்று அவர் வாதிடுவதைக் கேட்டு நான் வியப்படையவில்லை.

தமிழ்நாட்டின் பகுதியாகக் கொள்ளேகாலம் இன்றில்லை என்பதை அரசியல்வாதியாக விளங்கும் அவர் அறியாதிருக்கும் பொழுது, தமிழ் இலக்கியங்களைக் கற்றறிந்தவராக நான் அறிய இயலாது.

இந்த அவையும், அவரும் அறியும்பொருட்டு – தமிழ்நாடு என்னும் பெயர் விளங்கும் சில இலக்கியங்களின் பெயர்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இவ்விலக்கியங்கள் இன்றைக்கு 1800, 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டவை. அவைகளின் தமிழ்ப்பெயர்களைப் படித்துக் காட்டுகிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் தமிழகக் காங்கிரஸ் உறுப்பினர் வாயிலாக அந்தக் குறிப்பை அறிந்துகொண்டதாக அவர் கூறினாலும், உதவி அமைச்சர் அவர்கள் கூறும் பதில் கேட்டு, அவர் அறிந்துகொள்ள இயலும் என்றெண்ணுகிறேன்.

அவர் தமிழராக இருப்பதால், அவர் அவர்களுக்குச் சொல்வார்.

பரிபாடல், பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவை மிகவும் பெருமை பெற்ற இலக்கியப் பெயர்கள்! ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பெற்ற பழமையான இலக்கியங்கள்!

பரிபாடலில் விளங்கும்,

“தண்டமிழ் வேலி தமிழ்நாட்டு அகமெல்லாம்” என்னும் தொடர்,

மூன்று பக்கமும் கடல் சூழ்ந்து இனிய தமிழ் விளங்கும் தமிழ்நாடு என்னும் பொருள் தருவதாகும்.

1800 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பெற்ற பதிற்றுப்பத்தில் குறிப்பிட்டுள்ள, ‘‘இமிழ்கடல் வேலி தமிழகமா’’ என்பது கடலைத் தன் எல்லையாகக் கொண்ட தமிழ்நாடு – என்னும் பொருளுடையதாகும்.

சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட

‘‘தமிழ் நன்னாடு’’ என்பது நல்ல தமிழ்நாடு என்னும் பொருள் தருவதாம்.

மணிமேகலையில் வரும்

‘‘சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்’’, சம்புத்தீவு என்று சொல்லப்படும் பகுதியில் – தமிழ்நாடு – என்பதை விளக்குவதாகும்.

மதிப்பிற்குரிய என் நண்பர்கள் மேலும் சிறந்த எடுத்துக்காட்டுகளை விரும்பினால் – கம்பர், சேக்கிழார் என்னும் இருபெரும் புலவர்கள் குறித்துக் காட்டிய பாடல்களில், தமிழ்நாடு விளங்குவதைச் சுட்டிக் கூற விரும்புகிறேன். அதற்குப் பின்னர்தான் சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என்று மூன்று பேரரசுகள் விளங்கின.

தமிழ்நாடு என்னும் பெயர் தமிழின் பழமையான இலக்கியங்களில் விளங்குவதே!

பழமையான அந்த இலக்கியங்களில் செழுமையான கருத்துகளுக்குக் குறைவு இல்லை.

மதிப்பிற்குரிய உறுப்பினர் தமிழின் பழைமையான இலக்கியங்களை அறிவதற்குத் தன் எண்ணத்தையும் காலத்தையும் பயன்படுத்தவில்லை என்பதையே விளங்குகிறது.

இந்த அவை விளங்கிக்கொள்ளும் பொருட்டு – நான் ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்ட எண்ணுகின்றேன்.

ஊட்டியில் உள்ள ஆரண்மூர் அரண்மனை என்று அமைக்கப்பட்ட ஜெய்ப்பூர் அரண்மனையை, தமிழ்நாட்டில் உள்ள காங்கிரஸ் அரசு, விலைக்கு வாங்கி, அதற்குத் தமிழகம் என்று பெயர் சூட்டியது.

நான் இதனைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், காங்கிரசு அரசு எங்கள் உணர்ச்சிகளை உணர்ந்து, தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற, ஆரண்மூர் அரண்மனைக்குத் தமிழகம் என்று பெயர் சூட்டியும், தமிழ்நாடு அரசின் வெளியீடுகளில் அறிக்கைகளைத் தமிழிலும் வெளியிட்டனர்.

அயல் நாடுகளுடன் தொடர்பு கொள்ளுவதற்கு அவர்கள் ‘மெட்ராஸ்’ என்பதையே விரும்பினார்கள். அவ்வகையில் மெட்ராஸ் என்பதை அரசியல் சட்டத்தில் திருத்த விரும்பவில்லை.

தமிழ்நாட்டுக் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் சிலர் விரும்பினால் – சென்னை முதலமைச்சர் அவர்கள் பக்கம் திரும்பி, ‘நீயுமா புரூட்டஸ்’ என்பார்.

அனைத்து விவாதங்களும் அவையில் பாராட்டுப் பெறும் வகையில் நிகழ்த்தப்படாமல், காங்கிரஸ் அரசு – ஏற்றுக் கொள்ளாத வகையில் மறுப்பாகவே நிகழ்ந்தன.

கம்யூனிஸ்ட் கட்சி தான்பெறும் விளம்பர நோக்கில் முனைந்து இவ்வரைவு, இவ்வவையில் முன் வைத்துள்ளது என்று – தனித்தன்மையான வாதத்தை இவ்வவையில் எழுப்பியுள்ளனர்.

காலச் சூழலை உணர்ந்து செயல்படும் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் உணர்வை நாங்கள் போற்றக் கூடாதா?

அரசியலில் விளம்பரத்தை அடைய விரும்பாத கட்சிகள் யாவை?

விளம்பரம் அடைவது கடுங்குற்றமா?

ஐந்தாண்டுத் திட்டங்கள் குறித்துப் புத்தகங்களையும், அறிக்கைகளையும் பொதுமக்கள் பணத்தில் வெளியிடுகின்றீர்களே? அது விளம்பரம் அடைதல் அல்லவா? ஆனால் மற்ற அரசியல் கட்சியின் செயற்பாடுகளை, விளம்பர நோக்கு என்று குற்றம் சாட்டுகிறீர்கள்?

தலைவராகிய தங்கள் வாயிலாக அவைக்குச் சொல்வது, இந்த அவை, அவர் வரைவைத் தோற்கடித்தாலும், அவர் அரசியல் விளம்பரத்தை அடைபவரே! அவர் அடையும் அந்தப் பலனை அவரிடம் இருந்து நீங்கள் தட்டிப் பறித்து விட முடியாது.

தமிழ்நாட்டிற்கு வந்து, தமிழ் மக்கள் முன்பு – தலைநிமிர்ந்து, “உங்களுக்காக நான் வாதாடினேன். ஆனால் ஆளுங்கட்சி அதனை மறுத்துவிட்டது என்பார். திரு. குப்தா அவர்கள் வைக்கும் பொறியில், நீங்கள் அறியாமலேயே மாட்டிக் கொண்டீர்கள்.

திரு.புபேஷ்குப்தா அவர்களை அணுகி, அரசுச் சார்பற்ற முறையில், வரைவினை முன் வைக்காதீர்கள்; நாங்களும் அக்கறை உள்ளவர்கள்தான். நாங்களே கொண்டு வருவோம் என்று – ஆளும் கட்சியினர் கூறியிருந்தால், அவர்களை நான் மிகவும் பாராட்டியிருப்பேன்.

திரு. சந்தானம் அவர்கள் சென்னையை நாங்கள் வைத்திருப்பதற்கு மிகவும் கடுமையாகப் பாடுபட்டதாகக் கூறினார். எங்கள் மக்களில் பெரும்பான்மையோருடன் நாங்கள் போராடிச் சென்னையைக் காத்தோம். அந்தப் போராட்டத்தில் பெருமைப்படத்தக்க வெற்றியைப் பெற்றோம்.

அந்தப் போராட்டத்தில் நான் ஈடுபட்டிருந்தபொழுது திரு. சந்தானம் அவர்கள் என் பக்கத்தில் இல்லை.

அக்பர் அலிகான்: ஆந்திரா கொடுத்த விலை அது!

ஆந்திரர்களின் இசைவோடு நிகழ்ந்தது என்று நான் சொல்வேன். அதனால்தான், இன்றைய அரசு – ஒட்டிய எல்லைப் பகுதியில் வாழும் தெலுங்கு மக்களுக்கும்,

தெலுங்கு மொழியின் மேம்பாட்டுக்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

சென்னையைத் தமிழ்மக்கள் காப்பாற்றிக் கொண்டாலும், ஆந்திரர்கள் இடத்தில் எங்களுக்குப் பகைமை இல்லை. ஆனாலும் என் நண்பர் சந்தானம் அவர்கள் மிகக் கடுமையான முயற்சிகளால் சென்னை நகரத்தைக் காத்துக் கொண்டாலும், சென்னை என்ற பெயர் மாநிலத்திற்கு விளங்கச் செய்வோம் என்று சந்தானம் கூறுகிறார்.

சென்னையை வைத்துக் கொண்டிருப்பதோ, விட்டு விடுவதோ – இப்பொழுது எழுந்துள்ள வினாவன்று. தமிழ்நாட்டில் சென்னை விளங்குவது குறித்து இப்பொழுது வினா எழவில்லை. தமிழ்நாடு என்ற பெயர் விளங்குவது குறித்துத்தான் வினா எழுந்துள்ளது.

குஜராத்தின் தலைநகரம் அகமதாபாத் ஆகவும், பஞ்சாபின் தலைநகரம் சண்டிகார் ஆகவும், விளங்குவது போல – தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னையாக விளங்குகின்றது.

தலைநகரின் பெயர்தான் மாநிலத்தின் பெயராக விளங்க வேண்டும் என்ற வாதமுறையில் கூறினால் – கேரள மாநிலத்தைத் திருவனந்தபுரம் மாநிலம் என்றும், ஆந்திர மாநிலத்தை ஹைதராபாத் மாநிலம் என்றும் பஞ்சாப் மாநிலத்தைச் சண்டிகர் மாநிலம் என்றும் குஜராத் மாநிலத்தை அகமதாபாத் மாநிலம் என்றும் தாம் பெயர் சூட்ட வேண்டும்.

புபேஷ் குப்தா: வங்காளத்தையும் கல்கத்தா மாநிலம் என்று சொல்ல வேண்டும்.

என் அரசு, சென்னையில் உள்ள காங்கிரசு அரசு இருமொழி வழக்கில் ஆர்வம் கொண்டிருப்பது அதற்குக் காரணம், அதனுடைய தலைமை அரசு, ஒவ்வொன்றிற்கும், இரண்டு பெயரை உடையதாகும். இந்தியா – பாரத், ஜனகனமன – வந்தே மாதரம் என்று! அவர்கள் எப்பொழுதும் இரண்டு பகுதிகளை விரும்புகின்றவர்கள்; இங்கும் அங்குமாக எடுத்துச் சேர்ப்பார். ஆகவே சென்னை அரசும் தமிழர்களுக்குத் தமிழ்நாடு என்றும், இந்தியாவில் உள்ளவர்களுக்குச் சென்னை என்றும் பயன்படுத்துகிறார்கள்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் என்பதுபோல் – இரண்டகம் என்பது பொருத்தமற்ற சொல் ஆகும். அதனால்தான் என் நண்பர் பூபேஷ்குப்தா அவர்கள் காங்கிரசைச் சார்ந்தவர்கள் அவையில் பேசுவது ஒன்றாகவும், வெளியில் பேசுவது வேறாகவும் விளங்குகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டிற்குச் சென்னை என்ற பெயர்தான் விளங்க வேண்டும் என்று எந்தக் காங்கிரஸ் உறுப்பினரும் தமிழ்நாட்டின் அரங்கில் பேச இயலாது.

நான் அறைகூவல் விடுகிறேன்.

டி.எஸ்.பட்டாபிராமன் (சென்னை): தமிழரசுக் கழகம் போராட்டம் நடத்தியபொழுது, நாங்கள் அதை எதிர்கொண்டவர்கள் என்பதை நண்பர் அறிவார். எதை அவர்

இப்பொழுது சொல்கிறாரோ, அது முழுமையாக நகைப்பிற்குரிய செய்தி ஆகும்.

திரு. பட்டாபிராமன் அவர்கள் எப்படி எதிர்கொண்டார் என்பதையும் நான் அறிவேன்; அதைச் சொல்ல விரும்பவில்லை. காங்கிரசும் தி.மு.க.வுமாக நாம் அதனை எதிர்கொள்ளவில்லை. தமிழக மாநிலத்தின் பெயர் மாற்றம் என்ற ஒன்றைக் குறித்து, ஒப்புதல் அளிக்குமாறு கேட்டால், அவர்களில் 51 விழுக்காட்டு மக்கள், உங்கள் கருத்துகளை ஏற்றால், உங்கள் முன்பு என் தலைதாழ்த்தி வணங்கித் தோல்வியை ஏற்கிறேன். இது கட்சியின் பிரச்சினையே அன்று!

சென்னையைத் தமிழ்நாடாகப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்பது கம்யூனிஸ்ட், தி.மு.க. பி.எஸ்.பி. கட்சியினரால் ஒப்புக் கொள்ளப்பட்டதாகும். சென்னைக் கிளையாக விளங்கும் சுதந்திராக் கட்சியினால்கூட ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று என்றால் – கேட்கும் நீங்கள் வியப்படைவீர்கள்.

சென்னையைத் தமிழ்நாடாகப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்பதில், அனைத்துக் கட்சியினரும் ஒத்த மனத்தினரே ஆவர்!

டி.எஸ்.பட்டாபிராமன்: தேர்தல் அறிக்கையில் கோரிக்கையாக ஒருவரும் சுட்டிச் சொல்லவில்லை.

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கைப்படி ஒன்றை நாளை நான் தருவேன். திரு. பட்டாபிராமன் தமிழை அறிவார் என்பதை உறுதியாக நான் அறிவேன்.

பத்து, பதினைந்து ஆண்டுக் காலத்திற்கு மேலாக இப்பிரச்சினை விளங்கிக் கொண்டிருக்கிறது. தமிழரசுக் கழகம்தான் போராடியது என்று அவர் பேசும்போது குறிப்பிட்டார். அது ஓரளவிற்கு உண்மை. பெயர் மாற்றம் ஒன்றிற்காகவே போராட்டம் தொடங்கியது தமிழரசுக் கழகம். மற்றைய அரசியல் கட்சிகளும் மிகப் பெரிய அளவில் உள்ளம் ஒன்றிய அளவில் இப்பிரச்சினையில் ஆர்வங்காட்டியவை. அவர்கள் எல்லாம் அதைத் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டுள்ளார்கள். அரசியல் மேடைகளில் விளக்கியுள்ளார்கள். சென்னையைத் தமிழ்நாடாகப் பெயர் மாற்றம் செய்தே ஆக வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றாமல் தி.மு.க.வின் மாவட்ட மாநாடுகள் முடிந்ததில்லை; ஆகையால் எளிய உடனடிச் செயலாக இதனை ஆற்ற, நான் வாதாடுகின்றேன்.

இந்த வரைவை முன்மொழிந்ததின் வாயிலாக என் நண்பர் புபேஷ்குப்தா – நான் முழங்க வேண்டியதை அவர் முழங்கி, என் வாய்ப்பை இழக்கும்படியாகச் செய்துவிட்டாரே என்பதுதான் எனக்குள்ள வருத்தம் ஆகும்.

தமிழ்நாடு முழுவதும் ஒலிக்கும் பிரச்சினைதான் இந்த அவையின் முன் வைக்கப்பட்ட பிரச்சினை என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புபேஷ்குப்தா அவர்களுக்கு மறுமொழியைச் சொல்லாமல், தமிழ்நாடு என்று பெயர் வைப்பதால் நீங்கள் இழப்பது என்ன என்ற வினாவிற்கு – எவருமே விடை சொல்லவில்லை.

என்.எம்.லிங்கம் (சென்னை) எப்படியாயினும், தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்வதால் நீங்கள் அடையும் ஊதியம் (பேறு) என்ன?

நான் என்ன பேற்றை அடைவேன்? நாடாளுமன்றத்தை லோக்சபா என்பதால் – மாநிலங்களவையை ராஜ்யசபா என்பதால் – குடியரசுத் தலைவரை ராஷ்டிரபதி என்பதால் நீங்கள் என்ன பேற்றை அடைந்தீர்களோ, அந்தப் பேற்றை நான் அடைவேன்.

அதனால் நான் கேட்கிறேன்? நீங்கள் இழப்பது என்ன? அதுதான் முக்கியமானது. விலை அளவிட முடியாத ஒன்றை நீங்கள் இழப்பதாக இருந்தால், அதை நாங்கள் வலியுறுத்த மாட்டோம். அடிப்படையான எதையும் நீங்கள் இழக்காத பொழுது, நாங்கள் பெறுவதற்காக வலியுறுத்திக் கொண்டே இருப்போம்.

என்ன பேற்றை நீங்கள் அடைவீர்கள் என்று ஒரு கருத்து எழுப்பப்பட்டது. கனிந்த உணர்ச்சியின் மனநிறைவை அடைகின்றோம். இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்களின் நெஞ்சங்களில் ஆழப்பதிந்து இலங்கும் மிகப் பழமையான பெயர் விளங்குவதால், கிளர்ந்தெழும் உளநிறைவால் ஏற்படும் உவகை அடைகிறோம்.

பெயர் மாற்றம் என்னும் சிறிய 'தொல்லை'யால் செயலால் ஈடுசெய்யப்படுவது இது.

ஆகையால் எதிர்த்துரைக்கப்பட்ட வாதங்கள் அனைத்தும் அடிப்படை இல்லாதவை.

பெயர் மாற்றம் வேண்டி மாநில அரசு அணுகினால், நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று தவறுக்கு வருந்துகிற, வகையில் வாதத்தை முன்வைக்கிறார்கள்.

மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட அந்த அவையில், காங்கிரசுக் கட்சியினர் பெரும்பான்மையினர் என்பதை நன்றாக அறிவார்கள். அவையில் வரைவு வைக்கப்படுங்காலத்தில் கொறடாவைப் பயன்படுத்தாமல் – சென்னைச் சட்டப்பேரவையில் உள்ள காங்கிரசு உறுப்பினர்களை, வாக்களிக்கச் செய்வீர்களா? செய்ய மாட்டீர்கள்!

**டி.எஸ்.பட்டாபிராமன்:** உங்கள் கட்சி உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கலாமே? கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் அதனை ஏன் செய்யவில்லை?

அதனைச் சொல்கிறேன். சட்டப்பேரவையில் நாங்கள் வரைவை வைத்தபொழுது – நீங்கள் பெயர் மாற்றம் விரும்பினால், அரசியல் சட்டத்தில் திருத்தம் தேவை. நீங்கள் நாடாளுமன்றத்திற்குச் சென்றால்தான் – அந்தத் திருத்தம் பெற இயலும் – என்று கூறினார்கள்.

**டி.எஸ்.பட்டாபிராமன்:** நான் தீர்மானத்தைச் சொல்கிறேன்; வரைவை அன்று. ஒரு தீர்மானமே போதுமானது.

**அண்ணா:** பி.எஸ்.பி. கட்சியினர் அரசுச் சார்பற்ற வரைவைக் கொண்டு வந்தபொழுது, வாதத்தின் இடையில் அந்தக் கருத்தை நாங்கள் வலியுறுத்தினோம் என்பதைச் சொல்கிறேன். உண்மையாக – நாங்கள் வெளிநடப்பும் செய்தோம். தி.மு.க.வும், கம்யூனிஸ்ட்டும் சேர்ந்தே வெளிநடப்புச் செய்தோம். அங்கே எங்கள் எண்ணிக்கை அவ்வளவே!

அரசுச் சார்பற்ற வரைவு குறித்துச் சென்னைச் சட்டப்பேரவையில் அரசியல் சட்டத்திருத்தத்தை வலியுறுத்தியபொழுது – நாடாளுமன்ற அளவில் இயல்வது இது – என்று எங்கட்கு விளக்கம் கூறினர். நாடாளுமன்றத்தில் கேட்டால் – மாநிலச் சட்டமன்றத்தில் கேளுங்கள் என்று எங்கட்குச் சொல்கிறீர்கள். அங்கே, நாடாளுமன்றம் சென்று கேளுங்கள் என்கிறீர்கள். வாதத்திலும், முறையிலும் வலிமையற்றிருந்தாலும், இரண்டவை இடங்களில் வலிமை வாய்ந்தவர்கள் நீங்கள்!

**ஜி. இராஜகோபாலன்:** மக்கள் எங்கட்கு வாக்களித்தால் – நாங்கள் வலிமை கொண்டவர்களாக விளங்குகிறோம்.

தேர்தல் காலத்தில் இவை வாதிட்டவைதாம்! பலர் உண்ணாநோன்பு இருந்திருக்கின்றனர். உண்ணாநோன்பிருந்து ஒருவர் உயிரும் இழந்திருக்கிறார். அதற்குப் பின்பும் தேர்தலில் நாங்களே வென்றோம்.

அரசியல்வாதிகள் சிலர் கவர்ச்சி முழக்கங்களுக்கு – அசைவு தராமல் – இருக்கின்ற நிலைமையே தொடர அவர்கள் ஆதரவு தந்திருக்கிறார்கள்.

**சி.என்.ஏ:** துணைத் தலைவர் அவர்களே! மிகவும் ஆர்வம் உண்டாக்கும் வாதம் தொடர்வது கண்டு நான் மகிழ்கிறேன். இந்த அவை அறியும்பொருட்டு, அந்த உண்ணாநோன்பினால் தி.மு.க. எதையும் அடையவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கட்சியைச் சாராத ஒருவர் உண்ணாநோன்பு மேற்கொண்டார். அந்தச் சங்கரலிங்க நாடார் சென்னை மாகாண முதலமைச்சர் அவர்களின் உறவினர். சொல்லப் போனால் – உண்ணாநோன்பை மேற்கொண்டாலும், எத்தகைய மனித இயல்புடையவர் நீங்கள் என்பதை உங்களை மாற்றிக் கொள்ளாமல் வெளிப்படுத்தினீர்கள்.

ஆதலால் – அங்கு வினா எழுந்தபொழுதுதான் – நாடாளுமன்றத்துக்குச் செல்லுமாறு – அவர்கள் கூறினர். நாடாளுமன்றத்தில் கேட்டால், மீண்டும் சட்டமன்றம் நோக்கி அனுப்புகிறீர்கள்.

இரண்டு இடங்களிலும் மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல – மக்கள் எங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்கிறீர்கள். அது நடந்த செய்திதான்; வருந்தத்தக்க நிகழ்வுதான்; இருள்படர்ந்த நிகழ்வுதான்; கருத்திற் கொள்ள வேண்டிய ஒன்றுதான்!

**ஜி. இராசகோபாலன்:** உங்கள் விருப்பத்திற்கு மாறாக இருந்தாலும், அந்தத் துயரம் தொடர்வதுதான்.

**டி.எஸ்.பட்டாபிராமன்:** அந்தத் துயரம் நிலையானது என்று சொல்கிறார். ஒவ்வொரு தேர்தலிலும் பெரும்பான்மை பெறுவதால் காங்கிரஸ் உங்களுக்குத் தரும் துயரம் (தோல்வி) நிலையானது. நாங்கள் உங்களுக்கும் உரிய இடம் ஒதுக்குவோம்.

**அண்ணா:** துணைத் தலைவர் அவர்களே! துயரம் நிலையாக நீடிக்கக் கூடியது என்று என் நண்பர் கூறுகிறார். மக்களுக்கும் நாட்டுக்கும் என்றும் துன்பம்தான்! வேறு என்ன நான் சொல்ல முடியும்?

நான் மிகவும் வலியுறுத்திச் சொல்வதெல்லாம் நாடாளுமன்றத்தின் வாயிலாக அரசியல் சட்டத் திருத்தத்தைச் சிந்தியுங்கள்.

அதனால்தான் நாங்கள் நாடாளுமன்றத்தை அணுகுகின்றோம்.

இதனைக் குறித்து எந்தத் திருத்தம் வைக்கப்பட்டாலும், கருத்துகள் வழங்கப்பட்டாலும், ஆதரவு திரட்ட அவைகளை மக்கள் முன் வைப்போம். அந்த அறைகூவலை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

இதனைத் தேர்தல் செய்தியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று நான் கேட்க மாட்டேன். இது குறித்து நீங்கள் அஞ்சத் தேவையில்லை.

**(குறுக்கீடுகள்)**

தேர்தல் பிரச்சினையாக – நாங்கள் ஆக்க மாட்டோம். மக்களின் ஒப்புதலைப் பெற, அவர்களிடம் சொல்ல வேண்டிய செய்தியே அன்றி, வேறல்ல! இது உங்கள் ஆட்சியைப் பாதிக்கப் போவதில்லை. யாரும் அதை நினைக்கவில்லை; ஆட்சியில் நீடிப்பவர்கள் நீங்கள்!

நம்முடைய பல்வேறு கட்சிகளின் மூலங்களை, கூறுபாடுகளைக் காண்கின்ற வினா அன்று இது. இந்தப் பிரச்சினைகளை எந்த வகையில் மக்கட்குத் தொடர்புடையதாக விளங்குகின்றது என்பதை எண்ணிப் பார்க்கும் வினா மட்டுமே இது.

என்.எம்.அன்வர் (சென்னை) அம்மையீர்! தகவலுக்காக – சொல்கிறேன். என் நல்ல நண்பர் அண்ணாதுரை மீது உயர்ந்த மதிப்பும் மிக்க மரியாதையும் கொண்டுள்ளேன். உலகம் முழுவதும் நன்கறியப்பட்டுள்ள மெட்ராஸ் – தொடர்ந்து நீடிப்பதால் – என்ன தீங்கு நேரப் போகிறது? இதனை விளக்குவாரா? எவ்வாறு இதனை அவர் எதிர்கொள்ளப் போகிறார்? உலகளாவிய பெயரான சென்னை தொடர்வதால் உண்டாகும் தொல்லை என்ன?

**(குறுக்கீடுகள்)**

மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. அன்வர் அவர்களுக்குச் சொல்லும் ஒரே விடை இதுதான்!

என்ன பேறு பெறுவீர்கள் என்ற பொழுது – கனிந்த உணர்ச்சி விளங்கும் மனமகிழ்ச்சியும், எங்கள் நிலத்தின் தொன்மையையும் அடைகின்றோம்; அறிகின்றோம் என்றேன்.

சென்னையில் சைனா பஜார் என்ற பெயரை நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சாலை என்று மாற்றினோம். அந்தத் தெருவில் எந்த மாறுதலும் இல்லை. ஆனால் எண்ணத்தில் உணர்வில் நாடி, நரம்புகளில் மாற்றம் கண்டோம். மெட்ராஸ் என்று வைத்துக் கொண்டிருந்தால் தவறில்லை என்றாலும் இந்த உணர்வை அடைய எண்ணித்தான் பெயர் மாற்றத்திற்காக வலியுறுத்துகிறோம்.

எம். அன்வர்: என் வினா அது அன்று; தமிழ்நாடு என்று அழைப்பது சில வகையில் நல்லதுதான் என்று ஒத்துக் கொள்கிறோம். உலகளவில் நன்கு உரைக்கப்பட்ட மெட்ராஸ் நீடிப்பதால் நீங்கள் அடையும் இடையூறு, எதிர்விளைவு என்ன?

மெட்ராஸ் என்பது மாநிலத்தின் பெயராக விளங்கினால், தலைநகரம், மாநிலம் இரண்டிலும் குழப்பம் உண்டாகும். தமிழ்நாடு என்னும் பெயர் மாநிலத்தையே குறிக்கும். மாநிலத்தின் பெயருக்கும் தலைநகரத்தின் பெயருக்கும் இடையே வேறுபாடு விளங்க வேண்டும்.

ஆதலால் அவை முன் வைக்கப்பட்ட வரைவை முழு மனத்துடன் வழிமொழிந்து, அவைக்கு என் பாராட்டையும் தெரிவிக்கிறேன்.



# தெற்கில் இருந்து எழுதுவோம்!

உலகின் மிக மூத்த மொழியான தமிழ் மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடினார்கள்...

**கனியிடை ஏறிய சுளையும் — முற்றல்**
**கழையிடை ஏறிய சாறும்,**
**பனிமலர் ஏறிய தேனும், — காய்ச்சுப்**
**பாகிடை ஏறிய சுவையும்;**
**நனிபசு பொழியும் பாலும் — தென்னை**
**நல்கிய குளிரிள நீரும்,**
**இனியன என்பேன் எனினும், — தமிழை**
**என்னுயிர் என்பேன் கண்டீர்!**

இத்தகைய அமிழ்தினும் இனிய மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம். உலகில் மிக மூத்த இனமான தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் நாம். மொழிப்பெருமையும் இனப்பெருமையும் கொண்டவர்கள் நாம்.

உலகம் முழுவதும் பரந்து விரிந்து வாழும் ஒரு இனம் உண்டென்றால் அது தமிழினம் தான். நம்முடைய இனம் ஒரு நிலத்தில், ஒரு நாட்டில் மட்டுமே வாழும் இனம் அல்ல.

உலகளாவிய இனம் ஒன்று உண்டென்றால் அது தமிழினம் தான். 30க்கும் மேற்பட்ட நாடுகளில் அதிக எண்ணிக்கையிலும், 60க்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். எங்கே தமிழர்கள் வாழ்ந்தாலும், அவர்களுக்குத் தமிழ்நாடு தான் தாய் வீடு.

தமிழ் நிலத்தின் தொன்மை என்பது ஏதோ பழம் பெருமையோ, இலக்கியக் கற்பனையோ மட்டுமல்ல, அது வரலாற்றுப் பூர்வமானது. கீழடியில் கிடைத்த ஆதாரங்கள் தான் இந்த வரலாற்று வழித்தடத்தை மீண்டும் புதுப்பித்துள்ளது.

தமிழ்நாட்டில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே நகரமயமாக்கம் ஏற்பட்டிருந்தது என்பது மட்டுமல்லாமல், படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதை கீழடி அகழாய்வு நிலைநிறுத்தியுள்ளது.அதேபோல் சிவகளையில் முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட உமி நீங்கிய நெல்மணிகளின் காலம் கி.மு. ஆயிரத்து நூற்று ஐம்பத்தைந்து எனக் கண்டறியப்பட்டுள்ளது.

'தண் பொருநை' என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் மூவாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் பூர்வ ஆய்வுகளின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கீழடி, அழகன்குளம், கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் ஆய்வுகள் இப்போது மீண்டும் சிறப்பாகத் தொடங்கி இருக்கிறது.

சங்ககாலத் துறைமுகங்களான பூம்புகார், கொற்கை, அழகன்குளம், வசவ சமுத்திரம் ஆகியவை முக்கிய பங்காற்றின. அவற்றையும் ஆய்வு செய்ய உத்தரவிட்டுள்ளோம். இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலப்பரப்பிலிருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் அறிவியல்பூர்வமாக நிறுவுவதற்கு மேற்காணும் அகழாய்வுகளும், முன்கள புலஆய்வுப் பணிகளின் முடிவுகளும் உறுதி செய்யும்.

'வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்'' என்பதைத் தமிழ் மண்ணில் விதைத்து மொழிப்பற்றும் 'தமிழா இன உணர்வு கொள்' என்று முழங்கி இனமான உணர்வும் ஊட்டிய இயக்கம் தான் திராவிட இயக்கம்.

மொழிக்காகப் போராடிய வாதாடிய இயக்கம் மட்டுமல்ல மொழிகாக்கத் தனது தேகத்தைத் தீக்குத் தின்னத் தந்த தீரர்களின் இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த இனத்தின் மொழியைக் காக்கத் தமிழ் காப்பு போராட்டங்கள் அனைத்தையும் நடத்தியது திராவிட இயக்கம் தான்.

1938 முதல் இன்று வரை தமிழ்காப்பு போராட்டங்கள் என்பவை திராவிட இயக்கங்களால் நடத்தப்பட்டவையே.

அதே நேரத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழ் காப்புக் கொள்கைகள் அனைத்தையும் நிறைவேற்றியதும் திராவிட முன்னேற்றக் கழக அரசே ஆகும்.

ஈராயிரம் ஆண்டு பழமை கொண்ட மொழிக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

தமிழர்கள் பெரும்பான்மை வாழும் இந்த மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

இப்போதும் ஒரு கட்சியின் அரசாக இல்லாமல் ஒரு இனத்தின் அரசாகச் செயல்பட்டு வருகிறோம். தமிழாட்சி, தமிழினத்தின் ஆட்சி, தமிழ்ப் பண்பாட்டை மையமாகக் கொண்ட திராவிட மாடல் ஆட்சியைத் தமிழ்நாட்டில் நடத்தி வருகிறோம்.

**தமிழ்நாடு வாழ்க !**

**தமிழ்நாடு வாழ்க !**

**தமிழ்நாடு வாழ்க !**

# தமிழ்நாடு நாள்

## ஜூலை 18

## சிறப்பு மலர் - 2022

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்:

**முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப.,**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால்**
**அரசு துணைச் செயலாளர்,**
**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச் செயலகம்,**
**சென்னை – 600 009.**

தொகுப்பு உதவி:

**ப.திருமாவேலன்,**
**பொ.தங்கபாண்டியன்,**
**டி.அருள் எழிலன்**

வடிவமைப்பு:
**இரா.தமிழரசு**

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
**தமிழரசு அலுவலகம்:**
எண்: 5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை – 600 113
**தொலைபேசி :** 22542221 / 22542224
**மின்னஞ்சல்:** ddpub.tamilarasu@tn.gov.in
**இணையதளம்:** www.tndipr.gov.in

**தமிழரசு**
செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

தமிழன் தமிழனாக வாழவேண்டும். தமிழனாக வாழ்வது மட்டுமல்ல,
தமிழ்மொழியைப் போற்ற வேண்டும். வெறும் மொழியைப்
போற்றுவது மட்டுமல்ல அந்த மொழி காட்டுகின்ற
வழியில் தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

– பேரறிஞர் அண்ணா





**தமிழரசு**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு


